
# சம்யுக்தா



யத்தனபூடி சுலோசனாராணி

தமிழில்: கௌரி கிருபானந்தன்

32232.

# சம்யுக்தா

தெலுங்கில்
யத்தனபூடி சுலோசனாராணி

தமிழில்
கௌரி கிருபாநந்தன்

**கலா நிலையம்**
244, ராமகிருஷ்ணமடம் சாலை
மயிலாப்பூர், சென்னை – 600 004.

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு – டிசம்பர், 2000

© ஆசிரியருக்கு

விலை: ரூ.43.00

32232
4931483

Laser Typeset & Printed by
Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

உள்ளே.....

1. சௌதாமினி

2. ஜோதி

3. தாத்தாவும் பேரனும்

4. பாசவலை

## முன்னுரை

பிரபல தெலுங்கு எழுத்தாளர் திருமதி யத்தனபூடி சுலோசனா ராணி அவர்கள் எழுதிய "சம்யுக்தா" என்ற குறுநாவலுடன், மேலும் மூன்று குறு நாவல்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு "சௌதாமினி" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டு இருக்கிறது.

திருமணத்திற்கு முன்பே கணவன் வேறு ஒரு பெண்ணை நேசித்திருக்கிறான் என்ற உண்மை தெரியும் போது ஒரு மனைவியின் மனதை கண்ணாடியில் காட்டுவது போல் தெளிவுபடுத்தும் குறுநாவல் 'சம்யுக்தா.'

இளமையில் வறுமையை அனுபவித்துக் கொண்டிருந்த ஜோதி தாயுடன் பட்டணத்திற்கு வருகிறாள். அவள் வாழ்க்கையில் ஏற்படும் பல சுவையான திருப்பங்களை "ஜோதி" என்ற குறுநாவலில் காணலாம்.

கடவுளுக்கு அடுத்ததாக தாயைத்தான் எல்லோரும் போற்றுவார்கள். ஆனால் அந்தத் தாய் மகனை அளவுக்கு மீறி நேசித்தால்? அவனுடைய திருமண வாழ்க்கைக்குத் தடையாக இருந்தால்? அதுதான் "பாசவலை".

சின்ன வயதிலேயே பெற்றோரை இழந்து தாத்தாவின் ஆதரவில் வளரும் குழந்தைகள். கோபி, ராதா. தாத்தாவுக்கும், பேரனுக்கும், இடையில் எப்போதும் சண்டை. இருவரையும் சமாதானப்படுத்த முடியாமல் ராதா நலிந்து போகிறாள். தாத்தாவிடமிருந்து பணத்தை பெறுவதற்காக கோபி போட்ட திட்டம் ராதாவை பிரசாத்துடன் இணைக்கிறது.

மொழி பெயர்ப்புக்கு அனுமதி வழங்கிய திருமதி யத்தனபூடி சுலோசனாராணி அவர்களுக்கும், நூலாக வெளியிட்ட நிறுவனத்தாருக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

**கௌரி கிருபாநந்தன்**

32232

## சம்யுக்தா

"நான் சொல்ல வந்ததை முழுவதுமாகக் கேட்டுக் கொள்ளாமலே மாட்டேன், முடியாது என்று சொன்னால் எப்படி?"- அருணா கேட்டாள். ரோஷத்தில் அவளுடைய முகம் கன்றிவிட்டது.

சந்திரன் மனைவியின் பக்கம் தீவிரமாகப் பார்த்தான். "இன்னும் எத்தனை நேரம் கேட்கச் சொல்கிறாய்? முன்னுரையிலேயே உன்னுடைய எண்ணம் என்னவென்று எனக்குப் புரிந்து விட்டது."

"வேடிக்கை என்னவென்றால் என் மனதில் ஒரு எண்ணம் உருவாகும் முன்பே அது என்னவென்று உங்களுக்குப் புரிந்து விடுகிறது. முன்பிறவியில் மனவியல் நிபுணராக இருந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன் இந்தப் பிறவியில் பாதை மாறி இன்ஜினியராகி விட்டீர்கள்." -வலுக்கட்டாயமாக முறுவலித்துக் கொண்டே அருணா சொன்னாள்.

"உன் பாராட்டுகளுக்கு நான் மயங்கி விட மாட்டேன்." என்பது போல் சந்திரன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

தொலைவில் நின்றிருந்த அருணா இனி பொறுக்க முடியாதவள் போல் கணவன் அமர்ந்திருந்த கட்டில் அருகில் வந்தாள். தோள்மீது கையைப் பதித்து நயமான குரலில் "நான் சொல்லாமலேயே என் மனதில் இருப்பதைப் புரிந்து கொள்ளும் திறமை உங்களுக்கு இருந்தாலும் இந்த முறை நான் சொல்வதை நீங்கள் காது கொடுத்து கேட்டுத்தான் ஆக வேண்டும்" என்றாள்.

தோள்மீது பதிந்த கையை வேகமாகத் தள்ளிவிட்டான். அவன் முகத்தில் கோபமும், எரிச்சலும் வெளிப்படையாகத் தெரிந்தன.

தன்னை அலட்சியப்படுத்துவது போல் அவன் நடந்து கொண்டது அருணாவின் மனதை காயப்படுத்தியது. இருந்தாலும் பிடிவாதத்தைத் தளர்த்தாமல் கேட்டாள். "புறப்பட வேண்டிய நாளையும் சேர்த்துக் கொண்டால் இன்னும் பத்து நாட்கள் கூட இல்லை. இதற்குப் போய் நீங்க . . ."

திடீரென்று சந்திரன் கட்டிலை விட்டு எழுந்து கொண்டதும் அருணா சொல்ல வந்ததை பாதியிலேயே நிறுத்திவிட்டாள்.

அவன் எதுவும் பேசாமல் ஸ்டாண்ட் அருகில் சென்று உடைகளை மாற்றிக் கொள்ளத் தொடங்கினான். பின்னாலேயே வந்து நின்ற அருணா நிஷ்டூரமாகச் சொன்னாள். "சித்தப்பா எழுதிய கடிதத்தை சுயமாக படித்த பிறகும் நீங்கள் இப்படிச் சொல்வது கொஞ்சம் கூட சரியில்லை. பெண்களே இல்லாத. அந்த வீட்டில் நான் போகும் வரையில் ஒரு வேலை கூட நடக்காது என்று எனக்கு மட்டும்தான் தெரியும்."

"இந்தப் பெண்களே ரொம்ப விசித்திரமான பிறவிகள். ஆறு மாதங்கள் முன்பு வரை அவருடைய பெயரைச் சொன்னாலே எரிந்து விழுந்து கொண்டிருந்தவளுக்கு இன்று இவ்வளவு அன்பு வெள்ளமாகப் பொங்கி வருகிறது என்றால் . . ."

கணவனின் குரலில் தெரிந்த நக்கலுக்கு அருணாவுக்குக் கோபம் வந்துவிட்டது. இதுவே இன்னொரு சமயமாக இருந்தால் தானும் குரலை உயர்த்தி, "என் இஷ்டம். என் மனதிற்கு பிடித்தாற்போல் என்னுடைய எண்ணங்களை மணிக்கு ஒரு தடவை . . . இல்லை, இல்லை, நிமிடத்திற்கு ஒரு முறை கூட மாற்றிக் கொள்வேன். உங்களுக்கு என்ன வந்தது? இதை எல்லாம் கேட்க நீங்கள் யார்?" என்று பதிலடி கொடுத்திருப்பாள்.

ஆனால் இன்று முற்றிலும் வேறு. ஏற்கனவே எந்த சாக்கு கிடைக்குமா, சண்டைபோட்டுக் கொண்டு காரியத்தை நடக்க விடாமல் செய்து விடுவோமோ என்று காத்துக் கொண்டு இருக்கிறான். இந்தச் சமயத்தில் அவனுக்கு வாய்ப்பு கொடுப்பது போல் நடந்து கொள்ளும் அளவுக்கு அவள் ஒன்றும் முட்டாள் இல்லை.



அதனால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு சமாதானப் படுத்துவது போல் சொன்னாள். "ரொம்ப நன்றாக இருக்கிறது நீங்கள் சொல்வது. மனிதர்களாகப் பிறந்த பிறகு எப்போதும் ஒரே மாதிரி இருப்பார்களா என்ன? காலத்திற்கு ஏற்றாற் போல் மாறவில்லை என்றால் வாழ்க்கையே நரகமாகி விடாதா. அப்படியும் சிலர் இருப்பார்கள், கற்பாறைகள் போல் எப்போதும் மாறாமல் . . ."

எவ்வளவு கவனமாக பேசவேண்டும் என்று நினைத்தாலும் அவளையும் மீறி குத்தலான வார்த்தை வந்து விட்டது. இதழ்களை இறுக்கி ஒரு நிமிடம் மூச்சை அடக்கி சந்திரன் வாயிலிருந்து வெளியேறப் போகும் கடினமான சொல்லுக்காக பயந்து கொண்டே காத்திருந்தாள்.

உடைகளை மாற்றிக்கொண்ட சந்திரன் டிரஸ்ஸிங் டேபிள் மீது சீப்பைக் காணாமல் அங்கும் இங்கும் தேடிக் கொண்டிருந்தான்.

அவள் வாயிலிருந்து அவளையும் அறியாமல் வெளியேறிய அந்த குத்தல் பேச்சு அவனைத் தாக்கியதோ இல்லையோ தெரியவில்லை. பதிலுக்கு அவன் எதுவும் சொல்லவில்லை.

"எதிரிலேயே டேபிள் ஃபேன் வைத்திருக்கும் ஸ்டூல் மீது இருந்த சீப்பை எடுத்து அவனிடம் கொடுத்துக் கொண்டே சொன்னாள். "அந்த நாட்களில் அவர் மீது எனக்குக் கழுத்து மட்டிலும் கோபம் இருந்தது உண்மைதான். அதை நான் மறுக்கவில்லை. சித்தப்பா நம்முடைய திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை. அதோடு உங்களை அவமானப்படுத்துவது போல் நடந்து கொண்டார். அன்று உங்களையோ, உங்களுடைய தனித்தன்மையையோ அவர் புரிந்து கொள்ளவில்லை. காலப்போக்கில் புரிந்து கொண்டார். மனம் மாறி உங்களையும் மதிக்கத் தொடங்கினார். அதற்குப் பிறகு நானும் என் சுபாவத்தை மாற்றிக் கொண்டேன். இதில் தவறு என்ன இருக்கிறது?"

நிலைக் கண்ணாடியின் முன் நின்று தலையை வாரிக் கொண்டிருந்த சந்திரன் இதற்கும் பதில் சொல்லவில்லை.

"என்ன? பதிலையே காணும்?" இரட்டிப்பது போல் கேட்டான்.

"என்ன செய்யச் சொல்கிறாய்?"

இத்தனை நேரமாக அருணா வலுக்கட்டாயமாக கடைபிடித்து வந்த பொறுமை நலிந்து போய் விட்டது. தான் சொன்னதை அவன் செவி கொடுத்து கேட்கிறானோ இல்லையோ என்ற சந்தேகம் வந்ததும் அவளுக்குக் கோபம் மடை திறந்த வெள்ளமாகப் பொங்கியது.

"இத்தனை நேரம் தொண்டை தண்ணீர் வற்ற நான் சொன்னதெல்லாம் வியர்த்தம் தானா?" ஒரே வார்த்தையில் சொல்லுங்கள் இந்தத் திருமணத்திற்கு நான் போகவேண்டுமா இல்லையா?

"நீ என்ன முடிவு செய்து இருக்கிறாய்?" அமைதியான குரலில் கேட்டான்.

"போக வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறேன்." ஏதோ ஒரு உந்துதலில் தீர்மானமாகச் சொல்லிவிட்டாள்.

நாற்காலியில் அமர்ந்து கொண்டு காலில் ஸாக்ஸை மாட்டப் போன சந்திரன் இந்தப் பதிலை கேட்டதும் அதை மூலையில் வீசி விட்டு எழுந்து நின்று கொண்டான். மனைவியின் முகத்தை சீரியஸாகப் பார்த்தவன், "முடிவு செய்தாகி விட்டது என்ற பிறகு மறுபடியும் என்னிடம் வந்து கேட்பானேன்? கிளம்பும் முன் சொன்னால் போதுமே. இது போன்ற போலி மதிப்புகளை, மரியாதைகளை வெறுப்பவன் நான் என்று விஷயம் உனக்குத் தெரியாதா. போக வேண்டும் என்று நினைத்தால் தாராளமாக போய்க் கொள். எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இருந்து கொள். எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை." என்று சொல்லிவிட்டு ஷூக்களை அணிந்து கொள்ளும் முயற்சியை விட்டுவிட்டு, சுவர் ஓரமாக இருந்த செருப்புகளை அணிந்து கொண்டு வேகமாய் வெளியேறி விட்டான். வாசற்படியைத் தாண்டும் முன் கண் இமைக்கும் நேரம் நின்று, "நான் வருவதற்கு



நேரம் ஆகும். சாப்பிடுவதற்கு எனக்காகக் காத்திருக்க வேண்டாம்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

அருணாவின் விழிகளில் நீர் சுழன்றது. சோர்வாக கட்டில் மீது சரிந்தாள். சந்திரனுக்கு என்ன ஆகிவிட்டது? எப்போதும் சிரித்துக் கொண்டு கலகலவென்று பழகுபவனுக்கு திடீரென்று என்ன வந்து விட்டது? அவனிடம் தான் காட்டிய பண்பு, நெருக்கம் எல்லாம் அவனிடமிருந்து சம்மதம் பெறுவதற்காக என்று புரிந்து கொண்டு விட்டது போல் பிடிகொடுக்காமல் நழுவிவிட்டான்.

சந்திரன் இந்த விஷயத்தில் ஏன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறான் என்று அருணாவுக்குத் தெரியாமல் இல்லை. சுய அபிமானம் காரணமாக அவன் எதையும் மனம் விட்டு சொல்லா விட்டாலும், அவன் மனதில் இருப்பதை அவளால் தெரிந்துகொள்ள முடியாதா? திருமணம் ஆன இந்த நான்கு வருடங்களில் ஒரு நாள் கூட இருவரும் பிரிந்திருந்தது இல்லை. எங்கே போனாலும் சேர்ந்து தான் போவார்கள். ஒருத்தருக்கு வரமுடியவில்லை என்றால் அடுத்தவரும் போக மாட்டார்கள். அருணாவின் உயிர் தோழிக்கு திருமணம் என்று பத்திரிகை வந்தது. கணவனுக்கு அலுவலகத்தில் விடுமுறை கிடைக்கவில்லை என்று அருணாவும் போகவில்லை. தனியாகவாவது திருமணத்திற்குப் போய்விட்டு வரவேண்டுமென்ற விருப்பம் மனதில் பலமாக இருந்தாலும் அவன் மனதை புரிந்து கொண்டு இருப்பதால் வாயைத் திறந்து கேட்கவில்லை. இது ஒன்று தான் என்று இல்லை. தொடர்ந்து இரண்டு மூன்று முறை இதே போல் நடந்தது. இதே வழக்கம் மேலும் நீடித்திருக்குமோ என்னவோ. ஆனால் திடீரென்று அருணாவுக்கு ஞானோதயம் ஆகி விட்டது. கிட்டத்தட்ட ஒரு மாதம் முன்பு தமிழ் மக்களின் அபிமான பெண் எழுத்தாளர் சம்யுக்தா எழுதிய "வாழ்க்கை" என்ற நாவலை படித்தாள். அதில் சில வரிகள் அவள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன.

*"கணவன் மனைவிக்கு இடையில் இருக்கும் உறவு ரொம்ப மென்மையானது. அந்த உறவு அன்று மலர்ந்த பூவை போல் எப்போதும் பரிமளிக்க வேண்டும் என்றால் கணவன்*

*மனைவிக்கு நடுவில் அவ்வப்போது பிரிவு இருக்க வேண்டும். பிரிந்திருக்கும் போது ஏற்படும் ஆற்றாமை, தொலைவாக இருப்பதால் ஏற்படும் தவிப்பு அவர்களின் தாம்பத்திய வாழ்க்கையை எப்போதும் புதுமையாக, இனிய உணர்வுகள் நிரம்பியதாக வைத்திருக்க உதவும்."*

அருணா புத்தகத்தை கீழே வைத்து விட்டு கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்து போய் விட்டாள். திருமணம் நடந்து நான்கு ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த நான்கு ஆண்டுகளில் இருவருக்கும் இடையில் சின்ன பிரிவு கூட ஏற்பட்டது இல்லை. சந்திரனின் பெற்றோர் அவனுடைய சின்ன வயதிலேயே இறந்து விட்டார்கள். சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாருமே இல்லை. நண்பர்கள், தெரிந்தவர்கள் செய்த உதவியால் எப்படியோ கஷ்டப்பட்டு இஞ்ஜினியரிங் படிப்பை முடித்து விட்டான். பட்டம் கையில் வரும் போது இருந்த ஒரு ஓட்டு வீடும் போய், இரண்டாயிரம் ரூபாய் வரையில் கடன் பாக்கி இருந்தது. கடன் கொடுத்தவர்களைத் தவிர அவனுடைய நலனில் அக்கறைக் காட்டுபவர்கள் யாருமே இருக்கவில்லை.

அருணாவின் தந்தை கான்சர் நோயினால் இறந்து போவதற்கு முன் தன்னுடைய தம்பி கோபாலனிடம் தன்னுடைய சொத்தை, மனைவியை, மகளை ஒப்படைத்து விட்டு நிம்மதியாக கண்ணை மூடினார். அண்ணன் தன் மீது வைத்திருந்த நம்பிக்கையை கோபாலன் வீணாக்கவில்லை. அண்ணியை உடன் பிறந்த சகோதரியாக நடத்தினார். அண்ணன் மகளை பெற்ற மகளுக்கு மேலாக ஆதரித்தார். நியாயத்திற்கும், நேர்மைக்கும் மறுபெயராகத் திகழ்ந்த கோபாலன் அருணாவுக்கு பதினெட்டு வயது ஆகும் போது அவளுடைய சொத்தை பலமடங்காக அபிவிருத்தி செய்தார். அவருடைய மனைவி இறந்து போய் பதினைந்து வருடங்கள் கழிந்து விட்டன. ஒரே ஒரு மகன் சங்கரன். அருணாவின் தாய் அந்தக் காலத்து மனுஷி. சட்டென்று மைத்துனருக்கு எதிரில் வந்து விட மாட்டாள். அதனால் நினைவு தெரிந்த நாள் முதலாக அருணாதான் அந்த வீட்டுப்



பொறுப்புகளை கவனித்து வந்தாள். அருணாவின் படிப்பு முடியும் வரையில் ஜாதகத்தை வெளியில் எடுக்கப் போவதில்லை என்று கோபாலன் அண்ணியிடம் கச்சிதமாக சொல்லிவிட்டார்.

அருணாவின் கல்லூரி படிப்பு முடிந்து விட்டது. கோபாலன் தீவிரமாக வரன் வேட்டையைத் துவங்கினார். நிறைய சொத்து இருப்பதுடன், தங்கப் பதுமையைப் போல் அழகாக இருந்த அருணாவுக்குத் தகுந்த வரன் கிடைப்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. எந்த வரனை பார்த்தாலும் ஏதோ ஒரு குறை இருந்தது. மகளை திருமணக் கோலத்தில் பார்க்க முடியவில்லை என்ற கவலையுடனேயே அவளுடைய தாய் ஒருநாள் மாரடைப்பால் கண்ணை மூடினாள்.

தாய் இறந்த பிறகு அந்த வேதனையை மறப்பதற்காக அருணா அடிக்கடி தன்னுடைய சினேகிதி வனஜா வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தாள். வனஜாவின் குடும்பத்திற்கு நெருங்கியவன் சந்திரன். வனஜா, சந்திரனை கூடப் பிறவாத அண்ணனாக நினைத்து வந்தாள். சந்திரன் இஞ்ஜினியரிங் கடைசி வருடம் படித்துக் கொண்டிருந்தான். பரீட்சைக்கு ஃபீஸ் கட்டுவதற்கு பணம் இல்லாமல் சந்திரன் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறான் என்று தெரிந்த போது, அருணா உதவிபுரிய முன் வந்தாள். ஆனால் சந்திரன் சம்மதிக்கவில்லை. முன்பின் தெரியாதவர்களிடம், அதிலும் ஒரு பெண்ணிடமிருந்து உதவியை பெற்றுக் கொள்வது சரியில்லை என்று கொஞ்சம் கூட தயங்காமல் சொல்லி விட்டான்.

முதல் பார்வையிலேயே அருணாவிற்கு சந்திரன் மீது மதிப்பு ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சியுடன் அது அபிமானமாக மாறியது. போகப் போக அவனிடம் ஒரு விதமான விருப்பம் ஏற்பட்டது. அவனுடைய அருகாமையிலேயே இருக்க வேண்டும் என்று தன் மனம் தவிப்பதை அருணா உணர்ந்து கொண்டாள்.

வசதி படைத்த வீட்டைச் சேர்ந்த, துடுக்கு சுபாவம் நிறைந்த அருணா தன்னிடம் ஆர்வம் காட்டுவது ஏன் என்று முதலில்

சந்திரனுக்குப் புரியவில்லை. தொடக்கத்தில் அவன் கொஞ்சம் விலகியே இருந்தான். ஆனால் போகப் போக அருணா அவனிடம் காட்டிய அன்பு அவன் தயக்கங்களை உடைத்தெறிந்து விட்டது. இருவரும் மனம் விட்டுப் பேசிக் கொண்டார்கள். இரு மனங்களும் ஒன்றாக இணைந்தன.

ஒரு நல்ல நாளாக பார்த்து அருணா சந்திரனை தன்னுடைய வீட்டுக்கு வரச் சொல்லி சித்தப்பாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள். அருணா காபி கலந்து எடுத்து வருவதற்குள் சந்திரனின் குடும்பப் பின்னணியை கேட்டுத் தெரிந்து கொண்ட கோபாலன் அதன் பிறகு முகம் கொடுத்து பேசவில்லை.

அன்று இரவு அருணா தயக்கத்தை உதறிவிட்டு சித்தாப்பாவிடம் தன் மனதில் இருப்பதை சொல்லிவிட்டாள். இந்த விஷயத்தை முன்கூட்டியே எதிர்பார்த்தவர் போல் கோபாலன் கொஞ்சம் கூட உலக ஞானம் இல்லை என்று சொன்னதோடு நிறுத்திக் கொள்ளாமல் சந்திரனுக்கு அவளிடம் அன்பு ஏற்பட முக்கியக் காரணம் அவளுடைய சொத்துதான் என்பதை தான் கண்டுபிடித்துவிட்டு அந்த ரகசியத்தை அவளிடம் தெரிவிப்பது போல் பேசினார். ஒருக்கால் தன்னுடைய கணிப்பு தவறாக இருந்து சந்திரன் உண்மையிலேயே நல்லவனாக இருந்தாலும் அருணாவை மனைவியாக அடையும் தகுதி அவனுக்கு இல்லை என்பதால் இந்த விஷயத்தில் தனக்குக் கொஞ்சம் கூட சம்மதம் இல்லை என தீர்மானமாகச் சொல்லி விட்டார். பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டே தலையைக் குனிந்து நின்றிருந்த அருணவை அவர் சரியாக கவனிக்கவில்லை.

கிட்டத்தட்ட ஒரு மாதம் கழிந்து விட்டது. அருணா வீட்டை விட்டு வெளியேறுவதைக் கூட குறைத்துக் கொண்டு விட்டது கோபாலனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. கூடிய சீக்கிரத்தில் அருணாவின் திருமணத்தை முடித்து விடவேண்டும் என்று முடிவு செய்தவர் வரன்களை தேடினார். அவருடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு ஒரு வரன் வந்தது. மறுநாள் காலையில் பெண் பார்க்க பிள்ளை விட்டார் வருவதாக இருந்தது. அந்த விஷயத்தை



அருணாவிடம் சொல்ல வேண்டும் என்று வந்த போது அருணா வீட்டில் இருக்கவில்லை. அவளைக் காணவில்லையே என்று குட்டி போட்ட பூனையைப் போல் அவர் அலைந்து கொண்டிருந்தபோது மாலையில் அருணா சந்திரனுடன் சேர்ந்து வந்தாள். இருவரும் பதிவுத்திருமணம் செய்து கொண்டு விட்டதாக தெரிவித்தாள். அருணா துப்பாக்கியைக் காண்பித்து, "உன்னை சுட்டு விடப் போகிறேன் சித்தப்பா" என்று சொல்லியிருந்தால் கூட கோபலன் அவ்வளவு அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டாரோ என்னவோ. வியப்பிலிருந்து மீண்ட அடுத்த நிமிடம் எரிமலையாய் பொங்கி எழுந்தார்.

"நான் நினைத்தது நூற்றுக்கு நூறு உண்மையாகி விட்டது. நீ ஒரு கயவன். இந்தத் திருமணத்திற்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்று தெரிந்ததும், அவளை உன் பேச்சால் மயக்கி காரியத்தைச்சாதித்துக் கொண்டுவிட்டாய். குறுக்கு வழியில் போவதற்கு உனக்கு வெட்கம், மானம் எதுவும் இல்லையா... உண்மையிலேயே நீ அவளை மனபூர்வமாக நேசித்து இருந்தால் நேரில் வந்து என்னைச் சந்தித்து எப்படியாவது என்னுடைய சம்மதத்தை வாங்கியிருப்பாய். இந்த வாய்ப்பு எங்கே கை நழுவிப் போய்விடுமோ என்று பயந்து திருட்டுத்தனமாக தாலியைக் கட்டியிருக்கிறாய். இத்தனை துணிந்தவன் இன்னும் எத்தனை வேண்டுமானாலும் செய்ய மாட்டாய் என்று என்ன நிச்சயம்? உண்மையைச் சொல்லு, நீ விரும்பியது அவளையா? இல்லை அவளுடைய பணத்தையா?"

அருணா தடுத்துக் கொண்டிருந்த போதும் கேட்காமல் கோபாலன் சந்திரனைத் திட்டித் தீர்த்தார்.

அநியாயமாக தன் மீது சுமத்தப்பட்ட அபவாதத்தை, பழிச் சொற்களை கொஞ்சம் கூட சலனம் இல்லாமல் சந்திரன் காதில் வாங்கிக் கொண்டான். அவன் கண்கள் சிவந்து விட்டன. கைப்பிடிகளை இறுக்கியதிலிருந்து, அவன் எவ்வளவு கஷ்டப்பட்டு தன்னுடைய கோபத்தை அடக்கிக் கொண்டிருக்கிறானோ! அருணா ஒரே பார்வையில் புரிந்து கொண்டு விட்டாள். தன்

பொருட்டுதான் அவன் இந்த அவமானத்தை மௌனமாக சகித்துக் கொண்டு இருக்கிறான்.

தோள் மீது இருந்த ஜரிகை அங்கவஸ்திரத்தை எடுத்து வேகமாக உதறிய கோபாலன் "போடா . . . போ . . . இந்த நிமிடத்திலிருந்து உன் மனைவிக்கு சல்லிக்காசு கூட கிடையாது. தங்குவதற்கு வீடோ, உடுத்திக் கொள்ள மாற்றுப் புடவையோ இல்லாதவளை என்ன செய்து கொள்வாயோ எங்கே அழைத்துப்போவாயோ போய்க்கொள்." கர்ஜிப்பது போல் சொன்னார்.

அவர் பேசி முடித்த பிறகு சந்திரன் அருணா பக்கம் திரும்பினான், "உன் சித்தப்பா சொன்னதை நன்றாக கேட்டுக் கொண்டாய் இல்லையா? உண்மையிலேயே நான் ஒரு ஏமாற்றுப் பேர்வழியாக இருக்கலாம். கயவனாகவும் இருக்கக் கூடும். மற்றொரு முறை யோசித்துக் கொள். என்னுடன் வருகிறாயா இல்லை இங்கேயே இருக்கப் போகிறாயா?"

அருணா பதில் எதுவும் சொல்லாமல் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு வெளியில் வந்து விட்டாள். அவள் நினைத்திருந்தால் சித்தப்பா குடியிருந்த வீட்டையும் சேர்த்து அவளுடைய சொத்தை பறிமுதல் செய்திருக்க முடியும். ஆனால், இவ்வளவு அவமானம் நடந்தபிறகு, பெற்ற தந்தையை விட மேலாக வளர்த்த சித்தப்பாவே தன்னைப் புரிந்து கொள்ளவில்லை என்ற போது அந்தச் சொத்தில் சல்லிக்காசு கூட தனக்குத் தேவையில்லை என்று முடிவு செய்தாள். மேலும் அந்த சொத்து இந்த அளவுக்கு அபிவிருத்தி ஆனதற்குக் காரணம் சித்தப்பாவின் சொந்த உழைப்புத்தான் என்பதை அவள் மறுக்கவில்லை.

சந்திரனின் தேர்வு முடிவுகள் வெளியாவதற்கு முன் இரண்டு மாதங்கள், முதலாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற விஷயம் தெரிந்த பிறகும் பத்து மாதங்கள் வரை அதாவது கிட்டதட்ட ஒரு வருடம் வரை அந்த இருவரும் கஷ்டப்பட்டார்கள். அருணாவின் தோழியின் வீட்டு பின் பகுதியில் சின்ன அறையில் குடியிருந்து



கொண்டு பாதி நாள் சாப்பிட்டும் சாப்பிடாமலும் காலத்தைத் தள்ளினார்கள். இல்லாமை என்பது எவ்வளவு கொடுமையானதோ, மனிதர்களின் மென்மையான உணர்வுகளை அது எவ்வளவு கொடூரமாக அழித்து விட வல்லதோ! அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டார்கள். இருந்தாலும் சரி, அதன் பாதிப்பு தங்கள் மீது பட்டுவிடாமல் கவனமாக இருந்து கொண்டு முள்பாதையில் நடப்பது போல் எப்படியோ காலத்தை ஓட்டினார்கள். சந்திரனின் விடாமுயற்சிகளுக்கு பலன் கிடைத்தது போல் ராமசந்திராபுரத்தில் பெரிய நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்தது. தங்குவதற்கு வீடும் கொடுத்திருந்தார்கள். எதிர்பாராத விதமாக வாழ்க்கை ஸ்திரப்பட்டு விட்டது. கடந்த ஒரு வருடமாக வாழ்ந்த வாழ்க்கையை ஒரு கெட்ட கனவாக மறந்து போகும் அளவுக்கு மகிழ்ச்சியாக வாழத் தொடங்கினார்கள். புதிய சூழ்நிலை, புதிய நண்பர்களுக்கு இடையில் பொழுது இனிமையாக போய்க் கொண்டிருந்தது.

அன்று அருணாவையும், சந்திரனையும் கடினமாக திட்டி வீட்டை விட்டு வெளியேற்றி விட்டாலும், கோபாலன் அவர்கள் எங்கே எப்படி இருக்கிறார்கள் என்று விசாரித்துக் கொண்டுதான் இருந்தார். இந்த விஷயம் தெரிந்த போது அருணாவுக்கு உடல் பற்றி எரிவது போல் இருந்தது.

உடனே சித்தப்பாவுக்குக் காரசாரமாக கடிதம் எழுதினாள். அதில் கடைசியாக, "உன்னுடைய சொத்து எதுவும் எனக்கு தேவையில்லை. அதைவிட பல மடங்கு மதிப்பு வாய்ந்த அதிர்ஷ்டம் எனக்குக் கிடைத்திருக்கிறது."

"அது போகட்டும். இந்த வயதான காலத்தில் உங்களுடைய புத்தி இப்படி போவானேன்? எனக்குப் பிடித்தவனை, அதிலும் சந்திரனை போன்ற திறமைசாலியை நான் திருமணம் செய்து கொண்டால் உங்களுடைய சொத்துக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து விட்டீர்கள் அப்படித்தானே? உங்களுக்கு பிடித்தவனை அவன் எவ்வளவு முட்டாளாக இருந்தாலும் சரி, நான் திருமணம் செய்து கொண்டு இருந்தால் உங்களுக்கு

மகிழ்ச்சியாக இருந்திருக்கும் இல்லையா? சொத்து மீது உங்களுக்கு இவ்வளவு ஆர்வம் இருப்பது தெரிந்தால் முன்னாடியே சந்தோஷமாக எல்லாவற்றையும் கொடுத்திருப்பேன். இப்போதும் ஒன்றும் குடிமூழ்கி போகவில்லை. எனக்கு வேண்டிய எல்லாவற்றையும் என் கணவரால் வாங்கித் தரமுடியும். எனக்கு எந்த குறையும் இல்லை. உங்களுக்கும், உங்களுடைய சொத்துக்கும் கோடி நமஸ்காரம்."

சித்தப்பாவுக்கு தான் எழுதிய கடிதத்தை பெருமையாக கணவனிடம் காண்பித்தாள்.

"நடந்ததோ நடந்து விட்டது. பெரியவரின் மனதை நோக அடிப்பானேன்? நமக்கு விருப்பம் இல்லை என்றால் சும்மா இருப்பது தான் நல்லது." மென்மையாக கண்டித்தான். அருணா பலமுறை எச்சரித்த போதும் அந்தக் கடிதத்தை தபாலில் சேர்க்கவில்லை. எப்போதோ நினைவுக்கு வந்த போது சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்து அருணாவின் கண்முன்னாடியே கிழித்துப் போட்டான். அருணா முணுமுணுத்துக் கொண்டாளே தவிர வேறு எதுவும் சொல்லவில்லை.

நாட்கள் வேகமாக கழிந்து கொண்டிருந்தன. கோபாலன் தானே சுயமாக சந்திரனுக்குக் கடிதம் எழுதினார். தான் அவசரப்பட்டு விட்டது உண்மைதான் என்றும், இருவரையும் வீட்டுக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்தார். சொத்துக்கு சம்பந்தப்பட்ட பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு பந்தங்களிலிருந்து தனக்கு விடுதலை அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அதற்கு பதில் எதுவும் எழுத வேண்டாம் என்று அருணா சொல்லி விட்டாள். அவனும் அந்த விஷயத்தைப் பற்றி ஒருநாளும் பேச்சை எடுக்கவில்லை.

வெளிநாட்டில் படிப்பை முடித்துக் கொண்டு தாய் நாட்டுக்கு திரும்பிய சங்கரன் நேராக அருணா வீட்டுக்கு வந்தான்.

"அக்கா!" என்று வாய்நிறைய அன்புடன் சங்கரன் அழைத்த போது அருணாவின் இதயம் இளகி விட்டது.



சங்கரன் அருணா வீட்டில் நான்கு நாட்கள் தங்கியிருந்தான். கோபாலும் வந்தார். படியேறி வீட்டுக்கு வந்தவரை அவமானப் படுத்துவது பண்பாடு இல்லையே. வந்தவர்களை அருணா நன்றாகவே உபசரித்தாள். சந்திரனும் அவர்களுடன் கலகலப்பாகப் பழகினான். அருணாவுக்கு சந்தோஷமாக இருந்தது.

வெளிநாடுகளுக்கு போய் வந்தாலும் சங்கரன் தந்தை முடிவு செய்திருந்த பெண்ணையே திருமணம் செய்து கொள்ள ஒப்புக் கொண்டது அருணாவுக்கு வியப்பை ஏற்படுத்தியது. பெண் பார்க்கப் போகும்போது அருணாவும் வரவேண்டும் என்று சங்கரன் பிடிவாதம் பிடித்தான். சந்திரன் விருப்பப்படவில்லை. மனதில் குறையாக இருந்தாலும் அருணா போகவில்லை.

முஹூர்த்தம் முடிவு செய்து விட்டார்கள். ஒரு மாதத்திற்கு முன்னாடியே வரச்சொல்லி கோபாலன் சந்திரனுக்குக் கடிதம் எழுதினார்.

சங்கரன் நேராக அருணா வீட்டுக்கு வந்து "அக்கா! நீ மட்டும் வரவில்லை என்றால் திருமணமே நின்று விடும். பிறகு பெண் வீட்டார் உன் வீட்டின் முன்னால் போராட்டம் நடத்தினால் என்னைக் குற்றம் சொல்லக் கூடாது" என்று வற்புறுத்துவது போல் சொல்லி விட்டுப் போனான்.

சந்திரனுக்கு அலுவலகத்தில் வேலை அதிகமாக இருந்தது. ஒரு நாள் என்ன... ஒரு வேளை கூட விடுமுறை கிடைப்பது சாத்தியப்படாது போல் இருந்தது.

முகூர்த்தத்திற்குப் போனால் போறாதா என்பான் சந்திரன். சங்கரனுக்கு கூடப் பிறந்த சகோதரிகள் யாரும் இல்லை என்பதால் தான் முன்னாடியே போக வேண்டும் என்பாள் அருணா. அதன் விளைவாக இருவருக்குமிடையே சின்ன கருத்து வேறுபாடு முளைத்தது. அருணாவின் பிடிவாதத்திற்கு பின்னால் வேறு ஒரு காரணம் இருந்தது. பிரபல பெண் எழுத்தாளர் சௌதாமினி தாம்பத்திய வாழ்க்கையைப் பற்றி செய்திருந்த உபதேசம்தான்.

மறுபடியும் இது போன்ற வாய்ப்பு கிடைப்பது கஷ்டம். இதை நழுவ விடக்கூடாது என்று அருணா தவித்தாள்.

மதியம் மூன்று மணிக்குக் கிளம்பிப் போன சந்திரன் இரவு ஒன்பது மணி ஆகும் போது வீடு திரும்பினான். முன் அறையில் அமர்ந்திருந்த மனைவியை கண்டு கொள்ளாதது போல் நேராக உள்ளே போய் விட்டான். குளித்து விட்டு உடைகளை மாற்றிக்கொண்டு கட்டில் மீது படுத்துக் கொண்டான்.

"தட்டில் உணவு பரிமாறிவிட்டேன். சாப்பிட வாங்க" அறையின் வாசலில் வந்து நின்ற அருணா கணவனை அழைத்தாள்.

"எனக்கு பசிக்கவில்லை." சுருக்கமாக வந்தது பதில்.

அருணா சட்டென்று பின்னால் திரும்பி விட்டாள். அவனுடைய அலட்சியப் போக்கு ஆயிரம் ஊசிகளால் குத்துவது போல் இருந்தது. அவன் சாப்பிடாமல் தான் சாப்பிடமாட்டாள் என்று அவனுக்குத் தெரியும். பட்டினியாக படுத்துக்கொண்டால் இரவு முழுவதும் தூக்கம் வராது என்றும் அவனுக்குத் தெரியும். எல்லாம் தெரிந்திருந்தும் அநியாயமாக தண்டித்தால் என்ன செய்வது? வேறு வழி இல்லாதவள் போல் பாத்திரங்களை ஒழித்துப் போட்டு முன் அறைக்கு வந்து உட்கார்ந்து கொண்டாள். என்ன செய்வதென்று புரியவில்லை. உறக்கமும் வரவில்லை. பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு எழுதத் தொடங்கினாள்.

என் மனதில் குடியிருப்பவருக்கு,

நான் எத்தனை சொன்னாலும் நீங்க காதில் போட்டுக் கொள்ள மறுக்கிறீர்கள். சங்கரனின் திருமணத்திற்கு போக வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இன்னும் தீர்மானமாக முடிவு செய்து கொள்ளவில்லை. நீங்கள் வேண்டாமென்று சொன்னால் போகாமல் இருந்து விடுவேன். ஆனால் என் விருப்பத்திற்கு மாறாக ஒரு வேலையை செய்திருக்கிறேன் என்றும்,



உங்களுடைய அபிப்பிராயங்களுக்கு அடிமையான கணங்களும் இருக்கின்றன என்ற கசப்பு உண்மை வாழ்நாள் முழுவதும் என்னை தொடர்ந்து கொண்டே இருக்கும். நம் தாம்பத்திய வாழ்க்கை மற்றவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கையை விட முற்றிலும் மாறுபட்டது என்று எனக்கு நன்றாகவே தெரியும். அதான் நேராகவே கேட்டுவிடுகிறேன். கருத்து வேற்றுமைகள் என்றாலோ, சண்டைகள் என்றாலோ எனக்கு பயம் அதிகம். திருமணத்திற்கு போவதா வேண்டாமா, போவதா இருந்தால் எப்போ போக வேண்டும்? எல்லாமே நீங்க எடுக்கும் முடிவின் மீது தான் இருக்கிறது.

உங்கள்
அருணா

எழுதி முடித்தாள். இரவு ரொம்ப நேரமாகி விட்டது. அவனும் அழைக்கவில்லை. அருணாவும் போகவில்லை. வெளியில் சுற்றிவிட்டு வந்து பச்சைத் தண்ணீரில் குளித்ததினாலோ என்னவோ மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டது போல் சந்திரன் ஆழமாக உறங்கிவிட்டான். நள்ளிரவு தாண்டும் போது திடீரென்று விழிப்பு வந்தது. ஏதோ காரியத்தை பாதியிலேயே நிறுத்திவிட்டு கண்ணயர்ந்துவிட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. எழுந்து உட்கார்ந்து கொண்டான். மேஜை விளக்கு எரிந்து கொண்டு இருந்தது. பக்கத்தில் அருணா இருக்கவில்லை. சட்டென்று எழுந்து வெளியில் வந்தான். இருட்டாக இருந்த ஹாலில் படுக்கை அறையிலிருந்து மேஜை விளக்கின் வெளிச்சம் மங்கலாக விழுந்து கொண்டு இருந்தது. இருளும், வெளிச்சமும் கலந்திருந்த அந்த சூழ்நிலையின் நடுவில் பதுமையை போல் அருணா நாற்காலியில் உட்கார்ந்திருந்த நிலையில் லேசாக தலையைச் சாய்த்து உறங்கிக் கொண்டு இருந்தாள். நீளமான அவளுடைய பின்னல் கருநாகம் போல் கீழே தொங்கிக் கொண்டு இருந்தது. அந்த நிலையில் அவளைப் பார்க்கும் போது கை தேர்ந்த சிற்பி யாரோ ரொம்ப கவனம் எடுத்துக் கொண்டு செதுக்கிய சிற்பம் போல் இருந்தாள். அந்த நிலையில் அவளைப் பார்த்ததும் அவன் மனதில்

இனிமையான உணர்வுகள் கடல் அலைகளை போல் பொங்கின. அருகில் சென்றவன் ஒரு கையை அருணாவின் கழுத்துக்குப் கீழே, மற்றொரு கையை முழங்காலுக்குக் கீழே செலுத்தி மெதுவாக தூக்கிக் கொண்டான். அப்படியே படுக்கை அறைக்குள் நுழைந்து அவளை கட்டில் மீது படுக்கவைக்கப் போனான்.

"நான் விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன்." அருணாவின் குரல் தூக்கக் கலக்கத்தில் பலவீனமாக ஒலித்தது.

"அதைத்தான் நானும் கேட்கிறேன். இத்தனை நேரம் வரையில் தூங்காமல் என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?"

"மணி என்ன?"

மேஜை அருகில் சென்று அலாரம் கடிகாரத்தில் மணியை பார்த்து விட்டு "ஒன்றரை" என்றான்.

அருணா பெருமூச்சு விட்டாள். அதாவது கிட்டத்தட்ட அந்த நரகத்தில் நான்கு மணி நேரமாக இருந்திருக்கிறாள். நான்கு யுகங்களாகி விட்டது போல் தோன்றியது.

சந்திரன் விளக்கை அணைத்துவிட்டு வந்து படுத்துக் கொண்டான்.

அவன் எதிர்பார்த்தது போல் அருணா நகர்ந்து அவன் அருகில் படுத்துக் கொள்ளவில்லை.

அருணா ஊகித்தது போல் அவன் கை அவள் தலையின் கீழே தலையணையாக மாறவில்லை.

உடலளவில் அருகருகில் இருந்தாலும் மனதளவில் ஆயிரம் மைல் கணக்கில் விலகியிருந்தார்கள்.

ரொம்ப நேரம் கழித்து அவன் அழைத்தான்

"அருணா"

"........"



"தூங்கிவிட்டாயா?"

"தூங்கச் சொன்னது நீங்கதானே."

"இப்போ வேண்டாமென்று சொல்கிறேன். உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும்."

அருணாவிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை.

"திருமணத்திற்கு நீ போய் வரலாம்."

"தாங்க்ஸ்."

"உன்னுடைய தாங்க்ஸ் எனக்கு தேவையில்லை" என்றவன் சற்று பொறுத்து அருணாவின் கையை இரண்டு கைகளிலும் எடுத்துக் கொண்டே மென்மையான குரலில் சொன்னான்.

"அருணா! நன்றாக யோசித்துப் பார்த்தேன். உன் பிடிவாத குணம் நான் அறியாதது இல்லை. அப்படி இருந்தும் நான் மறுத்தால் நீ போகாமல் இருந்து விடுவாய். அதுவும் எனக்குத் தெரியும். ஆனால் அதற்குப் பிறகு பலவந்தமாக உன்னை ஒரு காரியத்திற்கு இணங்க வைத்தேன் என்ற வேதனை எனக்கும், வலுக்கட்டாயமாக ஒப்புக் கொண்டேன் என்ற வருத்தம் உனக்கும் வாழ்நாள் முழுவதும் இருந்து கொண்டே இருக்கும். அதில் எனக்கு விருப்பம் இல்லை."

அருணாவின் இதயம் வேகமாக துடித்தது 'உண்மையிலேயே சந்திரனுக்கு ஞான திருஷ்டி ஏதாவது இருக்குமோ!'

சந்திரன் மேலும் ஏதோ சொல்லிக் கொண்டு இருந்தான்.

"இப்போ என்று இல்லை. எதிர் காலத்திலும் செய்யவேண்டும் என்று மனபூர்வமாக நீ நினைத்த காரியங்களை தயங்காமல் செய்து முடித்துவிடு. என் விருப்பு வெறுப்புகளை பொருட்படுத்தத் தேவையில்லை. ஆனால் செய்வதற்கு முன்னால் என்னிடம் மறக்காமல் சொல்லிவிட வேண்டும். சரிதானா!"

அருணாவுக்கு பதில் சொல்ல வேண்டும் போல் இருந்தது. ஆனால் என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஐந்து நிமிடங்கள் கழித்து நிசப்தமாக இருந்த அந்தச் சூழ்நிலையில் சந்திரனின் குரல் வீணையை மீட்டுவது போல் ஒலிக்கத் தொடங்கியது.

"அருணா! இந்த உலகில் என்னால் எதை வேண்டுமானாலும் செய்ய முடியும். ஆனால் உன் மனதை நோக அடிக்க மட்டும் என்னால் முடியாது. உனக்கு ஏமாற்றத்தைத் தருவதை விட உயிரைத் தியாகம் செய்வது எனக்கு எளிதாக இருக்கும்."

அருணாவின் பிடிவாதம் தளர்ந்து விட்டது. கோபம் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிட்டது. சட்டென்று அவன் மார்பில் தலையை சாய்த்துக் கொண்டாள். அவள் கண்கள் பனித்து விட்டன. ரொம்ப நேரம் அவன் அருணாவின் தலையை வருடிக் கொண்டே இருந்தான். அவளுடைய பசி, வேதனை எல்லாம் அவனுடைய ஸ்பரிசத்தில் மாயமாக மறைந்து விட்டது போல் தோன்றியது. மனதில் நிம்மதி பரவியதும் களைப்பினால் கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் கன்னத்தில் புரண்ட கேசக்குழல்களை ஒதுக்கிவிட்டு, காதைப் பிடித்து மென்மையாக திருகியவன் கம்பீரமான குரலில் மேலும் சொன்னான். "இதோ பாரு பெண்ணே! நான் இப்போ சொன்னதை எல்லாம் என்னுடைய பலவீனங்களாக கனவில் கூட நீ நினைக்கக் கூடாது. அப்படி ஏதாவது நினைத்துக் கொண்டு என் மீது அங்குசமாக பயன்படுத்த நினைத்தாயோ, நான் ரொம்ப பொல்லாதவனாகி விடுவேன். காட்டு மிராண்டியாக மாறி உன்னைப் பாடாய் படுத்துவேன். இதை மட்டும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்."

சற்று முன் மென்மையான குரலில் மனைவியிடம் பாசத்தை வெளிப்படுத்தியவன் திடீரென்று இப்படிச் சொன்னது வித்தியாசமாக இருந்தாலும் அவனுடைய இயல்பை புரிந்து கொண்டவள் போல் அருணா மௌனமாக இருந்தாள்.

* * *



தனியாக ரயிலை விட்டு இறங்கிய அருணாவைப் பார்த்து கோபாலன், "இதென்ன? தனியாக வந்திருக்கிறாயே? மாப்பிள்ளை எங்கே?" என்று பதட்டத்துடன் கேட்டார்.

"அவருக்கு விடுமுறை கிடைக்கவில்லை சித்தப்பா." அருணா சொன்னாள்.

"உண்மையிலேயே விடுமுறை கிடைக்கவில்லையா? இல்லை . . . வேறு ஏதாவது . . ." சந்தேகமாக பார்த்தார்.

"உண்மைதான் சித்தப்பா" அவரைச் சமாதனப் படுத்தும் விதமாகச் சொன்னாள்.

பல வருடங்கள் கழித்து மறுபடியும் அந்த வீட்டில் காலடி எடுத்துவைக்கும் போது அருணாவின் விழிகளில் நீர் சுழன்றது. அவள் நினைத்தது போலவே வீட்டில் எல்லா வேலைகளும் அவளுடைய வரவுக்காக காத்திருந்தன. உடனே வீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு திருமண வேலைகளில் மூழ்கிப் போய் விட்டாள்.

ஊருக்கு வந்ததுமே க்ஷேமமாக வந்து சேர்ந்த விவரத்தைத் தெரிவித்து கணவனுக்குக் கடிதம் போட்டு விட்டாள். அடுத்த கடிதம் எழுதுவதற்கு அவளுக்கு ஓய்வு கிடைத்தால்தானே. திருமணத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருந்தன. சந்திரன் இன்னும் வராததை கண்டு சங்கரன் தந்தி கொடுத்தான். வர சௌகரியப்பட வில்லை என்று சந்திரனிடமிருந்து பதில் தந்தி வந்த போது அருணாவுக்கு முதல் தடவையாக கணவன் மீது கோபம் வந்தது.

சங்கரனின் மாமியார் வீட்டில் சுமாரான வசதிபடைத்தவர்கள் தான் என்றாலும், அவர்களுடைய தகுதிக்குத் தகுந்தாற்போல் விருந்தோம்பல் செய்தார்கள். திருமணச் சடங்குகள் வேடிக்கையாக, சந்தோஷமாக நடந்து முடிந்தன. திருமண மண்டபத்தில் பம்பரமாக அங்கே இங்கே என்று சுழன்று கொண்டிருந்தாலும் அருணாவின் மனம் சந்திரன் அருகில்

இல்லாத குறையை சுட்டிக் காட்டிக் கொண்டு தான் இருந்தது. அவனும் வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்? வாழ்க்கையில் ஒரு இனிமையான நிகழ்ச்சியை தாமிருவரும் எப்படி இழந்து விட்டோம் என்று புரிந்திருக்கும். இந்த கலகலப்பு, இந்த சந்தடி பதிவுத் திருமணத்தில் எங்கே கிடைக்கப் போகிறது.

சாப்பாடு பந்தி முடிந்து விட்டது. மாப்பிள்ளை வீட்டைச்சேர்ந்த பெண்கள் எல்லோரும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட அறையில் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் கழித்து அருணா ஓய்வாக உட்கார்ந்து கொண்டு நிம்மதியாக மூச்சை விட்டுக்கொண்டாள். ஏதோ பாரத்தை இறக்கி விட்டது போல் மனம் இலேசாக இருந்தது.

அருணா அமர்ந்திருந்த அறைக்கு எதிரே இருந்த ஹாலில் சற்றுதொலைவில் கும்பலாக சில பெண்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் யாரையோ ஆர்வத்துடன் பார்க்க தவித்துக் கொண்டு இருப்பதை இங்கிருந்தே அருணாவால் புரிந்து கொள்ள முடிந்தது.

"அங்கே என்ன நடக்கிறது?" வெள்ளித்தட்டில் வெற்றிலை பாக்குக் கொண்டு வந்த ஒரு பெண்ணிடம் அருணா கேட்டாள்.

இரட்டை பின்னல்களுடன், சற்று ஸ்டயிலாக இருந்த அந்தப் பெண் தலையைத் திருப்பி அந்தப் பக்கம் பார்த்தாள்.

"ஓ . . . அதுவா . . . சம்யுக்தா வந்திருக்கிறாள் இல்லையா. அவளை பார்க்க வேண்டுமென்றும் சந்திக்க வேண்டுமென்றும் தவித்துக் கொண்டு இருக்கிறார்கள்." அலட்சியமான குரலில் சொன்னாள்.

"யாரு? சம்யுக்தாவா . . . . கதைகள் எழுதுவாளே . . . அவளா?" நம்பமுடியாதவள் போல் கேட்டாள் அருணா.

"சாட்சாத் அவளே தான். தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை சம்யுக்தா இருக்கிறார்கள்? ஏன்? உங்களுக்கும் இலக்கியத்தில் ஆர்வம் இருக்கிறதா?"



"ஏன்? உங்களுக்கு இல்லையா?" அருணா வியப்புடன் கேட்டாள்.

இரண்டு பின்னல்களும் வேகமாக அசைவது போல் தலையை ஆட்டினாள். "ஊஹூம். தமிழ் நாவல்கள் என்றாலும், தமிழ் சினிமா என்றாலும், எனக்கு அலர்ஜி."

அந்தப் பெண் அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. மறுபடியும் அந்த கும்பல் இருந்த பக்கம் பார்த்து விட்டு புருவத்தை உயர்த்தி உதட்டைப் பிதுக்கினாள்.

"அதிலும் இவள் எழுதும் கதைகளை படித்தால் எனக்கு தலைவலியே வந்து விடும்" என்றாள்.

"எதனால் என்று தெரிந்து கொள்ளலாமா?"

"பேஷாக அவளுடைய உண்மையான பெயர் சரஸா. அதை சம்யுக்தா என்று மாற்றிக்கொண்டு வாசகர்களுக்கு இடையில் ஒரு இமேஜை உருவாக்கிக் கொண்டாள். அவளுடன் பேசுவது என்றாலே பயமாக இருக்கும். எந்த உரையாடலை தொடங்கினாலும் பிரச்சனையாக மாற்றி, உண்டு இல்லை என்று அலசிவிடுவாள். அதான் அவள் எழுதும் கட்டுரைகள் கொஞ்சம் நன்றாக இருக்கும்."

"கட்டுரைகள் கூட எழுதுவாளா? எதைப்பற்றி?" புதிதாக விஷயம் தெரிந்து கொண்டது போல் அருணா கேட்டாள்.

"எதைப்பற்றி வேண்மானாலும் எழுதுவாள். கட்டுரையாளர் மட்டுமே இல்லை. நல்ல பேச்சாளர். விமர்சனம் செய்வதிலும் திறமை படைத்தவள்."

"அப்படியா? நான் போய்ப் பார்க்கலாமா? என்னுடன் பேசுவாளா?"

இந்த முறை அந்தப் பெண் அருணாவை இரக்கத்துடன் பார்த்தாள். "அவளென்ன வானத்திலிருந்து இறங்கி வந்த தேவகன்னியா? வாங்க. அவளை உங்களுக்கு அறிமுகப்படுத்தி

வைக்கிறேன். அவள் எனக்கு தூரத்து சொந்தம். அவளுடைய தாய் எனக்கு அத்தை முறை ஆக வேண்டும்." பெருமை கலந்த குரலில் சொன்னாள்.

அருணா சட்டென்று எழுந்து கொண்டு அவளுடைய கையை பற்றிக் கொண்டு ஹாலுக்குச் சென்றாள். எவ்வளவு வேடிக்கையான விஷயம்! தான் இந்தத் திருமணத்திற்கு வர வேண்டும் என்று பிடிவாதமாக இருந்ததற்கு தூண்டுகோலாக இருந்தது சம்யுக்தாவின் எழுத்துதான். எதிர்பாராமல் அவளையே இங்கு சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது உண்மையிலேயே அதர்ஷ்டம்தான்.

கும்பலாகக் கூடியிருந்த பெண்களை விலக்கிக் கொண்டு எப்படியோ உள்ளே நுழைந்தார்கள்.

கீழே தரையில் விரிக்கப்பட்டிருந்த ஜமக்காளத்தின் மீது அமர்ந்து, சுவற்றில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தாள் சம்யுக்தா. கிட்டத்தட்ட அருணாவின் வயதுதான் இருக்கும். ஒல்லியாக, உயரமாக இருந்தாள். அவள் கண்களில் ஈர்ப்பை விட ஒரு விதமான சுறுசுறுப்புத்தன்மை தென்பட்டது. பளீரென்று வெண்மை நிறம். அது மட்டும் இல்லை என்றால் அவளுடைய தோற்றம் வேறு விதமாக இருந்திருக்குமோ என்னவோ. அவளைப் பார்க்கும் போது அருணாவுக்கு பளபளவென்று மின்னும் கத்திதான் நினைவுக்கு வந்தது.

அருணாவின் கையைப் பற்றிக்கொண்டு அழைத்துச் சென்ற அந்தப் பெண் பின்பக்கமாகச் சென்று சம்யுக்தாவின் தோளில் பலமாக தட்டினாள்.

"சம்யுக்தா! இதோ... உன்னுடைய வாசகர் வட்டத்தில் ஒரு சின்ன புள்ளி. உன்னைப் பார்த்து பேச வேண்டும் என்று தவித்துக் கொண்டு இருக்கிறாள். பெயர் அருணா என்று கேள்விப்பட்டேன். மாப்பிள்ளைக்கு ஒன்றுவிட்ட அக்கா" என்று அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அவ்வளவு பலமாக தோளில் தட்டியதற்கு அருணாவாக இருந்தால் அப்படியே தரையில் சரிந்திருப்பாள். தோள் அதனுடைய



இடத்தில் இருக்கிறதோ இல்லை கழண்டு விட்டதோ முதலில் சரி பார்த்துக் கொண்டு பிறகு தலையை உயர்த்தி வந்தவர்களை பார்த்திருப்பாள். ஆனால் சம்யுக்தா புன்முறுவலுடன் தலையைத் திருப்பி அருணா பக்கம் பார்த்தாள்.

அருணா வணக்கம் தெரிவித்தாள்.

சம்யுக்தா பதில் வணக்கம் தெரிவித்து விட்டு "மாப்பிள்ளையின். சகோதரி என்றால் ரொம்ப முக்கியமான பதவி இல்லையா...? முதலில் உட்கார்ந்து கொள்ளுங்கள்." சற்று நகர்ந்து இடமளித்தாள். அருணா வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உன்னை ரொம்பவும் பிடிக்குமாம்" இரட்டை பின்னல்காரி மற்றொரு முறை நீட்டி முழக்கி சொல்லிவிட்டு போய்விட்டாள்.

"என்னையா? என்னுடைய எழுத்துக்களையா?" அருணாவின் முகத்தை கூர்ந்து பரிசீலித்துக் கொண்டே புன்முறுவலுடன் கேட்டாள்.

"முதலில் உங்களுடைய எழுத்துக்கள். இப்போ உங்களை."

"என்னுடைய எழுத்துகள் உங்களுக்குப் பிடித்த காரணம் என்னவென்று சொல்ல முடியுமா?"

எல்லோரும் மௌனமாக அருணாவையே ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு தடவை பார்வையை சுழற்றி எல்லோரையும் பார்த்த அருணா, கொஞ்சம் கூட தடுமாறாமல் "ரொம்ப இயல்பாக இருப்பதால்" என்றாள்.

உடனே சம்யுக்தா சிரித்து விட்டாள். "நீங்க யாரோ சுவர்க்கத்திலிருந்து இறங்கி வந்த தேவதையாகத்தான் இருக்கவேண்டும்'' என்றவள், சுற்றிலும் பார்த்துவிட்டு, "இப்பொழுதுதான் இவர்கள் எல்லோரும் என்னுடைய படைப்புகள் இவ்வளவு செயற்கையாக இருப்பானேன் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்" என்றாள்.

"செயற்கையாகவா?"

"ஆமாம். இவர்கள் மட்டுமே இல்லை. எனக்கு வரும் கடிதங்களில் பெரும்பாலானவை இந்த வகையில் தான் இருக்கும். என்னுடைய படைப்புகளில் தோன்றும் மனிதர்களை போன்றவர்கள் இந்த உலகிலேயே இருக்கமாட்டார்களாம். அவர்களுடைய புகார் இதுதான். இருக்கிறார்கள் என்று சொன்னால் எங்கே காட்டுங்க என்று அடுத்த கேள்வி கேட்கிறார்கள். இதற்குள் நீங்களே வந்து விட்டீர்கள். தயங்காமல் சொல்லுங்க. உண்மையிலேயே என்னுடைய படைப்புகள் இயற்கையாக இருப்பது போல் உங்களுக்குத் தோன்றுகிறதா? அது போன்ற மனிதர்களை நீங்க சந்தித்தது உண்டா?"

அருணாவின் கன்னங்களில் செம்மை பரவியது. ஒரு நிமிடம் தயங்கிக் கொண்டே தரையில் பார்வையை பதித்தாள்.

"சொல்லுங்க, எதற்காக இந்த தயக்கம்?"

அருணா விழிகளை உயர்த்தி எல்லோரையும் பார்த்து விட்டு சௌதாமினி மீது பார்வையை பதித்தாள். "தயக்கம் என்று இல்லை. உங்களிடம் சொல்ல முடியுமோ என்னவோ. இத்தனை பேருக்கு நடுவில் என்னால் எதையும் சொல்ல முடியும் என்று தோன்றவில்லை." வெட்கம் கலந்த புன்னகையுடன் அருணா சொன்னாள்.

எல்லோரும் வியப்புடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

சம்யுக்தா சட்டென்று அருணாவின் கையைப் பற்றிக் கொண்டாள். "இங்கே எதுவும் சொல்ல வேண்டாம். எங்க வீட்டுக்கு வாங்க. விரிவாகப் பேசுவோம்" என்றாள்.

"அருணா! சங்கரன் உன்னை அழைக்கிறான்." யாரோ வந்து சொன்னதும் அருணா எழுந்து கொண்டாள்.

சம்யுக்தாவும் எழுந்து நின்றாள். இருவரும் கிட்டத்தட்ட ஒரே உயரம்.



"ஊருக்குப் போகும் முன் எங்க வீட்டுக்கு வர வேண்டும். மறந்து விடாதீர்கள்." சம்யுக்தா மற்றொருமுறை நினைவுப் படுத்தினாள்.

"மறக்கமாட்டேன்." வாக்கு கொடுப்பது போல் சொன்னாள் அருணா.

அருணா கிளம்பிப் போகும் போது "என்னுடைய கதைகளில் உண்மை இல்லை என்று சொன்னீங்களே. இப்போ பார்த்தீங்களா..." என்றாள் சம்யுக்தா அவள் குரலில் பெருமை வெளிப்படையாக தெரிந்தது.

ஆனால் யாரும் சம்யுக்தா பக்கம் பார்க்கவில்லை. நீளமான பின்னல் கருநாகம் போல் முதுகில் அசைந்தாட, தொலைவில் போய்க் கொண்டிருந்த அருணாவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

* * *

மாலையில் நலங்கு. அதைத் தொடர்ந்து ரிசெப்ஷன் நடந்தது. மறுநாள் காலையிலேயே ரயில் பிடித்து ஊருக்கு வரவேண்டியிருந்தது. சம்யுக்தா வீட்டுக்குப் போவதற்கு நேரம் இருக்கும் என்று அருணாவுக்குத் தோன்றவில்லை. அப்படியும் ரயிலில் ஏறுவதற்கு முன் கல்யாண பெண்ணின் தம்பியை உடன் அழைத்துக் கொண்டு சம்யுக்தா வீட்டுக்குப் போனாள்.

ஊருக்கு சற்று தொலைவில், குளத்திற்கு அருகில் அந்த வீடு அமைந்திருந்தது. வீட்டின் முன்னால் பூச்செடிகள் இருந்தன. இவர்களைப் பார்த்ததும் சௌதாமினி வாசலுக்கே வந்து வரவேற்றாள்.

அருணா சம்யுக்தாவின் கைகளை பற்றிக் கொண்டு, "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நேற்று முழுவதும் ஒரு நிமிடம் கூட ஓய்வு கிடைக்கவில்லை" என்றாள்.

"மன்னிப்பு கேட்கும் அளவுக்கு இதில் என்ன இருக்கிறது? நேற்று நான் அங்கே இருந்த கொஞ்ச நேரத்திலேயே மாப்பிள்ளை

வீட்டில் நீங்க ரொம்ப முக்கியமான நபர் என்பதை புரிந்து கொண்டு விட்டேன். எந்த விஷயத்திற்கும் உங்களைத்தான் தேடிக்கொண்டு இருந்தார்கள். உள்ளே வாங்க" என்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

அருணா வீட்டினுள் காலடி எடுத்து வைத்தாள். பழைய வீடாக இருந்தாலும் உள்ளே நவீன முறையில் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ஹாலில் விலை உயர்ந்த சோபா செட் இருந்தது. ஒரு பக்கமாக சின்ன மேஜை, அதன் மீது டு-இன்-ஒன் இருந்தது. அலமாரி முழுவதும் புத்தகங்களாக இருக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டு வந்த அருணாவுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது. டீபாய் மீது இரண்டு மூன்று ஆங்கில வார இதழ்கள் மட்டும் இருந்தன. சுவற்றில் ஒரு பக்கம் விவேகாநந்தரின் படமும் மற்றொரு பக்கம் அரவிந்தரின் படமும் மாட்டியிருந்தன.

ஜன்னல் வழியாக பார்த்தால் குளம் தென்பட்டுக் கொண்டு இருந்தது. குளத்தின் பின்னால் குன்றின் மீது முருகன் கோவில் இருந்தது.

அருணாவின் பார்வையைப் புரிந்து கொண்டவளைப் போல் சம்யுக்தா புன்முறுவலுடன் சொன்னாள். "அமைதியான சூழ்நிலையில்தான் என்னால் எழுதமுடியும். அதனால்தான் இந்த ஊரில் இருக்கிறேன். இல்லாவிட்டால் என்றோ இந்த ஊரை விட்டு ஓடிப் போயிருப்பேன்."

"அப்படியா!"

"ஆமாம். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் இந்த ஊரையே நான் வெறுக்கிறேன். இந்த ஊரில் இருக்கும் மனிதர்கள் ரொம்ப மோசமானவர்கள். இவர்களைப் போன்றவர்களை உலகில் எங்கேயும் பார்க்க முடியாது."

"அவர்களை மாற்ற நீங்கள் முயற்சி செய்யவில்லையா?"

"வந்த புதிதில் நானும் சில முயற்சிகள் செய்யாமல் இல்லை. ஆனால் அவர்கள் மாறுவதற்கு மாறாக என்னையே அவர்கள்



மாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்று உணர்ந்து கொண்டேன். ஆபத்தை புரிந்து கொண்டதும் கன்னத்தில் போட்டுக் கொண்டு அவர்களிடமிருந்து விலகி விட்டேன். நீங்க இன்னும் உட்காரவே இல்லை. உட்கார்ந்து கொள்ளுங்கள்."

அருணாவுக்கு தன்னுடைய பயணம் நினைவுக்கு வந்தது. "நான் ரயிலுக்குக் கிளம்ப வேண்டும். உங்களுடன் பேசினார் போலவே இல்லை" என்றாள்.

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. மறுபடியும் இந்த ஊருக்கு வாங்களேன்."

"சாத்தியப்படுமென்று தோன்றவில்லை. ஏற்கனவே என் கணவர் என் மீது கோபமாக இருக்கிறார்."

"உங்கள் கணவரைப் பற்றிச் சொல்வதாக சொன்னீங்களே."

"பெரிதாக சொல்வதற்கு எதுவும் இல்லை" வாசற்படியைத் தாண்டப் போன அருணா பின்னால் திரும்பிச் சொன்னாள். "ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் என்னுடைய கணவர் உங்களுடைய கதைகளில் வரும் ஹீரோவை போல் இருப்பார்" என்றாள்.

"உண்மையாகவா . . . அப்படி என்றால் உங்களிடமிருந்து சில விஷயங்களை நான் கேட்டுத் தெரிந்து கொண்டு தான் ஆக வேண்டும். உங்கள் கணவர் விஷயம் என்னவோ எனக்குத் தெரியாது. நீங்க மட்டும் என்னுடைய கதைகளில் வரும் ஹீரோயின் போல் இருக்கீங்க. முதல் தடவை உங்களைப் பார்த்தபோதே நினைத்துக் கொண்டேன்." சம்யுக்தா சொன்னாள்.

"அளவுக்கு அதிகமாகப் புகழறீங்க." வெளியில் வரும் போது சொன்னாள் அருணா.

"போகும் போது இப்படி அநியாயமாக என் மீது பழியைச் சுமத்தாதீர்கள். உண்மையை வெளிப்படையாகச் சொல்லும் பழக்கமுடையவள் நான். நீங்க மறுபடியும் வருவீர்கள் என்று

ஏனோ பலமாக தோன்றுகிறது. காரணம் என்னவென்று கேட்டால் இப்போ என்னால் பதில் சொல்ல முடியாது.'' சம்யுக்தா சொன்னாள்.

கைகளை கூப்பி விடைபெற்றுக் கொண்டு அருணா அங்கிருந்து கிளம்பினாள். சம்யுக்தாவுடன் பேசும் போது நேரம் போனதே தெரியவில்லை. மனம் விட்டு பேசவில்லை என்ற அதிருப்தி அருணாவின் மனதில் பரவியது.

சம்யுக்தாவின் ஜோதிடம் பலித்து விட்டது. 'மறுமுழுச்சுக்குப்' போகும் போது அருணாவும் கூட வர வேண்டும் என்று சங்கரன் பிடிவாதம் பிடித்தான். அருணாவால் மறுக்க முடியவில்லை. ஆனால் சந்திரன்! இந்த பதினைந்து நாட்களில் கணவனிடமிருந்து ஒரு கடிதம் கூட வராதது அருணாவின் மனதில் சுருக்கென்று தைத்தது. சொந்த பந்தங்களுக்கு இடையில் தான் சந்தோஷமாக இருப்பதாக நினைத்துக் கொண்டு இருப்பானாக இருக்கும். சங்கரனின் மாமியார் ஊருக்கு புறப்படுவதற்கு முன் தன்னுடைய வருகை மேலும் சற்று தாமதம் ஆகும் என்று சங்கரனை விட்டு சந்திரனுக்கு தந்தியை கொடுக்கச் சொன்னாள்.

மறுபடியும் சம்யுக்தாவை பார்க்கப் போகிறோம் என்ற உற்சாகத்தில் இருந்ததால் சந்திரனுக்குக் கோபம் வருமோ என்ற தயக்கம் அவளை ரொம்ப பாதிக்கவில்லை. சங்கரனின் மாமியார் ஊருக்குப் போனதும் அருணா, சம்யுக்தாவுக்குக் கடிதம் எழுதி அனுப்பினாள்.

சம்யுக்தாவுக்கு,

உங்கள் ஜோதிடம் பலித்து விட்டது. நான் மறுபடியும் உங்கள் ஊருக்கு வந்து விட்டேன். காந்தம் போல் என்னை உங்கள் பக்கம் ஈர்த்து விட்டீர்கள். மதியம் உங்கள் வீட்டுக்கு வரப் போகிறேன். உங்களுடைய எழுத்து வேலைகளை எல்லாம் அதற்குள் முடித்துக் கொள்ளுங்கள்.

அருணா



சம்யுக்தா பதிலுக்குக் கடிதம் எழுதினாள்.

அருணா,

ரொம்ப தாங்ஸ். உங்களுக்கும், எனக்கும் போன பிறவியிலேயே ஏதோ தொடர்பு இருக்க வேண்டும் எழுத்து வேலைகளை எல்லாம் மூட்டைகட்டி வைத்து விட்டேன். உங்களுடைய வருகைக்காக ஆவலுடன் காத்திருக்கிறேன்.

உங்கள்
சம்யுக்தா

இரண்டு நாட்கள் வேகமாக கழிந்து விட்டன. இந்த இரண்டு நாட்களிலும் அருணாவும் சம்யுக்தாவும் ரொம்ப நெருங்கி விட்டார்கள்.

மூன்றாவது நாள். அன்றுதான் கடைசி. மறுநாள் காலையிலேயே அருணா ஊருக்குக் கிளம்பப் போகிறாள்.

சம்யுக்தாவிடம் விடைபெறுவதற்காக அருணா அவளுடைய வீட்டுக்குச் சென்றாள்.

"நான் மறுபடியும் பழைய இயல்புக்கு திரும்புவதற்கு இரண்டு மூன்று நாட்களாவது தேவைப்படும்.'' புன்முறுவலுடன் சொன்னாள் சம்யுக்தா.

அருணா சுற்றிலும் பார்த்தாள், "'கதைகளை எழுதுவற்காக நீங்களாக உருவாக்கிக் கொண்ட இந்தத் தனிமை நன்றாகத் தான் இருக்குமோ என்னவோ. ஆனால் மனிதனாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்றால் கொஞ்சம் சிரமம்தான்.'

"நீங்கள் சொல்வது உண்மைதான்." பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டே சொன்னாள் சம்யுக்தா.

இந்த இரண்டு நாட்களில் அருணா சம்யுக்தாவைப் பற்றி கொஞ்சம் தெரிந்துகொண்டாள். சம்யுக்தா தாய் மாமனின் வீட்டில் வசித்து வருகிறாள். அவளுடைய தாய், தம்பி, தங்கையும் இங்கேதான் இருக்கிறார்கள். சம்யுக்தாவின் வருமானத்தில்தான்

அவர்களுடைய ஜீவனம் நடக்கிறது. அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் வரையில்தான் சம்யுக்தாவுன் பொறுப்பு. அதற்கு மேல் அவர்களுடன் பட்டும் படாமலும்தான் நடந்து கொள்கிறாள்.

"நான் உங்களிடம் ஒரு கேள்வியை கேட்கலாமா?" அருணா கேட்டாள்.

"தாராளமாக."

"தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே."

"எனக்கும் என்னுடைய வாசகர்களுக்கும் இடையில் எந்த விதமான வித்தியாசமும் இருக்கக் கூடாது என்பது என்னுடைய கொள்கை."

அருணா ஒரு நிமிடம் தயங்கிவிட்டு பிறகு கேட்டாள். "நீங்க ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?"

"நீங்க தயங்குவதை பார்க்கும் போது இப்படி ஏதாவது கேட்கப் போறீங்க என்று எதிர்ப்பார்த்தேன்." இதழ்கள் முறுவலித்துக் கொண்டு இருந்தாலும் சம்யுக்தாவின் முகம் கம்பீரமாக மாறியது. கண்களில் வேதனை திரையாக படிந்தது. "திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நானும் ஒரு காலத்தில் ஆர்வத்துடன் இருந்தது உண்மைதான். ஆனால் விருப்பம் மட்டும் நிறைவேறி இருந்தால் எழுத்தாளராக மாறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்காதோ என்னவோ!"

"காரணம்?"

"என் வாழ்க்கையில் பயங்கரமான திருப்புமுனை ஒன்று ஏற்பட்டது. கடந்தகால வாழ்க்கையை மறப்பதற்காக நான் கனவுலகில் வாழ ஆரம்பித்தேன். அந்த கனவுகளை கதைகளாக உருமாற்றினேன்."

அருணா புதிய விஷயம் கேட்பது போல் குனிந்து ஆர்வத்துடன் கேட்கத் தொடங்கினாள். சம்யுக்தா மேலும் சொன்னாள். "கல்லூரியில் படிக்கும் நாட்களில் ஒரு இளைஞனுடன் அறிமுகம்



ஏற்பட்டது. சில காரணங்களுக்காக அவன் வெளி ஊருக்கு போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் ஒவ்வொரு வருடமும் விடுமுறை வந்தபோது ஊருக்குக் கட்டாயம் வருவான். எங்க இருவருக்கும் இடையே ஏற்பட்ட நட்பு காதலாக மாறியது. கடிதங்கள் எழுதிக்கொண்டோம். கடைசியில் அந்தக் கடிதங்கள்தான் என்னுடைய வேதனையின் நினைவுச் சின்னங்களாக மாறிவிட்டன. அவன் என்னை மறந்து விடுவான் என்று நான் கனவில்கூட நினைக்கவில்லை. அந்த ஏமாற்றத்திலிருந்து வெளியேற எனக்கு ரொம்ப நாள் தேவைப்பட்டது. கிட்டத்தட்ட பைத்தியம் பிடித்த நிலையில் இருந்தேன்."

"உங்களை . . . மறந்து விட்டானா?" நம்பமுடியாதவள் போல் பார்த்தாள் அருணா.

"ஆமாம். அப்போ நான் வெறும் சரஸாவாகத்தான் இருந்தேன். அவன் என்னை விட்டு தொலைவாகப் போய் விட்டாலும், அப்பாவியாக இருந்த என்னை திறமையான படைப்பாளியாக மாற்றியது அதுதான். ஒரு விதமாக பார்த்தால் இது எனக்கு ஒரு வரம்தானோ என்று தோன்றும். ஆனால் சில சமயம் தனிமை என்னைக் கொடூரமாக தாக்கும் போது சாபமாக நினைக்கத் தோன்றும்."

அருணாவுக்கு என்ன சொல்வது என்று புரியவில்லை. இருவருக்கும் இடையே ஆழமான மௌனம் நிலவியது. அவரவர் தங்களுடைய யோசனைகளில் மூழ்கியிருந்தார்கள்.

திடீரென்று அருணா கேட்டாள். "நடந்ததோ நடந்து விட்டது. உடைந்து போன பானையை நினைத்து தாகத்தை அடக்கிக் கொள்வது புத்திசாலித்தனம் இல்லையே. வேறு பாத்திரத்தை தேடிக்கொள்வது தானே விவேகம்."

"இல்லை அருணா . . . என்னால் அப்படிச் செய்ய முடியாது." தலையை குறுக்காக அசைத்தாள் சம்யுக்தா.

"முடியாது என்று நீங்கள் இப்படி தீர்மானமாக சொல்வது சரியென்று எனக்குத் தோன்றவில்லை. மனிதன் நினைத்துக் கொண்டால் சாதிக்க முடியாது என்று எதுவுமே இல்லை." அருணா சொன்னாள்.

மபாய் மீது இருந்த பேப்பர் வெயிட்டை அப்படியும் இப்படியுமாக சுழற்றிக் கொண்டிருந்த சம்யுக்தா பதில் சொல்லவில்லை.

"எங்கள் எல்லோருக்கும் இவ்வளவு சந்தோஷத்தை பகிர்ந்து தரும் நீங்க இப்படி தனிமையில் வாடுவது என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை."

கண் இமைக்காமல் ஒரு நிமிடம் அருணாவை பார்த்த சம்யுக்தா சட்டென்று எழுந்து மேஜை அருகில் சென்றாள். மேஜை டிராயரை வேகமாக இழுத்தவள், அதிலிருந்து சிவப்பு சாட்டின் ரிப்பனால் கட்டப்பட்ட கடிதங்களை எடுத்து வந்து அருணாவின் கையில் கொடுத்தாள். "உங்களுடைய சவால் எனக்கு புரியாமல் இல்லை. அந்தக் கடிதங்களில் உங்கள் கைக்கு வந்த ஏதாவது ஒரு கடிதத்தை படித்துப் பாருங்கள். உங்களுக்கே புரியும்" என்றாள்.

அருணா அந்தக் கடிதங்களையும், சம்யுக்தாவையும் மாறி மாறி பார்த்தாள். பிறகு சம்யுக்தாவின் கையை மென்மையாக விலக்கி விட்டு "படிக்க வேண்டிய தேவையில்லை. அவற்றை நீங்க கவனமாக பாதுகாத்து வந்த முறையிலிருந்து அவை உங்களுக்கு எவ்வளவு பிரியமானவை என்று என்னால் புரிந்து கொள்ள முடியும். ஆனால் நான் சொல்ல வந்தது . . ."

சம்யுக்தா அருணாவை மேற்கொண்டு பேசவிடவில்லை. எதிரே அமர்ந்து கொண்டு தானே இரண்டு கடிதங்களை எடுத்து படித்துக் காண்பித்தாள்.

அருணா நாற்காலியில் சாய்ந்து கொண்டு கவனமாக கேட்டுக் கொண்டிருந்தாள். கடித வடிவில் இயற்றப்பட்ட காதல் காவியம் அது. அதில் பிரதிபலித்த அன்பு, ஆராதனை அருணாவின் மனதை ரொம்பவும் பாதித்து விட்டது.



கடிதங்களை பத்திரமாக மடித்து வைத்துக் கொண்டே சம்யுக்தா கேட்டாள். "இப்போ சொல்லுங்க இது போன்ற அமிருதத்தை ருசி பார்த்தவனுக்கு வெறும் கூழைப் பருக மனம் வருமா?"

"உண்மைதான். எதனால் நீங்க இருவரும் திருமணம் செய்து கொள்ளவில்லை?" அருணாவால் ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"தலைமுறை தலைமுறையாக நடந்து வந்த கதைதான். அழகும், சொத்தும் ஒன்றாக இணைந்த பெண் ஒருத்தி கிடைத்தாள். போய் விட்டான்." பொங்கி வந்த கண்ணீரை அடக்க முயன்று கொண்டிருந்தாள் சம்யுக்தா. "அந்த வேதனை என் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கும். மற்றவர்களை போல் அவனும் சாதாரணமானவன்தான் என்பதை புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டேன். அதற்கான தண்டனையை அனுபவித்து வருகிறேன்."

"அதற்குப் பிறகு நீங்க அவனைப் பற்றி விசாரிக்கவே இல்லையா?" அருணா வியப்புடன் கேட்டாள்.

"சும்மா இருக்காமல் என்னால் என்ன செய்ய முடியும்?"

"ஏன் சும்மா இருக்கணும்? உங்களுடைய நிலைமையில் நான் இருந்தால் அவனுடைய இருப்பிடத்தை தெரிந்துகொண்டு கத்தியால் குத்தி கொலை செய்திருப்பேன். அது சாத்தியப்படவில்லை என்றால், அவனைப்பற்றி என்னுடைய கருத்தையாவது மாற்றிக் கொண்டு இருப்பேன். இப்படி உங்களைப் போல் வாழ்நாள் முழுவதும் வேதனையில் வருந்தி கொண்டு இருக்க மாட்டேன்."

"உலகில் எல்லோரும் உன்னைப் போலவே இருப்பார்கள் என்று நினைத்தால் அது முட்டாள்தனம்." கம்பீரமாக மொழிந்தாள் சம்யுக்தா.

அருணா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். "அவனுடைய போட்டோவை பார்க்கிறாயா?" சம்யுக்தா கேட்டாள்.

"கட்டாயம் பார்க்கிறேன். தமிழ்வாசகர்களின் சார்பில் அந்த நபருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டாமா?" புன்முறுவலுடன் சொன்னாள் அருணா.

கடிதங்களுக்கு நடுவில், ரோஸ் நிற கவரில் இருந்து போட்டோவை எடுத்தாள். அதைப் பார்த்த அருணா சற்று கோபமும் பரிகாசமும் கலந்த குரலில் "கொன்று புதைக்க வேண்டிய மனிதனை இதயக் கோவிலில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகிறீர்கள். உண்மையிலேயே நீங்க வித்தியாசமான பிறவிதான்" என்றாள்.

"நீ ரொம்ப பிராக்டிகலாக யோசிப்பாய் என்று நினைக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே போட்டோவை நீட்டினாள்.

அதற்குள் உள்ளே இருந்து "சரஸா! ஒரு நிமிடம் உள்ளே வாயேன்." தாய் அழைக்கும் குரல் கேட்டதும். "இதோ வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டு சம்யுக்தா உள்ளே ஓடினாள்.

'என்னமோ நினைத்தேன். எழுத்துக்களை போலவே அவளுடைய சுபாவமும் ரொம்ப மென்மையானதுதான்.' சம்யுக்தா சென்ற திசையை பார்த்துக் கொண்டே அருணா நினைத்துக் கொண்டாள்.

அருணாவின் பார்வை வாசற் கதவிலிருந்து கையில் வைத்திருந்த போட்டோவின் மீது திரும்பியது. நாற்காலியின் பக்கத்திலேயே வெடிகுண்டு வெடித்தது போல் வீலென்று கத்தப் போனவள் எப்படியோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். உள்ளங்கையில் வைத்திருந்த போட்டோவில் ஃபுல்ஹேண்ட் ஷர்ட்டும், கழுத்தில் டையும் அணிந்திருந்த சந்திரன் புன்முறுவல் பூத்த முகத்துடன் காட்சியளித்தான். ஒரு நிமிடம் அவளுக்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. கனவா . . . நினைவா என்று புரியாத நிலை. சங்கரனின் திருமணத்திற்கு தான் வந்தது, வந்த இடத்தில் சம்யுக்தாவுடன் அறிமுகம், அவள் வீட்டுக்கு தான் வந்தது . . . எல்லா காட்சிகளும் கண்களுக்கு முன்னால் வேகமாக தோன்றி மறைந்தன. வானத்தில் பறந்து



கொண்டிருந்தவளை யாரோ திடீரென்று தரையில் தள்ளி விட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது.

உள்ளே போன சம்யுக்தா கிட்டத்தட்ட கால்மணி நேரம் கழித்து ஹாலுக்கு வந்தாள்.

"இதில் உனக்கு எந்த கலர் பிடித்திருக்கிறது?" கையில் வைத்திருந்த காட்டன் புடவைகளை காண்பித்துக் கொண்டே கேட்டாள்.

ஜன்னல் அருகில் நின்றிருந்த அருணா சம்யுக்தா பக்கம் திரும்பி "இதென்ன? இப்போ எதுக்கு?" என்று கேட்டாள்.

"என்னுடைய மகிழ்ச்சிக்காக. நம் இருவரின் அறிமுகத்திற்கு அடையாளமாக சின்ன பரிசு. இந்த ஊரில் காட்டன் புடவைகள் ரொம்ப நன்றாக இருக்கும்."

சம்யுக்தாவின் வற்புறுத்தலுக்குப் பணிந்து போவதைத் தவிர, அருணாவுக்கு வேறுவழி தெரியவில்லை. வெளிர்நீல வண்ணத்தில் புடவையை எடுத்துக் கொண்டாள். ரோஸ் நிற புடவையை விலை கொடுத்து வாங்கியவள் கையோடு சம்யுக்தாவுக்கு பரிசாகக் கொடுத்தாள்.

"பதில் மரியாதை செய்கிறாயா?" சம்யுக்தா நிஷ்டூரமாகக் கேட்டாள்.

"இல்லை. வாழ் நாள் முழுவதும் என் நினைவுகள் உங்களை தொடர வேண்டும் என்று விரும்புகிறேன்."

"கடிதம் எழுத மறக்க மாட்டாயே?"

"ஊஹூம். நான் எழுதப் போகும் கடிதங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு புதிய நாவல் ஒன்று எழுதுவதாக வாக்குக் கொடுத்ததை நீங்களும் மறக்கக் கூடாது."

"மறக்க மாட்டேன்." சம்யுக்தா சொன்னாள்.

* * *

பொல பொலவென்று பொழுது விடிந்து கொண்டு இருந்தது. சந்திரன் காலையிலேயே எழுந்து விட்டான். ஷேவ் செய்து கொள்வதற்காக சோப்பைக் குழைத்து கன்னத்தில் பூசிக் கொண்டு இருந்தான். வாசற்கதவை யாரோ ஓசைப் படுத்திய சத்தம் கேட்டது.

"ஊரிலிருந்து அம்மா இன்னும் வரவில்லை."

குரலை உயர்த்தி கோபமாகக் கத்தினான். தினமும் காலையிலேயே வேலக்காரி வந்து கதவை இடிஇடியென்று இடித்து விட்டு, 'அம்மா வந்து விட்டாளா' என்று கேட்பதும், 'இன்னும் வரவில்லை' என்று பதில் சொல்வதும் வழக்கமாகி விட்டது.

மறுபடியும் கதவைத்தட்டிய சத்தம்.

"யாரு?"

பதில் எதுவும் வரவில்லை.

"யாரது?" வேகமாக வந்தவன் கதவைத் திறந்தான். இரண்டாவது கதவையும் திறக்கப் போனவனின் கை அப்படியே நின்று விட்டது. எதிரே அருணா நின்றிருந்தாள். அவளை இறக்கி விட்ட டாக்ஸீ பின்னால் திரும்பி சாலையில் போய்க் கொண்டிருந்தது. சந்திரனின் இதழ்கள் எகத்தாளமாய் ஏதோ சொல்வதற்காக விரிந்து மறுபடியும் இறுகின. எதிரியை எடைபோடுவது போல் இருவரும் ஒருவரை ஒருவர் தீவிரமாக பார்த்துக் கொண்டார்கள்.

"உள்ளே வாருங்கள்." ரொம்ப பணிவுடன் சொல்லிக் கொண்டே நகர்ந்து வழியை விட்டான்.

அருணா உள்ளே வந்தாள். சந்திரன் வாசற்கதவைத் தாள் போட்டான்.

கையிலிருந்த சூட்கேஸை கீழே வைத்துவிட்டு படுக்கை அறையை நோக்கி அருணா போய்க் கொண்டிருந்தாள். அதற்குள் சந்திரனின் கை பின்னாலிருந்து நீண்டு வந்து அருணாவின்



தோளில் பலமாக படிந்தது. அதே வேகத்தில் அவளை தன்பக்கம் திருப்பிக் கொண்டான்.

"இப்பொழுதுதான் வீட்டின் நினைவு வந்ததா? இவ்வளவு சீக்கரம் திரும்பி வருவானேன்? இன்னும் இரண்டு மாதங்கள் இருந்து விட்டு வருவதுதானே!"

முற்றிலும் புதிய மனிதனை பார்ப்பது போல் அருணா அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். பயணக் களைப்பு மிகுந்த அந்தக் கண்களில் மகிழ்ச்சியோ, ஆர்வமோ எதுவும் இருக்கவில்லை. இதற்கு முன் எப்போதும் கண்டிராத வெறுமை அவள் கண்களில் பிரதிபலித்தது.

"ஏன்? என்னவோ போல் இருக்கிறாய்? உடம்பு சரியாக இல்லையா?" பதட்டத்துடன் கேட்டான்.

"நன்றாகத்தான் இருக்கிறேன்." எப்படியோ பதில் சொல்லி விட்டாள்.

"பின்னே சுரத்தே இல்லாதது போல் தென்படுகிறாயே? ஏன்? என்ன நடந்தது?"

அவனுடைய ஸ்பரிசத்தில், பேச்சில் வெளிப்பட்ட அன்பில் கரைந்து போகாமல் இருப்பதற்கு தீவிரமாக முயன்று கொண்டிருந்தாள்.

"என் கண்களுக்கு நீங்க வேறு யாரோ போல் தென்படுகிறீர்கள். நான் அறிந்த சந்திரன் இல்லை இது."

"என்ன?" சந்திரன் அருணாவின் முகத்தை இரு கைகளிலும் ஏந்திக்கொண்டு அவளுடைய கண்களுக்குள் ஊடுருவது போல் பார்த்தான். "மறுபடியும் சொல்லு" என்றான்.

அருணா வாயை விட்டு எதுவும் சொல்லாவிட்டாலும் ஏதோ நடந்திருக்க வேண்டும் என்று அவனுடைய உள்மனத்திற்கு புரிந்து விட்டது. இத்தனை நாட்களாக குறைந்த பட்சம் கடிதம் கூட எழுதவில்லையே என்ற ஏக்கமா? தன்னை அலட்சியப்படுத்தி விட்டதாக நினைத்திருப்பாளோ?

சந்திரன் அருணாவை அருகில் இழுத்துக் கொண்டு அணைத்தான். ஐந்து நிமிடங்கள் கழித்து மனைவியை விடுவித்து சற்று தள்ளி நிறுத்தி கவனமாக பரிசீலித்தவன் திடீரென்று சிரித்து விட்டான். உரத்த குரலில் அவன் சிரித்த சிரிப்பு வீடு முழுவதும் எதிரொலித்தது.

"என்ன ஆச்சு?" ஏதோ நினைவுகளில் மூழ்கியிருந்த அருணா இந்த உலகத்திற்கு மீண்டாள்.

சந்திரன் அருணாவின் கையைப்பற்றி நிலைக் கண்ணாடி அருகில் அழைத்துச் சென்றான்.

"ஒருமுறை கண்ணாடியின் அருகில் உன்னுடைய உருவத்தை பார்த்துக் கொள். எந்தக் கணவனும் மனைவிக்கு இது போன்ற வரவேற்பை அளித்திருக்க மாட்டான்" என்றான்.

அருணா கண்ணாடியில் தன்னுடைய உருவத்தை பார்த்துக் கொண்டாள். சந்திரன் ஷேவ் செய்து கொள்வதற்காக கன்னத்தில் தடவியிருந்த சோப் அருணாவின் கன்னத்தில் அங்காங்கே முத்திரையாக படிந்திருந்தது. சட்டென்று புடவைத் தலைப்பால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

சந்திரன் அன்று அலுவலகத்திற்குப் போகவில்லை.

"என்ன விசேஷம்? அங்கே நடந்த விஷயங்கள் எதுவுமே சொல்லவில்லையே?" வீட்டை ஒழித்து வைத்துக் கொண்டிருந்த அருணாவின் பின்னாலேயே சுற்றிச்சுற்றி வந்தான்.

"விசேஷம் எதுவும் இல்லை." சுருக்கமாக சொன்னாள் அருணா.

"ஊம்."

"நான் வராதது வெறுமையாக இருந்ததா?"

"சித்தப்பாவும் சங்கரனும் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தார்கள்."



"நான் கேட்டது உன்னைப்பற்றி!"

"எனக்கு ஓய்வு கிடைத்தால் தானே! போனதிலிருந்து ஒரே வேலை. மூச்சை எடுத்துக் கொள்ளவும் நேரம் இல்லை. ரொம்ப நாள் கழித்து ஊருக்கு போயிருப்பதாலோ என்னவோ வந்தவர்களுடன் பேசுவதற்கே நேரம் போறவில்லை."

"சரி . . . சரி . . அது எனக்குப் புரியாமல் இல்லை." அதற்கு மேல் கேட்பதற்கு எதுவும் இல்லை என்பது போல் சமையல் அறையிலிருந்து வெளியேறினான்.

பின்னாலிருந்து அவனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அருணாவுக்கு அவனுடைய பேச்சு, நடத்தை எல்லாமே புதுசாக, செயற்கையாகத் தெரிந்தன.

அன்று இரவே சம்யுக்தாவுக்குக் கடிதம் எழுதினாள். அதில் தான் வீட்டினுள் காலடி எடுத்து வைத்தது முதல் கணவன் தன்னிடம் நடந்து கொண்ட முறையை அழகாக, கோர்வையாக எழுதியிருந்தாள்.

மூன்று மாதங்கள் வேகமாக உருண்டோடிவிட்டன. ஊரிலிருந்து திரும்பி வந்த பிறகு அருணாவிடம் ஒரு விதமான வெறுமை, விரக்தி குடிகொண்டு இருப்பதை உணர்ந்து கொண்ட சந்திரன் அதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ள பலவிதமாக முயன்று தோல்வி அடைந்தான்.

விடுமுறை எடுத்துக் கொண்டு எங்கேயாவது வெளி ஊருக்கு போய்விட்டு வருவோமா என்று மனைவியிடம் கேட்டான். அருணா மறுத்து விட்டாள். காரணம் கேட்டால் சொல்லவில்லை. மாட்டேன் என்று பிடிவாதமாக ஒற்றை வார்த்தையில் பதில் அளித்தாள். சந்திரனுக்குக் கோபம் வந்து விட்டது. அருணாவை நன்றாக திட்டி விட்டு கோபத்தில் தனியாக கிளம்பிப்போனான். பதினைந்து நாட்கள் ஊர்களை சுற்றி விட்டு வருவதாக இருந்த சந்திரன் நடுவிலேயே பயணத்தை கான்சல் செய்து கொண்டு அடுத்த வாரமே திரும்பி விட்டான். அருணா அவனுடைய

வருகைக்காக மகிழ்ச்சியை தெரிவிக்கவும் இல்லை. பட்டும் படாமலும் இருந்து விட்டாள். சந்திரனுக்கு பைத்தியமே பிடித்து விடும் போல் இருந்தது. எப்படியோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அருணாவிடம் விளக்கம் கேட்டான்.

''நான் சாதாரணமாகத்தான் இருக்கிறேன்.'' ஒரே பதிலைத்தான் சொன்னாள்.

'இல்லவே இல்லை, உண்மையைச் சொல்லு, உனக்கு என்னதான் ஆகிவிட்டது?" மூன்று மாதங்களுக்கு மேலாக ஊமையாய் வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்த சந்திரன், திடீரென்று கட்டுப்பாட்டை இழந்து விட்டவனாய் உரத்தகுரலில் கேட்டான்.

அருணா எதுவும் பேசவில்லை. பதுமையை போல் தலையைக் குனிந்து கொண்டு அவன் முன்னால் நின்றிருந்தாள்.

சற்று நேரம் மனைவியை கண் இமைக்காமல் பார்த்தவன், அவளுடைய கையைப் பற்றிக் கொண்டு தீனமான குரலில் கேட்டான். "உன் மௌனத்தால் என்னை சித்திரவதை செய்யாதே. எனக்குத் தெரியாமலேயே என்னால் ஏதோ தவறு நடந்து இருக்க வேண்டும். அது என்னவென்று தெரிந்துகொண்டு திருத்திக் கொள்ள எனக்கு ஒரு வாய்ப்பு தரக் கூடாதா?"

"நீங்க எதுவும் செய்யத் தேவையில்லை."

"அப்படி என்றால் மன்னிக்க முடியாத அளவுக்கு பெரிய குற்றம் ஏதாவது செய்து விட்டேனா?"

"இல்லை, இல்லை." என்ன சொல்வது? எப்படி சொல்வது என்று புரியாத அருணா, இரண்டு கைகளையும் கூப்பினாள். "தயவு செய்து இப்படி கேள்விகளை கேட்டு எனக்கு வேதனையை தராதீர்கள். எனக்கு பைத்தியம் பிடித்து விட்டதோ என்று அஞ்சுகிறேன். உண்மையிலேயே சொல்கிறேன். தாங்க முடியாத மன உளைச்சலில் இருக்கிறேன்" என்றாள்.



"மன உளைச்சலா? எதனால்?" புதுவிஷயம் கேட்பது போல் சந்திரன் கேட்டான்.

மௌனமாக இருந்தாள்.

"சொல்லு? என்ன நடந்தது?" இரட்டிபது போல் கேட்டான்.

எத்தனை முறை கேட்டும் மனைவியின் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வராதது கண்டு தன்னுடைய மார்பின் மீது ஆள்காட்டி விரலை பதித்து "என் மீது எரிச்சலாக இருக்கிறதா?" என்று கேட்டான்.

அருணா அவனுடைய கையை உதறித் தள்ளி விட்டு வேகமாக உள்ளே போய் விட்டாள்.

சந்திரன் ரொம்ப நேரம் அதே இடத்தில் கற்சிலையாக நின்று விட்டான். இரத்தம் முழுவதும் வற்றி விட்டது போல் அவன் முகம் வெளிறிப் போய் விட்டது.

அருணா, சம்யுக்தாவுக்கு இடையில் கடித போக்குவரத்து எந்தத் தடையும் இல்லாமல் நீடித்து வந்தது. சம்யுக்தாவுடன் தனக்கு ஏற்பட்ட நட்பு பற்றி சந்திரனிடம் இப்போ உடனே சொல்ல வேண்டியதில்லை என்று அருணா முடிவு செய்தாள். சம்யுக்தா புதிதாக ஒரு நாவலை எழுதி வருகிறாள். அந்த நாவலை முதலில் சந்திரனிடம் கொடுத்து படிக்கச் சொல்ல வேண்டும். பிறகு இருவரையும் சந்திக்க வைக்கவேண்டும். சந்திக்க வைத்த பிறகு என்ன செய்வது என்று அருணாவுக்குத் தெரியவில்லை. தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. சந்திரன் சம்யுக்தாவின் வாழ்க்கையை மட்டுமே இல்லை, அருணாவின் வாழ்க்கையையும் நாசமாக்கி விட்டான். சம்யுக்தாவிடம் எழுத்து திறமை இருந்ததால் வாழ்க்கையின் போக்கை மாற்றிக் கொண்டாள். ஆனால் தன்னுடைய நிலைமை என்ன? இந்த வேதனையிலிருந்து எப்படி விடுபடப் போகிறாள்? எத்தனை யோசித்தாலும் அருணாவுக்கு வழி தெரியவில்லை.

அன்று மதியம் சம்யுக்தாவுடமிருந்து வந்த கடிதத்தை படித்துக் கொண்டிருந்தாள்.

அருணா,

இன்றுதான் நாவலின் கடைசி அத்தியாயத்தை எழுதி முடித்தேன். எவ்வளவு நன்றாக வந்திருக்கிறது தெரியுமா! என்னுடைய படைப்புகளிலேயே இது ரொம்ப உயர்வானது என்று நினைக்கிறேன். நாளை மறுநாள் பப்ளிஷர்ஸ் வருவதாக சொல்லியிருக்கிறார்கள். நாவலின் முடிவு கூட ரொம்ப அருமையாக வந்திருக்கிறது. நாவலை முழுவதுமாக படித்த பிறகு இதை எழுதியது நான்தானா என்று வியப்பும், மகிழ்ச்சியும் ஏற்படுகிறது. இந்த நாவல் உருவானதற்குக் காரணமே நீதான். இதில் எழுதியிருக்கும் விஷயங்கள் முக்கால்வாசி உங்களுடையவைதான். அதனால் இந்த நாவலை உனக்கே அர்ப்பணம் செய்கிறேன்.

சம்யுக்தா

அருணா படித்துக் கொண்டிருக்கும் போதே பாத்ரூமில் தடாலென்ற சத்தமும், அதைத் தொடர்ந்து "அம்மாடியோவ் . . . செத்தேன்." என்று வேலைக்காரி கத்தியதும் கேட்டது.

அருணா பதட்டத்துடன் கடிதத்தை மேஜை மீது வைத்து விட்டு பாத்ரூமை நோக்கி ஓடினாள்.

உள்ளே பாத்ரூமில் வேலைக்காரி சோப் மீது காலை வைத்து வழுக்கி விழுந்து விட்டாள்.

"அம்மாடி! என்னுடைய கண் போய் விட்டது சாமியோவ்" என்று உரத்த குரலில் பிலாக்கணம் பாடிக் கொண்டு இருந்தாள்.

"லஷ்மி! என்ன ஆச்சு! அடி பலமாக பட்டு விட்டதா? என்னைப் பார்க்க விடு." பதட்டத்துடன் உள்ளே வந்த அருணா வேலக்காரியை மெதுவாக எழுப்பினாள்.

"கண் பார்வை போய் விட்டால் என்னை யார் காப்பாற்றுவார்கள் சாமியோவ்!" லஷ்மி உச்சஸ்தாயில் கத்தத் தொடங்கினாள்.



"சின்னக் குழந்தையை போல் கத்தாதே லக்ஷ்மி! மெதுவாக கண்ணை திறக்க முயற்சி செய்." நயமாக சொல்லிக் கொண்டே லக்ஷ்மியை குளியல் அறையிலிருந்து வெளியில் அழைத்து வந்தாள்.

கால் வழுக்கியதில் லக்ஷ்மி இரும்பு வாளிமீது போய் விழுந்திருக்கிறாள். வாளியின் விளிம்பு கண்ணுக்கு அருகில் பட்டதோ இல்லை கண்ணிலேயே பட்டதோ தெரியவில்லை. காயத்திலிருந்து ரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. சட்டென்று பஞ்சால் ஒற்றி காயத்தைத் துடைத்து விட்டாள். போட்டது போட்டபடி வாசற்கதவைப் பூட்டிக் கொண்டு லக்ஷ்மியை டாக்டரிடம் அழைத்துச் சென்றாள்.

காயத்தை பரிசீலித்த டாக்டர் கண்ணுக்கு எந்த ஆபத்தும் இல்லையென்று சொல்லிவிட்டார். மருந்து போட்டு கட்டுப்போட்ட பிறகு லக்ஷ்மியை அதே ரிக்ஷாவில் அழைத்துப் போய் அவளுடைய வீட்டில் ஒப்படைத்து விட்டு வீட்டுக்கு வந்த போது நன்றாக இருட்டி விட்டது.

ஏற்கனவே வீட்டுக்கு வந்து விட்ட சந்திரன் வாசலில் நின்று அருணாவுக்காக காத்திருந்தான். அருணா வருவதற்குள் அடுத்த வீட்டு மாமி அவனுக்கு லஷ்மிக்கு அடிப்பட்ட விவரத்தை கையை ஆட்டி ஆட்டி சொல்லிக் கொண்டு இருந்தாள்.

"அடி ரொம்ப பலமாக பட்டுவிட்டதா? இப்போ எப்படி இருக்கிறாள்?" அருணாவை பார்த்ததும் பதட்டத்துடன் கேட்டான்.

பூட்டைத் திறந்து வீட்டுக்குள் நுழைந்து கொண்டே நடந்ததை சுருக்கமாக தெரிவித்தாள்.

அருணா சமையல் அறைக்குச் சென்று காபி கலந்து எடுத்து வரும் போது சந்திரன் மேஜை அருகில் நாற்காலியில் அமர்ந்து சம்யுக்தா எழுதிய கடிதத்தை படித்துக் கொண்டிருந்தான். அவன் புருவங்கள் முடிச்சேறியிருந்தன. அருணாவின் கையில் இருந்த காபி லேசாக நடுங்கியது. அதற்குள் தன்னைக் கட்டுப்படுத்திக்

கொண்டு எதுவும் தெரியாதவள் போல் காபி கோப்பையை நீட்டினாள்.

"யாரிந்த சம்யுக்தா?" தலையை உயர்த்திக் கொண்டே கேட்டான்.

"ஒரு எழுத்தாளர்."

"உனக்கு எப்படி அறிமுகம் ஆனாள்?"

"சங்கரனின் திருமணத்தில் சந்தித்தேன்."

"உங்களுடைய விஷயங்கள் என்று குறிப்பிட்டு இருக்கிறாளே?" புரியாதவன் போல் கேட்டான்.

"நமக்கு இடையில் நடந்த விஷயங்களை அவளுக்கு கடிதத்தில் எழுதியிருக்கிறேன்."

"நமக்கு இடையில் நடந்த விஷயங்களா? அப்படி என்றால்?" நெற்றியைச் சுளித்துக் கொண்டே கேட்டான்.

"எல்லாமே! அவள் எனக்கு எழுதிய கடிதங்களை படித்து பாருங்கள். சாதாரண நிகழ்ச்சிகளை கூட ரொம்ப அழகாக மாற்றிவிடுவாள் என்பதை நீங்களே புரிந்து கொள்வீர்கள்."

அருணா காபி கோப்பையை மேஜை மீது வைத்து விட்டு பீரோவை திறந்து புடவைகளுக்கு அடியில் இருந்த கடிதங்களை கட்டாக எடுத்து வந்தாள்.

முகம் வெளிர சந்திரன் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். நாளுக்கு ஒரு தடவையாவது அவன் அந்த பீரோவை திறப்பான். ஆனால் அதே அலமாரியில் தனக்குத் தெரியாத விஷயம் ஒன்று இருக்கக் கூடும் என்று கனவில் கூட ஊகித்தது இல்லை.

கடிதங்களை கணவனின் கையில் கொடுத்து விட்டு ஜன்னல் அருகில் போய் நின்று கொண்டாள். சந்திரன் கடிதங்களை படிக்கத் தொடங்கினான். வலுக்கட்டாயமாக கசப்பை விழுங்க நேர்ந்தது



போல் அவன் நெற்றி சுருங்கியிருந்தது. இரண்டு மூன்று கடிதங்களை படித்ததும், அவன் முகம் கன்றி சிவந்து விட்டது. கையில் இருந்த கடிதங்களை எல்லாம் கசக்கி வீசி எறிந்தான்.

"நீ... நீ... இதெல்லாம் எழுதியது நீதானா? உனக்கு கொஞ்சம் கூட வெட்கமே இல்லையா?"

அருணா கொஞ்சம் கூட தயங்கவில்லை தடுமாறவில்லை. "இதில் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? அவள் பெரிய எழுத்தாளர். திருமண வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய சில இனிமையான அனுபவங்கள் கல்யாணம் ஆகாத அவளுக்கு எப்படி கிடைக்கும்? அதனால் நான் அவளுக்கு உதவி செய்தேன்."

"உனக்கு கொஞ்சம் கூட புத்தி இல்லை. ச்சீ... ச்சீ... நம் இருவருக்கு மட்டுமே தெரிந்திருக்க வேண்டிய விஷயங்களை மூன்றாவது மனுஷியிடம் சொல்வதற்கு உனக்கு எப்படி மனசு வந்தது?" அருவருத்துக் கொள்வது போல் பார்த்துக் கொண்டே மனைவியின் அருகில் வந்தான். அருணா கண் இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் கண்களில் தெரியும் வேதனை உண்மையானதுதானா... இல்லை... இதுவும் நடிப்பு தானா?

சந்திரன் கோபத்துடன் கேட்டான். "என்னிடம் ஏன் சொல்ல வில்லை? எந்த வேலையைச் செய்வதாக இருந்தாலும் முன்னாடி என்னிடம் சொல்ல வேண்டும் என்று உனக்குத் தோன்ற வில்லையா?"

கொஞ்சம் கூட தயங்காமல், சலனமற்று நின்று கொண்டிருந்த மனைவியைப் பார்க்க பார்க்க அவனுக்குள் கோபம் எரிமலையாய் கொந்தளித்துக் கொண்டிருந்தது. ரொம்ப நாளாக அடக்கி வைத்திருந்த ஆவேசம் படாரென்று வெடித்தது.

அருணாவின் அருகில் நின்று ஆணையிடுவது போல் சொன்னான்.

"புத்தகம் பிரிண்ட் ஆகக் கூடாது. பப்ளிஷரிடம் கொடுக்க வேண்டாம் என்று அவளுக்கு தந்தியை கொடு. இப்பொழுதே...

இந்த நிமிடமே" சொல்லிக் கொண்டே அருணாவின் கையைப் பற்றி மேஜை அருகில் இழுத்துக் கொண்டு வந்தான். மேஜை ட்ராயரிலிருந்து தந்தி ஃபாரத்தை எடுத்து தானே அவசரமாக "டோண்ட் பப்ளிஷ். ஸ்டாப் இட்" என்று எழுதி பேனாவை அருணாவின் கையில் திணித்து "முகவரியை எழுது" என்றான். அருணா முகவரியை எழுதிக் கொடுத்தாள்.

சந்திரன் டெலிகிராமை எடுத்துக் கொண்டு போஸ்ட் ஆஃபீசுக்கு கிளம்பினான். அவன் கண் மறைவான அடுத்த நிமிடம் அருணா மற்றொரு ஃபாரத்தை எடுத்துக் கொண்டு "சம்யுக்தா! ஸ்டார்ட் இம்மீடியட்லீ" என்று எழுதி அடுத்த வீட்டு பையனை அழைத்து "பிரசாத்! அவசரமாக இந்த தந்தியை கொடுத்து விட்டு வா" என்று அனுப்பினாள். போஸ்ட் ஆஃபீஸிலிருந்து சந்திரன் வெளியில் வரும் போது பிரசாத் உள்ளே போனான். அன்று இரவு சந்திரன் வீட்டுக்கு வரவில்லை. கிளப்பிலேயே தங்கி விட்டான்.

* * *

சம்யுக்தா ரயிலை விட்டு இறங்கி பிளாட் ஃபாரத்தின் மீது காலடி எடுத்து வைக்கும் போது அருணாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"வரிசையாக இரண்டு தந்தி வந்ததே. உனக்கு மூளை கலங்கி விட்டதா என்ன?" என்று கேட்டாள்.

"நடக்கப் போவதைக் கேட்டால் உனக்கும் மூளை கலங்கி விடும்." புன்முறுவலுடன் சொன்னாள் அருணா.

"முதலில் வீட்டுக்குப் போவோம். பிறகு சொல்கிறேன்."

டாக்ஸியில் போகும் போது அருணா சொன்னாள். "என் கணவர் சமீப காலமாக ரொம்ப சண்டை போட்டுக் கொண்டு இருக்கிறார். உன்னுடைய கையெழுத்து பிரதி முழுவதும் அவர் படித்து பார்த்த பிறகுதான் பிரசுரிப்பதற்கு ஒப்புக் கொள்வாராம்.



32232
4931483

அதில் அவரை பற்றி கொஞ்சம் ஓவராக எழுதியிருப்பாயோ என்று பயப்படுகிறார்."

"இவ்வளவுதானே. இந்த சின்ன விஷயத்திற்கு என்னை வரச் சொல்லுவானேன். விஷயம் இது என்று சொன்னால் பிரதியை தபாலில் அனுப்பி இருப்பேன்."

"ஊஹூம். மறுபடியும் அவருக்கு ஏதாவது சந்தேகம் வந்தால் என்னால் பதில் சொல்ல முடியாது. அசல் விஷயம் என்னவென்றால் உன்னை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவர் மனதை குடைந்து கொண்டு இருக்கிறது."

சம்யுக்தா சிரித்தாள். "அவ்வளவு ஆவலாக இருப்பவர் ஸ்டேஷனுக்கு வந்திருக்கலாமே?"

"நிச்சயமாக வந்திருப்பார். ஆனால் நண்பன் ஒருவனுக்கு திடீரென்று உடல் நலம் பாதிக்கப்பட்டதால் ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்காக போயிருக்கிறார்." அருணா விளக்கம் தந்தாள்.

இருவரும் வீட்டுக்கு வந்தார்கள். சின்னதாக இருந்தாலும், நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு இருந்த அருணாவின் வீட்டைப் பார்த்ததும் சம்யுக்தாவுக்குப் பிடித்து விட்டது.

"உங்க இருவருடைய போட்டோ ஒன்று கூட இல்லையே ஏன்?" வீடு முழுவதும் சுற்றி பார்த்துக் கொண்டே சம்யுக்தா கேட்டாள்.

அருணா ரயில் நிலையத்திற்குச் செல்லும் முன் படுக்கை அறையில் தானும் சந்திரனும் ஒன்றாக இருந்த போட்டோவை எடுத்து உள்ளே வைத்துவிட்டாள். இருவரும் சேர்ந்து சாப்பிட்டார்கள். பயணக் களைப்பினால் சம்யுக்தா படுத்துக் கொண்டதும் உறங்கிவிட்டாள். அருணா சம்யுக்தா எடுத்து வந்த கையெழுத்து பிரதியை படிக்க உட்கார்ந்து கொண்டாள். அதில் அவளுடைய வாழ்க்கை அப்படியே பிரதிபலித்தது. சித்தப்பாவுடன் சண்டை போட்டுக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியது, வேலை கிடைக்காமல் திண்டாடியது, கடைசியில் எல்லோரும் ஒன்றாக இணைவது, இது தான் கதைச் சுருக்கம். கதாநாயகனின்

தனித்தன்மை கதையின் ஒவ்வொரு பக்கத்திலும் பிரதிபலித்தது. வெறும் இஞ்ஜினியரிங் பட்டத்தை தவிர வேறு எந்த சொத்தும் இல்லாத ஹீரோ பணக்கார வீட்டுப் பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான். ஏழ்மையில் கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தாலும், அதன் பாதிப்பு தன் மனைவியின் மீது விழக்கூடாது என்று அவன் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் இதயத்தில் ஆழமாக முத்திரையை பதியும் அளவுக்கு அழகான மொழியில், கோர்வையாக எழுதியிருந்தாள். பழைய பிரச்சனைகள்தான் பழைய வேதனை தான். ஆனால் அவற்றை எடுத்துச் சொன்ன முயற்சி புதுமையானது. புத்தகம் முழுவதும் படித்து முடித்தாள் அருணா. சம்யுக்தா பேனா கதாநாயகன் விஷயத்தில் பாரபட்சமாக நடந்து கொண்டது போல் தோன்றியது. கணவன் படும் கஷ்டங்களை பார்த்துக் கொண்டு ஹீரோயின் கம்மா இருப்பதை தவர வேறு எதுவும் செய்யவில்லை. இந்த விஷயம் அருணாவுக்கு அதிருப்தியை தந்தது.

மாலை ஆகும் போது சம்யுக்தா எழுந்து கொண்டாள். அருணா காபி, டிபன் தயாராக வைத்திருந்தாள். சம்யுக்தா எழுந்து வந்ததும் கொடுத்தாள். சம்யுக்தா குளித்து விட்டு உடைகளை மாற்றிக் கொள்ளும் போது அருணா கையில் பிளாஸ்டிக் பேக்குடன் வந்தாள்.

"உன்னால் வீட்டில் தனியாக இருக்க முடியுமா? மார்கெட் வரையில் போய் விட்டு பத்து நிமிடங்களிலில் திரும்பிவிடுகிறேன்" என்றாள்.

"ஒரு நிமிடம் இரு. நானும் வருகிறேன்." அவசர அவசரமாக தலைவாரிக் கொண்டே சம்யுக்தா சொன்னாள்.

அருணா தடுத்து விட்டாள். "நீ தலை வாரி பின்னிக் கொள் வதற்குள் திரும்பிவிடுவேன்" என்று சொல்லி விட்டு வாசற்படியைத் தாண்டினாள்.

"சீக்கிரமாக வரவேண்டும். இல்லையென்றால் பயத்தினாலேயே செத்துப் போய் விடுவேன்." பின்னாலிருந்து கத்தினாள்சம்யுக்தா.



"அம்மா தாயே! இது சென்னை மாநகரம். விபத்திலும், பசி பட்டினியாலும் மனிதர்கள் இறந்து போவார்களே தவிர, பயத்தினால் செத்தவர்களின் எண்ணிக்கை ரொம்ப குறைவு." பரிகாசமாக சொல்லிக் கொண்டே கையை உயர்த்தி அசைத்தாள் அருணா.

வீட்டிலிருந்து வெளியேறிய அருணா கடைத்தெரு பக்கம் போகாமல் அடுத்த வீட்டு வாசலில் நின்று "பிரசாத்! பிரசாத்!" என்று அழைத்தாள்.

"என்னக்கா? என்ன வேணும்?" கேட்டுக் கொண்டே பிரசாத் வெளியில் வந்தான்.

"எனக்கு ஒரு காகிதமும், பேனாவும் வேண்டும் நீ என்னுடன் பஸ் டெர்மினஸ் வரையில் துணையாக வரமுடியுமா?" என்று கேட்டாள்.

பிரசாத் உள்ளே போய் பேப்பரும், பேனாவும் கொண்டு வந்து கொடுத்தான். அருணா அவசரமாக சம்யுக்தாவுக்குக் கடிதம் எழுதினாள்.

சம்யுக்தா,

என்னை மன்னித்து விடு. மார்கெட் போகும் வழியில் எனக்குத் தெரிந்தவர்களைச் சந்தித்தேன். என்னுடைய சினேகிதி ஒருத்தி இன்று இரவே பம்பாய்க்கு போகிறாளாம். என்னைப் பார்க்க முடியவில்லை என்று ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டாளாம். அவளைச் சந்திப்பதற்காக போய்க் கொண்டு இருக்கிறேன். முடிந்தால் இன்று இரவே திரும்பி விடுவேன். இல்லா விட்டால் நாளை காலையில் வந்து விடுவேன். தவறாக நினைக்க மாட்டாயே. என் கணவர் வீட்டுக்கு வந்ததும் இந்தக் கடிதத்தைக் காட்டவும். சமையல் செய்து வைத்திருக்கிறேன். இருவரும் சேர்ந்து சாப்பிடுங்கள்.

உன் தோழி
அருணா

அருணா எழுதி முடிப்பதற்கும் பிரசாத் உடைகளை மாற்றிக் கொண்டு வருவதற்கும் சரியாக இருந்தது.

அருணாவும், பிரசாத்தும் பஸ் டெர்மினஸ்க்கு வந்தார்கள். பஸ் புறப்படத் தயாராக இருந்தது. அருணா கையிலிருந்த கடித்தை பிரசாத் கையில் கொடுத்தாள்.

"பிரசாத்! இதை எங்கள் வீட்டில் கொடுத்து விடு. என்னை பஸ்ஸில் ஏற்றி விட்டதாக சொல்லு. வரட்டுமா" என்று சொல்லி விட்டு பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

பஸ் செக்போஸ்டைத் தாண்டும் போது அருணாவின் விழிகளில் நீர் சுழன்றது. என்ன காரியம் செய்து விட்டாள்? தான் இருக்கும் நிலையில் வேறு யாராவது இருந்தால் என்ன செய்திருப்பார்கள்? வெளியே மெள்ள மெள்ளமாக இருள் பரவிக் கொண்டிருந்தது. அருணாவின் மனதிலும் வெறுமை பரவியது.

இது நாள் வரை இதயக் கோவிலில் குடியிருந்த சந்திரனை வழிபட்டு வந்ததில் காலம் எப்படி கழிந்தது என்றே தெரியவில்லை. திடீரென்று நில நடுக்கம் வந்தது போல், அந்தக் கோவிலும், அதிலிருந்த சிலையும் சுக்கு நூறாகிவிட்டன. சந்திரனுக்குள் மற்றொரு உருவம் மறைந்து இருப்பதாக ஆதாரம் கிடைத்த அன்றே அவனைப் பற்றிய அபிப்பிராயம் ஆட்டம் கண்டு விட்டது. இத்தனை வருடங்களாக அவனுடைய நெருக்கத்தில் தனக்குக் கிடைத்த மகிழ்ச்சி, அன்பு எல்லாமே பொய்யாக, ஒன்றுமே இல்லாதது போல் தோன்றியது. கடந்த காலத்தைவிட்டு சூழ்நிலையுடன் சமாதானம் செய்து கொள்வோமா என்று நினைத்தாலும் அவளுடைய மனம் ஒத்துழைக்க மறுத்தது.

சந்திரனுக்கு சொத்து தான் முக்கியம். அதனால் தான் அன்று தான் சித்தப்பாவுக்கு எழுதிய கடிதத்தை தபாலில் சேர்க்கவில்லை. சங்கரன் வந்த போது கலகலப்பாக பழகியதும் இந்த நோக்கத்துடன் தானோ? எது உண்மை எது பொய் என்று புரியாத நிலை.



சந்திரன் சம்யுக்தாவுக்கு எழுதிய கடிதங்கள் நினைவுக்கு வந்த போது வயிற்றில் இனம் புரியாத சங்கடம் ஏற்பட்டது. அதனால் தானோ என்னவோ இத்தனை வருட தாம்பத்திய வாழ்க்கையில் ஒரு நாள் கூட அவன் தன்னுடைய அன்பை வார்த்தைகளால் வெளிப்படுத்தியதில்லை. அதைப் புரிந்துகொள்ளாமல் அவனுடைய மௌனத்திற்கு அழகான உருவத்தை ஊகித்துக் கொண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டு இருந்திருக்கிறாள். கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கும் போது சந்திரன் பட்டும் படாமல் நடந்து கொண்ட நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக கண்களுக்கு முன்னால் தோன்றி மறைந்தன. இதயம் கரைந்துவிடும் அளவுக்கு சம்யுக்தாவுக்கு காதல் கடிதங்களை எழுதியவன், தன்னுடைய மனதில் அன்பை மலர வைத்தவன் இன்னும் என்ன வேண்டுமானாலும் செய்வான். யார் மீதும் அவனுக்கு உண்மையான பாசம் கிடையாது. யாரும் அவனுக்கு நெருக்கமானவர்கள் இல்லை.

இரவு ரொம்ப நேரம் கழித்து வந்து கதவைத் தட்டிய அருணாவைப் பர்த்ததும் ஜானகி ரொம்ப வியப்பு அடைந்தாள். இரவு அங்கேயே தங்கப் போவதாக சொன்ன போது அந்த வியப்பு மேலும் கூடியது. அருணாவை தலைமுதல் கால் வரை பரிசீலனை யாகப் பார்த்தாள். அருணா இதற்கு முன்பு தனியாக வந்ததில்லை.

ஜானகியின் வியப்பைப் புரிந்து கொண்ட அருணா. "சிநேகிதியை வழியனுப்ப ரயில் நிலையத்திற்கு போயிருந்தேன். நேரமாகிவிட்டது. அதான் . . . " என்று முணுமுணுப்பது போல் சொன்னாள்.

"உன் விளக்கங்கள் எதுவும் எனக்குத் தேவையில்லை. உள்ளே வா. எத்தனை தடவை அழைத்தாலும் வராதவள் திடீரென்று நேரம் கெட்ட நேரத்தில் வந்து கதவைத் தட்டியதும் ஆச்சரியமாக இருந்தது." மகிழ்ச்சியோடு அருணாவை வரவேற்றுக் கொண்டே ஜானகி சொன்னாள்.

அவசரமாக சமையல் செய்யப் போன ஜானகியை அருணா தடுத்து விட்டாள். கட்டில் மீது படுத்துக் கொண்டாளே தவிர அருணாவுக்கு உறக்கமே வரவில்லை. வேதனையோ, வருத்தமோ எதுவும் இருக்கவில்லை. மனதில் வெறுமைதான் பரவியிருந்தது. அந்த வெறுமையிலிருந்து வலி தொடங்கி இதயத்தை அழுத்திக் கொண்டிருந்தது.

விடியற்காலையில் அருணாவுக்காக காபி கலந்து எடுத்து வந்த ஜானகி திகைத்துப் போய் அப்படியே நின்றுவிட்டாள். வாடிப்போன கீரைத்தண்டாய் அருணா தலையணையில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள்.

சந்திரனுக்கு தகவல் அனுப்புதாக ஜானகி சொன்ன போது அருணா மறுத்துவிட்டாள். அன்று முழுவதும் அங்கேயே இருந்தாள். மறுநாள் மாலையில் ஜானகி உடன்வந்து கொண்டு விடுவதாக சொன்ன போதும் கேட்காமல் தனியாக கிளம்பினாள்.

"இது அடிக்கடி வந்து போகும் வலிதான். நீ கவலைப்படாதே." வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் சொல்லிவிட்டு கிளம்பினாள்.

மாலை ஆறுமணி அளவில் வீட்டுக்குப் போன அருணாவுக்கு வாசல் கேட் அருகிலேயே உட்கார்ந்திருந்த லக்ஷ்மி தென்பட்டாள். அருணாவைப் பார்த்ததும் அவளுடைய முகம் மலர்ந்தது. "வாங்கம்மா! உங்களுக்காக காத்திருந்து காத்திருந்து கண்ணே பூத்து விடும் போலிருக்கு. அய்யா ஆஃபீசுக்கு போகும் போது அம்மா வரும் வரையில் இங்கேயே இரு. எங்கேயும் போய்விடாதே என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். நீங்க வந்தால் தானே" என்று சொல்லிக் கொண்டே சாவியை எடுத்துக் கொடுத்தாள்.

அருணா பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். சம்யுக்தாவின் சூட்கேஸ் தென்படவில்லை. போய் விட்டிருப்பாளோ! சமையல் அறையில் அன்று தான் சமைத்தது, வைத்தது அப்படியே இருந்தது.



சாவி கொடுத்த கடிகாரம் போல் லக்ஷ்மி சொல்லிக் கொண்டே இருந்தாள். "முந்தா நாள் இரவு நேரம் கழித்து அய்யா எங்க வீட்டுக்கு வந்து என் வீட்டுக்காரனை எழுப்பி, வீட்டுக்கு யாரோ உறவுக்காரங்க வந்திருப்பதாகவும், அம்மாவும் இல்லாததால் துணைக்கு என்னை வந்து படுக்கச் சொல்லி விட்டு போனார். நானும் வந்து படுத்துக்கிட்டேன். அந்த அம்மா உங்களுக்காக ரொம்ப நேரம் காத்துக்கிட்டு இருந்தாங்க. நேற்று காலையில் அய்யா அனுப்பி விட்டதாகச் சொல்லி என் புருஷன் காரியரில் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தான். மாலை வரையில் பார்த்து விட்டு அந்த அம்மா கிளம்பிப் போனாள். மறந்தே போய்விட்டேன். அந்த அம்மா நீங்க வந்ததும் தரச்சொல்லி கடுதாசி கொடுத்து விட்டு போனாங்க" என்றவள் சுருக்கு பையிலிருந்து கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"அந்த அம்மாவை பஸ்ஸில் ஏற்றிவிடப் போகும் போதே அய்யா வீட்டு சாவியை என்கிட்ட கொடுத்து அம்மா வரும் வரையில் எங்கேயும் போகாதேன்னு சொன்னாங்க. நீங்க வந்தால்தானே. உட்கார்ந்து, உட்கார்ந்து இடுப்பே ஒடிந்து விட்டது." இடுப்பை நீவிக் கொண்டே பற்று பாத்திரங்களை தேய்க்கத் தொடங்கினாள்.

அருணா நாற்காலியில் சரிந்து உட்கார்ந்து கடித்தை படிக்கத் தொடங்கினாள்.

அருணா!

என்ன காரியம் செய்து விட்டாய்? நம் இருவருக்கும் இடையில் எந்த ரகசியமும் இல்லை என்று நான் நினைத்து வரும் போது, என்னை இப்படி ஏமாற்றுவது நியாயம்தானா. சந்திரன் யாரென்று நீ ஏன் என்னிடம் சொல்லவில்லை? அதுதான் போகட்டும். வீட்டுக்கு வந்த பிறகாவது சந்திரனை கேட்டிருக்கலாம் இல்லையா. சந்திரன் என்னைப் பார்த்து திகைத்துப் போனபோதே, என்னுடன் உனக்கு ஏற்பட்ட நட்பை நீ ரகசியமாக வைத்திருக்கிறாய் என்பதை புரிந்து கொண்டேன்.

காய்கறி வாங்க கடைத்தெருவுக்கு போகப் போவதாக சொன்ன நீ, சினேகிதியை வழியனுப்பி வைக்க போவதாக பையனிடம் கடிதம் அனுப்பிய போதே எனக்கு சந்தேகம் வந்தது.

அதற்கு ஏற்றாற் போல் சந்திரன் வீட்டில் காலடி எடுத்து வைத்த போது திகைத்துப் போனேன். நடப்பது கனவா இல்லை நினைவா என்று புரியவில்லை. சந்திரனுடைய நிலைமையும் கிட்டத்தட்ட அப்படித்தான் இருந்தது.

"சரஸா! நீயா?" வியப்புடன் கேட்டான்.

"நீ... அருணாவின் கணவன்..." குழப்பமாக பார்த்தேன்.

"அப்படியென்றால் சம்யுக்தா என்பது..." பாதியிலேயே நிறுத்தி விட்டான்.

ஆமாம் என்பது போல் தலையை அசைத்தேன்.

மூளை கலங்கி விட்டது போல் இருவரும் ரொம்ப நேரம் மௌனமாக இருந்து விட்டோம். இருவரின் எண்ணங்களும் உன்னைச் சுற்றித்தான் இருந்தன. சந்திரனின் போட்டோவை நினைவுபடுத்திக் கொண்டேன். அப்படியே எத்தனை நேரம் இருந்தோமோ தெரியவில்லை.

திடீரென்று சந்திரன் கேட்டான். "நாவல் எங்கே?"

இயந்திரகதியில் எடுத்துக் கொடுத்தேன். சந்திரன் தீக்குச்சியை கிழித்து அதை பற்ற வைத்தான். முழுவதுமாக எரிந்து முடியும் வரையில் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். நெருப்பு வெளிச்சத்தில் கற்பாறையை விட கடினமாக இருந்த அவனுடைய முகத்தை பார்க்கும் போது அவனை தடுக்கவும் பயமாக இருந்தது. அது மட்டுமே இல்லை. அந்த நிமிடம் அவனைப் பார்க்கும் போது வேறு ஒரு விஷயமும் எனக்கு தெளிவாகப் புரிந்தது. இது நான் அறிந்த சந்திரன் இல்லை. எனக்குக் கடிதங்களை எழுதிய அந்த அன்பு உருவத்திற்கும், கடினச் சிலையாக நின்ற இந்த நபருக்கும் கொஞ்சம் கூட ஒற்றுமையே இல்லை.



அதற்குப் பிறகு அவன் எதுவும் பேசவில்லை. வீட்டிலிருந்து வெளியில் போய் விட்டான். அரை மணி நேரம் கழித்து வேலைக்காரி வந்தாள். எனக்குத் துணையாக படுத்துக் கொள்வதற்காக அய்யா அனுப்பி வைத்ததாகச் சொன்னாள்.

உன் வருகைக்காக இன்று மதியம் வரை காத்திருந்தேன். இங்கே என்ன நடந்தது என்று உன்னிடம் நேரில் சொல்ல வேண்டும் என்று தவித்தேன். நீ வரவில்லை. உன் கணவர் மறுபடியும் என் முகத்தைக் கூடப் பார்க்கவில்லை. மதியம் உன் வேலைக்காரியின் கணவன் மூலமாக கேரியரில் சாப்பாடு அனுப்பி வைத்தான். மாலையில் ஊருக்குக் கிளம்பிப் போவதாக அவனிடம் தகவல் சொல்லி அனுப்பினேன். மாலையில் வந்தான். அவனுடைய முகத்தைப் பார்க்கவும் எனக்கு பயமாக இருந்தது. இந்தக் கடிதத்தை முதலில் அவனிடம் கொடுப்பதாக இருந்தேன். ஆனால் அவன் முகத்தைப் பார்க்கும் போது முதல் நாள் இரவு என் நாவலுக்கு நேர்ந்த கதிதான் இதுக்கும் நேரும் என்று தோன்றியது. அதனால் வேலைக்காரியிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்து அதற்காக ஒரு ரூபாய் லஞ்சமும் கொடுத்திருக்கிறேன்.

போகும் முன் ஒரு வார்த்தையைச் சொல்லாமல் என்னால் இருக்க முடியவில்லை. பசுமையாக இருந்த உன் குடித்தனம் என் காரணமாக நாசமாகி விட்டது என்ற அவச்சொல் எனக்கு வரக்கூடாது. இந்த நிகழ்ச்சியால் நம் நட்புக்கு எந்த இடையூறும் ஏற்படக் கூடாது.

சந்திரனை மறுப்படியும் இந்த விதமாக சந்திக்க வைத்து ஒரு விதமாக எனக்கு தீராத அநியாயம் செய்து விட்டாய். என் கனவுலகில் நான் சிருஷ்டித்து வைத்திருந்த உருவும் சிதறிப் போய் விட்டது. மறுபடியும் அதை உயிர்பிக்க முடியாது. இன்னொரு சிலையை உருவாக்குவது அவ்வளவு எளிதும் இல்லை. உன்னையும் அறியாமல் தமிழ் வாசகர்களுக்கு இழப்பை ஏற்படுத்தி விட்டாய். இனி என்னுடைய படைப்புகள் வித்தியாசமான முறையில் இருக்கும். அதுவும் நல்லது தான். வாழ்க்கைக்கு

நெருக்கமாக இருக்கும் கதைகளைத்தான் இனிமேல் என் பேனா எழுதும்.

அருணா! நான் கிளம்பிப் போன பிறகு நீங்கள் இருவரும் என்ன ஆவீர்கள் என்று என்னால் ஊகிக்க முடியவில்லை. உன் கடிதத்திற்காக வழிமேல் விழி வைத்து காத்திருப்பேன்.

உண்மையை வெளிப்படையாக சொல்லி விடுகிறேன். இதுநாள் வரையில் சந்திரனை என்னுடைய கனவுலக நாயகனாக போற்றி வந்தேன். இல்லை... இல்லை. என்னுடைய கனவு ராஜகுமாரனுக்கும் சந்திரனுக்கும் சில ஒற்றுமைகள் இருப்பதாக பிரமையில் இருந்தேன். சந்திரன் எனக்குக் கிடைக்காததால் அந்த ஈர்ப்பு மேலும் வலுவடைந்தது. நான் விரும்பியது போல் அவனும் என் அருகில் இருந்தால், மற்ற நண்பர்கள், விசு, மூர்த்தி, பிரபாகர் போல் அவனும் என்னைச் சுற்றிச் சுற்றி வந்திருந்தால் சந்திரனிடம் எனக்கு ஆர்வம் ஏற்பட்டு இருக்காதோ என்னவோ. உனக்கு வேதனை ஏற்படுத்தியிருந்தால் மன்னித்துவிடு.

உன்னிடமிருந்து வரப்போகும் கடிதத்திற்காக ஆவலுடன் காத்திருக்கிறேன். விருந்தோம்பலில் ஏதாவது குறை இருந்தாலும் என்னால் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் ஏமாற்றத்தை மட்டும் தாங்கிக் கொள்ள முடியாது. வரட்டுமா...

உன், சம்யுக்தா

வேலைக்காரி வீட்டை பெருக்கி துடைத்து விட்டு போய் விட்டாள்.

அருணா எழுந்து போய் சூட்கேஸில் துணிகளை எடுத்து வைத்துக் கொண்டு இருந்தாள். வாசற் கதவு திறந்த சத்தமும், அதைத் தொடர்ந்து பழக்கப்பட்ட காலடிச் சத்தமும் கேட்டது. ஏற்கனவே பலவீனமாக இருந்த அருணாவின் இதயம் வேகமாக துடிக்கத் தொடங்கியது. நடுங்கும் கால்களை கட்டுப்படுத்த முயன்றாள். கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு எதையும் பொருட்படுத்தாமல் இருக்க முயற்சி செய்தாள்.



சந்திரன் பின் பக்கமாக வந்து நின்றான்.

அருணா எதுவும் தெரியாதவள் போல் சூட்கேஸில் புடவைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

"எங்கே போயிருந்தாய்?"

அருணா பதில் சொல்லவில்லை.

சற்று கோபத்துடன் மீண்டும் கேட்டான். "எங்கே போகப் போகிறாய்?"

அதற்கும் பதில் வரவில்லை.

"போக வேண்டும் என்று முடிவு செய்தவள் மறுபடியும் வருவானேன். தகவல் சொல்லி அனுப்பியிருந்தால் உன்னுடைய பொருட்களை நானே யாரிடமாவது கொடுத்து அனுப்பியிருப் பேனே?" புயலுக்கு முன்னால் இருக்கும் அமைதி அவன் குரலில் தென்பட்டது.

"உங்களிடம் சொல்லிவிட்டு போகவேண்டும் என்று வந்தேன்."

"என்னுடைய விருப்பம் இல்லாமல் யாரும் என் வீட்டிலிருந்து வெளியேற முடியாது என்பதை விரைவிலேயே நீ புரிந்து கொள்வாய்."

"வலுக்கட்டாயமாக யாரும் யாரையும் தடுத்து நிறுத்தி விடமுடியாது." பொங்கி வந்த துக்கத்தை கட்டுப்படுத்திக் கொண்டே சொன்னாள்.

"முட்டாள்தனமாக நடந்து கொள்பவர்களை வலுக்கட்டாய மாகத்தான் வழிக்குக் கொண்டு வரமுடியும்."

"ஆமாம்! நான் முட்டாள்தான்."

"வெறும் முட்டாள் மட்டும்தானா. வடிகட்டின முட்டாள். இத்தனை நாட்களாக ஏதோ திறமைசாலி என்ற பிரமையில் இருந்து விட்டேன்."

“நல்ல வேளை. இப்பொழுதாவது உண்மையை புரிந்து கொண்டு விட்டீர்களே.”

சந்திரன் கை அருணாவின் தோளில் பலமாக படிந்து, சட்டென்று தன்பக்கம் திருப்பிக் கொண்டது.

“சம்யுக்தா யாரென்று என்னிடம் முன்னாடியே ஏன் சொல்லவில்லை?” சந்திரன் குரல் தீவிரமாக இருந்தது.

“சரஸா என்ற பெண் உங்களுடைய வாழ்க்கையில் இருந்தாள் என்பதை நீங்க என்னிடம் ஏன் மறைச்சீங்க?” ரோஷத்துடன் எதிர்கேள்வி கேட்டாள்.

“என் வாழ்க்கையில் நீ வருவதற்கு முன்பே அந்தப் பெண்ணை பற்றிய நினைவுகள் சிதிலமாகி விட்டன.” ஒரு நிமிடம் தாமதித்து அமைதியான குரலில் கேட்டான். “நான் அவளுக்கு எழுதிய கடிதங்களை காண்பித்தாளா?”

“ஆமாம்.”

“என்னிடம் ஏன் சொல்லவில்லை?”

“சொல்லியிருந்தால் என்ன செய்து இருப்பீங்க?”

“எல்லாவற்றையும் விபரமாக சொல்லியிருப்பேன்.”

“நீங்க அப்பாவி என்றும், இளமையில் செய்த தவறு என்றும் சொல்லியிருப்பீங்க. அப்படித்தானே”

“இல்லை, முன் ஒரு காலத்தில் சரஸா என்ற பெண்ணை மனபூர்வமாக நேசித்தது உண்மைதான். ஆனால் சரஸா என்னுடன் பழகியது போலவே விசு, பிரபாகருடனும் பழகி வந்தாள் என்றும், அவர்களும் என்னைப் போலவே அவளுக்குக் கடிதங்கள் எழுதுவார்கள் என்று தெரிந்த போது என் மனம் அடைந்த வேதனைக்கு எல்லையே இல்லை. இந்த விஷயம் தெரிந்த அன்றே சரஸா எனக்கு எழுதிய கடிதங்களை எடுத்துப் போய் அவள் முகத்தில் வீசி எரிந்து விட்டு வந்து விட்டேன். ஆனால் நான் எழுதிய கடிதங்களை கேட்டு வாங்கி வரவேண்டும் என்ற



நினைப்பு எனக்கு இல்லாமல் போய்விட்டது. அதன் பிறகு எனக்கும் சரஸாவுக்கும் இடையில் எந்த விதமான கடித போக்குவரத்தும் இருந்தது இல்லை. எந்தப் பொருளாக இருந்தாலும் தனக்குக் கிடைக்காதவரை ஆர்வம் காட்டுவது சரஸாவின் சுபாவம் என்றும், அந்தப் பழக்கத்தின் காரணமாகத்தான் அவள் என்னை வானளவுக்கு உயர்த்தி வைத்தி ருந்தாள் என்றும், நெருக்கமாக பழக முயற்சி செய்த பிரபாகர், விசுவை கிள்ளுக்கீரைக்கு சமமாக மதித்து வந்தாள் என்றும் உனக்கு விவரமாக சொல்லியிருப்பேன்.”

“ஆனால் இதெல்லாம் நடக்கும் போது நீ யாரென்று கூட எனக்குத் தெரியாது. இது நடந்து ரொம்ப நாட்கள் கழித்து, கிட்டத்தட்ட அந்த நிகழ்ச்சியை நான் மறந்து போகும் சமயத்தில் உன்னுடன் அறிமுகம் ஏற்பட்டது. உன்னுடன் நட்பு ஏற்பட்ட பிறகு திருமணமே வேண்டாமென்று செய்திருந்த என்னுடைய முடிவு தானாகவே தளர்ந்து விட்டது. அதை நினைத்து நான் என்றுமே வருத்தப்பட்டது இல்லை, இனி மேலும் வருத்தப் படப் போவதில்லை என்றும் சொல்லியிருப்பேன்.”

அருணாவின் பார்வையில் வெறுப்பு தென்பட்டது. அருவருப்பு அடைந்தவன் போல் கையை விடுவித்துக் கொண்டாள்.

அலட்சியம் நிறைந்த குரலில் கொஞ்சம் கூட தயங்காமல் சொல்லி விட்டாள். “நீங்க எதையும் என்னிடம் ஒப்புவிக்க வேண்டிய அவசியமில்லை. நான் உங்களிடம் எந்த விளக்கமும் கேட்கவில்லை. போவதற்கு முன் அனுமதியைத்தான் கேட்கிறேன்.”

ஏமாற்றமடைந்தவன் போல் பார்த்தான் சந்திரன். அவன் முகத்தில் பல உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன. ஏதோ முடிவுக்கு வந்து விட்டவன் போல் கடினமான குரலில் சொன்னான். “நான் உனக்குக் கொடுக்க நினைத்தது விளக்கம் மட்டும்தான். என்னுடைய ஒப்புதல் இல்லாமல் நீ இந்த வீட்டை விட்டு வெளியேற முடியாது. தெரிந்தோ தெரியாமலோ என்னுடைய வாழ்க்கையுடன் பிணைந்து விட்டாய். இனி அந்த பிணைப்பை உன்னால் அறுத்தெரிய முடியாது. துண்டித்துக் கொள்ள வேண்டும்

என்று நீ நினைத்தாலும் நான் விடமாட்டேன். உன் விருப்பு வெறுப்புகளை நான் பொருட்படுத்தப் போவதில்லை. நீ இந்த வீட்டில் இருந்துதான் ஆக வேண்டும்.'' ஆவேசமாக மொழிந்தவன், வேகமாக அறையை விட்டு வெளியேறினான். அடுத்த நிமிடம் வாசற்கதவை திறந்து மறுபடியும் படாரென்று மூடிய சத்தம் கேட்டது. அருணா அந்த இடத்திலேயே கற்சிலையாக நின்று விட்டாள்.

அன்று இரவு அவன் வீட்டுக்கு வரவில்லை மறுநாள் காலையிலும் வரவில்லை. அலுவலகத்திற்கு போன் செய்தாள். வரவே இல்லை என்று சொன்னார்கள். அருணாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. மதியமும் தாண்டிவிட்டது. அருணா பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தாள். சந்திரன் வராவிட்டாலும் கிளம்பிப் போவதாக முடிவு செய்தாள்.

மூன்று மணி ஆகும் போது சந்திரனின் அலுவலகத்திலிருந்து ப்யூன் வந்து கவர் ஒன்றை கொடுத்து "அய்யா தரச் சொன்னாங்க" என்று சொல்லிவிட்டு போனான். கவரில் கொஞ்சம் பணமும், ரயில் டிக்கெட், ஒரு கடிதமும் இருந்தன.

இதயத்தை கசக்கிப் பிழியும் வேதனையுடன் கடிதத்தை படிக்கத் தொடங்கினாள். சந்திரன்தான் எழுதியிருந்தான்.

இரவு முழுவதும் யோசித்தேன். மனம் உடைந்து போனபிறகு வெறும் வார்த்தைகளால் அதை ஒட்ட வைக்க முடியாது என்று நேற்று உன் முகத்தை பார்க்கும் போதே புரிந்து விட்டது. அப்படியும் உனக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று பொறுமையாக முயற்சி செய்தேன். என் முயற்சி தோல்வி அடைந்தது. சாதாரணமாக நீ சட்டென்று ஒரு முடிவுக்கு வரமாட்டாய். முடிவு எடுத்த பிறகு அதிலிருந்து பின் வாங்க மாட்டாய் என்றும் எனக்குத் தெரியும். உன்னிடம் அந்த பிடிவாதகுணம் மட்டும் இல்லை என்றால் அன்று உன் சித்தப்பாவை எதிர்த்து என்னைத் திருமணம் செய்து கொண்டு இருக்க மாட்டாய். போக வேண்டும் என்று நீ முடிவு செய்து



விட்டாய். நேற்று உன்னிடம் "நீ இந்த வீட்டில் இருந்துதான் ஆக வேண்டும்'' என்று ஆணையிடுவது போல் நான் சொன்னது உண்மைதான். அது ஏதோ ஆவேசத்தில் அகங்காரத்தில் சொன்ன வார்த்தைகள் அல்ல.

மனிதனாக பிறந்த ஒவ்வொருத்தருக்கும் தனித்தன்மை இருக்க வேண்டும். உன்னை வலுக்கட்டாயமாக இந்த வீட்டில் இருக்கச் சொல்லி உனக்கு வேதனையைத் தருவதில் எனக்கு உடன்பாடு இல்லை. அதான் டிக்கெட்டை ரிசர்வ் செய்து அனுப்பி வைத்திருக்கிறேன். இன்று இரவு ரயிலுக்கு நீ வரப்போவதாக சங்கரனுக்கு தந்தி கொடுத்துவிட்டேன்.

ஆனால் போகும் முன் ஒரு விஷயம் மட்டும் நன்றாக நினைவில் வைத்துக் கொள். என்னுடைய வாழ்க்கையில் நீ வந்த பிறகு நடந்தவற்றில் ஏதாவது கேள்வி கேட்டால் என்னால் ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல முடியும். நீ யாரென்று எனக்குத் தெரியாத சமயத்தில் எனக்கு நேர்ந்த சில அனுபவங்களை பற்றி கேள்வி கேட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது. அவற்றால் உனக்கு அநியாயம் நடந்தது என்று சொன்னால் அதில் எனக்கு ஒப்புதல் இல்லை.

என்றாவது திரும்பி வர வேண்டும் என்று நீ நினைத்தால் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. இன்னும் நான்கைந்து நாட்களில் நானும் எங்கே இருக்கிறேன் என்று சங்கரனுக்கு தகவல் அனுப்புகிறேன். இனி சொல்ல வேண்டியது எதுவும் பாக்கி இருப்பதாக தெரியவில்லை. இத்துடன் கடிதத்தை முடித்துக் கொள்கிறேன்.

இன்னாருக்கு என்று எந்த குறிப்பும் இல்லாமல், கீழே கையெழுத்தும் இல்லாமல் மொட்டையாக இருந்த அந்தக் கடித்தை அருணா பலமுறை படித்தாள்.

* * *

இரவு ரொம்ப நேரமாகி விட்டது. ஊரெல்லாம் அடங்கி விட்டது. மனமும், உடலும் களைத்துப் போன நிலையில் சந்திரன் தளர்ந்து போன நடையுடன் தள்ளாடி தள்ளாடி வீட்டுக்கு வந்தான். வாசற்கதவு தாழ் போட்டிருந்ததா, வெறுமே சாத்தியிருந்ததா என்று அவனுக்கு நினைவு இல்லை. தான் எப்படி உள்ளே போனோம் என்ற நினைப்பும் அவனுக்கு இருக்கவில்லை. ஹாலில் விளக்கை போட்டவன் மேஜை பக்கத்தில் இருந்த சாய்வு நாற்காலியை பார்த்ததும் அதில் சரிந்து விட்டான். உடைகளை மாற்றிக் கொள்ளவும் பொறுமையற்றவனாய் அப்படியே பின்னால் சாயப் போனவனுக்கு மேஜை மீது ஏதோ டிக்கெட் இரண்டுதுண்டுகளாக கிழிக்கப்பட்ட நிலையில் தென்பட்டது. முதலில் பிரமைதான் தன்னை ஆட்டுவிக்கிறதோ என்று நினைத்தவன், கையை நீட்டி அதைத் தொட்டுப் பார்த்தான். பிரமை இல்லை. உண்மைதான். டிக்கெட் இரண்டு துண்டுகளாக கிடந்தது. யார் கிழித்திருப்பார்கள்? அருணா எப்படி ஊருக்கு போயிருப்பாள்? திடீரென்று ஏதோ நினைவுக்கு வந்தவன் போல் "அருணா!" என்று உரத்த குரலில் கத்தினான்.

அந்த கத்தல் வீடு முழுவதும் எதிரொலித்தது. ஆனால் பதில் மட்டும் வரவில்லை.

"அருணா!" மறுபடியும் அழைத்துக் கொண்டே தடுமாறும் நடையுடன் உள்ளே போனான், படுக்கை அறையில் அருணா இருந்தாள். அவனுடைய அழைப்பை கேட்ட பிறகும் இந்தப் பக்கம் திரும்பவில்லை. பாரமாக மூடிக் கொள்ளப் போன கண் இமைகளை வலுக்கட்டாயமாக பிரித்துப் பார்த்தான். கட்டில் அருகில் முதுகை காண்பித்துக் கொண்டி நின்றிருந்தாள்.

உண்மையிலேயே அருணாதானா? மறுபடியும் அவனுக்கு சந்தேகம் வந்தது. அருகில் சென்று தோளில் கையை பதித்து மெதுவாக தன்பக்கம் திரும்பிக் கொண்டான். அருணாவின் கண்களிலிருந்து நீர் கன்னத்தில் வழிந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவன் இதழ்களில் புன்முறுவல் நெளிந்தது "உண்மையிலேயே நீ அருணாதான். பொம்மையாக இருந்தால் அழாது இல்லையா?" சொல்லும் போதே அவன் நாக்கு குழறியது.



ஏற்கனவே பத்து நிமிடங்களாக அவன் நடந்து கொண்ட முறையிலிருந்து அவன் குடித்துவிட்டு வந்திருக்கிறான் என்று புரிந்து கொண்ட அருணாவால் அழுகையை அடக்கிக் கொள்ள முடியவில்லை. அவன் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டு ஹோவென்று கதறினாள். சந்திரனுக்கும் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. எப்படியோ சமாளித்துக் கொண்டு அருணாவின் கன்னத்தைத் துடைத்தான். "எதற்காக அழுது கொண்டிருக்கிறாய்? டிக்கெட் கிழிந்து போய்விட்டதே என்றா? போனால் போகட்டும். நாளை வேறு ஒன்று வரவழைத்துத் தருகிறேன்." என்றான்.

"எனக்கு எதுவும் தேவையில்லை. நான் எங்கேயும் போக மாட்டேன்." தலையை குறுக்காக அசைத்துக் கொண்டே விசும்பலுக்கு இடையில் அருணா எப்படியோ சொல்லி விட்டாள்.

-----

ஜோதி

# ஜோதி

"அம்மா! அம்மா! சித்தியிடமிருந்து கடிதம் வந்திருக்கும்மா" ஜோதி தாயின் அருகில் ஓடி வந்தாள்.

"என்ன எழுதியிருக்கிறாள்? கடிதத்தை பிரித்துப்படி" சாந்தா சொன்னாள். சமீபத்தில் அவளுக்கு பக்கவாத நோய் வந்திருக்கிறது. தொடர்ந்து மருந்துகளை பயன்படுத்தி வந்தால் ஆறுமாதங்கள் கழித்து முழுவதுமாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு குணமாகலாம் என்று டாக்டர்கள் சொல்லி விட்டார்கள். வீட்டில் இருந்த பொருட்களை அடகு வைத்து, தெரிந்தவர்களிடம் கடன் வாங்கி மருந்துகளை சாப்பிட்டு வந்தாள். ஆறு மாதங்கள் கழித்து காலை லேசாக அசைக்கவும், தானே எழுந்து உட்கார்ந்து கொள்ளவும் முடிந்தது. டாக்டர்கள் இன்னும் மருந்துகளை சாப்பிட வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். மருந்து விஷயம் இருக்கட்டும், வீட்டில் சாப்பாட்டுக்குக் கூட கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. கிராம வாசம் என்பதாலும், சாந்தா பள்ளிக்கூடத்தில் டீச்சராக வேலை பார்த்து வந்ததாலும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் நிறைய உதவி செய்தார்கள். அவர்கள் செய்த உதவியால் இவ்வளவு நாள் எப்படியோ காலத்தைத் தள்ளினார்கள். தன்னுடைய நோய் குணமாவது இருக்கட்டும், சல்லிக்காசு கூட் இல்லாமல் மேற்கொண்டு எப்படி வாழ்க்கையை நடத்துவது என்ற கவலை சாந்தாவை பீடிக்கத் தொடங்கியது. அந்தக் கவலையிலேயே இளைத்து துரும்பாகி விட்டாள்.

ஜோதி கவரை பிரித்து படிக்கத் தொடங்கினாள்.

சாந்தாவுக்கு,

நீ ஜோதியின் மூலமாக எழுதிய கடிதங்கள் கிடைக்கப் பெற்றேன். இங்கே மூச்சு கூட விட முடியாத அளவுக்கு வேலைகள் இருந்ததால் உடனே பதில் போட முடியவில்லை. அங்கே உங்களால்

தொடர்ந்து வாழ்க்கையை நடத்துவது கஷ்டமாக இருந்தால் ஜோதியை அழைத்துக் கொண்டு என்னுடைய வீட்டுக்கு வந்துவிடு. கடவுளின் கிருபையால் எங்களுடைய நிலைமை நன்றாகத்தான் இருக்கிறது. ஜோதிக்கும் ஏதாவது வரனை பார்த்து திருமணத்தை முடித்துவிடலாம். உனக்கும் மருத்துவம் பார்த்துக் கொள்ளலாம்.

உனக்கு இது போன்ற நிலைமை ஏற்பட்டதற்கு வருத்தப்படுகிறேன். என்ன முடிவு செய்திருக்கிறாய் என்பதற்கு ஜோதியை விட்டு பதில் எழுதவும்.

இப்படிக்கு,
விசாலி

கடிதத்தை படித்து முடித்த ஜோதி மறுபடியும் கவரில் வைத்து பத்திரப்படுத்தினாள். "சித்தி ரொம்ப நல்லவள். இல்லையாம்மா?" என்றாள்.

சாந்தாவின் முகத்தில் கொஞ்சம் கூட மகிழ்ச்சி தென்படவில்லை.

"நாம் கிளம்பிப் போனால் என்ன ஆகும் அம்மா?" ஜோதி கேட்டாள்.

"நாம் அங்கே போவதா?" சாந்தா தலையணையில் சாய்ந்து கொண்டே கேட்டாள்.

"எனக்கு ஏனோ சித்தியிடம் போனால் நம்முடைய பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்துவிடும் என்று தோன்றுகிறது" ஜோதியின் குரலில் நம்பிக்கை வெளிப்படையாகத் தெரிந்தது.

"எப்படி?" சூனியத்தில் பார்த்துக் கொண்டே சாந்தா கேட்டாள். ஜோதி ரொம்ப அப்பாவி. உலக அனுபவம் இல்லாதவள். காசு பணம் இருந்தால்தான் உறவினர்கள் மதிப்பார்கள். ஏழ்மையில் இருப்பவர்களை சீந்தக்கூட மாட்டார்கள் என்ற கசப்பு உண்மை அவளுக்குத் தெரியாது.

"ஆமாம் அம்மா, சித்தியிடம் கொஞ்சம் கவனமாக அனுசரணையாக நடந்து கொண்டால் உனக்கு நல்ல மருத்துமும்



நாம் இலவசமாக அவர்கள் வீட்டில் இருப்பதற்கு பதில் நான் அவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்து தருவேன். பட்டணத்தில் எப்படியும் பெரிய பெரிய டாக்டர்கள் இருப்பார்கள். உன்னுடைய நோய் குணமாகி விட்டால் நாம் மறுபடியும் இந்த ஊருக்கு வந்துவிடலாம். நீயும் டீச்சர் வேலையில் சேர்ந்து கொள்ளலாம். உன்னை இப்படி கட்டிலில் பார்க்கும் போது என் இதயத்தை யாரோ கசக்கிப்பிழிவது போல் தோன்றுகிறது. என் பேச்சை கேளும்மா" ஜோதி கட்டில் மீது உட்கார்ந்து கொண்டு தாயின் கையை பற்றிக் கொண்டாள். "சித்திக்கும், உனக்கும் இடையில் பலவருடங்களாக போக்குவரத்து இல்லாதது உண்மைதான். தாத்தா உயிருடன் இருந்த போது தொடங்கிய இந்த கருத்து வேற்றுமைக்கு அவர் இறந்து போனதோடு முற்றுப்புள்ளி ஏன் வைக்கக் கூடாது? சித்தி நம்மை வரச்சொல்லி அழைப்பு விடுத்துக் கொண்டுதான் இருக்கிறாள். நீதான் பழங்கதையை நினைவுப்படுத்திக் கொண்டு போகக் கூடாது என்று பிடிவாதம் பிடிக்கிறாய்" ஜோதி நிஷ்டூரமாகச் சொன்னாள்.

"உனக்குத் தெரியாது ஜோதி. பதினெட்டு வருடங்கள் கழித்து, வாழ்க்கையுடன் போராடி தோற்றுவிட்ட இந்த நிலையில் அவள் வீட்டுக்கு போவதை விட, தற்கொலை செய்து கொள்வது, நல்லது. அவள் எத்தனை அகம்பாவம் பிடித்தவள் என்று உனக்குத் தெரியாது."

"அகம்பாவம் பிடித்தவளாக இருந்தால் நம்மை வரச்சொல்லி ஏன் கடிதம் எழுதுகிறாள்? உன் சுய அபிமானத்தை என்னால் புரிந்துகொள்ள முடியும். தயவுசெய்து, இந்த ஒரு முறை நான் சொல்வதை கேளும்மா. உன்னுடைய நோய் குணமாவது தான் நமக்கு முக்கியம். அங்கே போனால் நல்ல டாக்டரிடம் காட்டமுடியும். உன் நோயும் கட்டாயம் குணமாகும். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது." திடமான குரலில் சொன்னாள் ஜோதி. தாய்க்குக் குணமாகி விட்டது போலவும், தாமிருவரும் மறுபடியும் இந்த ஊருக்கு வந்துவிட்டது போலவும் காட்சிகள் அவள் கண்கள் முன்னால் தோன்றி மறைந்தன.

கடைசியில் எப்படியோ வற்புறுத்தி, தாயின் விருப்பத்திற்கு மாறாகவே தாயின் பெயரில் தானே சித்திக்குக் கடிதம் எழுதினாள். சில நாட்கள் கழித்து விசாலியிடமிருந்து மணியார்டரும், பதில் கடிதமும் வந்தன. அக்காவின் முடிவு தனக்கு மகிழ்ச்சியை அளித்ததாகவும், ஊரில் இருக்கும் கடன்களை எல்லாம் அடைத்துவிட்டு விஜயவாடாவுக்கு வந்துவிட்டால், அங்கே குறிப்பிட்ட தேதியில் தெரிந்தவர்களின் கார் வரப் போவதாகவும், அதில் ஏறி பட்டணத்திற்கு வந்துவிடலாம் என்றும் எழுதியிருந்தாள்.

ஜோதி உண்மையிலேயே ரொம்ப சந்தோஷப்பட்டாள். 'சித்தி நிஜமாகவே ரொம்ப நல்லவள். சின்னவயதில் எப்படி இருந்தாலும் வாழ்க்கையில் பல அனுபவங்களை சந்தித்த பிறகு மனிதர்கள் நிச்சயமாக மாறுவார்கள். சித்தியும் அப்படி மாறியிருப்பாள். இல்லை என்றால் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டு ஏன் கடிதம் எழுதுகிறாள்? அம்மா ஏன் இதை புரிந்துகொள்ள மறுக்கிறாள்? ஜோதிக்கு தாயின் பிடிவாதம் வியப்பை ஏற்படுத்தியது.

*    *    *

வயதுக்கு மீறிய தோற்றத்துடன் உடைகளில் வெளிப்படையாக தெரிந்த ஏழ்மையுடன் வாசலில் நின்று கொண்டிருந்த அக்காவை பார்த்த போது முதலில் விசாலிக்கு அடையாளமே தெரியவில்லை. ஜோதியும், சாந்தாவும் விசாலியின் வீட்டுக்கு வந்த போது அவன் எங்கேயோ புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தான்.

"சாந்தா! நீதானா? எவ்வளவு மாறிவிட்டாய்? கொஞ்சம் கூட அடையாளம் தெரியவில்லையே?" என்றாள்.

அப்பாவை எதிர்த்து சொத்து சுகம் எதுவும் இல்லாத பாஸ்கரனை திருமணம் செய்துகொண்டு வீட்டின் அமைதியை குலைத்த அக்காவிடம் விசாலிக்கு என்றுமே இரக்கம் இருந்தது இல்லை. யார் யாருக்கு என்ன பிராப்தமோ அதுதான் கிடைக்கும் என்று பெரியவர்கள் சும்மாவா சொன்னார்கள். பரிதாபத் தோற்றத்துடன் காட்சியளித்த சாந்தாவை பார்க்கும்போது



விசாலிக்கு இன்னும் இரக்கம் ஏற்படவில்லை. தாயின் பக்கத்திலேயே சிவப்பு வாயில் புடவையில், வெளுத்துப் போன ரவிக்கையுடன் நின்றிருந்த ஜோதியைப் பார்த்து "வாம்மா! பயணம் நன்றாக நடந்ததா?" என்றாள்.

விசாலியை பார்த்ததும் ஜோதியின் எண்ணங்கள் எல்லாம் தலைகீழாகி விட்டன. கடிதங்களை படித்து அவள் ஊகித்துக் கொண்ட உருவம் வேறு. அன்பாக, ஆதரவாக, மதிப்பு நிறைந்த தோற்றத்துடன் சித்தி இருப்பாள் என்று எதிர்பார்த்தவளுக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது. வயதை மறைக்க சித்தி செய்யும் முயற்சிகள், புடவையைக் கட்டிக் கொள்ளும் விதத்தில், சிகை அலங்காரத்தில், நகைகளை அணிந்து கொண்ட தினுசில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தன. பேச்சில் வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட மிடுக்கு, அதிகார தோரணையை ஜோதியால் எளிதாகக் கண்டு கொள்ள முடிந்தது. கண் இமைக்காமல் சித்தியையே பார்த்துக்கொண்டிருந்த போது, "அம்மா! என்னுடைய ஸாட்டின் ஸ்கர்ட் எங்கே? கண்ணாடி பீரோவில் இல்லையே?" என்று கேட்டவாறே புள்ளிமானை போல் துள்ளிக் குதித்துக் கொண்டே வந்த கீதா எதிர்பாராதவிதமாக இவர்களை பார்த்ததும் அப்படியே நின்று விட்டாள்.

"யாரும்மா?"

"ஊரிலிருந்து அக்காவும், அவளுடைய மகளும் வரப் போகிறார்கள் என்று சொல்லியிருந்தேனே." விசாலி சொன்னாள்.

"ஓ... ஜோதி என்றால் நீதானா?" கீதா அருகில் வந்து ஜோதியின் கையைப் பற்றிக் கொண்டாள். விலை உயர்ந்த ஆடைகளில், இரட்டை பின்னலுடன் சற்று குள்ளமாக, பட்டண வாசத்து, நளினத்துடன் மின்னிக் கொண்டிருந்த கீதாவைப் பார்க்கும் போது ஜோதி தனக்குள் தாழ்வாக உணர்ந்தாள்.

"ஸாட்டின் ஸ்கர்டை கட்டில் மீது எடுத்து வைத்திருக்கிறேன். சீக்கிரம் கிளம்பு. ரயிலுக்கு நேரமாகிவிடப் போகிறது." விசாலி புருவங்களை சுளித்துக் கொண்டே சொன்னாள். கீதா அவ்வளவு

நெருக்கமாக ஜோதியிடம் போனது அவளுக்கு பிடிக்கவில்லை. கீதாவின் தோற்றம், விலை உயர்ந்த ஆடைகளை பார்த்தால் ஜோதிக்கு பொறாமை ஏற்படலாம். அதன் காரணமாக கீதாவுக்கு கண் திருஷ்டி படக்கூடும். கூடுமான வரையில் கீதாவை ஜோதியிடமிருந்து தொலைவாக வைத்திருக்க வேண்டும் என்று விசாலி முடிவு செய்தாள்.

"ரயில் நிலையத்திற்கா? என்ன விஷயம்?" சாந்தா கேட்டாள்.

"சாரதி எங்களுடைய வருங்கால மாப்பிள்ளை. ஃபாரின் ரிடர்ன்டு டாக்டர். ஏதோ வேலையாக பெங்களுருக்குப் போகிறான். அவனை வழி அனுப்பி வைக்கத்தான் போய்க் கொண்டு இருக்கிறோம்" என்றவள், மகளைப் பார்த்து, "இன்னுமா நீ கிளம்பவில்லை. சீக்கிரமாக போய் உடைகளை மாற்றிக் கொண்டு வா." எச்சரிப்பது போல் சொன்னாள். கீதா ஜோதியின் பக்கம் நட்பு முறையில் பார்த்துவிட்டு அங்கிருந்து போய் விட்டாள்.

விசாலி அவர்கள் தங்கிக் கொள்வதற்காக வீட்டுக்கு வலது பக்கம் சற்று தள்ளி இருந்த அவுட் ஹவுஸை காண்பித்தாள். பட்டணங்களில் பணக்காரர்கள் பங்களாக்களை கட்டும்போது வேலைக்காரர்கள் குடியிருப்பதற்காக அவுட் ஹவுஸை கட்டுவார்கள். சின்னதாக ஒரு அறை. அதை ஒட்டினாற் போல் சமையல் அறை அமைந்திருக்கும். இருவர் வசிக்க தாராளமாக போதும். அதிலேயே ஒரு பழைய கயிற்றுக் கட்டிலும் இருந்தது.

"எங்க வீட்டில் இருப்பதை விட இங்கே உனக்கு நிம்மதியாக இருக்கும் சாந்தா"-விளக்கை போட்டுவிட்டு வீட்டைச் சுற்றி காண்பித்தாள். அக்கா தங்கைக்கு இடையில் வயது வித்தியாசம் அதிகமாக இல்லாததால் விசாலி அக்காவை பெயரைச் சொல்லி அழைப்பதுதான் வழக்கம்.

"வீடு நன்றாக இருக்கிறது" சாந்தா திருப்தியுடன் சொன்னாள்.

"சாரதி ரொம்ப நல்ல டாக்டர். இப்போ பெங்களுருக்குப் போகிறான். அடுத்த வாரம் திரும்பி வருவான். வந்ததும் உன்னைப் பார்க்கச் சொல்கிறேன் பீஸ் அது இது என்று நமக்கு செலவு இருக்காது. மருந்து, மாத்திரைகளை வாங்கினால் போதும்" கட்டில் பக்கத்திலேயே இருந்த ஸ்டூல் மீது உட்கார்ந்து கொண்டே சொன்னாள் விசாலி. "எனக்கும் வீட்டில் ஒத்தாசை செய்வதற்கு யாருமே இல்லை. ஜோதி கொஞ்சம் கூடமாட இருந்தால் எனக்கு நிம்மதியாக இருக்கும். கை செலவுகளுக்கு அடிக்கடி என்னிடம் பணம் கேட்பது உங்களுக்கும் சங்கடமாகத்தான் இருக்கும். அதானல் மாதம் இவ்வளவு என்று கொடுத்து விடுகிறேன். அவரிடமும் ஒரு வார்த்தை சொல்லி வைக்கிறேன். காலேஜில் லெக்சரர் ஆக இருப்பதால் பலதரப்பட்ட மனிதர்கள் அவருக்குத் தெரியும். உங்களுடைய நிலைமைக்கு ஏற்ற பையன் கிடைக்காமல் போகமாட்டான்..." விசாலி சொல்லிக் கொண்டிருந்த போதே சாட்டின் ஸ்கர்டில் கீதா ஓடி வந்தாள்.



"மம்மீ... சாரதி வந்துவிட்டான்" என்றாள். வெளிர் நீலசாட்டின் ஸ்கர்ட்டும், அதற்கு ஏற்றவாறு கண்ணாடிகள் வைத்து தைத்த ப்ளவுசுடன் சற்றுமுன் ஜோதி அவளைப் பார்த்ததை விட இப்போ ரொம்ப அழகாக இருந்தாள்.

"வந்துவிட்டானா... வா... வா. கிம்புவோம். சாந்தா! இரண்டு மணி நேரம் கழித்து மறுபடியும் வருகிறேன்" என்று சொல்லி விட்டு விசாலி அவசர அவசராக கிளம்பிப் போய் விட்டாள். கீதாவும் புறப்படும் அவசரத்தில் இந்த முறை ஜோதி பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

ஜோதியையும், கீதாவையும் அருகருகில் பார்க்கும் போது சாந்தாவுக்கு தான் தவறு செய்து விட்டோமோ என்ற எண்ணம் வாழ்க்கையில் முதல் தடவையாக தோன்றியது. தனக்கு விருப்பம் இல்லாத திருமணம் செய்து கொண்டாள் என்ற கோபத்தில் தந்தை சொத்து முழுவதையும் சின்ன மகள் விசாலியின் பெயருக்கு எழுதி வைத்து விட்டார். இல்லாவிட்டால் விசாலியின் கணவன் பிரசாத் எந்தவிதத்தில் உயர்ந்தவன்? வெறும் எம்.ஏ. டிகிரியைத் தவிர வேறு எந்த தகுதியும் இல்லை. விசாலி சொல்வதற்கு தலையை ஆட்டுவதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது.

விசாலிதான் இந்த வீட்டுக்கு மகாராணி என்றும் அவள் ஒரு வார்த்தையைச் சொன்னால் அதை யாரும் எதிர்க்க முடியாது என்றும் சாந்தா முதல் பார்வையிலேயே புரிந்து கொண்டு விட்டாள்.

*   *   *

பட்டணத்திற்கு வந்த சில நாட்களுக்குள்ளேயே ஜோதிக்கு சித்தியின் சுபாவம் நன்றாகப் புரிந்து விட்டது. சித்தியிடம் தான் ஊகித்தவை, எதிர்பார்த்தவை எல்லாம் கானல் நீர் என்று புரிந்துவிட்டது. அக்காவையும், அக்கா மகளையும் இங்கே வரச் சொன்னது இரக்கத்தினால் அல்ல. வீட்டு வேலைகளில் ஜோதி ஒத்தாசையாக இருப்பாள் என்ற எண்ணம்தான். பட்டணம் முன் போல் இல்லை. வீட்டோடு இருந்து சமையல் செய்ய சரியான ஆட்கள் லேசில் கிடைக்க மாட்டார்கள். அப்படியே கிடைத்தாலும் சம்பளம் அதிகமாக கேட்பார்கள். நிறைய சம்பளம் கொடுத்தாலும் அவர்களுடைய புத்தி நேராக இருக்காது. பொருட்களை வீணாக்குவார்கள். சரியாக கண்காணிக்கவில்லை என்றால் பொருட்களை திருடி விற்று விடுவார்கள்.

சரியான சமையல்காரி அமையாதது விசாலிக்கு பெரிய பிரச்சனை ஆகிவிட்டது. தனக்கோ ஒரு நிமிடம் கூட ஓய்வு இல்லை. இந்தப் பிரச்சனையை எப்படி தீர்ப்பது என்று குழம்பிக் கொண்டிருந்த நேரம், சாந்தாவிடமிருந்து கடிதம் வந்தது. ஜோதிக்கு பதினெட்டு வயது தாண்டியிருக்கும். கிராமத்தில் வளர்ந்தவள் என்பதால் நிச்சயமாக சமையல், வீட்டு வேலை எல்லாம் தெரிந்திருக்கும். வரன் பார்க்கலாம் என்று சாக்கு சொல்லி வரச் சொன்னாள் சில நாட்களாவது சமையல்காரியைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கலாம். இதையெல்லாம் யோசித்து தான் சாந்தாவுக்கும் வைத்தியம் பார்த்துக் கொள்ளலாம் என்று ஆசைக்காட்டி கடிதம் எழுதினாள். அவளுடைய திட்டங்கள் என்றுமே பொய்த்து போனது இல்லை. அவள் நினைத்தது போலவே அவர்கள் வந்து விட்டார்கள். அவளுடைய பிரச்சனையும் தீர்ந்துவிட்டது.



ஜோதி வந்த இரண்டாவது நாளே சமையல் பொறுப்பை ஒப்படைத்து விட்டாள். பத்துநாட்கள் போவதற்குள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவது, அந்த செலவு கணக்கை ஒரு பைசா வித்தியாசம் இல்லாமல் நோட்டு புத்தகத்தில் எழுதுவது இது போன்ற பொறுப்புகள் எல்லாம் ஜோதியின் தலையில் விழுந்தது. இரவு பத்து மணி தாண்டிய பிறகு தூங்குவதற்கு முன் விசாலி கணக்கு புத்தகத்தை பார்வையிடுவாள். பணத்துக்கு சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவளுடைய நினைவாற்றலை பாராட்டித்தான் ஆக வேண்டும். ஜோதியிடம் கொடுத்த பணத்தில் வரவு செலவு சரியா வைக்கப் பட்டிருக்கிறதா என்று நொடியில் கண்டிபிடித்து விடுவாள்.

சமையல் விஷயத்திற்கு வந்தால் இருப்பது மூன்று பேர்தான் என்றாலும் மகளுக்கு பிடித்தது தாய்க்கு பிடிக்காது. தாய்க்கு பிடித்தது தந்தைக்கு பிடிக்காது. அதனால் அவரவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு அந்தந்த வேளைக்கு தனியாக சமைத்துதான் ஆக வேண்டும். அது போறாது என்பது போல் விசாலியின் சினேகிதிகள் வருவார்கள். காபி, டிபன் கொடுத்து அவர்களை உபசரிக்க வேண்டிய பொறுப்பும் ஜோதியுடையது தான். யார் யாருக்கு என்ன டிபன் பிடிக்கும் என்றும், அவற்றை தயாரிக்கும் விதமும் விசாலி ஜோதிக்கு முன்னாடியே சொல்லிக் கொடுத்துவிட்டாள். எதையும் ஒரு தடவை பார்த்ததுமே கிரகித்துக் கொள்ளும் ஜோதி சமையல் கலையில் மிக, விரைவிலேயே நல்ல தேர்ச்சி பெற்று விட்டாள். அவளுக்கு இதெல்லாம் பெரிய விஷயமாகவே தோன்றவில்லை. கஷ்டத்தில் இருக்கும் போது ஆதரவு தந்தவர்களுக்கு இந்த அளவுக்குக் கூட உதவி செய்யாவிட்டால் எப்படி என்று தான் நினைத்தாள். எப்படியாவது தாயின் நோய் குணமாகி விட்டால் அதுவே போதும். ஜோதியும், சாந்தாவும் பட்டணத்திற்கு வந்து பதினைந்து நாட்கள் தாண்டிவிட்டன. பெங்களூருக்கு போன சாரதி வேறு ஒரு கேஸ் வந்து விட்டதால் அங்கேயே இருந்து விட்டான். வேறு ஒரு டாக்டரிடம் அக்காவை அழைத்துப் போகும் எண்ணம் விசாலிக்கு இருக்கவில்லை.

அன்று மதியம் தாயின் அருகில் அமர்ந்து கொண்டு புத்தகத்தை படித்துக் காண்பித்துக் கொண்டு இருந்தாள். விசாலி அவசர அவசரமாக அந்த இடத்திற்கு வந்தாள். இன்னும் ஒரு மணி நேரத்தில் சிநேகிதிகள் வரப் போவதாகவும், காபி டிபன் தயாரிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு போனாள்.

"இன்னிக்கும் இந்த கதையை முடிக்க முடியவில்லை. இரவு கட்டாயம் முடித்து விடுகிறேன். சரிதானே" வலிய வரவழைத்துக் கொண்ட சிரிப்புடன் தாயிடம் சொன்னாள் ஜோதி.

"இப்பொழுதுதானே வந்தாய், மறுபடியும் உடனேயே போக வேண்டுமா?" சாந்தா கேட்டாள். அவளுடைய முகத்தில் அதிருப்தி தெளிவாகத் தெரிந்தது. அந்த பட்டிக்காட்டில் இருந்த போதே தேவலை. வீட்டு வேலையை முடித்துக் கொண்டு மீதி நேரத்தில் தாயின் அருகிலேயே உட்கார்ந்து கொண்டு இருப்பாள். இங்கே வந்த பிறகு கண்ணில் படுவதே அபூர்வமாகி விட்டது. "கடவுளே! இந்த ஊருக்கு எதற்காக வந்தோம்?" சாந்தாவின் மனம் வேதனையில் குன்றிவிட்டது. "பாவம் ஜோதி! தனக்கு இந்த நோய் வருவதற்கு முன் வீட்டு வேலைகள் செய்து பழக்கப்பட்டவள் கூட இல்லை. இன்று இத்தனை பேருக்கு விதவிதமாக சமைத்து போடுவதற்காக சமையல் அறையிலேயே பழியாக கிடக்க வேண்டிய நிலைமை." சாந்தாவின் மனம் மகளின்பால் இரக்கத்தால் கரைந்து விட்டது.

"எத்தனை நேரம் அம்மா! அரைமணியில் வேலையை முடித்துவிட்டு வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு போனாள்.

டிபன், காபி தயார் செய்து முடித்தாள். விசாலியின் சிநேகிதிகள் இன்னும் வரவில்லை, டிபனை ஹாட்பேக்கில் வைத்துவிட்டு, காபியை சூடாக ப்ளாஸ்கில் ஊற்றி வைத்தாள். அரைமணி கழித்து விசாலியின் சிநேகிதிகள் வந்தார்கள். மாடி அறையில் உட்கார்ந்து கொண்டு விசாலி சிநேகிதிகளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள். கீழே வந்து ஜோதியிடம் காபி, டிபனை கொண்டு வரச்சொல்லி விட்டுப் போனாள்.



ஜோதி டிபனை தட்டுகளில் வைத்துக் கொண்டு போய் கொடுத்துவிட்டு வந்தாள். கீழே வந்தவள் மறுபடியும் காபியை கோப்பைகளில் ஊற்றி எடுத்துக் சென்றாள். வந்தவர்கள் எல்லோரும் அளவுக்கு மீறிய ஒப்பனையில் ஆடம்பரமாக காட்சியளித்தார்கள்.

"யாரிந்த பெண்?" ஒருத்தி கேட்டாள்.

"சமையல்காரி. புதுசா வந்திருக்கிறாள்" விசாலியின் குரல் பெருமையுடன் ஒலித்தது. ஜோதி திடுக்கிட்டதை யாரும் கவனிக்கவில்லை.

"அப்படியா!, உங்க கீதாவுக்கும் இவளுக்கும் ஜாடை இருப்பதை பார்த்து உறவுக்கார பெண்ணாக இருக்குமோ என்று நினைத்தேன்." இன்னொருத்தி வியப்புடன் சொன்னாள்.

"இல்லை... இல்லை. நீங்கள் சொல்லும் வரை நானும் கவனிக்கவே இல்லை" என்று சொல்லிக் கொண்டே காபி கோப்பையை கையில் எடுத்துக் கொண்ட விசாலி நெற்றியைச் சுளித்தாள். ஜோதியின் பக்கம் பார்த்தவள்,"எத்தனை தடவை சொன்னாலும் புத்தி இல்லையா உனக்கு? காபி சூடாகவே இல்லை" எரிச்சலுடன் சொன்னாள்.

சிநேகிதிகளின் முன்னால் தன்னுடைய அதிகாரத்தை காண்பித்துக் கொள்வது என்றால் விசாலிக்கு ரொம்பவும் பிடிக்கும்.

ஃப்ளாஸ்கில் காபி ஊற்றினால் காபி ரொம்ப சூடாக இருக்காது என்று ஜோதிக்கும் தெரியும். அதற்காக சூடு ரொம்பவும் குறைவாக இல்லை.

"ஒரு நிமிடம் இருங்க. காபியை சூடு பண்ணி எடுத்து வரச் சொல்கிறேன்." விசாலி சிநேகிதிகளை தடுத்தாள். அவள் எதை வேண்டுமானாலும் சகித்துக் கொள்வாள். சிநேகிதிகளின் விருந்தோம்பல் விஷயத்தில் சின்ன குறை ஏற்பட்டாலும் ஒத்துக் கொள்ள மாட்டாள்.

"போகட்டும் விடுங்க, மறுபடியும் அவளுக்கு சிரமத்தை கொடுப்பானேன்?" இரக்கப்படுவது போல் சொன்னாள் இன்னொருத்தி

"இதில் சிரமம் என்ன இருக்கு? சும்மா செய்யச் சொல்லவில்லை. பணத்தை விட்டெறிகிறோம். வேலையை செய்யச் சொல்கிறோம். அவ்வளவுதானே."

காபி கோப்பைகள் நிறைந்த ட்ரேயை இரண்டு கைகளாலேயும் பிடித்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்த ஜோதியின் செவிகளில் இந்த உரையாடல் துல்லியமாக விழுந்தது. அவள் முகம் கன்றி சிவந்து விட்டது. இவ்வளவு தைரியமாக, முகத்திற்கு நேராக எதிராளியை அவமானப்படுத்த முடியுமா? நினைத்து பார்க்கும் போது ஜோதிக்கு வியப்பும், அருவருப்பும் ஒன்றாக ஏற்பட்டன. அம்மா முதலிலேயே சொன்னாள். தான் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பெரியவர்கள் அனுபவபூர்வமாக சொன்னதை கேட்கவில்லை என்றால் அதன் பின் விளைவுகளை அனுபவித்துதான் ஆகவேண்டும். காபி ட்ரேயை எடுத்துக் கொண்டு வேகமாக இறங்கி வந்து கொண்டிருந்த ஜோதி எதிரே வேறு எங்கேயோ நினைவாக படியேறி வந்து கொண்டிருந்த நபரை கவனிக்கவில்லை.

இருவருமே ஒருவரை ஒருவர் கவனித்து எதிராளிக்கு வழியைவிடும் முயற்சியில் ஒரே பக்கம் வந்து விட்டார்கள். எதிர்பாராமல் நெருக்கமாக வந்துவிட்ட நபர் மீது மோதிவிடாமல் தன்னைச் சமாளித்துக் கொள்ள அவள் முயற்சி செய்ததில் தடுமாறி கீழே விழப் போனாள். உடனே வலிமை மிகுந்த கரம் ஒன்று அவளுடைய முழங்கையை பற்றி கீழே விழாமல் தடுத்து விட்டது.

எதிரில் இருப்பவன் அவளுடைய கையை இன்னும் விடவில்லை. அவன் யாரென்று அவளுக்குத் தெரியவில்லை. ஆறடிக்கு மேல் உயரமாய் இருந்தான். அவன் கண்கள் அவளை கவனமாக பரிசீலித்துக் கொண்டிருந்தன.



"அடடா!" அவனுடைய உடைகளை பார்த்து கலவரமடைந்தாள். கீழே விழாமல் தன்னை காக்க அவன் செய்த முயற்சியில் காபி கோப்பைகளை தளும்பி அவன் உடைகளில் காபி சிந்தி விட்டது...

அவள் சொன்ன பிறகு அவனும் தன்னுடைய உடைகளை பார்த்துக் கொண்டான். உடனே அவளுடைய கையை விட்டுவிட்டு, "நெவர் மைண்ட்" என்று சொல்லிக் கொண்டே சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து அழுத்தி துடைத்துக் கொண்டான். வெறுமே துடைத்தால் காபி கறை போய்விடாது என்று இருவருக்கும் தெரியும்.

"ஹலோ சாரதி!" அப்பொழுதுதான் வெளியிலிருந்து வந்த கீதா சாரதியை பார்த்ததும் ஓடி வந்தாள். சாரதி பின்னால் திரும்பிப் பார்த்தான்.

"என்ன இது? எனக்கு மிகவும் விருப்பமான உடைகளை இப்படி பாழடித்த அரக்கர்கள் யார்?" ஜோதியின் பக்கம் பார்க்காமலேயே கீதா உரத்த குரலில் கத்தினாள்.

"வானத்திலிருந்து கீழே இறங்கி வந்த தேவதை." புன் முறுவலுடன் சொன்னான் சாரதி.

கீதாவின் குரல் கேட்டு விசாலி வெளியில் வந்தாள். சாரதியை பார்த்ததும் அவளுடைய முகம் மலர்ந்தது.

"எப்போ வந்தீங்க?" கேட்டுக் கொண்டே கீழே இறங்கி வந்தாள். ஜோதி கண் முன்னாலேயே கண் இமைக்கும் நேரத்திற்குள் எல்லாமே நடந்து முடிந்துவிட்டன.

ஜோதி சித்திக்கு வழியை விட்டு சற்று ஓரமாக ஒதுங்கி நின்றாள்.

"என்ன ஆச்சு உங்க உடைகளுக்கு?" விசாலி வியப்புடன் கேட்டாள்.

"காபி சிந்தி விட்டது" சாரதி சொன்னான். காபி கறைபட்டதில் சாரதியின் சூட் விகாரமாக தோற்றமளித்தது உண்மைதான்.

"காபியா?" விசாலி கோபமாக ஜோதி பக்கம் திரும்பினாள். "இந்த மகாராணி செய்த உபகாரமா?"

"இல்லை. இல்லை. நான்தான் ஏதோ நினைப்பில் எதிரில் வந்தவளை கவனிக்கவில்லை." சாரதி சமாளிக்க முயன்றான்.

"புத்தி இல்லையா? எதிரே யாராவது வந்தால் பார்க்கக்கூட முடியாத அளவுக்கு உன் கண் என்ன குருடா?" விசாலியின் குரல் தீவிரமாக ஒலித்தது.

மற்றொரு முறை ஜோதியின் கண்கள் சாரதியின் கண்களை சந்தித்தன. இந்த முறை ஜோதியின் கண்களில் வெட்கமும், பயமும் கலந்திருந்தன. அடுத்த நிமிடம் சாரதியைத் தாண்டி ஓட்டமும், நடையுமாக அந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டாள்.

"எங்க வீட்டு சமையல்காரி. புதுசாக வந்திருக்கிறாள். தூரத்து சொந்தம், தாய் பக்கவாதம் வந்து படுக்கையில் கிடக்கிறாள். சாப்பாட்டுக்கே வழியில்லாத ஏழைக் குடும்பம்."

"மம்மீ! சாரதியின் சூட் எப்படி நாசமாகி விட்டது பார்த்தாயா. எனக்கு ரொம்பவும் பிடித்த உடை இது." கொஞ்சுவது போல் வருத்தப்பட்டாள்.

"போகட்டும். அதே போன்ற சூட் நாமே வாங்கி தந்து விடுவோம். சரிதானா?." விசாலி சிரித்துக் கொண்டே சொன்னாள்.

சாரதியும் சிரித்தான். மூவரும் மாடிக்குப் போனார்கள்.

இந்த முறை கீதா தானே சுயமாக சமையல் அறைக்கு வந்து காபியை எடுத்துக் கொண்டு போனாள்.

'அப்பொ இவர்தான் டாக்டர் சாரதியா... ஊரிலிருந்து திரும்பி வந்து விட்டார் போலும். இன்னிக்கு அம்மாவை பார்க்க வருவாராக இருக்கும்.' சற்றுமுன் நடந்த ரகளையை உடனே மறந்து விட்டவளாக வேகமாக தாயிடம் சென்று செய்தியை தெரிவித்தாள்.



ஆனால் ஜோதி எதிர்பார்த்தது போல் சாரதி அன்று அவுட்ஹவுஸ் பக்கம் வரவே இல்லை. ரொம்ப நேரம் கழித்து வீட்டுக்குக் கிளம்பிப் போய்விட்டான்.

"சித்தி! அம்மாவை அவரிடம் காட்டவே இல்லையா." படுத்துக் கொள்ளும் முன் சித்தியிடம் கணக்கு புத்தகத்தை நீட்டிக் கொண்டே ஜோதி கேட்டாள்.

"நன்றாகத்தான் இருக்கு நீ சொல்வது. ஊருக்கு வந்தானோ இல்லையோ, உடனே உன் அம்மாவை பார்க்க வரவேண்டுமா என்ன? எல்லாம் எனக்குத் தெரியும். நீ ஒன்றும் நினைவுப்படுத்த தேவையில்லை. நீ கொஞ்சம் சுயநினைவோடு நடந்து கொண்டால் நன்றாக இருக்கும். ஆண்களைப் பார்த்ததும் காணாதது கண்டது போல் நடந்து கொண்டால் எப்படி?" என்று கடிந்து கொண்டாள்.

கேட்டதற்கு பதில் சொல்லாமல் சித்தி தன்னைக் கடிந்து கொண்டதும் ஜோதியின் முகம் விழுந்து விட்டது. மெதுவாக அங்கிருந்து வெளியில் வந்து விட்டாள்.

"இன்னும் படுத்துக் கொள்ளவில்லையா ஜோதி!" தன்னுடைய அறையை விட்டு எதற்காகவோ வெளியில் வந்த பிரசாத் ராவ், இரவு பதினோரு மணிக்கு கையில் டம்ளர்களுடன் கீழே இறங்கி வந்து கொண்டு இருந்த ஜோதியை பார்த்து கேட்டார்.

"இல்லை சித்தப்பா" என்றாள்.

"சீக்கிரமாக தூங்குவது நல்லது. உடல் நலம் சீர் குலைந்தால் யாரும் எதுவும் செய்ய முடியாது இல்லையா..." ஆதரவுடன் சொல்லிவிட்டு மறுபடியும் தன் அறைக்குள் நுழைந்தார்.

ஜோதியின் கண்களில் அவளையும் அறியாமல் நீர் சுழன்றது. இந்த வீட்டில் கொஞ்சம் பாசத்தோடு பழகும் நபர் ஒருவர் இருக்கிறார் என்றால் அது அவர்தான். ஆனால் அவருக்கு அந்த வீட்டில் மதிப்பு எதுவும் இருந்தது இல்லை. தன்னுடைய புத்தகங்கள், கல்லூரியைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் தலையிடவும் மாட்டார். விசாலியின் ஆணைகளுக்குக் கீழ்படிந்து

அவ்வப்போது மிடுக்காக உடை உடுத்தி, மனைவியுடன் பார்ட்டிகளுக்கு, விழாகளுக்கு சென்று வருவார். அந்த கொஞ்ச நேரமும் அவருக்கு முட்கள் மீது இருப்பது போல் தோன்றும்.

ஜோதி தாய் இருந்த அறைக்கு வந்த போது சாந்தா ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். ஜோதி சத்தப் படுத்தாமல் தரையில் பாயை விரித்து படுத்துக் கொண்டாள். சித்தியின் பேச்சை நம்பி இங்கே வந்து தவறு செய்து விட்டோமோ என்று அவளுக்குத் தோன்றியது.

* * *

மறுநாள் சாரதி வந்தபோது விசாலி அவுட் ஹவுஸ்ுக்கு அழைத்து வந்து சாந்தாவை காண்பித்தாள். சாரதி சாந்தாவை பரிசோதித்து விட்டு வெளியில் வந்தான்.

"இப்படியே இருந்தால் இன்னொரு ஸ்ட்ரோக் வர வாய்ப்பு இருக்கு. வாழ் நாள் முழுவதும் கட்டிலிலேயே இருக்கவேண்டிய நிலைமை ஏற்படலாம். உயிருக்கும் ஆபத்தாகவும் முடியலாம். சத்துள்ள உணவாக சாப்பிடவேண்டும். எதைப்பற்றியும் கவலைப் படாமல் மனதை அமைதியாக வைத்துக் கொள்ளவேண்டும்." சாரதி சொல்லிக் கொண்டே நடுவில் ஜோதி பக்கம் ஓரிரு முறை பார்த்தான். கண் இமைக்காமல் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தாள். இந்தப் பெண் உடல் ரீதியாக வளர்ந்து விட்டாளே தவிர முகத்தில் இன்னும் குழந்தைத்தனம் மாறவில்லை என்று நினைக்கத் தோன்றியது.

விசாலி, சாரதி எழுதிக் கொடுத்த மருந்துகளில் தனக்கு தோன்றிய சிலவற்றை மட்டுமே வாங்கிக் கொடுத்தாள். ஜோதி செய்யும் வேலைக்கு தகுந்தாற்போல் சாந்தாவும் செலவு செய்தால் போதும், அதற்கு மேல் ஒரு ரூபாய் கூட செலவழிக்க தேவையில்லை என்று விசாலி முடிவு செய்தாள்.

ஜோதியை அழைக்க விசாலி வந்த போதெல்லாம் சாந்தா தன்னுடைய சுயகௌரவத்தையும் விட்டு விட்டு "இனி தனக்கு



உயிர் மீது எந்த ஆசையும் இல்லை என்றும், ஜோதிக்கு ஏதாவது, வரனைப் பார்த்து அவளை கரையேற்றி விட்டால் போதும்" என்றும் வேண்டிக் கொண்டாள்.

சாரதி தன்னால் முடிந்தவரையில் மருந்துகளை இலவசமாக கொடுத்து வந்தான். தினமும் வந்து ஊசி போட்டுவிட்டு போவான். சாரதி சாந்தாவை பார்க்க அவுட் ஹவுஸ்ுக்கு வரும்போது கீதாவோ, விசாலியோ கட்டாயம் கூட இருப்பார்கள்.

சாரதியின் சிகிச்சையில் சாந்தாவுக்கு ஓரளவுக்கு குணம் தெரிய ஆரம்பித்தது. ஒரு நாள் சாரதி சாந்தாவுக்கு இஞ்செக்ஷன் போட வந்தான். அன்று அர்ஜெண்ட் கேஸ் ஏதோ வந்ததால் அவனால் காலையில் வர முடியவில்லை.

மாலையில் அவன் வந்தபோது விசாலி கிளப்புக்கு போயிருந்தாள். கீதா வீட்டிலேயே இருந்தாள்.

"டம்பளரில் தண்ணீர் கொடுங்க. ஜுரம் இருக்கிறதா என்று பார்க்கிறேன்." தர்மா மீட்டரை வெளியில் எடுத்துக் கொண்டே சாரதி கேட்டான். ஜோதி உள்ளேயிருந்து கண்ணாடி டம்பளரில் தண்ணீரை எடுத்து வந்தாள். அதற்குள் சாரதி சாந்தாவின் வாயிலிருந்து தர்மா மீட்டரை எடுத்து கவனமாகப் பார்த்தான். "ஜுரம் இருக்கு. இந்த வேளை சாப்பாடு வேண்டாம்." டம்ளருக்காக கையை நீட்டிக் கொண்டே சாந்தாவிடம் சொன்னான். ஜோதியும் டம்ளரை கொடுக்க முன்னால் வந்தாள்.

சாரதி இன்னும் டம்ளரை வாங்கிக் கொள்ளவே இல்லை. ஜோதி விட்டு விட்டாள். 'சிலீர்' என்று சத்தத்துடன் டம்ளர் கீழே விழுந்து சுக்கு நூறாகி விட்டது. ஜோதி கீழே குனிந்து கண்ணாடித் துண்டுகளை பொறுக்கிக் கொண்டிருந்தாள். சாரதி தன்னையும் அறியாமல் குனிந்து ஜோதிக்கு உதவியாக கண்ணாடித் துண்டுகளை பொறுக்கினான்.

"என்றாவது எனக்கு இந்த நோய் குணமாகுமா டாக்டர்?" சாந்தா பலவீனமான குரலில் கேட்டாள்.

அவள் கேட்டது சாரதியின் காதில் சரியாக விழவில்லை. எழுந்து பின்னால் திரும்பி "என்ன?" என்றான். அதற்குள் ஜோதி வீலென்று கத்தினாள்.

"என்ன ஆச்சு?" என்று திரும்பிப் பார்த்த சாரதி, "சாரி... வெரி வெரி சாரி" என்றான். அவன் எழுந்து சாந்தா பக்கம் திரும்பிய போது ஷு" அணிந்த அவன் காலுக்கு அடியில் ஜோதியின் கைவிரல்கள் நசுங்கி விட்டன.

"எங்கே? காட்டுங்க, பார்க்கிறேன்." சாரதி கையை நீட்டினான்.

"பரவாயில்லை." ஜோதி கையை பின்னால் மறைத்துக் கொள்ள போனாள். அதற்குள் சாரதி அவள் கையைப் பற்றி பரிசீலித்தான். ஆள் காட்டி விரலும், நடுவிரலும் கன்றியிருந்தன.

"ரொம்ப வலித்திருக்குமே, சும்மாவா, எண்பது கிலோ எடை ஆச்சே" என்று புன்முறுவல் செய்தாள். "அப்படிப்பட்ட விரலை உடனே வாயில் வைத்துக் கொண்டால் வலி கொஞ்சம் குறையும் என்று சொல்வார்கள்" என்றவன் அவளை தடுக்கும் முன்பே அவளுடைய விரல்களை வாயில் வைத்துக் கொண்டு விட்டான். ஒரு வினாடி அவளுடைய பார்வை, அவனுடைய பார்வையுடன் கலந்தது. அவள் கண்களில் தென்பட்ட மின்னல் போன்ற உணர்ச்சியை கவனித்தவன் வியப்படைந்தான்.

ஜன்னல் அருகில் ஸ்டூல் மீது அமர்ந்து கொண்டு புத்தகத்தை புரட்டிக் கொண்டே இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த கீதாவின் முகம் பொறாமையில் குன்றி விட்டதை இருவரும் கவனிக்கவில்லை.

சாரதி அங்கிருந்து வந்த ரொம்ப நேரம் வரையில், கடைசியில் படுத்துக் கொள்ளப் போகும் போதும் ஜோதியின் நினைவு அடிக்கடி வந்து கொண்டே இருந்தது. கட்டில் மீது கண்களை மூடிப்படுத்திருந்த போதும் ஜோதியின் விசாலமான கண்கள், அவள் பார்வையில் தென்பட்ட மின்னல் போன்ற உணர்ச்சி, மேல் உதட்டுக்கு மேல் பளிச்சென்று தெரியும் மச்சம் மறுபடியும்



மறுபடியும் நினைவுக்கு வந்தன. இதுவரை அவனுக்கு அறிமுகமான பெண்களில் யாரும் அவனை இப்படி துரத்தியதில்லை.

சாரதி ஜோதியின் நினைவுகளில் மூழ்கியிருந்த அதே நேரத்தில் அங்கே விசாலி வீட்டுக்கு வந்ததுமே மகள் சொன்னதை எல்லாம் கேட்டு கோபத்தினால் எரிந்து விழுந்தாள். ஜோதியை தன்னுடைய அறைக்கு அழைத்து "ஜோதி! சாப்பிடவும் வழியில்லாமல் கஷ்டப்படுகிறீர்களே என்று இரக்கப்பட்டு ஆதரவு கொடுத்தேன். கடைசியில் கீதாவின் வாழ்க்கையிலேயே கொள்ளி வைக்க துணிந்து விட்டாயா. இனி ஒரு நிமிடம் கூட என் வீட்டில் இருக்கவேண்டாம். உடனே போய் விடு. பாம்புக்கு பாலை ஊற்றினால் இப்படித்தான்" என்று கத்தினாள்.

"சித்தி! நான் என்ன செய்து விட்டேன்?" வெளிறிப் போன முகத்துடன் கேட்டாள் ஜோதி.

"கொஞ்சம் கூட வெட்கமில்லாமல் என்ன செய்துவிட்டேன் என்று என்னையே கேட்கிறாயா? கீதா என்னிடம் எதுவும் சொல்லியிருக்க மாட்டாள் என்று நினைத்தாயா?"

"கண்ணாடி டம்ளர் கைத்தவறி கீழே விழுந்து உடைந்துவிட்டது சித்தி" ஜோதி குற்றவாளியை போல் தலையை குனிந்து கொண்டாள்.

"பாழாய் போன கண்ணாடி டம்ளர். போனால் போகட்டும். மனம் உடைந்து போனால் ஒட்ட வைக்க முடியாது. நாளையிலிருந்து உன் அம்மாவுக்கு வேறு டாக்டரிடம் வைத்தியம் பார்க்க ஏற்பாடு செய்கிறேன். காதில் விழுந்ததா?" என்றாள்.

ஜோதி சரியென்று தலையை அசைத்து அறையை விட்டு வெளியேறப் போனாள். பின்னாலிருந்து விசாலி குரல் கொடுத்தாள்.

"இதோ பார். இன்னொரு விஷயமும் சொல்கிறேன். ஒரு வேளை சாரதி உன்னிடம் காரணம் கேட்டால் உங்களுடைய வைத்தியம் பிடிக்கவில்லை என்று சொல்ல வேண்டும். வேறு விதமாக சொன்னாயோ எனக்குத் தெரியாமல் போகாது. அடுத்த

நிமிடம் உன்னை வீட்டிலிருந்து வெளியேற்றி விடுவேன். ஒரு பக்கம் உன் தாய் படுத்த படுக்கையாய் இருக்கிறாள். இன்னொரு பக்கம் எவன் கிடைப்பானா என்று நீ அலைந்து கொண்டு இருக்கிறாய். கொஞ்சமாவது புத்தி இருக்க வேண்டாமா? போ.... போய் வேலையை பாரு" என்றாள்.

ஜோதி அறையை விட்டு வெளியில் வந்தாள். இன்னும் சாப்பிடவில்லை என்ற நினைப்பு கூட அவளுக்கு இருக்கவில்லை. நேராக அவுட் ஹவுஸ்க்கு வந்து விட்டாள்.

"சாப்பிட்டாயா ஜோதீ!" மகளின் வருகைக்காக காத்திருந்த சாந்தா கேட்டாள்.

"ஆச்சும்மா."

மகள் பொய் சொல்கிறாள் என்று அந்த தாயின் உள்ளம் கண்டுபிடித்து விட்டது.

"இங்கே வா. என்னவோ போல் இருக்கிறாயே." மகளை அருகில் அழைத்து வயிற்றை தொட்டுப் பார்த்தாள். "பொய் சொல்கிறாய் இல்லையா. வயிறு ஒட்டிப் போய் இருக்கே" என்றாள். ஜோதி சட்டென்று தாயின் மடியில் முகம் புதைத்து விசும்பி விசும்பி அழத் தொடங்கினாள்.

"என்னம்மா? என்ன ஆச்சு? யாராவது ஏதாவது சொன்னாங்களா?" சாந்தா பதட்டத்துடன் கேட்டாள்.

"இல்லை.... இல்லை. யாரும் எதுவும் சொல்லவில்லை. சும்மாதான் அழுகை வந்தது." விசும்பலுக்கு இடையில் தெளிவில்லாமல் சொன்னாள்.

அவளுடைய அழுகையின் காரணத்தை சாந்தா வேறுவிதமாக புரிந்து கொண்டாள். இதுவரையில் கிராமத்தில் இருந்ததால் வாழ்க்கைப் பற்றி ஜோதிக்கு தெரிந்திருக்கவில்லை. இப்பொ இந்த வீட்டில் கீதாவைப் பார்க்கும் ஒவ்வொரு நிமிடமும், முக்கியமாக அவளுக்கு வரப்போகும் கணவன் சாரதி



என்று தெரிந்த பிறகு மனதில் சின்ன உறுத்தல் ஏற்படாமல் இருக்க முடியாது. ஜோதி இடத்தில் வேறு ஒரு பெண் இருந்தாலும் இப்படித்தான் நடந்து கொள்வாள். ஜோதியையும், கீதாவையும் அருகருகில் நிற்க வைத்து பார்த்தபோது மகளின்பால் இரக்கத்தால் சாந்தாவின் மனம் இளகியது. 'கடவுளே! நான் என்ன பாவம் செய்தேன்? எனக்கு இந்த தண்டனை ஏன்?' என்று உள்ளூர வேதனைப்பட்டுக் கொண்டாள்.

மறுநாள் சாரதி வழக்கத்தைவிட சீக்கிரமாகவே சாந்தாவுக்கு இஞ்செக்ஷன் கொடுப்பதற்காக வந்தான். வரும் போதே சாந்தாவுக்காக டானிக்குகளை மருந்துகளை வாங்கி வந்தான். அன்று காலையில் எழுந்தது முதல் அவனுக்கு ஜோதியைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. அந்த விருப்பம் நிமிடத்துக்கு நிமிடம் தீவிரமடைந்து அவனை கீதாவின் வீட்டு பக்கம் காந்தம் போல் இழுக்கத் தொடங்கியது. அவன் போனபோது விசாலி முன் அறையிலேயே இருந்தாள். கீதா கல்லூரிக்கு சென்றிருந்தாள். ஜோதி வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு தாயின் அருகில் இருந்தாள்.

"சாரதி! நான் எப்போதும் நேராகத்தான் பேசுவேன். சுற்றி வளைத்துப் பேச எனக்குத் தெரியாது. இனிமேல் நீங்க சாந்தாவுக்கு வைத்தியம் பார்ப்பதை நிறுத்திக் கொள்வது நல்லது." அமைதியான குரலில், முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாமல் சொன்னாள் விசாலி.

"அப்படின்னா...?" சாரதியின் முகம் வெளிறிப் போய்விட்டது.

"நேற்று ஏதோ நடந்ததாமே. நான் வீட்டில் இல்லாததால் எனக்கும் தெரியாது. அந்தப் பெண் தன் தாயிடம் என்ன சொன்னாளோ தெரியவில்லை. மாலையில் நான் வந்ததும் சாந்தா என்னை அழைத்து உங்களைப் பற்றி வருங்கால மாப்பிள்ளை என்றும், நாக்கை அடக்கி பேசு என்றும் சொன்ன பிறகு வாயை மூடிக் கொண்டாள்."

"என்ன சொன்னாள்?" சாரதியின் குரலில் சுரத்தே இருக்கவில்லை.

"அந்தப் பேச்செல்லாம் இப்போ எதுக்கு? அப்படியும் கீதா 'அவருடைய உத்தேசம் வேறு எதுவும் இல்லை. ஜோதியின் கைவிரல்களை மிதித்து விட்டதால் அந்த வேதனையை போக்க விரலை வாயில் வைத்துக் கொண்டார்' என்று சமாதானப்படுத்த முயன்றாள். தாயும், மகளும் காதில் போட்டுக் கொண்டால் தானே. ச்..சீ ச்.சீ.... எனக்கே தலைகுனிவாக போய்விட்டது." நிதானமான குரலில் சொன்னாள் விசாலி.

சாரதியின் முகம் கன்றிவிட்டது.

"அந்தத் தாய் ரொம்ப சந்தேகப் பேர்வழி. அந்தப் பெண்ணும்... அதெல்லாம் நமக்கு எதுக்கு? ஏதோ நம் வீட்டில் சமையல்காரியாக இருக்கிறாள். அதுக்கு மேல் அவளைப் பற்றி நாம் பேசுவானேன்? அவளுடைய அம்மாவுக்கு வைத்தியம் பார்க்க உங்களை அழைத்துப் போனது என்னுடைய முட்டாள் தனம்தான்." அதற்குப் பிறகு விசாலி சாமர்த்தியமாக உரையாடலை திசை திருப்பி விட்டாள்.

சாரதி ரொம்ப நேரம் அங்கே உட்காரவில்லை. எத்தனை உற்சாகமாக வந்தானோ, அத்தனை ஏமாற்றத்துடன் திரும்பிப் போனான்.

"டாக்டர் தம்பி நான்கு நாட்களாக வரவே இல்லையே? ஏன்?" இஞ்செக்ஷன் போடுவதற்காக தினமும் வந்து கொண்டிருந்த சாரதி திடீரென்று வராமல் போகவும் சாந்தா மகளிடம் கேட்டாள்.

"அவருக்கு வேலை அதிகமாக இருக்கிறதாம்." நடந்ததைச் சொல்லி தாயின் மனதை நோகடிக்க விரும்பாமல் சுருக்கமாக தெரிவித்தாள்.

அன்று இரவு உணவு பரிமாறும்போது சித்தியிடம் அம்மாவை வேறு டாக்டரிடம் காட்டப் போவதாக சொன்னதைப் பற்றி கேட்டாள்.

"பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். இந்த கிளப் ஆண்டு விழா முடிந்துவிட்டால் இனி ஓய்வுதான். முன்பு வாங்கிய



மருந்துகள் இன்னும் பாக்கி இருக்கு இல்லையா. இப்போதைக்கு அதைக் கொடு." நயமான குரலில் சொன்னாள் விசாலி. ஜோதியிடம் அதிகமாக எந்த ரகளையும் வைத்துக் கொள்வதை விசாலி விரும்பவில்லை. அவள் வந்த பிறகு வீட்டில் நிம்மதியாக இருக்கிறது. அதை பாழடித்துக் கொள்வானேன்.

பதினைந்து நாட்கள் கழிந்து விட்டன. கிளப் ஆண்டுவிழா நெருங்கிவிட்டது. கீதாவுக்கும், விசாலிக்கும் சாப்பிடக் கூட நேரம் இருக்கவில்லை. நடுவில் சாரதி இரண்டு மூன்று முறை வந்தாலும் ஜோதி இருந்த பக்கம் கூட திரும்பவில்லை. சித்தி அவனிடம் தன்னைப் பற்றி எதிர்மறையாக ஏதாவது நிச்சயம் சொல்லியிருக்க வேண்டும். அது என்னவென்றுதான் தெரியவில்லை. சாரதி அவள் பக்கம் பார்த்தால் தானே! அவனிடம் கேட்டு தெரிந்து கொள்வது எப்படி?

அன்றுதான் ஆண்டுவிழா. மதியம் மூன்று மணி அளவில் கீதா, விசாலி டிபன், காபி சாப்பிட்டு விட்டு கிளப்புக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். ஜோதி விசாலியிடம் வந்தாள்.

"சித்தி! அம்மாவின் உடல்நிலை கொஞ்சம் கூட சரியாக இல்லை. காலையிலிருந்து எதுவும் சாப்பிடவும் இல்லை. கூப்பிட்டால் பதில்கூட பேசமாட்டேங்கிறாள்." விழிகளில் சுழன்ற நீரை அடக்க முயன்று கொண்டே சொன்னாள் ஜோதி.

"என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? கிளப்புக்கு போவதை நிறுத்திவிட்டு உன் அம்மாவின் அருகில் உட்காரச் சொல்கிறாயா? கவலைப்படக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். அவளானால் இருபத்திநான்கு மணி நேரமும் உன் திருமணத்தைப் பற்றி நினைத்து கவலைப்பட்டுக் கொண்டு இருப்பாள். நாளை காலையில் வந்து பார்க்கிறேன். அதற்குள் ஒன்றும் ஆகிவிடாது. இப்படி வா... பின்னால் இந்த பூக்களை சரியாக வைத்துவிடு. நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

அரைமணி கழித்து தாயும், மகளும் கிளம்பிப் போய் விட்டார்கள். மாலை ஆகிவிட்டது. இரவுக்கான சமையலை

முடித்துக் கொண்டு ஜோதி தாயின் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டிருந்தாள். நன்றாக இருட்டிவிட்டது. தெரு விளக்குகள் எரியத் தொடங்கின. ஜோதியின் மனதில் பலவிதமான எண்ணங்கள் கடல் அலைகளை போல் கொந்தளித்துக் கொண்டு இருந்தன. கிளப்பில் எல்லோரும் ஆண்டு விழாவுக்காக ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளை பார்த்துக் கொண்டு உற்சாகமாக இருப்பார்கள். இந்த ஊருக்கு வந்து இத்தனை மாதங்கள் ஆனாலும் அவள் அந்த காம்பவுண்டை விட்டு வெளியில் போனதில்லை. திடீரென்று தாய் அழைப்பது போல் தோன்றவும் தலையைத் திருப்பிப் பார்த்தாள். தாயின் முகம் வெளிறிப் போய் இருந்தது. இங்கே வந்த பிறகு பாக்கி இருந்த தலைமுடியும் முழுவதுமாக நரைத்துவிட்டது.

"என்னம்மா? என்ன வேண்டும்?" அன்பு கலந்த குரலில் கேட்டாள் ஜோதி. தாய்க்காக எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் சமாளிக்க வேண்டும் என்று முடிவு செய்தாள்.

"டாக்டர்.... டாக்டர்" தெளிவற்ற குரலில் சொன்னாள்.

"டாக்டரை அழைக்கணுமா?" கவலையுடன் கேட்டாள் ஜோதி.

"சித்தியை கூப்பிடு.-."

"சித்தி இல்லை அம்மா, ஏதோ வேலையாக வெளியில் போயிருக்கிறாள். இப்போதைக்கு வரமாட்டாள்."

தாயின் முகத்தைப் பார்க்கும் போது ஜோதிக்கு பயமாக இருந்தது. திடீரென்று சாந்தாவுக்கு விக்கல் எடுக்கத் தொடங்கியது.

"அம்மா! கொஞ்சம் தண்ணீர் குடிக்கிறாயா? எடுத்துக் கொண்டு வரட்டுமா? ஏதாவது பேசும்மா. எனக்கு பயமா இருக்கு." தாயின் தோள்களைப் பற்றி ஜோதி உலுக்கினாள்.

"டாக்டரை கூப்பிடு ஜோதி. இனி நான் பிழைக்க மாட்டேன்." பலவீனமான குரலில் சொன்னாள் சாந்தா.



ஜோதி ஒரு நிமிடம் தாயின் பக்கம் பார்த்தாள். தாயின் நிலைமை ரொம்ப மோசமாக இருக்கிறதென்று புரிந்துவிட்டது. அடுத்த நிமிடம் பங்களாவுக்குள் ஓடினாள். அங்கே யாருமே இருக்கவில்லை. இப்போதைக்கு வரவும் மாட்டார்கள். என்ன செய்வது? எதுவும் புரியாத நிலையில் பைத்தியக்காரியை போல் ஹாலை பார்வையில் அளந்தாள். திடீரென்று அவளுடைய பார்வை மேஜை மீது இருந்த போன் மீது நிலைத்தது. சாரதிக்கு போன் செய்தால்? ஜோதி இங்கே வந்த புதிதில், தாயின் பேச்சைக் கேட்டு கீதாவின் மனம் விஷமாக மாறுவதற்கு முன்னால் கீதா ஜோதியிடம் சற்று நெருங்கி பழகினாள். ரேடியோ, டி.வி., போன், போன்றவற்றை எப்படி இயக்குவது என்று கற்றுக் கொடுத்தாள். ஜோதி ஒரு வினாடி கூட தாமதம் செய்யவில்லை. மளமளவென்று சாரதியின் நம்பரைத் தேடி டயல் செய்தாள்.

"ஹலோ! சாரதி ஸ்பீகிங்." மறுமுனையில் சாரதியின் குரல் கேட்டது. ஆஸ்பத்திரியிலிருந்து அப்பொழுதுதான் வீடு திரும்பிய சாரதி, கிளப் ஆண்டு விழாவில் நடக்கவிருக்கும் கீதாவின் நாட்டிய நிகழ்ச்சியை காண்பதற்காக புறப்பட்டுக் கொண்டிருந்தான். எப்போதும் வேண்டாத சமயத்தில்தான் இந்த போன் கால்கள் வரும்.

"ஹலோ" சாரதி எரிச்சலுடன் இரட்டிப்பது போல் கேட்டான்.

"நான் .... வந்து...." ஜோதி தடுமாறினாள். மறுமுனையில் சாரதியே எடுத்துவிட்டதால் என்ன பேசுவதென்று அவளுக்கு தெரியவில்லை.

"ஹலோ ... யார் பேசுவது? என்ன வேண்டும்?"-பெண்ணின் குரல் கேட்டதும் சாரதி நயமான குரலில் கேட்டான்.

"நான்தான் ஜோதி பேசுகிறேன்."

"ஜோதி என்றால்?" சாரதிக்கு அவளுடைய பெயர் தெரியாது.

"விசாலி ஆண்ட்டீயின் அக்கா மகள் ஜோதி." சமையல்காரி யாக அறிமுகப்படுத்தப்பட்ட விஷயத்தை மறந்து விட்டிருந்தாள்.

திமரென்று நினைவுக்கு வந்தவளாய் "நான் அவர்கள் வீட்டில் சமையல்காரியாக இருக்கிறேன்." என்றாள்.

சாரதிக்கு சட்டென்று வாயடைத்துவிட்டது போல் இருந்தது.

"அம்மாவுக்கு உடல்நிலை ரொம்பவும் சரியாக இல்லை. தயவுசெய்து ஒருமுறை வந்து பார்க்க முடியுமா?"

அவள் வலுக்கட்டாயமாக அழுகையை அடக்கிக் கொண்டிருப்பது சாரதிக்கு தெளிவாகப் புரிந்து.

"வீட்டில் யாருமே இல்லையா?" போவதா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டே கேட்டான்.

"யாருமே இல்லை. சித்தியும், கீதாவும் கிளப்புக்கு போயிருக்கிறார்கள். இப்போதைக்கு வரமாட்டார்கள். சித்தப்பாவும் இல்லை. நீங்க தவறாக நினைத்துக் கொள்ளவில்லை என்றால்..." அழுகையின் மிகுதியால் அவளால் வார்த்தையை முடிக்கவில்லை.

"இப்போதே கிளம்பி வருகிறேன்." சாரதி போனை வைத்து விட்டான். அவர்கள் யாரும் வீட்டில் இல்லாத சமயத்தில் அந்தப் பெண் செய்து இருக்கிறாள். அவள் சொன்னதெல்லாம் உண்மை என்பதற்கு அவளுடைய அழுகையே சாட்சி. உடைகளை மாற்றிக் கொண்ட சாரதி கிளப்புக்கு போவதற்கு பதில் விசாலி ஆண்டியின் வீட்டிற்குக் கிளம்பினான். அங்கே கிளப்பில் விசாலி ஆண்ட்டியும், கீதாவும் தன்னுடைய வருகைக்காக எதிர்பார்த்துக் கொண்டு இருப்பார்கள் என்று அவனுக்குத் தெரியும்.

சாரதி போனபோது வாசற்கதவு திறந்துதான் இருந்தது. உள்ளே எந்த சத்தமும் கேட்கவில்லை. அவுட்ஹவுஸை நோக்கி நடந்தான். தொலைவிலிருந்தே ஜோதி "அம்மா! அம்மா!" என்று அழுதுகொண்டே அழைக்கும் குரல் கேட்டது. அவன் உள்ளே காலடி எடுத்து வைக்கும் போது கட்டில் அருகில் பிரசாத்ராவ் நின்று கொண்டிருப்பதை பார்த்தான். சாரதிக்கு சற்று நிம்மதியாக இருந்தது. தைரியமும் வந்தது. ஆனால் சாந்தாவைப் பார்த்ததுமே புரிந்துவிட்டது. உயிரில்லாத கட்டையின் மீது விழுந்து ஜோதி



அழுது கொண்டிருக்கிறாள் என்று மெதுவாக அருகில் சென்று தாயின் கையை பற்றியிருந்த ஜோதியின் கைகளை விலக்கிவிட்டு போர்வையால் முகத்தை மூடிவிட்டான்.

"இஞ்செக்ஷன் எதுவும் கொடுக்கவில்லையே?" கேட்கும்போதே ஜோதிக்கு புரிந்துவிட்டது. "அம்மா!" என்று அப்படியே தாயின் உடல் மீது சரிந்தாள்.

தொலைவில் நின்றிருந்த பிரசாதராவ் அருகில் வந்து ஜோதியின் தலையை ஆதரவுடன் வருடிக் கொடுத்தார். அவருடைய கண்களில் நீர் நிறைந்தது.

தொழில்ரீதியாக மருத்துவராக இருப்பதால் சாரதிக்கு இறப்பு புதிய விஷயம் இல்லை. தினமும் பலவிதமான சாவுகளை பார்த்துக் கொண்டுதான் இருக்கிறான். இறந்தவர்களுக்காக உறவினர்கள் அழுவதும், அரற்றுவதும் அவனுக்குத் தெரியும். ஆனால் இன்று ஜோதியின் அழுகை அவனுடைய இதயத்தை கரைத்துவிட்டது. ஜோதியின் அருகில் சென்று ஆறுதல் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. பலவந்தமாக தன் விருப்பத்தை கட்டுப்படுத்திக் கொண்டான். ஜோதியைப் பற்றி விசாலி ஆண்ட்டீ சொன்னதில் கொஞ்சம் கூட உண்மை இருக்க முடியாது என்று அவனுக்கு பலமாகத் தோன்றியது.

* * *

சாந்தா இறந்து போய் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகி விட்டது. விசாலி எத்தனை சொன்னாலும் கேட்காமல் ஜோதி அவுட் ஹவுஸிலேயே தங்கியிருந்தாள். வழக்கம் போல் சமையல் வேலையும் செய்து வந்தாள். ஒரு நாளும் எந்த விஷயத்திற்கும் வாயைத் திறக்காத பிரசாதராவும் "உனக்கு புத்தி இருக்கா? பாவம்... அந்தப் பெண் அவ்வளவு வேதனையில் இருக்கும்போது வேலையைச் செய்யச் சொல்கிறாயே?" என்று மனைவியைக் கடிந்து கொண்டார்.

சாந்தா இறந்து போனது விசாலிக்கு ஒரு விதத்தில் நிம்மதி ஏற்பட்டது. வேறு போக்கிடம் இல்லாததால் ஜோதி இங்கே தான்

இருப்பாள். நாலைந்து நாட்களாய் விசாலியின் மனதில் புதிதாக ஒரு எண்ணம் முளைத்திருந்தது. தாமோதர் என்ற இளைஞனை அவளுக்குத் தெரியும். அடிக்கடி விசாலியின் வீட்டுக்கு வருவான். அவனுக்கு ஜோதியைக் கட்டி வைத்தால் இருவரும் கண்ணெதிரிலேயே இருப்பார்கள். வெளி வேலைகளை அவன் கவனித்துக் கொள்வான். வீட்டு வேலைகளை ஜோதி பார்த்துக் கொள்வாள். தங்கிக் கொள்வதற்கு அவுட்ஹவுஸ் இருக்கவே இருக்கிறது. தாமோதரம் தனியார் நிறுவனத்தில் ப்யூனாக வேலை பார்த்து வந்தான். விசாலி தன்னுடைய எண்ணத்தை செயல்படுத்த தீவிரமாக முயன்று கொண்டிருந்தாள்.

விசாலி சமயம் பார்த்து தாமோதரத்திடம் திருமணப் பேச்சை எடுத்தாள். ஜோதியை கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்லி விசாலி கேட்டபோது மகிழ்ச்சியால் தாமோதரனின் முகம் மலர்ந்து விட்டது. ஏற்கனவே விகாரமாக இருந்த அவன் முகம் மேலும் விகாரமாக தென்பட்டது.

"தங்களின் கருணையே கருணை". இளித்துக் கொண்டே சொன்னான். நன்றி பெருக்கால் அவன் முதுகு மேலும் வளைந்துவிட்டது.

"இருவரும் கல்யாணம் செய்து கொண்டு எங்க அவுட் ஹவுஸிலேயே குடித்தனம் இருந்து கொள்ளுங்கள். சம்மதம் தானே." சிரித்துக் கொண்டே சொன்னாள் விசாலி.

"தாங்கள் சொன்ன பிறகு மீற முடியுமா அம்மா" - இளித்துக் கொண்டே சொன்னான் தாமோதரன்.

அவன் கண்களுக்கு விசாலி ஒரு தேவதை போல் தென்பட்டாள். கேட்காமலேயே வரம் கொடுக்கும் தேவதை. இல்லாவிட்டால் ஜோதி போன்ற பெண்ணை திருமணம் செய்து கொடுப்பதுடன் தங்கிக் கொள்வதற்கு வீட்டையும் தருகிறாள். இல்லாவிட்டால் இந்தப் பட்டணத்தில் தன்னைப் போன்ற சின்ன சம்பளக்காரனுக்கு வீடு கிடைப்பது சாதாரண விஷயமா? தாமோதரனின் கண்களின் முன் தானும் ஜோதியும் கணவன்



மனைவியாக குடித்தனம் நடத்துவது போல் காட்சிகள் தோன்றி மறைந்தன.

"ஏதோ இத்தனை செய்ததற்கு எங்களை கொஞ்சம் கவனித்துக் கொண்டால் அதுபோதும்." விசாலி திறமையாக அசல் விஷயத்தை வெளியிட்டாள்.

"கட்டாயம், எங்களுடைய வாழ்க்கையே உங்களுடைய காலடியில்." தாமோதரன் கடவுளை வணங்குவது போல் இரு கைகளையும் கூப்பினான்.

அவ்வப்போது வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருப்பதால் ஜோதிக்கு தாமோதரனை தெரியும். அன்று இரவு விசாலி உறங்குவதற்குமுன் வீட்டு வரவு செலவு கணக்கு புத்தகத்தை முன்னால் வைத்துக் கொண்டு அதைக் கவனிக்காமல் ஜோதி பக்கம் பார்த்தாள். அக்காவை நினைத்து வருத்தப்படுவது போல் முதலில் பேசினாள். "இந்த விஷயம் முன்னாடியே தெரிந்தால் உன் அம்மா எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாளோ" என்றாள்.

"எந்த விஷயம் சித்தி?" ஜோதியின் குரலில் விரக்தி தென்பட்டது.

"அதான்... தாமோதரன் விஷயம். அவன் உன்னைத் திருமணம் செய்து கொள்வான் என்று கனவில் கூட நினைக்கவில்லை. சும்மா பேச்சுவாக்கில் ஒரு வார்த்தை கேட்டதுமே சம்மதித்துவிட்டான். நீயும் இளமையில் இருக்கிறாய். தனியாக இருப்பது சரியில்லை. உனக்கும் என்னை விட்டால் வேறு யாரு இருக்கிறார்கள்? இந்த கோடையில் கீதாவுடன் சேர்த்து உன்னுடைய திருமணத்தையும் முடித்துவிடலாம். நீ எனக்காக இவ்வளவு செய்கிறாய். உனக்காக நான் இதைகூட செய்யாவிட்டால் எப்படி? ஏதோ கொஞ்சம் பணம் செலவு ஆகும். இல்லையென்று சொல்லவில்லை. செலவு விஷயத்தில் கணக்கு பார்ப்பதற்கு நீ எனக்கு வேற்று ஆள் இல்லையே."

ஜோதி விருட்டென்று எழுந்து கொண்டாள்.

"சித்தி! தயவு செய்து என்னை இப்படியே உன்னுடைய சமையல்காரியாக இருக்க விடு" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினான்.

அன்று இரவு ஜோதிக்கு உறக்கமே வரவில்லை. சித்தியின் சுயநலம் அவளுக்கு இபொழுது நன்றாகவே புரிந்து விட்டது. 'புத்தியில்லாதவனை தனக்கு கட்ட வைத்து சம்ளமில்லாத வேலைக்காரியாக எப்போதும் உழைத்துக் கொண்டிருக்க வேண்டும்' என்று திட்டம் போடுகிறாள் போலும். தன் உடலில் உயிர் இருக்கும் வரை தான் இந்த கல்யாணத்திற்கு சம்மதிக்கப் போவதில்லை. போயும் போயும் அந்த தாமோதரனையா? பகலில் அவன் முகத்தைப் பார்த்தால் குழந்தைகள் பயந்து கொண்டு இரவில் தூங்க மாட்டார்கள். கைகளை கட்டிக் கொண்டு அடிமையை போல் சித்தியின் பின்னாலேயே சுற்றிசுற்றி வரும் தாமோதரனையா. . . கடவுளே! அம்மாவைத்தான் என்னிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டாயே, இன்னுமா உனக்கு திருப்தி ஏற்படவில்லை?' என்று நினைத்து அழத் தொடங்கினாள். இதற்கு முன்பாக இருந்தால் ஏதாவது கஷ்டம் வந்தாலும் அம்மாவின் மடியில் முகம் புதைத்து தன் வேதனையை வெளிப்படுத்துவாள். இப்பொ அதுவும் இல்லை. இரவு ரொம்ப நேரம் ஆன பிறகும் ஜோதி அழுது கொண்டே இருந்தாள். அவுட் ஹவுஸில் விளக்கு எரிந்து கொண்டிருந்ததை கவனித்த பிரசாதராவ் அங்கே சென்று கதவைத் தட்டினார்.

"தூக்கம் வரவில்லை சித்தப்பா."-கதவைத் திறந்து கொண்டே ஜோதி சொன்னாள்.

"அப்படியானால் என்னுடன் வா. புத்தகங்களை தருகிறேன்" என்று சொல்லி அழைத்து வந்தார். அவளிடம் சில புத்தகங்களை கொடுத்து விட்டு மறுபடியும் பேப்பர்களை திருத்தத் தொடங்கினார். அவரிடம் தாமோதரத்தின் விஷயம் சொல்ல வேண்டும் என்று நினைத்தாள். ஏனோ சொல்ல முடியவில்லை. எத்தனை கஷ்டங்கள்



வந்தாலும் சரி தாமோதரனை திருமணம் செய்து கொள்ள மாட்டாள். அது நிச்சயம்.

* * *

சாரதி ஏனோ சமீபத்தில் அந்த வீட்டுக்கு வருவதை குறைத்துக் கொண்டு விட்டான். அப்படியே வந்தாலும் ரொம்ப நேரம் இருப்பதில்லை.

கீதாவுக்கு இரண்டு நாட்களாக ஜுரமாக இருந்தது. சாரதி வந்து செக்கப் செய்துவிட்டு இஞ்செக்ஷன் போட்டான். அவன் வந்த போது விசாலி சொன்னதன் பேரில் ஜோதி அவனுக்கு குடிப்பதற்காக ஜுஸ் கொண்டு போய் கொடுத்தாள்.

"என்ன ஆச்சு உங்களுக்கு? உடம்பு சரியில்லையா என்ன?" போன முறை பார்த்ததற்கும் இப்பொ பார்ப்பதற்கும் பளிச்சென்று தெரிந்த வித்தியாசத்தை கவனித்து வியப்படைந்து கொண்டே கேட்டான்.

விசாலியின் முகம் சுருங்கிவிட்டது.

"ரொம்ப பலவீனமாய் தென்படுகிறீர்கள். ஜுரமும் இருப்பது போல் தோன்றுகிறது. வாங்க டெம்பரேச்சர் பார்க்கிறேன்." சாரதி கையை நீட்டினான்.

"எனக்கு ஒன்றும் இல்லை. நன்றாகத்தான் இருக்கிறேன்." ஜோதி ஒரு முறை சித்தியின் பக்கம் பார்த்து விட்டு அங்கிருந்து போகப் போனாள்.

"அவர் பார்க்கிறேன் என்று சொன்னால் காதில் வாங்கிக் கொள்ளாமல் போவானேன்? புத்தி இல்லையா?" விசாலி கடிந்து கொண்டாள்.

சாரதி தர்மாமீட்டர் வைத்துப் பார்த்தான். 102 டிக்ரி ஜுரம் இருந்தது.

"பார்த்திங்களா. எனக்கு அப்போதே சந்தேகமாய் இருந்தது. கவனமாக இருங்கள். ஊரில் எங்கு பார்த்தாலும் ஜுரமாக

இருக்கிறது. ரொம்ப அலையாமல் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லிக்கொண்டே பேக்கிலிருந்து மாத்திரைகளை கொடுத்து விட்டு போய்விட்டான்.

"ரொம்ப நன்றாக இருக்கிறது. வந்ததென்னவோ எனக்காக. வைத்தியம் நடந்தது உனக்கு." ஏளனம் செய்வதுபோல் சொன்னாள் கீதா.

"அவன் கூப்பிட கூப்பிட காதில் வாங்கிக் கொள்ளாமல் போவானேன். ரொம்ப புத்திசாலி என்ற நினைப்போ" என்றாள் விசாலி.

ஜோதி கண்ணீரை அடக்கிக் கொண்டே அங்கிருந்து வெளியேறினாள். ஏன் இப்படி பேச்சால் தன்னை சித்திரவதை செய்கிறார்கள்? தன்னை இழிவுப்படுத்தி பேசுவதால் அவர்களுக்கு என்ன கிடைக்கப் போகிறது?

சாரதி கொடுத்த மாத்திரைகளை போட்டுக் கொண்டதில் மறுநாளே ஜுரம் குறைந்து விட்டது. உடல்வலியும் குறைந்து விட்டது, சோர்வாக இருந்தது. எப்படியோ சமையலை செய்து முடித்தாள்.

கீதாவும், விசாலியும் கடைத் தெருவுக்கு கிளம்பினார்கள். இரண்டு நாட்கள் கழித்து கீதாவின் பிறந்த நாள் வரப்போகிறது. அந்த விழாவில் சாரதிக்கும் கீதாவுக்கும் திருணம் நடக்கப் போகிறதென்றும், தாமோதரன் தன்னைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகவும் எல்லோரிடமும் சொல்லப் போகிறார்களாம். அன்றே முஹூர்த்த நாளையும் குறித்து விடுவார்களாம். தாமோதரனின் நினைவு வந்தாலே போதும் ஜோதியின் உடலில் இரத்தம் வற்றிவிட்டது போல் இருந்தது. எப்படியோ வேலைகளை முடித்துவிட்டு அவுட் ஹௌஸில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

வானத்தில் மேகங்கள் திரண்டிருந்தன. மழையை வரவிடாமல் தடுக்கநினைப்பது போல் காற்று வேகமாக வீசிக் கொண்டிருந்தது.



32232
493/483

தனிமையில் இருக்கும் போது தாயின் நினைவுகள் அவளை பைத்தியமாக்கிக் கொண்டிருந்தன. சட்டென்று எழுந்து ஜன்னல் அருகில் போய் நின்றாள். கிராமத்தில் இருந்த போது எவ்வளவு நன்றாக இருந்தது? ஏழ்மையில் இருந்தபோதும் நிம்மதியாக காலம் கழிந்த நாட்கள் அவை. தாயை இங்கே அழைத்து வராமல் இருந்திருந்தால் இன்னும் சில நாட்கள் வாழ்ந்திருப்பாளோ? அவளைக் கட்டாயப்படுத்தி இந்த ஊருக்கு அழைத்து வந்தது தான்தானே. இங்கே வந்த பிறகு ஒரு நாள் கூட அவள் நிம்மதி யாக தூங்கவில்லை. இதற்கெல்லாம் காரணம் தன்னுடைய பிடிவாதம் தான் என்று நினைவுக்கு வந்த போத ஜோதியால் துக்கத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. 'அம்மா! நீ எங்கே இருக்கிறாய்? நீ இல்லாத உலகம் எனக்கு எவ்வளவு வெறுமையாக இருக்கிறது தெரியுமா? சித்தி தாமோதரத்துடன் என்னுடைய திருமணத்தை முடித்து என் வாழ்க்கையை நரகமாக மாற்ற வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு இருக்கிறாள்.'

ஜன்னல் கம்பியில் தலையை சாய்த்து, இருகரங்களிலும் முகம் புதைத்து அழுதுகொண்டிருந்தாள். அந்த அழுகையின் வழியாக தன்னுடைய வேதனையை தாயுடன் மானசீகமாக பகிர்ந்து கொண்டிருந்தாள். அதற்குள் யாரோ உள்ளே வந்தது போல் காலடிச் சத்தம் கேட்டது. சித்தப்பாவை தவிர இந்த நேரத்தில் யார் வரப்போகிறார்கள்? அழுதுகொண்டிருந்த இந்த நிலையில் தன்னுடைய முகத்தைக் காட்ட விருப்பமில்லாமல் அப்படியே இருந்து விட்டாள். பொங்கி வந்த கண்ணீரை அடக்க முயன்றாள்.

"ஜோதி!" தெளிவற்ற குரலில் அழைத்துக் கொண்டே இரண்டு பலமான கரங்கள் அவளை தன் பக்கமாக திருப்பிக் கொண்டு மார்போடு அணைத்துக் கொண்டன. அழுகையை கட்டுப் படுத்த வேண்டும் என்று அவள் செய்த முயற்சிகள் வியர்த்தமானதோ, மேலும் துக்கம் கொங்கிக் கொண்டு வந்தது. விசாலமாக இருந்த அந்த மார்பில் தலையை சாய்த்துக் கொண்ட போது அவளுக்கு தாயின் அருகில் இருப்பது போலவே

தோன்றியது. சித்தாப்பாவிடம் தாமோதரன் பற்றி சொல்லி விட வேண்டும் என்று முடிவு செய்தவளாக, "சித்தப்பா! அந்த தாமோதரத்தை நான் திருமணம் செய்துகொள்ள மாட்டேன். அதை விட செத்துப் போவதே நல்லது. உங்கள் வீட்டில் சமையல்காரியாக இருந்து விடுகிறேன். இந்தத் திருமணம் எனக்கு வேண்டவே வேண்டாம். சித்தியிடம் சொல்லி இந்த ஏற்பாடுகளை நிறுத்தச் சொல்லுங்கள்." விசும்பலுக்கு இடையில் எப்படியோ சொல்லி முடித்தாள்.

சித்தப்பாவிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை சற்று பொறுத்து அவளே மீண்டும் சொல்லத் தொடங்கினாள். "நேற்று சாரதி வந்த போது கூட சித்தி சொன்னாள். அவராக எனக்கு மருந்துகளை கொடுத்தால் நான் என்ன செய்யட்டும்? சித்தியும், கீதாவும் வார்த்தைகளால் என்னை சித்திரவதை செய்கிறார்கள். நானேதோ அவரை ஈர்க்க முயற்சி செய்கிறேன் என்று அவர்கள் சந்தேகப்படுகிறார்கள். எனக்கு அது போன்ற எண்ணம் கொஞ்சம் கூட இல்லை. நீங்களாவது என்னைப் புரிந்து கொள்ளுங்கள் சித்தப்பா."

அவளுடைய தோளைச் சுற்றியிருந்த கைகள் இறுகி அவளை மேலும் அருகில் இழுத்துக் கொண்டன.

"தாமோதரனை திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று என் சார்பில் சித்தியிடம் நீங்களே சொல்லி விடுங்கள். இந்த ஜென்மத்தில் வேறு எந்த உதவியையும் கேட்க மாட்டேன்."

இத்தனை நேரமாகியும் சித்தப்பா பேசாமல் இருந்தது, தன்னை அணைத்துக் கொண்டதில் ஏதோ ஒரு வித்தியாசம் அப்பொழுதுதான் உணர்ந்து கொண்ட ஜோதி தலையை உயர்த்தி பார்த்தாள்! அப்படியே கற்சிலையாக நின்றுவிட்டாள்! அழுதழுது சிவந்து விட்ட அவள் கண்கள் வியப்பாய் விரிந்தன.

"நீங்களா!" மார்பின் மீது கையை வைத்துக் கொண்டாள்.

• "ஜோதி!" அவன் கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்தான்



"நீங்க... நீங்க..." அவள் வாயிலிருந்து வார்த்தைகள் வெளியில் வர மறுத்தன. அவன் கைகளிலிருந்து விடுபட முயற்சி செய்தாள். சாரதியின் பிடி ஒரு நிமிடம் தளர்ந்து மேலும் இறுகியது. இன்று அவனையும் அறியாமல் அவளை இப்படி அணைத்துக் கொண்டதில் சமீபகாலமாய் அடிக்கடி அவனுக்கு தொல்லைக் கொடுத்து வந்த பிரச்சனைக்கு பதில் கிடைத்து விட்டது போல் இருந்தது. கண்களுக்கு முன்னால் இருந்த சந்தேகத் திரைகள் தானாக விலகி விட்டன.

"சற்று முன் இன்னார் என்று தெரியாமல் என் அருகில் வந்து விட்டாய். இப்போ என்னையே உணர்ந்து விட்ட நிலையில் உன்னை நெருங்குகிறேன்." சாரதி அவளை மார்போடு அணைத்துக் கொண்டான்.

"நீங்க... நீங்க..." ஜோதி இன்னும் ஏதோ முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

"ஜோதி! சொந்தம் என்று சொல்லிக் கொள்ள யாருமே இல்லாத அந்த தனிமை எவ்வளவு பயங்கரமானதோ எனக்குத் தெரியும். நானும் அதை சில வருடங்களாக அனுபவித்து இருக்கிறேன். காலையில் இங்கே ஸ்டெதஸ்கோப்பை மறந்து விட்டு போய்விட்டேன். வீட்டுக்கு போகும் முன் அதை எடுத்துக் கொண்டு போகலாம் என்று இந்தப் பக்கம் வந்தேன். வீட்டில் யாருமே இல்லை. உனக்கு ஜுரம் எப்படி இருக்கிறது என்று கேட்டு போகலாம் என்று வந்தேன். இத்தனை பெரிய வீட்டில் இந்த அவுட் ஹவுஸில் தனியாக நீ அழுது கொண்டிருப்பதை பார்த்தபோத உண்மையிலேயே..." சாரதி வார்த்தையை இன்னும் முடிக்கவில்லை.

வெளியிலிருந்து, "ஜோதி! ஜோதி! அங்கே வீட்டைத் திறந்து போட்டு விட்டு இங்கே என்ன செய்து கொண்டு இருக்கிறாய்?" "விசாலியின் குரல் கேட்டது. திடுக்கிட்டவன் போல் சாரதி சட்டென்று ஜோதியை விடுவித்தான். உடனே மறுபடியும் இறுக அணைத்துக் கொண்டு அவள் நெற்றியில் மென்மையாக முத்தம்

பதித்து விட்டு உனக்கு நான் இருக்கிறேன். அதை மட்டும் மறந்துவிடாதே" என்று சொல்லிவிட்டு விடுவித்தான்.

அதற்குள் விசாலி உள்ளே வந்தாள். அறை முழுவதும் இருள் பரவியிருந்தது. இருட்டில் உட்கார்ந்து கொண்டு ஜோதி என்ன செய்கிறாள்? வாசலில் சாரதியின் கார் இருந்ததை விசாலி பார்த்து விட்டாள். அவள் ஊகித்தது உண்மையாகி விட்டது. அவுட் ஹவுஸில், இருட்டு அறையில் சாரதி ஜோதியுடன் இருந்தான்.

"காலையில் என்னுடைய ஸ்டெதஸ்கோப்பை மறந்து விட்டேன். அதை எடுத்துப் போக வந்தேன். அப்படியே ஜோதிக்கு எப்படி இருக்கு என்று பார்த்து போலாமென்று வந்தேன்." சாரதி கொஞ்சமும் தயங்காமல் சொன்னான். விசாலி உள்ளே வரும் போது ஜோதியிடமிருந்து ரொம்ப தூரம் விலகி நின்றிருந்தான். ஜோதியின் பார்வை தரையில் பதிந்து இருந்தது.

"ஜுரம் குறைந்து விட்டதா?" விசாலி ரொம்ப அக்கறையுடன் விசாரித்தாள்.

"கொஞ்சம் தேவலை" என்றவள் ஜோதி பக்கம் திரும்பி "இந்த வேளை சாப்பாடு வேண்டாம். நொய் கஞ்சி போதும். மாத்திரையை போட்டுக் கொள்ள மறுக்காதீங்க. வருகிறேன்." சாரதி வெளியில் சென்று விட்டான்.

விசாலி பின்னால் திரும்பி ஜோதியின் மீது விஷம் கலந்த பார்வையை வீசி விட்டு போய் விட்டாள். சாரதி கிளம்பிப் போன பிறகு சித்தி தன்னை எதுவும் சொல்லாமல் இருந்தது ஜோதிக்கு வியப்பை அளித்தது. உறங்கப் போகும் முன் விசாலி மறுபடியும் அவுட் ஹவுஸுக்கு வந்தாள். உரிமையுடன் ஜோதி பக்கத்தில் இருந்த ஸ்டூல் மீது உட்கார்ந்து கொண்டு, "மருந்து, மாத்திரை சாப்பிட்டாயா?" என்று குசலம் விசாரித்தாள். சற்று நேரம் பொதுவாக பேசிவிட்டு கிளம்பும் முன் தாமோதரன் திருமணத்திற்கு அவசரப்படுகிறான் என்றும், அடுத்த வாரத்திற்குள் திருமணத்தை முடித்து விட முடிவு செய்திருப்பதாக தெரிவித்து விட்டு போய் விட்டாள்.



ஜோதிக்கு அன்று இரவு தூக்கம் வராமல் போனதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது... சாரதி அவளிடம் நடந்து கொண்ட முறை, அவனுடைய பேச்சு. இரண்டாவது... கல்யாணம் என்ற பெயரில் சித்தி அவளுக்குக் கொடுக்கப் போகும் கொடூரமான தண்டனை. எத்தனை நேரம் யோசித்தாலும் இதிலிருந்து தப்பும் வழி தெரியவில்லை. இந்த வீட்டை விட்டு வெளியேறி விட்டால்! எங்கே போவது? இந்த வீட்டிலிருந்து வெளியேற வேண்டும் என்று அவள் நினைப்பது வாழ்வதற்காக இல்லை, செத்துப் போவதற்கு. தூக்குப் போட்டுக் கொண்டால் உயிர் போக ரொம்ப நேரம் ஆகுமாம். நிமிடத்தில் உயிர் போகும் வழி என்ன?

உயிரோடு இருந்தால் தாமோதரனுக்கு மனைவி ஆகாமல் தப்பமுடியாது. சித்தியின் பிடியிலிருந்து மீளுவது அவ்வளவு சுலபம் இல்லை தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறுவழியில்லை. மனதை கல்லாக்கிக் கொண்ட ஜோதி மெதுவாக கொல்லைப்புற கதவைத் திறந்து கொண்டு இருட்டாக இருந்த தெருவில் வேகமாக நடக்கத் தொடங்கினாள்.

அவள் மனதில் போராட்டம் துவங்கிவிட்டது. நள்ளிரவு நேரத்தில் இந்த உலகம் எவ்வளவு அழகாக காட்சி அளிக்கிறது? இதையெல்லாம் அனுபவிக்காமல் செத்துப் போவது கோழைத்தனம் இல்லையா?

"உயிரோடு இருந்தால் நரகத்தைத்தான் அனுபவிக்க வேண்டும். சாவு ஒன்றுதான் இந்தப் பிரச்சனைக்கு சரியான தீர்வு."

"கடவுள் உயிரைக் கொடுத்தது வாழ்வதற்காகத்தான். பலவந்தமாக உயிரை மாய்த்துக் கொள்வதற்காக இல்லை." உள் மனம் எச்சரித்தது.

"வாயை மூடு. நீ சொன்ன அந்தக் கடவுள்தான் இந்த நள்ளிரவு வேளையில் என்னை சாவைத் தேடி வெளியில் போகச் சொன்னார்."

உள் மனம் வாயை மூடிக் கொண்டது. சாலையில் போக்குவரத்து குறைந்து விட்டது. அவ்வப்போது ஓரிரண்டு வாகனங்கள் வந்து போய் கொண்டிருந்தன. எதிரே வந்து கொண்டிருந்த லாரியின் முன்னால் விழவேண்டும் என்று நிச்சயித்துக் கொண்டு நடு ரோட்டில் நின்று கண்களை மூடிக் கொண்டாள். மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்த போது லாரி அவளைத் தாண்டி போய் விட்டது.

இன்னொரு முறை டாக்ஸியின் குறுக்கே விழப்போனாள். டாக்ஸி டிரைவர் சட்டென்று ப்ரேக்கை போட்டு, "என்ன? வீட்டில் சொல்லிக் கொண்டு வந்து விட்டாயா?" என்று திட்டிவிட்டு போனான். தொலைவிலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ரவுடி ஒருத்தன் அவளை நோக்கி வந்தான். முதலில் அவள் அவனை கவனிக்கவில்லை. பின்னாலிருந்து விசில் சத்தம் கேட்டதும் தலையைத் திருப்பிப் பார்த்தாள். பெரிய மீசை, கட்டம் போட்ட லுங்கியுடன் இருந்த அவனைப் பார்த்த போது அவள் மனதில் முதல் தடவையாக பயம் தோன்றியது. நடையின் வேகத்தை அதிகரித்தாள். அவனும் வேகத்தை கூட்டினான். "கடவுளே! இப்பொ வரப்போகும் கார் என்னுடைய உயிரை பறிக்கவில்லை என்றால் இவன் கையில் என் உயிர் போவது நிச்சயம்" என்று நினைத்தாள். அவனுக்கும் அவளுக்கும் இடையில் உள்ள தூரம் குறைந்து கொண்டே வந்தது. வேறு வழியில்லாத நிலையில் ஜோதி ஓடத் தொடங்கினாள். அவனும் ஓட ஆரம்பித்தான். தெரு முனையில் திரும்பினாள். இரண்டே எட்டில் அவன் அவளை பிடித்திருப்பானோ என்னவோ. ஆனால் அந்தப் பக்கத்திலிருந்து கார் ஒன்று வந்து கொண்டிருந்தது. தன்னையும் அறியாமல் ஜோதி சாலையை கடக்க முயன்றாள். அந்தப் பதட்டத்தில் புடவை தடுக்கி சாலையின் நடுவில் குப்புற விழுந்தாள். கார் நெருங்கி விட்டது. "அப்பாடா! இனி பயம் இல்லை. இந்த முறை செத்துப் போவது நிச்சயம்" என்று நினைத்துக் கொண்டே கண்களை இறுக்கமாக மூடிக்கொண்டாள். பிறகு என்ன நடந்ததென்று அவளுக்குத் தெரியாது. நினைவு தப்பிவிட்டது. டிரைவர் கடைசி நிமிடத்தில் அவளைக் கவனித்து



சட்டென்று ப்ரேக் போட்டதில் 'கிரீச்'சென்ற சத்தத்துடன் கார் அவளுக்கு மயிரிழை வித்தியாசத்தில் நின்றது. காரை டிரைவ் செய்து கொண்டிருந்த இளைஞன் "டாமிட்" என்று திட்டிக் கொண்டே கீழே இறங்கினான். தரையில் நினைவின்றி கிடந்தவளை பார்த்து வியப்படைந்தவனாய் இரு கைகளிலும் அவளை தூக்கிக் கொண்டு போய் காரின் பின் சீட்டில் படுக்க வைத்து காரை ஸ்டார்ட் செய்தான்.

அவளுக்கு மறுபடியும் விழிப்பு வந்தபோது, தான் எங்கே இருக்கிறோம் என்று புரியவில்லை. உயிரோடு இருக்கிறாள். அது மட்டும் நிச்சயம். அறை முழுவதும் மருந்துகளின் நெடி பரவியிருந்தது. ஏதாவது ஆஸ்பத்திரியில் இருக்குமோ? இல்லை சித்தி வீட்டு அவுட் ஹவுஸ் தானோ? கவனமாக பரிசீலித்த பிறகு இரண்டும் இல்லை என்று புரிந்தது. இது என்ன இடம்? அவள் யோசித்துக் கொண்டு இருக்கும் போதே ஸ்பிரிங் டோரை திறந்து கொண்டு சாரதி உள்ளே வந்தான். அவள் கண்கள் வியப்பால் விரிந்தன.

"எப்படி இருக்கு?" அவன் கேட்டான்.

"நீங்களா? நீங்க..." சாரதியிடம் எப்படி வந்து சேர்ந்தாள்?

"நேற்று இரவு மயிரிழையில் விபத்து தவிர்க்கப்பட்டது. அந்த நேரத்தில் எங்கிருந்து வருகிறீர்களோ! நான் தெரிந்து கொள்ளலாமா?" ரொம்ப சீரியஸாக கேட்டான். நள்ளிரவில் ஏதோ அவசரமான கேஸை பார்த்து விட்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்த போது யாரோ பெண் தொலைவிலிருந்து ஓடிவருவதை, சாலையைக் கடக்க முயன்றதை, புடவை தடுக்கி காரின் முன்னால் விழுந்ததை அவன் கவனித்தான். அந்தப் பெண் ஜோதி என்று தெரிந்த போது, முதலில் அவனுக்கு வியப்புத்தான் ஏற்பட்டது ஆனால் போகப் போக ஏதோ ஒரு சந்தேகம் அவன் மனதை துளைத்துக் கொண்டு இருந்தது.

"உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் சொல்லத் தேவையில்லை. நான் இன்னும் உங்க வீட்டுக்கு போன்

செய்யவில்லை. நீங்க எந்த காரணத்திற்காக வீட்டை விட்டு வெளியே வந்தீர்கள் என்று தெரியாத போது, உங்க வீட்டுக்கு தகவல் தெரிவிப்பது உங்களுக்கு தீமையை விளைக்கக் கூடும் என்று நினைத்தேன்."

மாலையில் அத்தனை அன்பாக பேசிய சாரதிதானா இவ்வளவு கடினமாக பேசுகிறான்? அவளுக்கு வியப்பும், அழுகையும் ஒன்றாக ஏற்பட்டன. சாரதியின் அருகாமையில் இருக்கிறோம் என்ற மகிழ்ச்சி காற்றில் கரைந்து விட்டது.

சாரதி அவள் தலைமாட்டில் இருந்து அலமாரியை பார்த்துக் கொண்டே சொன்னான். "யாரையாவது சந்திக்கவேண்டும் என்றால் இரவு வேளை உகந்தது இல்லை என்று உங்களுக்கு தெரியாதா? அப்படியே சந்தித்துக் கொண்டாலும், மறுபடியும் நீங்க க்ஷேமமாய் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விட்டீர்களோ இல்லையோ என்று தெரிந்து கொள்வது அவர்களுடைய கடமை இல்லையா?"

அவளுக்கு அவன் என்ன சொல்கிறான் என்று புரியவில்லை.

"வீட்டுக்கு போன் செய்யணுமா வேண்டாமா?" அவன் குரலில் எரிச்சல் வெளிப்படையாகத் தெரிந்தது.

"வேண்டாம். . . வேண்டாம்." எப்படியோ சொல்லி விட்டாள்.

சடாரென்று திரும்பினான். "ஏன் சொல்லக்கூடாது? காரணம் என்ன? எதுவும் தெரியாத அப்பாவிப் பெண்போல் மறுபடியும் அவுட்ஹவுஸ்க்குப் போய் விடலாம் என்று நினைக்காதீர்கள். என்னவோ இரண்டு நாட்கள் வரை அது சாத்தியமில்லை. போகட்டும் வேறு யாராவது இருப்பார்கள் இல்லையா, அவர்களுடைய போன் நம்பர் அல்லது முகவரியை சொன்னால் ஆளை அனுப்பி தகவல் தெரிவிக்க ஏற்பாடு செய்கிறேன்." அவள் முகத்தை ஊடுருவுவது போல் பார்த்துக் கொண்டே சொன்னான்.

"நீங்க என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை."



"நள்ளிரவு வேளையில் நீங்க எங்கிருந்து வருகிறீர்கள் என்று எனக்கும் புரியவில்லை. ஊகிக்கவும் முடியவில்லை." கடினமான குரலில் சொன்னான் சாரதி.

"கடவுளே! நீங்க தவறாக எண்ணி விட்டீர்கள் போலிருக்கு." ஜோதி அழுகையினூடே சொல்லத் தொடங்கினாள். "நான் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்துடன்தான் அந்த வீட்டை விட்டு வெளியேறினேன். இந்த உலகில் எனக்கு அம்மாவைத் தவிர வேறு யாருமே இல்லை. அம்மா இறந்து போன பிறகு சித்தி என்னை தாமோதரனுக்குத் திருமணம் செய்து வைப்பதாக தீர்மானித்து விட்டாள். நேற்று மாலை நீங்க கிளம்பிப் போன பிறகு சித்தி என்னிடம் வந்தாள். அடுத்த வாரம் எனக்கும் தாமோதரனுக்கும் திருமணம் நடத்த முடிவு செய்திருப்பதாக சொல்லிவிட்டுப் போனாள். எனக்கு உறக்கமே வரவில்லை. அவனைத் திருமணம் செய்து கொள்வதை விட செத்துப் போவது நல்லது என்று தோன்றியது. அவ்வளவுதான், வீட்டை விட்டு வெளியில் வந்துவிட்டேன். எங்கே போனேன் எப்படிப் போனேன் என்று எனக்கே தெரியாது. அதற்குள் ஒரு ரவுடி என்னை துரத்தி வந்தான். இந்த ஆபத்தை நான் எதிர்பார்க்கவில்லை. அவனிடமிருந்து எப்படி தப்பித்துக் கொள்வது என்று எனக்குத் தெரியவில்லை. பயமாக இருந்தது. தொலைவிலிருந்து கார் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. வாழவேண்டும் என்ற ஆசையை கொன்று புதைத்து விட்டு மனதை கல்லாக்கிக் கொண்டு காரின் முன்னால் விழுந்தேன். அது உங்களுடைய கார் என்று எனக்குத் தெரியாது." நடுநடுவில் சாரதி பக்கம் பார்த்துக் கொண்டே புடவைத் தலைப்பை விரலால் சுழற்றிக் கொண்டே சொன்னாள்.

பேண்ட் ஜேபியில் கைகளை நுழைத்துக் கொண்டு ரொம்ப நேரம் அவளையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"நான் சொன்னதில் உங்களுக்கு நம்பிக்கை வரவில்லை போல் தோன்றுகிறது. அம்மா மீது ஆணையாக சொல்கிறேன். நான் வீட்டை விட்டு வெளியேறியதில் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தவிர வேறு எதுவும் இல்லை." சின்னக் குழந்தையை போல் சொன்னாள்.

சாரதி சட்டென்று பேண்ட் ஜேபியிலிருந்து கையை எடுத்து ஜோதி பக்கம் நீட்டிக் கொண்டே, "கட்டாயம் நம்புகிறேன் ஜோதி! நீ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் நம்புகிறேன்" என்றான்.

சாரதியின் கையை ஜோதி பற்றிக் கொள்ளவில்லை. "நேற்று மாலை நீங்க என்னிடம் 'உனக்கு நான் இருக்கிறேன்' என்று சொன்னதை நான் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. சாவைத் தான் விரும்பினேன். தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத் துடன் வீட்டை விட்டு வெளியேறிய என்னை நீங்கள் பிழைக்க வைத்தீர்கள். ஆனால் தொடர்ந்து எப்படி வாழ்க்கையை நடத்துவது என்றுதான் புரியவில்லை. இந்த உலகில் எனக்கென்று யாருமே இல்லை. ஒரு முறை வெளியேறிய பிறகு மறுபடியும் சித்தியின் வீட்டில் காலடி எடுத்து வைக்க முடியாது." வேதனை கலந்த குரலில் சொன்னாள்.

சாரதி மெதுவாக கட்டில் மீது அமர்ந்து கொண்டு ஜோதியின் கையை பற்றிக் கொண்டான். "உன்னைக் காப்பாற்றியது நான் தான் என்பதால், வாழ வேண்டியதற்கு தேவையான வழியையும் நானே காட்டுகிறேன். பயப்படாதே" என்றான். அவன் மனதில் நிம்மதி பரவியிருந்தது.

"என்ன வழி?" கண் இமைக்காமல் சாரதியை பார்த்துக் கொண்டே கேட்டாள். சற்றுமுன் அவன் முகத்தில் தென்பட்ட எரிச்சல் கோபம் இப்பொ காணாமல் போய்விட்டன.

"இரண்டு வழிகளை சொல்கிறேன். அதில் முதலாவது. . . நீ சம்மதித்தால், என்னை உனக்கு பிடித்திருந்தால் உன் உடல் நிலை சற்று சீரடைந்ததும் உடனே ரிஜிஸ்டர் ஆபீசுக்கு போய் பதிவுத் திருமணம் செய்து கொள்வோம். இதில் உனக்கு விருப்பம் இல்லை என்றால் இரண்டாவது வழி. . . உன்னை நர்ஸிங் கோர்ஸுக்கு அனுப்புகிறேன். அது முடிந்ததும் வாழ்க்கையில் ஓரளவு நீ செட்டில் ஆகும் வரை என்னிடம் நர்ஸாக இருக்க வேண்டும். முதலாவதற்கு சம்மதிக்கவில்லை என்றால் இரண்டாவதற்கு நீ ஒப்புக்கொண்டது போல்தான்."



ஜோதியின் முகத்தில் வேகமாக இரத்தம் பாய்ந்தது. தன் காதுகளையே நம்பமுடியாதவள் போல் சாரதியின் கண்களையே பார்த்தாள்.

"என்ன? சித்தியிடமிருந்து தப்பி வந்தால் இன்னொரு சிறையில் மாட்டிக் கொண்டோமே என்று நினைக்கிறாயா?" புன்முறுவலுடன் கேட்டான்.

"இல்லை இல்லை" ஜோதிக்கு தான் கேட்டது கனாவ இல்லை நினைவா என்று புரியவில்லை.

"ஒப்புக் கொண்டாற்போல்தானா?" சாரதி வாட்சைப் பார்த்துக் கொண்டான். "இப்போ மணி ஒண்ணே முக்கால். காலை ஆறுமணிக்கு நான் வரும் போது உன் அபிப்பிராயத்தை சொல்லணும். அதுவரையில் நன்றாக யோசித்துக் கொள்" என்று சொல்லி விட்டு எழுந்து கொண்டான். "இனி நான் கிளம்புகிறேன். காலையில் விசாலி ஆண்டீக்கு போன் செய்கிறேன்."

"என்ன சொல்லப் போறீங்க?"

"நீ என்னிடம் வந்து விட்டாய் என்றும், நான் உனக்கு சாசுவதமாக பாதுகாப்பு தரவேண்டும் என்று விரும்புவதாக சொல்லப் போகிறேன்."

"அப்பொ கீதா?"

சாரதி ஒரு நிமிடம் மௌனமாக இருந்தான். பிறகு சொன்னான். "கீதாவைப் பற்றி நாம் கவலைப்பட தேவையில்லை. தாயும், மகளும், நினைத்தால் என்னை விட பெரிய இடத்து பையன் மாப்பிள்ளையாக கிடைப்பான். அந்தப் பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக ஒரு நாளும் நான் அவர்களிடம் சொன்னதில்லை. அவர்களுக்கு என்னைவிட என்னுடைய சொத்தின் மீது தான் அபிமானம் அதிகம். ஏதாவது விபரீதம் நடந்து என் நிலைமை தலைகீழாக மாறினால் என்னை கொஞ்சம் கூட மதிக்க மாட்டார்கள். அதுவும் எனக்கு தெரியும்."

"நாளைக்கு கீதாவின் பிறந்த நாள் விழாவில் திருமணத்திற்கு முகூர்த்தத்தை குறிக்கப்போவதாக சித்தி சொன்னாளே?" ஜோதி கேட்டாள்.

"என்னிடம் கேட்காமலே எல்லாத்தையும் முடிவு செய்து விட்டார்களா? அவர்கள் அப்படி செய்யக்கூடியவர்கள் தான். அவர்களுடைய எண்ணத்தை புரிந்து கொண்ட பிறகு அந்த வீட்டுக்கு போவதை குறைத்துக் கொண்டு விட்டேன்" என்றான்.

கழுத்து வரையில் போர்வையை போர்த்தி விட்டு கிளம்பப் போனவனின் கையை பலமாக பற்றிக் கொண்டாள். "இப்பொ நான் கேட்டதெல்லாம் உண்மைதானா? எனக்கும் எதிர்காலம் என்று ஒன்று இருக்கிறதா?"

"உனக்கென்ன குறைச்சல்? ராஜாத்தியை போல் வாழப்போகிறாய். இனிமேல் நீ என்னுடைய கண்ட்ரோலில் தான் இருக்கப் போகிறாய் நான் சொன்னது போல் நீ நடந்துக்க வேண்டும். அதற்காக உன் மனதை புரிந்துகொள்ளாமல் நான் எதையும் செய்ய மாட்டேன். உன் விருப்பு வெறுப்புகளை என்னிடம் தயங்காமல் வெளிப்படுத்தலாம். அந்த உரிமை எப்போதும் உனக்கு இருக்கும்."

ஜோதியின் விழிகளில் கிர்ரென்று நீர் சுழன்றது. சாரதியின் கையை மேலும் பலமாகப் பற்றிக் கொண்டு "அன்பு கலந்த அதிகாரம் எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அதை நான் நேசிக்கிறேன்" என்றாள்.

சாரதி பதில் சொல்வது போல் ஜோதியின் கையை எடுத்து முத்தம் பதித்தான்.

"என்னுடைய பொறுப்பு உங்களுக்கு என்றுமே எரிச்சல் தராத விதமாக நடந்து கொள்வேன்." வாக்கு தருவது போல் சாரதியின் கையில் தன் கையை பதித்தாள்.



"நீ எனக்கு எந்த வாக்குறுதியும் தர தேவையில்லை. சொன்ன பேச்சு கேட்டால் போதும். இப்பொ சொல்கிறேன். நிம்மதியாக தூங்கு." சிரித்துக் கொண்டே சொன்னான்.

"ஆனால் நீங்க கிளம்பிப் போனால் இதெல்லாம் மாயமாய் மறைந்து விடுமோ என்று பயமாக இருக்கிறது."

"ஒன்னும் ஆகாது. உன் மீது சத்தியம் செய்கிறேன் போதுமா." அவள் தலைமீது கையை வைத்துக் கொண்டே சொன்னான்.

"சரி. தூங்க முயற்சி செய்கிறேன்." கண்களை மூடிக்கொண்டாள். போர்வையை சரி செய்து கொண்டிருந்த சாரதி சட்டென்று குனிந்து ஜோதியின் கண்கள் மீதும், நெற்றியின் மீதும் முத்தம் பதித்து விட்டு "நான் கேட்காமலேயே கடவுள் உன்னை எனக்கு பரிசாக கொடுத்திருக்கிறார். வாழ்நாள் முழுவதும் உன்னை ஜாக்கிரதையாக பார்த்துக் கொள்வது என் கடமை" என்றான்.

ஜோதியின் இதழ்களில் திருப்தியுடன் கூடிய புன்முறுவல் மலர்ந்தது.

----------

பாசவலை



# பாசவலை

"பெண் எப்படி இருக்கிறாள்?" மகன் உள்ளே வரும் போதே பதட்டம் கலந்த குரலில் கேட்டாள். அவள் கண்களில் இனம் தெரியாத பயம் ஏதோ தென்பட்டுக் கொண்டு இருந்தது. வலுக்கட்டாயமாக அடக்க நினைத்தாலும் மனதில் இருந்த அவசரம், ஆத்திரம் குரலில் லேசாக வெளிப்பட்டு விட்டது.

"எனக்கு பெண்ணை பிடிக்கவில்லை." ராஜு நேராக டிரெஸ்ஸிங் டேபிள் அருகில் சென்று டையை அவிழ்த்துக் கொண்டே சொன்னான். நிலைக் கண்ணாடியில் அவன் உருவத்திற்கு பின்னால் தெரிந்த தாயின் முகம் சட்டென்று பிரசன்னமானதை, முடிச்சிட்டுக் கொண்டிருந்த புருவங்கள் பழைய நிலைக்கு திரும்பியதை அவன் உணராமல் இல்லை.

"ஏன் பிடிக்கவில்லை? மாநிறமாக இருந்தாளா?"

"சிவப்பாக இல்லை என்றாலும் நல்ல கலர் தான்."

"பார்க்க லட்சணமாக இல்லையா?"

"பரவாயில்லை."

"ரொம்ப பெருமனாக இருந்தாளா, இல்லை ரொம்பவும் ஒல்லியாக ஈர்குச்சியை போல் இருந்தாளா?"

"உயரத்திற்கு ஏற்ற பெருமனுடன் பாந்தமாக இருந்தாள்."

சாரதாவின் நெற்றி சுருங்கியது. மகனை சந்தேகமாக பார்த்தாள்.

"பின்னே ஏன் பிடிக்கவில்லை?" இந்த முறை சாரதாவின் குரல் திடமாக ஒலிக்கவில்லை.

"காரணம் கேட்டால் சொல்லத் தெரியவில்லை, ஏனோ மனதிற்கு பிடிக்கவில்லை. பிடிக்கவில்லை என்று அங்கேயே சொல்லி விட்டு வந்து விட்டேன். ராஜு நாற்காலியில் அமர்ந்து கொண்டு ஷூக்களை கழட்டிக் கொண்டே சொன்னான்.

"ஏன்? என்னவோ போல் இருக்கிறாயே?"

"கொஞ்சம் களைப்பாக இருக்கிறது. ஒரு கப் காபி ஸ்ட்ராங்காக கலந்து தாயேன்."

சாரதா எழுந்து உள்ளே சென்றாள் அது வரையில் அடக்கி வைத்திருந்த பெருமூச்சு ராஜுவின் இதயத்திலிருந்து வெளியேறியது. அந்தப் பெண்ணைப் பார்த்து விட்டு வந்த பிறகு வேதனை அலையாக எழும்பி அவன் மனதை துளைத்தெடுத்துக் கொண்டிருந்தது.

வேதனை அந்தப் பெண்ணை வேண்டாமென்று மறுத்தற்காக வந்தது இல்லை.

உண்மையில் கையை பிடித்து அழைத்து வந்து உட்கார வைத்த சுஜாதாவின் நினைப்புதான் அவனுக்கு அடிக்கடி வந்து கொண்டிருந்தது. ஹாலுக்கு வந்ததும் யதேச்சையாக தலையை உயர்த்திய சுஜாதா தன்னை பார்த்து திடுக்கிட்டதும், உடனே முகம் வெளிறி வேகமாய் உள்ளே போன காட்சி அவன் இதயத்தை இரண்டாக பிளப்பது போல் இருந்தது. தான் பார்க்கப் போகும் பெண்ணுடன் சுஜாதாவும் இருப்பாள் என்று அவன் கனவில் கூட நினைத்திருக்கவில்லை. சுஜாதா அங்கே இருந்தாலும் இல்லா விட்டாலும் பெண்ணை பிடிக்க வில்லை என்று தான் சொல்லி யிருப்பான். இந்த உண்மை சுஜாதாவுக்கு எப்படி புரியும்? யார் அவளிடம் தெரிவிக்கப் போகிறார்கள்? சுஜாதாவை தவிர தனக்கு வேறு எந்த பெண்ணும் தேவையில்லை என்றும், தாயை திருப்தி படுத்துவதற்காகத்தான் இந்தப் பெண் பார்க்கும் நிகழ்ச்சிக்கு சம்மதித்தான் என்று சுஜாதாவுக்கு யார் புரிய வைக்கப் போகிறார்கள்?



"திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமே எனக்கு இல்லை அப்படிச் செய்து கொள்வதாக இருந்தால் உன்னைத் தவிர வேறு பெண்ணையும் செய்து கொள்ள மாட்டேன், என்னை நம்பு."

பிரிந்து போவதற்கு முன் தங்களுக்கு இடையில் நடந்த உரையாடல் அது. அன்று தான் கொடுத்த வாக்குறுதி இப்போதும் தன் மனதில் பசுமையாக அப்படியே இருக்கிறதென்று சுஜாதாவிடம் இப்போ சொன்னாலும் நம்ப மாட்டாள். அன்று நடந்த நிகழ்ச்சி மறுபடியும் அவன் மனதில் திரைப்படமாக ஓடியது.

"திருமணம் வேண்டாம் என்று மறுப்பதற்குக் காரணம் என்னவென்று சொல்லு" சுஜாதா நேராகவே கேட்டு விட்டாள்.

"காரணம் என்று தனியாக எதுவும் இல்லை. எனக்கு விருப்பம் இல்லை. அவ்வளவு தான்" சுருக்கமாக சொன்னான் ராஜு.

அவனால் அதை விட வேறு என்ன பதில் முடியும்? மகன் திருமணம் செய்து கொள்வதில் தாய்க்கு விருப்பம் இல்லை என்றும், அதிலும் சுஜாதா அவனுக்கு மனைவியாக வருவதை கொஞ்சம் கூட விரும்ப மாட்டாள் என்று அவளிடமே எப்படி சொல்ல முடியும்? சுஜாதாவை உயிருக்கு மேலாக நேசித்தாலும் தாயைப் பற்றி அவளிடம் குறை சொல்வதை அவன் விரும்பவில்லை.

"விருப்பம் இல்லாமல் போவானேன்?"

"இது தான் காரணம் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை. என்னால் திருமணம் செய்து கொள்ள முடியாது."

"விளக்கமாக சொன்னால் புரிந்துகொள்ள முயற்சி செய்கிறேன்."

"அதனால் எந்த பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை."

இவருக்கும் நடுவில் மௌனம் நிலவியது. சுஜாதா முழங்காலில் கன்னத்தை பதித்துக் கொண்டு, பசும்புல்லை

பிடுங்கிக் கொண்டிருந்தாள். ராஜு இரண்டு கைகளையும் பின்னால் சாய்த்துக் கொண்டு, தொலைவில் விளயாடிக் கொண்டிருந்த குழந்தைகளையே பார்த்துக் கொண்டருந்தான்.

சுஜாதா சட்டென்று தலையை உயர்த்தி "திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லாத போது என்னிடம் இவ்வளவு நெருக்கமாக பழகுவானேன்?" என்று கேட்டாள்.

ஒரு நிமிடம் அவன் முகத்தை ஆழமாக நோக்கியவன், உடனே பார்வையைத் திருப்பிக் கொண்டு

"இதற்கு பதில் பிறகு சொல்கிறேன். இப்பொ வேண்டாம்" என்றான்.

"நீ என்னைக் கட்டாயம் திருமணம் செய்து கெள்ளப் போகிறாய் என்ற எண்ணத்தில் தான் உன்னிடம் இவ்வளவு உரிமையாக பழகினேன். அண்ணன் கொண்டு வந்த வரன்களை தைரியமாக மறுத்தேன். அண்ணி என்னை எச்சரித்துக் கொண்டு தான் இருந்ததாள். நான் தான் காதில் போட்டுக் கொள்ளாமல் இருந்து விட்டேன். இப்பொ அவர்கள் என்னை கேட்டால் என்ன பதில் சொல்லப் போகிறேன்?" தனக்குத் தானே கேட்டுக் கொள்வது போல் சுஜாதா சொன்னாள்.

"சுஜா!"

"என்னை மனைவியாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இல்லாதவன் முதலிலேயே என்னை ஏன் எச்சரிக்கவில்லை? அன்பாக இருப்பது போல் நடித்துக் கொண்டே என்னைத் தூண்டிவிட்டது ஏன்?"

"சுஜா! நான் சொல்வதைக் கேள்."

"இன்னும் என்ன கேட்க வேண்டும்? சொல்ல வேண்டியதை சொல்லி முடித்துவிட்ட பிறகு!"

சுஜாதா தொலைவில் அஸ்தமித்துக் கொண்டிருந்த சூரியனையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.



கீழ் உதட்டை பற்களால் அழுத்தி விழிகளில் சுழன்ற நீர் வெளியேறாமல் தடுத்துக் கொண்டிருந்தாள். மனதில் ஏற்பட்ட வேதனை அவள் கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. முடிச்சேறிய புருவங்களுடன் இடையில் கோபம் எட்டிப் பார்த்தது.

"சுஜா!" ராஜு கையை நீட்டி அவளை அருகில் இழுத்துக் கொள்ளப் போனான். சுஜாதா அவன் கையை உதறி விட்டாள்.

எதிர்பாராத இந்தச் செயலால் ராஜுவுக்கு கோபம் வந்தாலும் கட்டுப்படுத்திக் கொண்டான்.

"அண்ணாவுக்கும் மன்னிக்கும் என்ன பதில் சொல்வது என்று நீ கவலைப்பட வேண்டியதில்லை. என்னை விட சிறந்த பையனை உனக்காக நானே தேடுகிறேன்" என்றான்.

சரேலென்று தலையைத் திருப்பி அவன் பக்கம் பார்த்தாள்.

"உண்மையாகத்தான் சொல்கிறேன். என் பேச்சை நம்பு" என்றான்.

"அடடா! எவ்வளவு தியாகம் செய்கிறீர்கள்."

"விளையாட்டு பேச்சுகளுக்கு இது நேரம் இல்லை."

"நானே இதை உனக்கு நினைவுபடுத்துவதாக இருந்தேன்."

"எடக்கு மடக்காக பேசுவதால் எந்த பிரயோஜனமும் இல்லை சுஜா! என்னை புரிந்து கொள், நம் அறிமுகத்தை இவ்வளவு தூரத்திற்கு வளரவிட்டது என்னுடைய தவறுதான்."

சுஜாதா அடியுண்டவள் போல் பார்த்தாள். "நானும் அதைத்தான் கேட்கிறேன், இந்த விஷயம் இன்னிக்கு புதுசா உனக்கு நினைவுக்கு வருவானேன்?"

ராஜு பதில் சொல்லவில்லை.

சற்று தாமதித்து சுஜாதாவே மீண்டும் சொன்னாள். "எனக்கு புரிந்து விட்டது." என்ன என்பது போல் பார்த்தான்.

"உன் அம்மா உயிரோடு இருக்கும் வரையில் உனக்குத் திருமணம் ஆகாது."

"சுஜா!"

"உண்மையைத் தான் சொல்கிறேன். இந்த சந்தேகம் எனக்கு முதலிலிருந்தே இல்லாம் போகவில்லை. ஆனால் உன்னுடைய பேச்சு நீ என்னிடம் காட்டிய அன்பு... இவையெல்லாம் பார்த்த பிறகு ஓரளவுக்கு தைரியம் வந்தது. நீ என்னை மறுத்து விட்டாய் என்ற கோபத்திலோ, உன்னை அடைய முடியவில்லையே என்ற கவலையினாலோ நான் இதை சொல்லவில்லை. திருமணம் ஆனால் மகன் தன்னை விட்டு விலகிவிடுவானோ என்ற பயம் உன் அம்மாவுக்கு. தனித்தன்மை படைத்த மகன் மீது தாய்க்கு நம்பிக்கை இல்லாதது உண்மையிலேயே துரதிர்ஷ்டம்தான்."

"வாயை மூடு." பொய்யாக கோபித்துக் கொண்டான்.

"ஒரு விதமாக யோசித்துப் பார்த்தால் என் தலையெழுத்து நன்றாக இருப்பதால்தான் உனக்கு மனைவியாகும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லையோ?"

"போகட்டும், அப்படியே நினைத்துக்கொள், சுஜாதாவின் தோளைப் பற்றி அருகில் இழுத்துக் கொள்ள முயன்றான்."

சுஜாதாவின் கண்கள் சிவப்பாக மாறின.

கோபமும், அலட்சியமும் கலந்த குரலில் "திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லாத பெண்ணை தொடுவதற்கு உனக்கு வெட்கமாக இல்லயா?" என்றான்.

உடனே கையை விட்டு விட்டான், அவன் முகம் வெளிறிப் போய் விட்டது.

சுஜாதா எழுந்து உடைகளை உதறிக்கொண்டே "போகிறேன்" என்றாள்.

அவன் உட்கார்ந்த வாக்கிலேயே சுஜாதாவின் கையைப்பற்றிக் கொண்டு "போகும் முன் ஒரு விஷயத்தை மட்டும் கேட்டுக்



கொள். என் வாழ்க்கையில் திருமணம் என்று ஒன்று நடந்தால் அது உன்னுடன்தான். உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணும் எனக்கு தேவையில்லை, மனதளவில் என் அருகிலேயே எப்போதும் இருப்பாய்."

சுஜாதா அவன் கண்களுக்குள் எதையோ தேடுவது போல் ஆழமாக பார்த்து விட்டு பிறகு மெதுவாக கையை விடுவித்துக் கொண்டாள். "என்னை பொறுத்தவரை உடலும், உள்ளமும் வேறு வேறு இல்லை ராஜு, உடலை ஒருவரிடம், உள்ளத்தை வேறு ஒருவரிடம் என்னால் ஒப்படைக்க முடியாது. ஒரே சமத்தில் இரண்டு படகுகளில் என்னால் பயணிக்க முடியாது. வருகிறேன்" என்றாள்.

ராஜு ரொம்ப நேரம் அதே இடத்தில் உட்கார்ந்திருந்தான். சுஜாதாவுடன் பஸ்டாப் வரையில் போக வேண்டும் என்ற நினைவு கூட அவனுக்கு இருக்கவில்லை.

சுஜாதா கிளம்பிப் போய்விட்டாள். அவன் வாழ்க்கையிலிருந்து சாசுவதமாக விலகிவிட்டாள். தாய்க்காக வெளிநாட்டுக்கு செல்லும் வாய்ப்பை கைநழுவவிட்டது கூட அவன் இவ்வளவு தேனைப்படவில்லை. இன்று சுஜாதாவின் பிரிவால் வாழ்க்கையே சூனியமாக தோன்றியது. அன்று அப்படிச் சொன்னவன் இன்று பெண் பார்க்க போனது சுஜாதாவின் மனதில் எந்த விதமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்குமோ அவனையன்றி யாருக்கு தெரியும்?

"ராஜு! என்ன ஆச்சு? எப்படியோ இருக்கிறாயே?" காபி கோப்பையுடன் ஹாலுக்கு வந்த சாரதா மகன் இருந்த நிலையை பார்த்து பதட்டத்துடன் கேட்டாள்.

நாற்காலியில் பின்னால் சாய்ந்து கண்களுக்கு குறுக்கே கைகளை வைத்துக்கொண்டு சோர்வாக தென்பட்டான். ஷுக்களை கழட்டியவன், சாக்ஸுகளை கழட்டக்கூட தெம்பு இல்லாதவன் போல் அப்படியே சரிந்து உட்கார்ந்து இருந்தான்.

"ஒன்றும் இல்லை அம்மா."

"முகம் எல்லாம் வாடியிருக்கு, ஒன்றுமே இல்லை என்று சொல்கிறாயே." நெற்றியை தொட்டுப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"கொஞ்சம் களைப்பாக இருக்கு அவ்வளவுதான்."

"திருஷ்டி பட்டிருக்கோ என்னவோ, கொஞ்சம் இரு. சமையல் காரியை உப்பு, மிளகாயை சுத்தி போடச் சொல்கிறேன்." சாரதா உள்ளே சென்றாள்.

காபி கோப்பையை கையில் எடுத்துக் கொண்ட ராஜுவுக்கு சுஜதாவின் வெளிறிப்போன முகமே தென்பட்டுக் கொண்டிருந்தது. காபி குடிப்பதையும் மறந்தவனாய் ஏதோ நினைவுகளில் மூழ்கிவிட்டான்.

* * *

அந்த நிகழ்ச்சி நடந்து ஒரு வாரம் கழித்து ஒரு நாள் மாலை, அவன் அலுவலகத்திலிருந்து திரும்பிய போது விஜயா வந்திருந்தாள். வீடு முழுவதும் சந்தடியாக இருந்தது. விஜயாவின் குடும்பத்திற்கும், ராஜுவின் குடும்பத்திற்கும் இடையில் உறவை விட நட்பு அதிகமாக இருந்தது. ராஜுவை கணவனாக அடைய வேண்டும் என்று முயற்சி செய்து தோல்வி அடைந்தவர்களில் விஜயாவும் ஒருத்தி.

ஆறுமாதங்களே நிரம்பிய தன் மகனை தூக்கிக் கொண்டு வந்து காண்பித்தாள். "அத்தான்! எப்படி இருக்கிறான் என்னுடைய மகன்?" என்று பெருமை பொங்கும் குரலில் கேட்டாள்.

'உன்னுடைய ஜாடை கொஞ்சம் கூட இல்லை. அப்படியே அவனுடைய அப்பாதான். அதான் அழகாக இருக்கிறான்." குழந்தையின் கன்னத்தில் லேசாக தட்டிக் கொண்டே சொன்னான்.

ஒரு முறை சுற்றிலும் பார்வையை சுழற்றி சாரதாம்பாள் அந்த சுற்றுவட்டாரத்தில் இல்லை என்பதை உறுதி செய்து



கொண்ட பிறகு "அத்தான்! உன்னுடைய வயது என்ன?" **என்று** கேட்டாள்.

"இருபத்தி எட்டு, எதற்காக கேட்கிறாய்?"

"ஒன்றுமில்லை, இன்னும் எத்தனை நாள் பிரம்மசாரியாக இருக்கப் போகிறாய் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம்தான்."

"போதுமே நீயும். . . உன் பேச்சும்."

"சீதாராமய்யரோட மகளை பெண் பார்க்க போயிருந்தாய் போலிருக்கு!"

"ஆமாம், பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டேன்."

"எப்படி பிடிக்கும்? திருமணம் ஆகும் யோகம் உன் நெற்றியில் எழுதியிருந்தால்தானே?"

"விஜயா!"

"என் மீது கத்துவதால் எந்த பிரயோஜனமும் இல்லை. அவர்களிடம் போய் உன்னுடைய கோபத்தை வெளிப்படுத்து. உன்னைப் பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் தெரியுமா?"

"என்ன நினைக்கிறார்கள்?" அவனால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"நீ திருமண வாழ்க்கைக்கு லாயக்கு இல்லாதவனாம். உன்னிடம் ஏதோ குறை இருக்கிறதாம். அந்த விஷயம் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக ஒவ்வொரு பெண்ணாக பார்த்து விட்டு வந்து பிடிக்கவில்லை என்று தட்டிக் கழித்து வருகிறாயாம். தாயும், மகனுமாய் சேர்ந்து ஆடும் நாடகம் இது. இல்லாவிட்டால் இந்த தமிழ் நாட்டில் உனக்கு ஏற்ற பெண் கிடைக்காமல் போய் விடுவாளா? தங்கப் பதுமை போல் இருக்கும் அந்தப் பெண், அதான் சீதாராமய்யரின் மகளை உனக்கு பிடிக்கவில்லை என்று சொன்னால் எனக்கும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. போகட்டும், அந்தஸ்தில் குறைந்தவர்களோ என்றால் அதுவும் இல்லை."

கற்சிலையாக நின்று விட்ட ராஜு" எப்படியோ தேறிக் கொண்டான். அவன் முகம் கன்றி விட்டது.

"விஜயா! உனக்குக் கொஞ்சம் கூட மூளை இல்லை. வேலை வெட்டி அதை விட இல்லை. உன் கணவர் கஷ்டப்பட்டு சம்பாதித்துக் கொண்டு வந்தால் நீ இப்படி ஊர்வம்பு பேசிக்கொண்டு வீடு வீடாக சுற்றிக் கொண்டு இருக்கிறாய்." பற்களை கடித்துக் கொண்டு மனதில் ஏற்பட்ட கோபத்தை அடக்க முயன்றான்.

அதற்குள் சாரதா காபி போப்பைகளுடன் அறைக்குள் நுழைந்ததும் உரையாடல் நின்று விட்டது.

விஜயா சாரதாவிடமிருந்து காபி கோப்பையை வாங்கிக் கொண்டே, "என்ன அத்தை! பையனுக்குக் கல்யாணம் செய்து வைக்கும் எண்ணம் இல்லையா? இப்படியே போனால் அப்புறம் அறுபதாம் கல்யாணம்தான் செய்து கொள்ள வேண்டியிருக்கும்" என்றாள்.

"நான் என்ன செய்யட்டும் விஜயா? அவனுக்கு எந்தப் பெண்ணையும் பிடிக்கவில்லையாம்." கவலையுடன் சொன்னாள் சாரதா.

அந்த நிமிடம் அவளுடைய முகத்தை, கண்களில் தென்பட்ட வேதனையை பார்த்தவர்கள் தவறு முழுவதும் ராஜுவுடையதுதான் என்ற முடிவுக்கு வருவார்கள்.

"என்னைத் திருமணம் செய்து கொள்ள நீங்க சம்மதிக்கவில்லை என்ற கவலையோ என்னவோ." கடைக் கண்ணால் ராஜுவை பார்த்துக் கொண்டே குறும்பாக சொன்னாள்.

ராஜு சட்டென்று பார்வையை திருப்பிக் கொண்டான். தாய் தன் பக்கம் பதட்டத்துடன் பார்த்ததை அவன் கவனிக்காமல் இல்லை.



"ரொம்ப சாமர்த்தியமாக பேசுவதாக நினைப்பு போலும். என் வாழ்க்கையில் நான் செய்த நல்ல காரியம் ஒன்று இருக்கு என்றால், உன்னைத் திருமணம் செய்து கொள்ள சம்மதிக்காததுதான்" என்றான்.

"அத்தை. . . பார்த்தீர்களா? வீட்டுக்கு வந்த விருந்தாளியை எப்படி மரியாதை குறைவாக பேசுகிறான்?" விஜயா சாரதாவிடம் புகார் செய்தாள்.

"விருந்தாளியாக வந்திருக்கிறோம் என்று மறந்து விட்டு எல்லையை மீறினால் என்ன செய்வதாம்?" நீயே சொல்லும்மா? ராஜு விளையாட்டாக சொன்னான்.

உரையாடல் திசை திரும்பியதும் சாரதாவின் முகம் மலர்ந்தது.

* * *

விஜயா கிளம்பிப் போன மறுநாள் சாரதா மகனுடைய அறைக்கு வந்தாள். ஏதோ ஒரு முகவரியைச் சொல்லி போய் பெண்ணை பார்த்து விட்டு வரச் சொன்னாள்.

"வேண்டாம் அம்மா. நான் போகமாட்டேன்" என்றான்.

"ஏன்?"

"எனக்கு விருப்பம் இல்லை, நான் திருமணம் செய்து கொள்ள மாட்டேன்."

"எப்போதும் இப்படியே பிரம்மச்சாரியாக இருக்கப் போகிறாயா?"

"ஆமாம், கல்யாணம் செய்து கொள் என்று நீ மறுபடியும் தொல்லை செய்தால், அப்புறம் உன் கண்ணிலேயே படமாட்டேன்." பொய்யாக மிரட்டுவது போல் சொன்னான்.

சாரதா பதில் எதுவும் சொல்லவில்லை. அப்பொழுது தான் ஏதோ வேலை நினைவுக்கு வந்தது போல் அந்த இடத்தை விட்டு

போய் விட்டான். போகும் முன் தாயின் கண்களில் மின்னலை போல் தென்பட்ட திருப்தி அவன் பார்வையிலிருந்து தப்பவில்லை.

படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடிவிட்டு யோசனையில் மூழ்கிவிட்டான். சுஜாதாவை திருமணம் செய்து கொள்ள முடியாத பட்சத்தில் தனக்கு இனி திருமணம் எதற்கு? இப்பொழுது இல்லாவிட்டாலும், எதிர்காலத்திலாவது சுஜாதா இந்த உண்மையை புரிந்து கொள்வாள்.

ஆனால் சுஜாதா தன்னை விலகிப் போய்விடுவாள் என்ற நினைப்பே அவன் மனதில் இனம் புரியாத வேதனையை, கவலையை பரவச்செய்து கொண்டிருந்தது. நினைவு தெரிந்த நாள் முதலாக தாய்க்கு வேதனை தரும் எந்த காரியத்தையும் அவன் செய்தது இல்லை. இனிமேல் செய்யவும் மாட்டான். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக டாக்டருக்கு படிக்க வேண்டும் என்று கனவு கண்டவன், இஞ்ஜினியர் ஆனான். யூனிவர்சிடீயில் ஸ்காலர்ஷிப் கொடுத்து மேல்படிப்புக்கு வெளிநாட்டுக்கு அனுப்புவதாக சொன்ன போது வேண்டாமென்று மறுத்துவிட்டான். தாய் கவலைப்படுவாள் என்றும் மன அமைதி இல்லாமல் தவிப்பாள் என்றும், அவனுக்கு மிகவும் விருப்பமான கிரிக்கெட்டை விட்டு விட்டு பேட்மிண்டன் ஆடுவதை பழக்கப்படுத்திக் கொண்டான்.

எப்போ எந்த வேலை செய்யப் போனாலும் தாய்க்கு இது பிடிக்குமோ இல்லையோ என்றுதான் முதலில் நினைக்கத் தோன்றும். அதற்காக அவன் ஒரு நாளும் வருத்தப்பட்டது இல்லை.

திருமணம் செய்து கொண்டால் மனைவியின் மோகத்தில் தன்னை புறக்கணித்து விடுவானோ என்று தாய் கவலைப்படுவது ராஜுவால் புரிந்து கொள்ள முடிந்தது. அதனால் தான் அவளை திருப்திப் படுத்துவதற்காக பெண் பார்க்க போகும் முன் "போய்விட்டு வருகிறேன்" என்று தாயிடம் சொல்லும்போது ஒரு நிமிடம் இருவரின் பார்வையும் சந்தித்துக் கொள்ளும். தாயின்



கண்களில் தெரியும் பயம், தனக்கு விருப்பமானது தொலைந்து விடுமோ என்ற வேதனை அவனை தடுமாறச் செய்யும். அந்தப் பார்வை அவனுடைய மனதில் அழமாக பதிந்து விடும். இனம் புரியாத வேதனையில் தவிப்பான், வீட்டுக்கு திருப்பிவந்து "பெண்ணை பிடிக்கவில்லை" என்று சொன்னதும் தாயின் கண்களில் தெரியும் திருப்தியை பார்க்கும் வரையில் அவன் மனதிற்கு அமைதி இருக்காது.

சுஜாதா விஷயத்தில் அவன் தாயை அப்படியே மறந்து விட்டான். இந்த மயக்கம் எங்கே, எப்படி வந்ததோ! இப்பொ யோசித்து பார்த்தாலும் அவனுக்கு புரியவில்லை. தாயின் விருப்பு வெறுப்புகளைப் பற்றி கவலைப்படாமல் சுஜாதாவுடன் நட்பு ஏற்படுத்திக் கொண்டான்.

"திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் இல்லாத போது முதலிலேயே என்னை ஏன் தடுக்கவில்லை? அன்பாக இருப்பது போல் நடித்து என்னைத் தூண்டிவிட்டது ஏன்?" தீட்சண்யமாக இருந்த அந்த வார்த்தைகள் நினைவுக்கு வரும்போதெல்லாம் அவன் இதயம் சுக்கு நூறாகிக் கொண்டிருந்தது.

அன்பாக இருப்பது போல் நடித்தானா? சுஜாதா தன்னைப் பற்றி என்ன நினைத்து வருகிறாள்? பெண்களுடன் பழகி அவர்களுடைய வாழ்க்கையை சீரழித்து விட்டு போகும் கயவன் என்று நினைத்தாளா?

அப்படி அவள் நினைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. தவறு முழுவதும் தன்னுடையதுதான்.

அப்பாவியாக தன்னை நம்பிய சுஜாதாவுக்கு தீராத அநியாயம் செய்து விட்டான். அவளுடைய இதயத்தில் ஆறாத ரணத்தை ஏற்படுத்தி விட்டான். கடவுளே! பெற்றோர்களுக்கு ஒரே குழந்தையாக இருப்பதைவிட நரகம் வேறு இல்லையோ என்னவோ. அதிலும் இளமையிலேயே கணவனை இழந்து அவனுடன் சொல்ப காலம் வாழ்ந்த தாம்பத்திய வாழ்க்கையின் நினைவுச் சின்னமாக விளங்கும் தன் குழந்தையை வாழ்க்கையின்

பற்று கோலாக நினைக்கும் தன் தாயைப் போன்றவர்களைப் பற்றி தனியாகச் சொல்ல வேண்டியது இல்லை. ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டும் என்றால் அவனுடைய மூச்சு, உயிர், எல்லாமே ராஜூதான். எத்தனையோ முறை அவனிடம் சொல்லி இருக்கிறாள் "நான் உயிரோடு இருப்பதே உனக்காகத்தான். நீ இல்லை என்றால் விஷத்தை குடித்து என்றோ என்னுடைய வாழ்க்கையை முடித்துக் கொண்டு இருப்பேன்."

அந்த வார்த்தைகளை உடலில் உயிர் இருக்கும் வரை அவனால் மறக்க முடியாது. எத்தனை சின்ன விஷயமாக இருந்தாலும் சரி தாயின் மனதை நோகடிக்க அவனால் முடியாது.

இருபத்தி ஐந்து வயது நிரம்பி விட்டாலும் பத்து வயது சிறுவனை போல் அவன் காட்டும் அன்பு, அனுசரணை அவனுக்கு இதமாகத்தான் இருந்து வந்தது.

சின்ன வயதிலிருந்து தனக்கு எது வேண்டுமென்றாலும் அடுத்த நிமிடமே அதை வாங்கித் தந்து தன்னுடைய விருப்பங்களை நிறைவேற்றும் தாய், சுஜாதாவை மகன் விரும்புகிறான் என்று தெரிந்தும் ஏன் பட்டுக் கொள்ளாமல் இருக்கிறாள்? அப்படியும் பேச்சு வாக்கில் சுஜாதாவைப் பற்றி சொன்ன போது 'எனக்கு விருப்பம் இல்லை. அந்தப் பெண்ணுக்கு பிடிவாதம் அதிகம் போல் தோன்றுகிறது. அந்தப் பெண் தான் வேண்டும் என்று நீ முடிவு செய்து வீட்டுக்கு அழைத்து வந்தால் ஆரத்தி எடுத்து வரவேற்பதை தவிர எனக்கு வேறு வழியில்லை. நன்றாக யோசித்து விட்டு முடிவு செய்து கொள்" என்றாள்.

அவ்வளவு கச்சிதமாக, நேராக மறுப்பை வெளியிட்ட பிறகு அவனால் மேற்கொண்டு என்ன செய்ய முடியும்? அவனால் துணிந்து செயல்பட முடியவில்லை.

சீதாராமய்யரின் மகளை பெண் பார்த்துவிட்டு வந்த பிறகு ஒரு தடவை சுஜாதாவை தனிமையில் சந்தித்து இதையெல்லாம் விவரமாக தெரிவிக்க வேண்டுமென்று அவன் மனம் தவித்துக் கொண்டு இருந்தது. ஆனால் அவன் எத்தனை முயற்சி



செய்தாலும் சுஜாதாவைச் சந்திக்க முடியவில்லை. கூர்ந்து கவனித்த போது சுஜாதா வேண்டுமென்றே அவனை தவிர்ப்பது புரிந்தது. வேறு வழி இல்லாமல் மௌனமாக இருந்தான்.

* * *

கிட்டத்தட்ட ஒரு மாதம் கழித்து அலுவலக நண்பர்களுடன் மியூசிக் அகாடமியில் நாட்டிய நிகழ்ச்சியை பார்க்கப் போனான். அவர்கள் போகும் போது நிகழ்ச்சி ஆரம்பமாகி விட்டிருந்தது. இருட்டில் தடுமாறிக் கொண்டு எப்படியோ உட்கார்ந்து கொண்டார்கள். இடைவேளை வந்த போது விளக்குகள் எரிந்தன, பயத்துடன் யதேச்சையாக பார்வையை சுழற்றியவன் இரண்டு வரிசைகளுக்கு முன்னால் சுஜாதா உட்கார்ந்து இருந்ததை கவனித்தான். அவளுக்கு பக்கத்து நாற்காலியில் சிவப்பாக, சற்று குள்ளமாக இருந்தவன் விடாமல் பேசிக் கொண்டிருந்தான். சுஜாதா ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள். ராஜூவுக்கு ஏனோ திடீரென்று மூச்சு அடைப்பதுபோல் தோன்றியது. எப்படியோ நிகழ்ச்சி முடியும் வரையில் பொறுமையாக இருந்தான்.

நிகழ்ச்சி முடிந்ததும் மக்கள் கும்பல் கும்பலாக போய்க் கொண்டிருந்தார்கள். 'ஒரு நிமிடத்தில் வருகிறேன்" என்று நண்பர்களிடம் சொல்லி விட்டு கும்பலுக்கு இடையில் புகுந்து சுஜாதாவின் அருகில் சென்றான்.

'சுஜா!"

ராஜூவின் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு திரும்பிய சுஜாதா அலட்சியம் கலந்த புன்னகையை உதிர்த்தாள்.

'ஹலோ" என்று சொல்லி விட்டு வேகமாக நகர்ந்து விட்டாள். அவள் போக்கை பார்த்தால் ஏதோ தெருவில் தினமும் பார்க்கிற நபரை பெயரளவுக்கு குசலம் விசாரிப்பது போல் இருந்தது. ராஜூவுக்கு கோபத்தில் தாடை எலும்பு இறுகியது, கும்பலுக்கு நடுவில் எதுவும் செய்ய முடியாமல் அங்கேயே நின்று விட்டான்.

தொடர்ந்து இரண்டு மூன்று தடவை அதே போல் நடந்தது. குள்ளமாக இருந்தவன் நிழலை போல் எப்போதும் சுஜாதாவின் கூடவே இருந்தான். அவனை இதற்கு முன் எங்கேயோ பார்த்த நினைவு இருந்தாலும் சரியாக அடையாளம் தெரியவில்லை. யோசித்துப் பார்த்த போது திடீரென்று நினைவுக்கு வந்தது. அவனுடைய நண்பனின் தங்கைக்கு நிச்சயதார்த்தம் நடைபெறுவதாக இருந்தது. பையனைப் பற்றி விசாரித்த போது யாருமே நல்ல விதமாக சொல்லவில்லை. பிறகு நிச்சயதார்த்தத்தை நிறுத்தி விட்டார்கள்.

அவன் சுஜாதாவுக்கு எப்படி அறிமுகம் ஆனானோ தெரியவில்லை. அவனுடன் நட்பு வைத்துக் கொள்வது நல்லது இல்லை என்று சுஜாதாவை எச்சரிக்க வேண்டும். ராப்பகல் இதே எண்ணம் தான் அவனுக்கு.

ஒரு தடவை பூக்காரியிடம் மல்லிகை பூ வாங்கிக் கொண்டிருந்த சுஜாதாவை பார்த்தான். அவனும் கூட இருந்தான். ராஜு காரை நிறுத்தி சாலையைக் கடந்து வருவதற்குள் அவர்கள் பஸ் ஏறி போய் விட்டார்கள். இன்னொரு முறை துணிக் கடையில் பார்த்தான். ஆனால், தாயும் கூட இருந்ததால் அவர்களிடம் பேச முடியவில்லை. இன்னொரு முறை ஹோட்டலில் ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். ஒவ்வொரு முறையும் மாயமாக மறைந்து விடுகிறாள். தன்னால் சுஜாதாவை திருமணம் செய்து கொள்ள முடியாமல் போகலாம். ஆனால் அவளுடைய நலனில் தன்னைவிட வேறு யாருக்கு அக்கறை அதிகமாக இருக்கமுடியும்? அந்த உரிமையில் எப்படியாவது சுஜாதாவை சந்தித்து எச்சரிக்க வேண்டும் என்று முடிவு செய்தான்.

கடைசியில் ஒரு நாள் அவன் அலுவலகத்திலிருந்து திரும்பும் போது ரொம்ப நேரமாகிவிட்டது. கடற்கரை சாலையில் நிதானமாக டிரைவ் செய்துகொண்டிருந்தான், சில்லென்று வீசிய காற்று அவனுடைய களைப்பை போக்கிக் கொண்டிருந்தது. திடீரென்று அவனுடைய பார்வை ஓரிடத்தில் நிலைத்து விட்டது. அவளை காந்தம் போல் ஈர்க்கக் கூடிய சக்தி இந்த உலகத்தில்



ஒருத்தருக்குத்தான் இருக்கிறது. அதுதான் சுஜாதா. எவ்வளவு பெரிய கும்பலுக்கு இடையில் இருந்தாலும் அவனால் அவளை சுலபமாகக் கண்டுபிடிக்க முடியும்.

காரை ஓரமாக நிறுத்தி விட்டு நேராக அவர்களிடம் சென்றான். அவ்விருவரும் அந்தப் பக்கமாக நின்று தண்ணீரை பார்த்துக் கொண்டிருந்தார்கள். ராஜு பின் பக்கமாகச் சென்று சுஜாதாவின் தோளில் பலமாக கையை பதித்தான். வீலென்று கத்தப் போன சுஜாதா பின்னால் திரும்பி அவனைப் பார்த்ததும், கண்களை விரித்து அப்படியே நின்று விட்டாள்.

"உன்னுடன் பேச வேண்டும், என்னுடன் வா" என்றான்.

"உன்னிடம் எனக்கு எதுவும் பேச தேவையில்லை." தோளில் படிந்திருந்த கையை உதறித் தள்ளினாள்.

பக்கத்தில் இருந்தவன் குழப்பமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

"சுஜா!" ராஜுவின் குரலில் மட்டுமே இல்லை. கண்களிலும் கோபம் எட்டிப் பார்த்தது.

"உனக்கு தெரிந்தவரா?" பக்கத்தில் இருந்தவன் குழப்பம் விலகாமலேயே கேட்டான்.

"யாரோ மூளை சரியில்லாதவன்." அலட்சியமாக மொழிந்து விட்டு அவன் பக்கம் திரும்பினாள்.

ராஜு சுஜாதாவின் தோளைப் பற்றி தன் பக்கம் திருப்பிக் கொண்டே, "எங்கே அந்த வார்த்தையை என் முகத்தைப் பார்த்து சொல்லு" என்றான்.

சுஜாதா வார்த்தைகளுக்காக தேடிக் கொண்டிருந்தாள். அவள் கண்கள் ரோஷத்தினால் மின்னிக் கொண்டிருந்தது.

"நீ என்னுடன் வந்துதான் ஆகவேண்டும். "தோளைப்பற்றி கார் பக்கம் இழுத்துக் கொண்ட போனான்."

'ராமு!" பின்னால் திரும்பி இயலாமையுடன் அழைத்தாள்.

"என்ன இது? யார் நீங்க?" ராமு முன்னால் வந்து சுஜாதாவை தன் பக்கம் இழுக்கப் போனான்."

"மிஸ்டர்! நான் யாரென்று உனக்குத் தெரியாது. ஆனால் உன்னைப்பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். விடு அவனை." ராஜு அவன் மார்பின் மீது கையை வைத்து தள்ளினான். அந்த தாக்குதலில் பின்னால் விழப்போன ராமு எப்படியோ சமாளித்துக் கொண்டான். மறுபடியும் தலையை உயர்த்தி பார்க்கும்போது ராஜு சுஜாதாவை காருக்குள் தள்ளி கதவைச் சாத்தி ஸ்டார்ட் செய்து விட்டான்.

"சுஜா! உன்னிடம் பேச வேண்டும்." டிரைவ் செய்து கொண்டே ராஜு சொன்னான்.

"பேச வேண்டிய அவசியம் உனக்கு இருக்கிறதோ என்னவோ, கேட்க வேண்டிய தேவை எனக்கு இல்லை."

காரில் உட்கார்ந்த பிறகும் ராஜு சுஜாதாவின் கையை விடவில்லை. அவளே விடுவித்துக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

"அவன் நல்லவன் இல்லை சுஜா. இந்த விஷயம் உனக்கு தெரியுமா?"

"நீங்க சொல்வது முற்றிலும் தவறு. ரொம்ப ரொம்ப நல்லவன். முக்கியமாக என்னை உயிருக்கும் மேலாக விரும்புகிறான்."

ராஜுவின் கைகள் ஸ்டியரிங் மீது இறுகின. சுஜாதாவின் முகத்தை பார்க்க வேண்டும் என்று நினைத்தாலும் சாலையில் போக்கு வரத்து அதிகமாக இருந்ததால் சாத்தியப்படவில்லை.

"உங்க இருவருக்கும் எவ்வளவு நாளாக அறிமுகம்?"

"நேற்று வரை வெறும் அறிமுகமாக இருந்தது. இப்பொ நட்பாக மாறியிருக்கிறது."



"அவனுக்கு நீ எத்தனையாவது பெண் என்று தெரியுமா?"

"தெரியும்."

"தெரிந்த பிறகும் இப்படி சுற்றுகிறாயா?"

"அவனை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது."

"யாரை? அந்த மிருகத்தையா?" சிக்னலில் சிவப்பு விளக்கு எரிந்ததும் காரை நிறுத்தி சுஜாதா பக்கம் திரும்பினான்.

"என் வருங்கால கணவரைப் பற்றி நீ இப்படி பேசுவது மரியாதை இல்லை."

"என்ன?" ராஜுவின் முகத்தில் வேதனையும் கோபமும் கலந்திருந்தன.

சுஜாதா பதில் சொல்லவில்லை.

"இப்படி சொல்வதற்கு உனக்கு வெட்கமாக இல்லையா?" என்றான்.

"நீ என்னை மறுத்தபோதே என்னுடைய வெட்கம், மானம், காற்றில் பறந்துவிட்டது." ரோஷமாக பதில் வந்தது.

சிவப்பு விளக்கு மாறி பச்சை விளக்கு எரிந்தது. ஆனால் அதை கவனிக்கும் நிலையில் ராஜு இருக்கவில்லை. தனக்கு பின்னால் பதினைந்து இருபது கார்கள் வரிசையாக நிற்பதையும் அவன் உணரவில்லை.

"உண்மையிலேயே அவனைத் திருமணம் செய்து கொள்வதாக முடிவு செய்திருக்கிறாயா?"

"அண்ணாவுக்கு அவனை பிடித்துவிட்டது."

"நான் கேட்டது உன்னைப் பற்றி."

"என் விருப்பு வெறுப்புகளை உன்னிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை."

"சுஜா!!"

முன்னால் நின்ற கார் நகராததால் பின்னால் காத்திருந்த கார்களின் ஹாரன்கள் உச்சஸ்தாயில் அலறின. ட்ராபிக் கானிஸ்டபிள் விசில் ஊதிக் கொண்டே அருகில் வந்தார்.

"சாரி." பற்களைத் கடித்துக் கொண்டே மரியாதைக்காக மன்னிப்பு கேட்டு விட்டு காரை ஸ்டார்ட் செய்தான்.

"நான் அந்தப் பக்கம் போக வேண்டும்." சுஜாதா சொன்னாள்.

"அப்புறமாக போய் கொள்ளலாம்," ராஜு காரை நேராக தாங்கள் வழக்கமாக சந்தித்துக் கொள்ளும் இடத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தினான். சுஜாதா காரை விட்டு இறங்கவில்லை. இறங்கச் சொல்லி அவனும் கேட்கவில்லை. அடர்த்தியான கிளைகள் கொண்ட மரம் என்பதால் அந்த இடம் முழுவதும் இருளும், வெளிச்சமும் கலந்திருந்தது. தொலைவில் அங்குமி ங்குமாக மக்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். சற்று நேரம் கழித்து ராஜு கேட்டான். "சுஜா! உண்மையைச் சொல்லு. இந்தத் திருமணத்திற்கு நீ மனபூர்வமாக சம்மதிக்கிறாயா?"

"வேறு வழி? இந்த முறை அண்ணன் சொன்னதை மீறும் தைரியம் எனக்கு இல்லை."

"உன் அண்ணாவுக்கு அவனைப் பற்றி தெரியாமல் இருக்கலாம். நான் வந்து சொல்லட்டுமா?"

"அவமானப் பட வேண்டும் என்று விரும்பினால் வா. எனக்கு ஆட்சேபணை இல்லை."

"சுஜா! இந்தத் திருணம் நடைபெறக் கூடாது."

"வேறு வழியில்லை."

"ஏன்?"

"ஏற்கனவே உன்னுடன் பார்க், பீச் என்று சுற்றியதால் நடத்தை சரியில்லாதவள் என்று என்னைப் பலர் பலவிதமாகப்



பேசுகிறார்கள்." சுஜாதாவின் குரல் நடுங்கியது. ராஜு சுஜாதாவின் கையை மென்மையாக பற்றிக் கொண்டான். "ராமு எப்படிப்பட்டவனாக இருந்தாலும் இதை மட்டும் பொருட்படுத்த மாட்டான். அதுவும் எனக்குத் தெரியும். அவன் எங்கே மனதை மாற்றிக் கொண்டு விடுவானோ என்ற பயத்தில் அண்ணனே என்னை அவனுடன் வெளியில் அனுப்புகிறான்." கம்மிவிட்ட குரலில் சுஜாதா சொன்னபோது ராஜுவின் இதயம் இளகிவிட்டது.

"ஆனால் அவனுடன் உன் எதிர்காலம் மகிழ்ச்சியாக இருக்காது. இப்பொ ஏதோ ஒரு மோகத்தில் திருமணம் செய்து கொண்டாலும் பிறகு வேதனைப் படுவாயோ என்று தோன்றுகிறது."

"நான் விரும்பியவன் எனக்குக் கிடைக்காமல் போன பிறகு யாராக இருந்தாலும் எனக்கு ஒன்றுதான். ராமு போன்ற நபராக இருந்தால், அவனை நல்ல வழிக்கு மாற்றினோம் என்ற திருபதியாவது இருக்கும்." சுஜாதா கண்களைத் துடைத்துக் கொண்டே சொன்னாள்.

ராஜுவுக்கு தன்னுடைய கடமை என்னவென்று புரிந்தது. இந்த சமயத்தில் தான் தயங்கினால் சுஜாதாவின் வாழ்க்கை சீரழிவது நிச்சயம். இரண்டு நிமிடங்கள் கழித்து சுஜாதாவின் தோளைச் சுற்றி கையை போட்டு அருகில் இழுத்துக் கொண்டே "நான் உன்னை திருமணம் செய்து கொள்கிறேன்" என்றான்.

"நடக்காத காரியம்?" சட்டென்று சொன்னாள் சுஜாதா.

"ஏன்?"

"உன்னுடைய அம்மா இதை விரும்ப மாட்டாள், அவளுடைய விருப்பத்தை மறுக்கும் தைரியம் உனக்கு இல்லை."

ராஜு அதிர்ச்சி அடைந்தவன் போல் அப்படியே இருந்தான். பிறகு சுஜாதாவை மேலும் இறுக்கமாக அணைத்துக் கொண்டு, அவளுடைய தலையை மார்போடு சாய்த்துக் கொண்டான்.

"உண்மைதான் சுஜா! உன் விஷயத்தில் தவிர அம்மாவின் விருப்பத்தை மறுக்கும் தைரியம் எனக்கு இல்லை. நான் உன்னை

திருமணம் செய்து கொள்கிறேன். ராமு போன்றவர்களின் கைகளில் உன் வாழ்க்கை நாசமாகாமல் பார்த்துக் கொள்ளும் கடமை எனக்கு இருக்கிறது. அம்மாவை இந்த விஷயத்தில் எப்படியாவது சம்மதிக்க வைக்கிறேன். ஓ.கே. தானே."

இருவரின் கண்களும் சந்தித்துக் கொண்டன.

"சொல்லு சுஜா! உனக்கு சம்மதம் தானே. அம்மாவுக்கு விருப்பம் இல்லை என்றுதான் இவ்வளவு நாள் தயங்கினேன். நீங்க இருவரும் என்னை சமமாக நேசிப்பீர்கள். அந்த முறையில் இருவரும் சேர்ந்து என்னை நரகத்தில் தள்ளி விடுவீர்களோ என்ற பயம்தான் இத்தனை நாள் என்னை தடுத்து வந்தது."

"நான் எப்போதும் உங்க அம்மாவுக்கே விட்டுக் கொடுத்து விடுவேன்" ராஜுவின் தோளில் தலையை சாய்த்துக் கொண்டே சொன்னாள்.

"இன்னொரு விஷயமும் நினைவில் வைத்துக் கொள். அம்மாவின் முன்னிலையில் எப்போதும் உன்னுடைய அன்பை வெளிப்படுத்தக் கூடாது. சரிதானா."

சம்மதம் தெரிவிப்பது போல் தலையை அசைத்தாள்.

"அப்படியானால் நேராக உன் அண்ணாவிடம் போய் விஷயத்தை சொல்வோம்." சுஜாதாவின் குழல்கற்றைகளை ஒதுக்கி விட்டுக் கொண்டே சொன்னான்.

"வேண்டாம்! அண்ணன் விரும்ப மாட்டான். ராமுவுக்கு வாக்குறுதி கொடுத்து விட்டான். ராமுவின் பெற்றோர்கள் வீட்டுக்கு வந்து என்னை பார்த்து விட்டு போனார்கள்."

"அப்போ என்ன செய்யலாம்."

"நீங்களே சொல்லுங்க."

ராஜு யோசனையில் ஆழ்ந்து விட்டான். "உண்மைதான். உன் அண்ணாவும் ஒப்புக் கொள்ளமாட்டான். என்னுடைய



அம்மாவும் விருப்பப்பட மாட்டாள். யாருக்கும் தெரியாமல் பதிவுத் திருமணம் செய்து கொள்வோம்."

"வேண்டாம். முதலில் உங்க அம்மாவிடம் ஜாடை மாடையாக சொல்லி விடுங்கள். திடீரென்று செய்தியை கேட்டால் அந்த அதிர்ச்சியை தாங்க முடியாமல் போகலாம். ஏற்கனவே உங்க அம்மாவுக்கு நல்ல உடம்பு இல்லை" என்றாள்.

"வெரிகுட், எதிர்காலத்திலும் இதே போல் என்னிடம் சேர்ந்து நீயும் அம்மாவைப் பற்றி யோசித்து செயல்பட வேண்டும். சரிதானே" என்றான்.

"கட்டாயம்." வாக்குறுதி தருவது போல் சொன்னாள். ராஜு கணவனாக கிடைத்தால் அந்த திருப்தியில், அந்த நிம்மதியில் எது சொன்னாலும் செய்ய சுஜாதா தயாராக இருந்தாள்.

* * *

"அம்மா! நான் சுஜாதாவை திருமணம் செய்துகொள்வதாக முடிவு செய்திருக்கிறேன்." ராஜு சொன்னான்.

சாரதாவின் முகம் சட்டென்று களை இழந்தது.

"உன்னுடைய விருப்பம் என்று அன்னிக்கே சொன்னேனே." தீவிரமான குரலில் சொன்னாள்.

எப்போதும் போல் ராஜு தலையை குனிந்து கொண்டு போகவில்லை.

"இது வரையில் எந்த விஷயத்திலும் உன் பேச்சை மீறிய இல்லை. இனி மேலும் மீறமாட்டேன். இந்த ஒரு முறை என்னை மன்னித்து விடும்மா."

"இதில் நீ இந்த அளவுக்கு வருத்தப்பட வேண்டிய அவசியம் என்ன இருக்கு? இறகு முளைத்து விட்டது. பறந்து போக நினைக்கிறாய்."

"அம்மா!"

"சுஜாதாவை மட்டுமா, இன்னொரு இருள்துவம் பெண்ணோ, முஸ்லிம் பெண்ணோ கிடைத்தால் அவளையும் கல்யாணம் செய்துகொள். எனக்கென்ன வந்தது? நான் வேண்டாமென்று சொன்னதை செய்யத் துணிந்துவிட்டாய். உன் மீது பாசத்தை வளர்த்துக் கொண்டது என்னுடைய தவறுதான்."

மறு பேச்சுக்கு இடம் தராமல் சாரதா அங்கிருந்து போய் விட்டாள். விருப்பமின்மையை இதை விட நேராக சொல்ல முடியுமா?

மூன்றாவது நாள் சுஜாதாவை பதிவுத் திருமணம் செய்து கொண்டு வீட்டுக்கு அழைத்து வருவான் என்று சாரதா கனவில் கூட நினைக்கவில்லை. கோவிலில் தாலியை கட்டி, பதிவுத் திருமணத்தையும் முடித்துக் கொண்டு சுஜாதாவுடன் வீட்டுக்கு வந்தான். தம்பதிகளாக வந்து நின்ற அந்த இருவரையும் பார்த்த போது அதிர்ச்சியால் சாரதாவுக்கு வாயடைத்து போய் விட்டது.

"அம்மா! சுஜாதாவை எதுவும் சொல்லாதே. இந்த திருமணத்தால் அவளுக்கு பிறந்த வீடு இல்லாமல் போய் விட்டது."

"ஏன்? அவர்கள் இருக்கிற நிலைக்கு இதை விட பெரிய இடத்திலிருந்து வரன் வரும் என்று எதிர்பார்த்தார்களா?" சாரதா குத்தலாக சொன்னாள்.

ராஜு* தயக்கமாக சுஜாதா பக்கம் பார்த்தான். சுஜாதா மௌனமாக குனிந்து மாமியாருக்கு நமஸ்காரம் செய்தாள்.

"ராஜு*! உனக்கு பிடித்த பெண்ணை திருமணம் செய்து கொள் என்று முதலிலிருந்தே சொல்லி வருகிறேன். ஆனால்... இன்று... நீ இப்படி திருட்டுத்தனமாக தாலியை கட்டி பத்துபேருக்கு முன்னால் என்னை தலை குனிய வைப்பாய் என்று கனவிலும் நினைக்கவில்லை." சொல்லும் போதே சாரதாவுக்கு துக்கம் பொங்கி வந்தது. இரண்டு கைகளிலும் முகத்தை புதைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாள். தாயின் அருகில் சென்ற ராஜு* சுஜாதாவை அங்கிருந்து போகச் சொல்லி கண்ணாலேயே ஜாடை செய்தான்.



அன்று மாலையில் பார்ட்டி ஏற்பாடு செய்து தெரிந்தவர்களை, நண்பர்களை அழைத்து தன் மனைவியை அறிமுகப்படுத்தினான். தனக்கு இந்த விஷயம் கொஞ்சம் கூட தெரியாது என்றும், தெரிந்திருந்தால் தானே செலவு செய்து ஆடம்பரமாக திருமணத்தை நடத்தி இருப்பேன் என்றும் வந்தவர்களிடம் சாரதா அழுது புலம்பினாள். ஓரிருவர் "இந்தக் கால குழந்தைகளே இப்படித்தான். அவர்களுடைய சுகத்தைப் பற்றி தான் யோசிப்பார்கள். வளர்த்து ஆளாக்கிய பெற்றோர்களை நினைக்கவும் மாட்டார்கள்" என்று இரக்கப்பட்டார்கள்.

தீனமாக ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த சாரதாவின் முகத்தை பார்த்ததும் எல்லோரின் இதயமும் இளகி விட்டது. சிலர் அருகில் சென்று துக்கம் விசாரிப்பது போல் விசாரித்தார்கள்.

விஜயா மட்டும் யாரும் பார்க்காத போது சுஜாதாவின் அருகில் வந்து "உண்மையிலேயே உன்னுடைய துணிச்சலை பாராட்டத்தான் வேண்டும். ஆனால் ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள். அத்தான் உன்னுடைய வாழ்க்கையை சுவர்க்கமாக மாற்றினால், அத்தை நரகத்தை காட்டி, உன்னை பிழிய பிழிய அழவைப்பாள். இரண்டையும் எப்படி சமாளிக்கப் போகிறாயோ தெரியாது. இந்த வீட்டில் குடித்தனம் செய்ய வேண்டும் என்றால் ரொம்ப பொறுமையும், பிடிவாதமும் வேண்டும்" என்றாள்.

சுஜாதாவுக்கு ஏனோ முதல் பார்வையிலேயே விஜயாவை பிடித்து விட்டது. பார்ட்டியில் ரொம்ப நேரம் அவளிடமே பேசிக் கொண்டிருந்தாள். சின்ன வயதில் ராஜு* எப்படி வளர்ந்தான் என்று விஜயாவிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள்.

* * *

காதலர்கள் தம்பதிகளாகி விட்டார்கள். முதல் இரவு, எதிர் காலத்தில் சேர்ந்து வாழப்போகும் வாழ்க்கைக்கு அஸ்திவாரம் அமைப்பது போல் இனிய கனவுகளை நினைவாக மாற்றிக்

கொள்ளும் நாள். தனிமையில் இருவரும் ஒன்றாக கலந்து இன்ப வெள்ளத்தில் மூழ்க வேண்டிய இரவு.

ஆனால் தாய்க்கு நெஞ்சுவலி ஏற்பட்டதால் ராஜு கீழேயே இருந்து விட்டான். சுஜாதா தானும் துணையாக இருப்பதாக சொன்னபோது வேண்டாமென்று மறுத்து சாரதா அவளை வெளியில் அனுப்பிவிட்டாள்.

தனியாக ராஜுவின் அறையில் நின்றிருந்த சுஜாதாவுக்கு இந்த வீட்டை, இந்த மௌனத்தை, தாயை, மகனை பார்க்கும் போது ராஜுவை தான் திருமணம் செய்து கொண்டது சரியானதுதானா என்று நினைக்கத் தோன்றியது.

கிட்டத்தட்ட மணி இரண்டு அடிக்கும் போது கலைந்து போன தலைமுடியுடன், சோர்ந்து விட்ட முகத்துடன் ராஜு மாடிக்கு வந்தான்.

ஜன்னல் அருகில் நின்று கண் இமைக்காமல் வெளியில் பார்த்துக் கொண்டிருந்த சுஜாதாவைப் பார்த்ததும் அவன் மனதில் சுருக்கென்று தைத்தது.

"சுஜா!" மன்னிப்பு கேட்டுக் கொள்வது போல் பார்த்தான்.

"பரவாயில்லை, ரொம்ப களைத்துப் போயிருப்பது போல் தென்படுகிறீர்கள். உடைகளை மாற்றிக் கொள்ளுங்கள்." அருகில் வந்து ஷர்ட் பித்தான்களை கழட்டினாள்.

"தலையை ரொம்ப வலிக்கிறது." அப்படியே சுஜாதாவின் மடியில் படுத்துக் கொண்டான். நெற்றியை பிடித்து விட்டாள். சற்று நேரம் கழித்து "புழுக்கமாக இருக்கிறதே, ஃபேன் போடட்டுமா?" என்றாள்.

'ஊம்'. தூக்க மயக்கத்திலேயே பதில் அளித்தான்.

சுஜாதா எழுந்து கொள்ளப் போனாள். ராஜு அவளை எழுந்து கொள்ள விடாமல் கையால் தடுத்து விட்டான். "ஊஹூம், போகாதே. இப்படியே இரு. எனக்கு நிம்மதியாக இருக்கிறது"



என்றான். சுஜாதா பக்கத்திலேயே இருந்த புத்தகத்தை எடுத்து விசிறிக் கொண்டு இருந்தாள்.

பகல் முழுவதும் பார்ட்டி ஏற்பாடுகளில் அலைந்து திரிந்த ராஜு அடுத்த நிமிடம் ஆழமாக உறங்கி விட்டான். தன்னுடைய மடியில் தலையை வைத்து உறங்கிக் கொண்டிருந்த கணவனை பார்க்கும் போது சுஜாதாவுக்கு இது தங்களுடைய முதல் இரவு என்ற நினைப்பு வரவில்லை. எத்தனையோ ஆண்டுகள் குடித்தனம் நடத்தி வருவது போல் தோன்றியது. இனம் புரியாத அமைதி மனம் முழுவதும் பரவியது.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து ராஜுவுக்கு விழிப்பு வந்தது. திடுக்கிட்டு கண்களைத் திறந்து பார்த்தபோது சுஜாதாவின் மடியில் தலையை வைத்து படுத்திருப்பது புரிந்தது. சுஜாதா உட்கார்ந்த வாக்கிலேயே பின்னால் சாய்ந்து உறங்கிவிட்டாள். அவள் கையில் புத்தகம் அப்படியே இருந்தது. அவன் மனதில் அன்பு வெள்ளமாக பொங்கியது. எழுந்து சுஜாதாவை சரியாக படுக்கவைத்தான்.

"என்ன?" கண்களைத் திறக்காமலேயே சுஜாதா கேட்டாள்.

"தூங்கும் போது நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?"

"உங்களை விடவா?" புன்முறுவலுடன் அவன் கழுத்தைச் சுற்றிலும் கைகளை மாலையாக போட்டாள்.

மறுநாள் காலையில் புது தம்பதிகள் விழித்துக் கொண்ட போது நன்றாக விடிந்து விட்டது. ராஜு கீழே வந்த போது சமையல் அறையில் சாரதா ஆறிப் போன டிபனை முன்னால் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"அம்மா!" பதட்டத்துடன் அருகில் வந்தான்.

தலையை உயர்த்தி பார்த்த சாரதாவின் விழிகளில் நீர் நிறைந்து இருந்தது. என்னவோ போல் இருந்த தாயின் முகத்தை

பார்த்த போது ராஜுவுக்கு இதயத்தில் யாரோ கத்தியால் குத்தியது போல் இருந்தது.

* * *

நாட்கள் போகப் போக ராஜுவின் நிலைமை விபரீதமாக மாறியது. தாயின் அருகில் உட்கார்ந்து கொண்டால் மாடியில் சுஜாதா என்ன செய்கிறளோ என்று மனம் தவித்தது. சுஜாதாவின் அருகில் இருந்தாலும், அவளுடன் வெளியில் போனாலும் வீட்டில் தனியாக தாய் என்ன செய்கிறாளோ என்ற கவலையினால் அவனால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. அதன் விளைவாக அவனையும் அறியாமல் கவனக் குறைவாக இருக்கத் தொடங்கினான். இந்த கவனக் குறைவை தாயும், மனைவியும் தவறாக புரிந்து கொண்டு மேலும் தன் மீது கோபமாக இருக்கிறார்கள் என்று அவனுக்கு தெரியவில்லை.

தாயை, மனைவியை ஒன்றாக இணைக்க வேண்டும் என்று அவன் பலவிதமாக முயற்சி செய்தான். ஆனால் ஒவ்வொரு முறையும் தோல்வியைதான் சந்திக்க வேண்டியிருந்தது.

சுஜாதாவின் அருகில் படுத்திருந்த போது சிலசமயம் திடீரென்று விழிப்பு வரும். தன் கழுத்தைச் சுற்றிலும் பின்னியிருந்த சுஜாதாவின் கைகளை மெதுவாக விலக்கி விட்டு கிழே வந்து பார்ப்பான். தாய் உறங்கிக் கொண்டிருந்தால் மறுபடியும் மாடிக்கு போய் படுத்துக் கொள்வான். தாய் விழித்துக் கொண்டு எந்த ராமாயணமோ, பகவத்கீதையோ படித்துக் கொண்டிருந்தால் உள்ளே வந்து திருமணத்திற்கு முன் தான் பயன்படுத்தி வந்த கட்டில் மீது படுத்துக் கொள்வான்.

"என்ன ராஜு? ஏதாவது வேண்டுமா?" தாய் கேட்பாள்.

"ஒன்றும் வேண்டாம் அம்மா, இந்த கட்டில் மீது படுத்துக் கொண்டால் தான் நிம்மதியாக தூக்கம் வருகிறது" என்பான்.

அதைக் கேட்டதும் அந்தத் தாயின் முகம் மலர்ந்து விடும். திருப்தி நிறைந்த கண்களுடன் மகனை பார்ப்பாள்.



நள்ளிரவு வேளையில் விழித்துக் கொண்ட சுஜாதா பக்கத்தில் கணவன் இல்லாததை கண்டு பதட்டமடைவாள். மாமியாருக்கு உடல் நலம் சரியாக இல்லையோ! பாழாய் போன தூக்கம் என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டு கவலையுடன் கிழே ஓடிவருவாள். கிழே வந்து பார்த்தால் தாயும், மகனும் ஆழமாக நிம்மதியாக உறங்கிக் கொண்டு இருப்பார்கள். கோபமும், ரோஷமும் ஒன்றாக சேர்ந்து சுஜாதாவை நிலை தடுமாறச் செய்யும். விருட்டென்று திரும்பி மாடிக்கு போய் விடுவாள். ரொம்ப நேரம் உறக்கம் வராமல் தவிப்பாள்.

மறுநாள் முழுவதும் யாருடனும் பேசாமல் பழகாமல் மௌனமாக இருப்பாள். காரணத்தை புரிந்து கொண்ட ராஜு மனைவியின் கோபத்தை தணிக்க சினிமாவுக்கோ, டிராமாவுக்கோ அழைத்துக்கொண்டு போவான். மனைவியின் முகம் மலர்ந்து விட்டது என்ற சந்தோஷம் வீட்டுக்கு வந்து தாயைப் பார்த்ததும் மாயமாக மறைந்து விடும்.

* * *

சுஜாதாவின் அண்ணாவுக்கு வெளி ஊருக்கு மாற்றலாகி விட்டது. சுஜாதாவின் தாயும், அண்ணியும் வீட்டுக்கு வந்த போது சாரதா பட்டும் படாமல் பேசினாள். அவர்கள் ஊரை விட்டு போகும் போது விடை கொடுப்பதற்காக ராஜு, மனைவியுடன் ரயில் நிலையத்திற்குச் சென்றான். தங்கையை, தங்கையின் கணவனை பார்த்து சுஜாதாவின் அண்ணன் மகிழ்ச்சி அடைந்து விட்டார். நடந்ததை எல்லாம் மறந்து விட்டு தலை தீபாவளிக்கு ஊருக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்தார்.

ராஜு சுஜாதா வீடு திரும்பிய போது சாரதாவை பார்ப்பதற்காக டாக்டர் வந்திருந்தார்...

"என்னம்மா? என்ன ஆச்சு? டாக்டர் எதற்காக வந்திருக்கிறார்?" ராஜு பதட்டத்துடன் கேட்டான்.

"அவரை வரச் சொல்லி நான் தான் தகவல் அனுப்பினேன்."

"எதுக்கு?"

"இன்னும் எத்தனை நாட்களுக்கு நான் உயிரோடு இருக்கப் போகிறேன் என்று தெரிந்து கொள்வதற்கு."

"அம்மா!"

சந்தர்ப்பம் சரியாக இல்லை என்று உணர்ந்த டாக்டர் தன்னுடைய பேக்கை எடுத்துக் கொண்டு வெளியேறினார்.

"ராஜு! இப்போ உனக்கு என்னை விட முக்கியமானவர்கள், நெருங்கினவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். நான் கவலைப்பட வேண்டியது இல்லை."

"அத்தை! நீங்க... இப்படி..." சுஜாதா ஏதோ சொல்ல முயன்றாள்.

"நீ உடனே இங்கிருந்து போய்விடு." ராஜு மனைவியை கடிந்து கொண்டான். சிவந்து கன்றிவிட்ட முகத்துடன் ஒரு நிமிடம் மாமியாரையும், கணவனையும் மாறி மாறி பார்த்து விட்டு சுஜாதா அந்த இடத்தை விட்டு போய்விட்டாள்.

ராஜு தாயின் மடியில் தலைவைத்து படுத்துக் கொண்டான். "உன் வேதனை எனக்கு புரிகிறதம்மா. ஆனால் நீ என் பக்கத்திலிருந்து யோசிக்க ஏன் மறுக்கிறாய்? ஒரு கணவனாக, தனித்தன்மை படைத்த மனிதனாக எனக்கு சில கடமைகள் இருக்கும் இல்லயா? அவற்றை நிறைவேற்றாவிட்டால் உலகம் என்னை தூற்றும். எதற்கும் லாயக்கு இல்லாதவன் என்று உன் மகனை மற்றவர்கள் எள்ளி நகையாடினால் அதை உன்னால் பொறுத்துக் கொள்ள முடியுமா? நீயே சொல்லு" என்றான்.

சாரதா பதில் சொல்லவில்லை. நிசப்தமாக மகனின் தலையை வருடி விட்டுக் கொண்டிருந்தாள். அம்மாவின் கோபம் தணிந்து விட்டதென்று அவனால் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் உள்ளூர அவன் மனதில் லேசான எரிச்சல் பரவிக் கொண்டு இருந்தது.



சமீப காலமாக ராஜு வீட்டில் இருக்கும் நேரத்தை குறைத்துக் கொண்டான். அலுவலகத்தில் சில பொறுப்புகளை தானாகவே ஏற்றுக் கொண்டான். தினமும் கிளப்புக்கு போவதை வழக்கமாக வைத்துக் கொண்டான். மகன் வீட்டில் இருக்கும் வரையில் மருமகளுடன் சாதாரணமாக 'இருக்கும்' சாரதா அவன் கண் மறைவானதும் மறைமுகமான தாக்குதலை தொடங்குவாள். கணவனிடம் இதையெல்லாம் சொல்வதற்கு சுஜாதாவுக்கு தயக்கமாக இருந்தது. மேலும் தாயைப்பற்றி புகார் சொல்கிறாள் என்று ராஜு தன்னைத் தவறாகப் புரிந்து கொண்டால்? பலவிதமான எண்ணங்களுடன் சுஜாதா மனதிலேயே குமுறிக் கொண்டிருந்தாள். சுஜாதா கோபமாக இருந்தாலும், விட்டேற்றியாக இருந்தாலும் முன் போல் ராஜு அவளைச் சமாதானப்படுத்த முயற்சி செய்யவில்லை.

* * *

ஒரு நாள் சுஜாதா "நான் சில நாட்கள் பிறந்த வீட்டுக்கு போய் வரலாம் என்று நினைக்கிறேன்" என்றாள்.

"உன் இஷ்டம்." ராஜு பட்டுக் கொள்ளாமல் பதில் சொன்னான். தாயையும், மனைவியையும் இணைக்க முயற்சி செய்வது கானல் நீர் என்று அவனுக்குப் புரிந்து விட்டது.

"உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் நான் அங்கேயே இருந்து விடுகிறேன்."

ராஜு திடுக்கிட்டார் போல் பார்த்தான். "அப்படி என்றால்?"

"அண்ணா அங்கே போன பிறகு பணத்திற்கு ரொம்ப சிரமப்படுகிறான் என்று அம்மா கடிதம் எழுதியிருக்கிறாள். நான் அங்கே இருந்து கொண்டு ஏதாவது வேலையை தேடிக் கொள்கிறேன். அண்ணாவின் கடன்களில் பெரும் பகுதி என்னுடைய படிப்புக்காக வாங்கியது தான்."

தலையை உயர்த்தி ஒரு நிமிடம் பார்த்துவிட்டு ராஜு அருகில் வந்தான். "இந்த விஷயத்தை முன்னாடியே ஏன் என்னிடம் சொல்லவில்லை."

"சொல்வதால் பிரயோஜனம் என்ன?"

"எதுவும் இல்லையா?"

"இல்லை." தயங்காமல் வந்தது பதில்.

"காரணம் என்ன வென்று தெரிந்து கொள்ளலாமா?"

"அதை வாயால் வேறு சொல்ல வேண்டுமா? உங்களுக்குத் தெரியாதா?"

ராஜுவின் கண்களில் வேதனை எட்டிப் பார்த்தது. "நீ எப்போதும் ஒரு பக்கம் தான் யோசிப்பாய். அது என் துரதிர்ஷ்டம்" என்றான்.

"ஒருக்கால் உங்க அம்மாவுக்கு தெரியாமல் நீங்க உதவி செய்ய முன் வந்தாலும் அவர்கள் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு உங்களைப்போல் சொத்து சுகம் இல்லாமல் போகலாம். ஆனால் சுயகௌரவம் இருக்கிறது." தலையைக் குனிந்து கொண்டே சொன்னாள்.

ராஜுவின் முகம் மறுபடியும் பழைய நிலைக்கு திரும்பியது. போகப் போனவன் நின்று மேலும் அருகில் சென்று சுஜாதாவின் முகவாய்க் கட்டையை விரல்களால் உயர்த்தி கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்தான்.

"அந்த விஷயம் உன்னை விட எனக்கு முன்னாடியே தெரியும். அதனால் தான் அந்தக் குடும்பத்தில் பிறந்த உன்னை என் இதயத்தின் ராணியாக, இந்த வீட்டின் குலவிளக்காக ஏற்றுக் கொண்டேன்."

இருவரின் கண்களும் சந்தித்துக் கொண்டன. சிறிது நேரம் அப்படியே நின்று விட்டார்கள்.

சுஜாதாவின் முகம் களை இழந்தது ராஜுவின் கைகளை விலக்கி விட்டு அங்கிருந்து போகப் போனாள். "சுஜா!" பின்னாலிருந்து அழைத்தான்.



சுஜாதா நின்றாள். ஆனால் திரும்பிப் பார்க்கவில்லை.

"வேலைக்கு போவதைப் பற்றி கனவில் கூட நினைக்காதே. நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன் என்று மறந்து விடாதே. நான் உனக்கு மாதா மாதம் பணம் அனுப்புகிறேன். நீ அங்கே வீட்டு தேவைகளுக்கு தாராளமாக செலவு செய். அப்படிச் செய்தால் அவர்களும் வித்தியாசமாக நினைக்க மாட்டார்கள். சரிதானே."

சுஜாதா பதில் சொல்லாமல் போய் விட்டாள், மறுநாள் அவன் உண்மையிலேயே டிக்கெட் ரிசர்வ் செய்து கொண்டு வந்ததும் திகைத்து விட்டாள். தான் ஏதோ ஒரு பேச்சுக்கு சொன்னால் அவன் நிஜமாகவே அவளுடைய பயணத்திற்காக ஏற்பாடுகளை செய்து வருவதை பார்த்தபோது சுஜாதாவுக்கு ஒரு பக்கம் ரோஷமாகவும், மற்றொரு பக்கம் ஏமாற்றமாகவும் இருந்தது.

அன்று மாலை கிளம்ப வேண்டும். சுஜாதா மாமியாரிடம் சொல்லிக் கொண்டு மாடிக்கு வந்தாள்.

"போகிறேன்."

ராஜு கையில் இருந்த புத்தகத்தை மேஜை மீது வீசி விட்டு எழுந்து நின்று கொண்டான். சுஜாதா வாசற்படி அருகிலேயே நின்று விட்டாள் உள்ளே வரவில்லை.

"சுஜா! அருகில் வா." அழைத்தான்.

சுஜாதா நகரும் முயற்சி கூட செய்யவில்லை.

"வா சுஜா!" ஆணையிடுவது போல் சொன்னான்.

ஒரு நிமிடம் அவன் முகத்தைப் பார்த்தவள் மெதுவாக உள்ளே வந்தாள். சற்று தொலைவில் இருக்கும் போதே ஒரு அடி முன்னால் வைத்து அவளை அருகில் இழுத்து பலமாக அணைத்துக் கொண்டான். திடீரென்று அவன் இப்படி நடந்து

கொண்டது சுஜாதாவுக்கு முதலில் வியப்பை ஏற்படுத்தினாலும் அருவருப்பாக உணர்ந்து நெளிந்தாள். தான் இவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டு வேதனையுடன் அவனை பிரிந்து போய்க் கொண்டு இருக்கிறாள்' அந்த விஷயம் அவனுக்கு எறும்பு கடித்தாற் போல் கூட இல்லை, உடலைப் பற்றிய நினைப்பு தவிர.

வேதனையால் அவள் மனம் நொறுங்கியது அவன் கவனத்திற்கு வரவில்லை. ச்சி... ச்சி... இந்த ஆண்களே இப்படித்தானோ.

"சுஜா! இப்போ என் அணைப்பு ஏற்படுத்திய உணர்வு நீ எங்கே இருந்தாலும், என்ன செய்து கொண்டிருந்தாலும் நீ என்னுடையவள் என்று உனக்கு நினைவுபடுத்தும், மறுபடியும் இங்கே வரச் சொல்லி உன்னை எச்சரிக்கும்" என்றான்.

"நான் திரும்பி வரும் எண்ணத்துடன் போகவில்லை." சுஜாதா ரோஷமாக சொன்னாள்.

"பணம் ஏதாவது வேணுமா?" புன்முறுவல் மாறாமல் கேட்டான்.

"வேண்டாம்." தன்னுடைய பேச்சை அவன் அலட்சியப்படுத்தவில்லை என்பதை சுஜாதா உணராமல் இல்லை.

"அங்கே போய் என்ன செய்யப்போகிறாய்?"

"அதை தெரிந்து கொண்டு நீங்க என்ன செய்யப் போறீங்க?" அவன் கண்களில் மறுபடியும் குறும்பு எட்டிப் பார்த்தது.

சுஜாதா கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு அங்கேயே நின்றிருந்தாள்...

"சரி, கிளம்பு. ரயிலுக்கு நேரமாகி விடப் போகிறது."

எச்சரிப்பது போல் ராஜு சொன்னதும் சுஜாதாவின் இதயத்தில் தீ பற்றியது போல் இருந்தது கையை நீட்டி கன்னத்தில்



ஒரு அறை விடலாமா என்ற அளவுக்கு ஆவேசம் வந்தது. எப்படியோ தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். சுஜாதாவின் மனதில் நடக்கும் போராட்டத்தை அவன் புரிந்து கொள்ளாமல் இல்லை. ஆனால் தன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாமல் சுஜாதாவின் கையைப் பற்றி தன் கன்னத்தில், நெற்றியில், கண்கள் மீது பலமாக பதித்துக் கொண்டு விடுவித்தான். "போய் வா சுஜா! இன்னும் நீ இங்கேயே இருந்தால் என் மனம் கட்டுப்பாட்டை இழந்து விடும். கிளம்பு." திடீரென்று கம்மிய குரலில் அவன் சொன்னதை கேட்டதும் சுஜாதாவின் கோபம் பனிக் கட்டியாக கரைந்து விட்டது. அவன் மார்பில் முகத்தை புதைத்துக் கொண்டு 'நான் போக மாட்டேன், என்னை போகச் சொல்லாதீர்கள்' என்று கதறி அழ வேண்டும் போல் தோன்றியது.

ஆனால் ராஜு அதற்கு வாய்ப்பு தராமல் வேலைக்காரனை அழைத்து சுஜாதாவின் சூட்கேஸை எடுத்துப் போய் காரில் வைக்கச் சொன்னான்.

காரில் உட்கார்ந்திருந்த சுஜாதாவுக்கு வராண்டாவில் நின்று கொண்டிருந்த தாயை, மகனை பார்க்கும் போது இதயத்தில் ஈட்டி குத்தியது போல் வேதனையாக இருந்தது. இந்த வீட்டில் தான் காலடி எடுத்து வைத்தது முதல் நடந்ததையெல்லாம் நினைவு படுத்திக் கொண்டாள், ராஜுவை திருமணம் செய்து கொண்டு தான் பெரிய தவறு செய்து விட்டாள். அதை சரி செய்து கொள்ள ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. எவ்வளவு கஷ்டமாக இருந்தாலும் சரி, இந்த வீட்டுக்கு திரும்பி வரக் கூடாது. சுஜாதா திடமாக முடிவு செய்து கொண்டாள்.

அலுவலகத்தில் வேலை இருப்பதால் ஸ்டேஷனுக்கு வரவில்லை என்று ராஜு சொல்லி விட்டான். அசல் காரணம் அது இல்லை என்றும், காயப்பட்ட மனதுடன் ஊருக்கு போய்க் கொண்டிருந்த சுஜாதாவை பார்த்து என்ன செய்வது என்று புரியாமல் தவிக்கிறான் என்றும், ரயில் கிளம்பும் முன் சுஜாதாவின் விழிகளில் சுழலும் நீரை தாங்கிக் கொள்ளும் சக்தி இல்லாததால்

கற்சிலையாக வீட்டிலேயே தங்கி விட்டான் என்று சுஜாதாவுக்கு தெரியாது.

* * *

சுஜாதா கிளம்பிப் போன பிறகு மகனிடம் ஏற்பட்ட மாறுதல் சாரதாவின் பார்வையிலிருந்து தப்பவில்லை. வெளியில் சாதாரணமாகத்தான் இருந்தான். கலகலப்பாக பேசிக்கொண்டு தான் இருந்தான். ஆனால் கவனித்துப் பார்த்தால் அவன் கண்களில் அந்தச் சிரிப்பின் நிழல் கூட இருக்காது. திடீரென்று அவனையும் அறியாமல் ஏதோ யோசனையில் ஆழ்ந்து விடுவான், அவன் பார்வையில், செயலில் முன்பு இருந்த சுறுசுறுப்பு தென்படவில்லை. அவன் முகத்தில் கம்பீரம் திரையாக படிந்து விட்டிருந்தது.

அன்று இரவு சாப்பாடு ஆனபிறகு சாரதா மகனிடம், "மருமகளை வரச்சொல்லி கடிதம் எழுதக் கூடாதா?" என்று கேட்டாள்.

ராஜு பதில் சொல்லவில்லை.

"உங்க இருவரின் போக்கை பார்த்தால் ஏதோ கருத்து வேற்றுமை வந்திருப்பது போல் தோன்றுகிறது. அதற்குக் காரணம் நான் இல்லையே?" பயந்து கொண்டே கேட்டாள்.

"இல்லையம்மா. நீ ஏன் அப்படி நினைத்துக் கொள்கிறாய்?"

"என்னவோப்பா, காரணம் ஏதுவாக இருந்தாலும் உங்க இருவருக்கும் நடுவில் ஏதோ பிரச்சனை இருக்கிறது. கணவன், மனைவி என்ற பிறகு ஏதாவது பிரச்சனை இருந்து கொண்டேதான் இருக்கும், அதற்காக பிரிந்து போய் விடுவார்களா என்ன? அந்தப் பெண்ணைப் பற்றி நமக்கு தெரியாதது என்ன இருக்கு? நீ விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. என் பேச்சை கேள். வரச்சொல்லி நாளைக்கே கடிதம் எழுது."



32232

"வேண்டாம் அம்மா. இப்படி இருப்பதே என் மனதிற்கு நிம்மதியாக இருக்கிறது." தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டே சொன்னான்.

"உன் விருப்பம். வயதில் பெரியவளாக இருந்தும் எதுவும் சொல்லவில்லை என்ற பழிச்சொல் என் மீது வராமல் பார்த்துக் கொள். என்னால் அதைத் தாங்க முடியாது." சாரதாவின் குரலில் நிம்மதி வெளிப்பட்டது.

சுஜாதாவுக்கும், தனக்கும் எந்த விதமான கருத்து வேற்றுமையும் இல்லை என்றும், தாயின் மனதை திருப்திப் படுத்துவதற்காகத்தான் அவளை சில நாட்களுக்கு தொலைவாக அனுப்பி விட்டான் என்றும் அம்மாவுக்கு எப்படி தெரியும்? வேறு விஷயமாக இருந்தால் தானே சுஜாதாவிடம் மன்னிப்பு கேட்டிருப்பான். ஆனால் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்பது எப்படி? சில நாட்கள் விலகி இருந்தால் சுஜாதாவிடமும், தாயின் போக்கிலும் ஏதாவது மாறுதல் வரக்கூடும் என்ற எதிர்பார்ப்புடன் சுஜாதாவை வலுக்கட்டாயமாக பிறந்த வீட்டுக்கு அனுப்பி வைத்தான். அவனுடைய எதிர்பார்ப்பு பொய்த்து விட்டதோடு முற்றிலும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியது.

சுஜாதா ஊருக்கு போன பிறகு அவன் நினைத்தது போல் அவளிடமிருந்து கடிதம் வரவில்லை. முதல் தேதி வந்த பிறகு அவன் அவளுக்கு அனுப்பிய மணி ஆர்டரையும் திருப்பி அனுப்பிவிட்டாள்.

தானே கடிதம் எழுத வேண்டும் என்று நினைத்தான். ஆனால் அலுவலகத்தில் வேலை அதிகமாக இருந்ததாலும், தாயின் உடல் நலம் சரியில்லாததாலும் அந்த எண்ணத்தை செயல்படுத்த முடியவில்லை. தான் அனுப்பிய பணம் திரும்பி வந்ததும் ஆணாதிக்கிய மனப்பான்மையினால் எரிச்சலடைந்தான். திருமணம் செய்து கொள்ளும் முன் தன் வீட்டின் நிலையை பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறான். நன்றாக புரிந்து கொண்டது போல் தலையை அசைத்துவிட்டு, இப்போ இப்படி நடந்து கொண்டால் எப்படி? இருவருக்கும் இடையில் இருந்த அன்பின்

பிணைப்பு இந்த பிரச்சனையை தீர்க்காததோடு மேலும் அதிகரிக்கச் செய்தது. எப்படி யோசித்தாலும் தவறு எங்கே என்று அவனுக்குத் தெரியவில்லை. சுஜாதாவை திருமணம் செய்து கொண்டு தவறு செய்து விட்டோமோ என்ற எண்ணம் அவன் மனதில் ஆழமாக பதிந்து, வாழ்க்கையிடம் ஒரு விதமான விரக்தி ஏற்பட்டது.

ஊருக்கு போனதும் சுஜாதாவுக்கு ஜுரம் வந்து விட்டது. லேசில் குணமாகவில்லை. ஜுரமாக இருக்கும் போதே கணவனுக்குக் கடிதம் எழுதினாள். "எனக்கு உடல் நிலை சரியாக இல்லை. நீங்க உடனே வந்து என்னை அழைத்துப் போக வேண்டும் என்று விரும்புகிறேன். ரோஷத்துடன் வீட்டை விட்டு புறப்பட்டு வந்து நான்கு நாட்கள் கூட ஆக வில்லை அதற்குள் இப்படி எழுதுகிறாளே என்று என்னை ஏளனம் செய்யாதீர்கள். உங்களுடைய வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் கொண்டு காத்திருக்கிறேன்" என்று எழுதியிருந்தாள்.

சுஜாதா எழுதிய கடிதம் தாயின் கையில் கிடைத்து நேராக குப்பைக் கூடைக்கு போய்விட்டதென்று ராஜுவுக்கு தெரியாது. மகன் மீது அவள் வைத்திருந்த பாசம் இந்த அளவுக்கு தரம் தாழ்ந்து நடக்க வழிவகுக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. நேரில் பார்த்தாலும் அவன் நம்பியிருக்க மாட்டானோ என்னவோ.

தன்னுடைய கடிதம் கிடைத்த பிறகு கணவன் நேராக வராவிட்டாலும், அனுசரணையாக நாலுவரி எழுதாதது கண்டு சுஜாதாவுக்கு ஏமாற்றமாகவும். ரோஷமாகவும் இருந்தது. அந்த மனநிலையில் கணவன் அனுப்பிய மணி ஆர்டரை திருப்பி அனுப்பி விட்டாள். கணவன் மனைவிக்குள் ஏதோ பிரச்சனை என்று புரிந்து கொண்ட சுஜாதாவின் அண்ணாவும், தாயும் பலவிதமாக கேட்டும் சரியான பதில் கிடைக்காததால் மௌனமாக இருந்து விட்டார்கள்.

* * *



சாரதாவுக்கு அடிக்கடி உடல் நலம் சரியாக இல்லாமல் இருந்தது. சிறந்த மருத்துவர்கள் சிகிச்சை அளித்து கொண்டிருந்தார்கள். அப்படியிருந்தும் நாளுக்கு நாள் அவளுடைய நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது.

"எதற்காக கவலைப்படுகிறாய் அம்மா?" ராஜு ஒரு முறை கேட்டபோது "உன்வாழ்க்கை இப்படி வியர்த்தமாகிக் கொண்டு இருக்கிறதே என்ற கவலைதான்.'' பலவீனமான குரலில் சொன்னாள்.

ராஜுவின் முகம் சிவந்து விட்டது. "இப்போ எனக்கு என்ன ஆகிவிட்டது? நன்றாகத்தானே இருக்கிறேன்?"

''தாயின் கண்களையே மறைக்க முடியும் என்று நினைக்கிறாயா?"

ராஜு பதில் சொல்லமுடியாதவன் போல் அங்கிருந்து எழுந்து போய்விட்டான்.

காரணமே இல்லாமல் சுஜாதாவின் மீது அவனுக்குக் கோபம் வந்தது. திருமணமே செய்து கொள்ளாமல் இருந்திருந்தால் எந்த பிரச்சனையும் வந்திருக்காதோ. ஒரு பக்கம் தாயின் உடல் நலக்குறைவு. இன்னொரு பக்கம் சுஜாதாவின் அலட்சியம். இந்த இரண்டும் நினைவுக்கு வந்த போது அக்னியின் நடுவில் நிற்பது போல் உடலும் உள்ளமும் தகித்துக் கொண்டிருந்தன. ஆண்கள் எதற்காக சன்யாசம் வாங்கிக் கொள்வார்களோ அவனுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக புரியத் தொடங்கியது.

அன்று இரவு சாரதாவுக்கு நெஞ்சுவலி வந்தது. ராஜு தாயின் நெற்றியில் படிந்த வியர்வையை துணியால் ஒற்றிக் கொண்டு இருந்தான்.

"ராஜு! என்னுடைய உயிர் சீக்கிரமாக போனால் நல்லது."

"அப்படி சொல்லாதேம்மா."

''நான் போன பிறகாவது உனக்கு நல்ல வாழ்க்கை அமையாதா?"

"அம்மா!"

"தாய் பாசத்தில் உன்னை சிறைப்படுத்தி விட்டேன் என்பது உண்மைதான் ஆனால்... ஆனால்..."

"இப்போ அந்தப் பேச்செல்லாம் எதுக்கு?"

"உனக்கு இரண்டு வயது இருக்கும் போது உன்னுடைய அப்பா இறந்து விட்டார். உன் மீது உயிரை வைத்துக் கொண்டு வாழத் தொடங்கினேன்."

"இப்போ எனக்கு என்ன குறைச்சல்?"

"உன்னை உயிருக்கு மேலாக வளர்த்த நானே உன் வாழ்க்கைக்கு இடைஞ்சலாக மாறிவிட்டேன்."

"தயவு செய்து அப்படிச் சொல்லாதேம்மா."

"என்னை முழுவதுமாக சொல்ல விடு ராஜு, நீ சாதாரணமாக இருக்க முயற்சி செய்தாலும், முன்னால் இருந்த ராஜு இல்லை நீ. அதை என்னால் புரிந்து கொள்ள முடியாது என்று நினைத்தாயா?"

"அம்மா!!"

"நீ சந்தோஷமாக வாழவேண்டும் என்றால் நான் உயிரோடு இருக்கக் கூடாது, சாகவேண்டும். கடவுளுக்குத்தான் என் மீது கருணை இன்னும் பிறக்கவில்லை. நான் என்ன செய்யட்டும்? நீயே சொல்லு."

"அம்மா!" ராஜு சின்னக் குழந்தையைப் போல் கதறினான்.

"ராஜு! உன்னுடைய இருபத்தி எட்டு வயது வாழ்க்கையில் என்றாவது நீ அழுது இருக்கிறாயா? இதை எல்லாம் பார்த்துக் கொண்டு உயிரோடு இருப்பதைவிட..." மூச்சு இரைத்ததால் சாரதாவால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து சாரதா இறந்து விட்டாள். இன்னும் இரண்டு மணி நேரம் கழித்து உயிர் பிரிந்து விடும் என்ற போது



மகனை அருகில் அழைத்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பார்வை ரொம்ப வித்தியாசமாக மிகவும் விருப்பமான பொருளை சாசுவதமாக இழப்பதற்கு முன் பார்க்கும் பார்வை அது. அதில்கவலை,வேதனை, வருத்தம், எல்லாம் கலந்திருந்தது. எதுவும் செய்ய முடியாத இயலாமையில் ராஜு கனத்துப் போன இதயத்துடன் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். சாரதா மகனின் கையைப் பிடித்துக் கொண்டே உயிரை விட்டாள்.

டாக்டர் வந்து பார்த்து விட்டு ராஜுவின் தோளில் லேசாகத் தட்டினார். "எல்லாம் முடிந்து விட்டது .இனி எழுந்து கொள்ளுங்கள்" என்றார்.

சாரதாவின் இறுகிவிட்ட கைப்பிடியிலிருந்து ராஜுவின் கையை விடுவிப்பதற்கு டாக்டர் போராட வேண்டியிருந்தது.

* * *

"டாக்டர்! அம்மாவை நான் தான் கொன்று விட்டேன். என் காரணமாகத்தான் இவ்வளவு சீக்கிரமாக இறந்து விட்டாள்."

சின்னக் குழந்தையை போல் அழுது கொண்டிருந்த ராஜுவின் தோளில் டாக்டர் கையைப் பதித்தார்.

"ராஜு! நான் சொல்வதை கேள். உன் காரணமாக அவள் இறந்து போகவில்லை."

"இல்லை டாக்டர். என் காரணமாகத்தான் அவள் இறந்து போனாள். வயதான காலத்தில் அவள் நரகத்தில் வாழும் விதமாக செய்தது நான் தான்."

"இல்லை ராஜு, இந்த விஷயத்தை உனக்கு எப்போதும் தெரியப்படுத்த மாட்டேன் என்று உன் அம்மாவுக்கு வாக்குக் கொடுத்திருந்தேன். ஆனால் உன் போக்கை பார்த்தால் சொல்லாமல் இருப்பதற்கு என் மனம் ஒப்பவில்லை."

"என்ன விஷயம்?" ராஜு தலையை உயர்த்தி கேட்டான். அவன் கண்கள் சிவந்திருந்தன.

டாக்டர் ஒரு நிமிடம் தயங்கினார்.

"சொல்லுங்க டாக்டர். எதுவாக இருந்தாலும் என்னால் தாங்கிக் கொள்ள முடியும்."

"ராஜு! மருத்துவர் என்ற முறையில் இறந்து போனவர்களுக்கு கொடுத்த வாக்கை விட உயிரோடு இருப்பவர்களின் உடல் நலம் தான் எனக்கு முக்கியம். கொடுத்த வாக்கை மீறுவது பாவம் தான். ஆனாலும்..."

"ராஜு! உன் அம்மா இறந்து போவதற்கு நீ காரணம் இல்லை. அவளுக்கு கான்சர் நோய் இருந்தது. அதைக் கண்டுபிடிக்கும் போது நேரம் கடந்து விட்டது. ஆபரேஷன் செய்தாலும் பலன் இருக்காது என்ற நிலைமை. இந்த விஷயத்தை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று சொன்னேன். விஷயம் தெரிந்ததும் அதிர்ச்சி அடைந்த உன் அம்மா ரொம்ப நேரம் பேசவில்லை. பிறகு இந்த விஷயத்தை உன்னிடம் தெரிவிக்க வேண்டாம் என்று சொன்னாள். உன்னால் தாங்கிக் கொள்ளமுடியாது என்றும், பைத்தியம் ஆகி விடுவாய் என்றும் சொன்னாள். இப்போ மட்டுமே இல்லை எதிர்காலத்திலும் உன்னிடம் இந்த விஷயத்தை சொல்ல வேண்டாம் என்று என்னிடம் வாக்குறுதியை பெற்றுக் கொண்டாள். காரணம் என்னவென்று எனக்குத் தெரியாது. அவள் விரும்பியது போல் கொடுத்த வாக்கை காப்பாற்றியும் இருப்பேன். ஆனால் இந்த துக்கத்தால் நீ பைத்தியமாகி விடுவாயோ என்ற பயத்தினால் இந்த ரகசியத்தை வெளிப்படுத்தாமல் என்னால் இருக்க முடியவில்லை."

டாக்டர் சொன்னது காதில் விழுந்தாலும் குழப்பத்துடன் அப்படியே நின்றிருந்தான். பிறகு நெற்றியை பிடித்துக் கொண்டு நாற்காலியில் சரிந்தான்..

"டாக்டர்... அப்போ... அப்போ..." அவனால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.



"உங்களுடைய குடும்ப நண்பன் என்ற முறையில் இன்னொரு விஷயமும் உன்னிடம் சொல்ல வேண்டும். ராஜு! நீ என் மகனை போன்றவன். உனக்கும் உன் மனைவிக்கும் இடையே கருத்து வேற்றுமைகள் இருப்பதாகவும் அதனால் தான் அவள் பிறந்த வீட்டுக்கு போய் விட்டாள் என்றும் உன் அம்மாவின் மூலமாக கேள்விப்பட்டேன். அதான் தேவை இருக்கோ இல்லையோ இந்த விஷயத்தையும் உனக்குத் தெரியப்படுத்த கடமை பட்டிருக்கிறேன்."

"எதைப் பற்றி டாக்டர்?" பலவீனமான குரலில் கேட்டான்.

"ஒரு நாள் உன் அம்மாவுக்கு ஊசி போட நான் வந்திருந்த போது தபாலில் கடிதம் ஒன்று வந்தது. தபால்காரர் கொடுத்த கடிதத்தை நான் தான் பெற்றுக் கொண்டேன். நெஞ்சுவலியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த உன் அம்மா, 'யாரிடமிருந்து'?" என்று கேட்டாள்.

ஃப்ரம் அட்டரெஸை பார்த்து விட்டு "சுஜாதா. உங்க மருமகள் எழுதியிருக்கிறாள்" என்றேன். அத்தனை வேதனையிலும் உன் அம்மா எழுந்து உட்கார்ந்து, கவரை பிரித்து உள்ளே இருந்த கடிதத்தை படித்தாள். அதில் என்ன எழுதியிருந்ததோ தெரியாது. அவள் முகம் கறுத்துவிட்டது. உடனே கடிதத்தைக் கிழித்து என் கையில் கொடுத்து குப்பைக் கூடையில் போடச் சொன்னாள். விஷயம் என்னவென்று கேட்டேன். பதில் சொல்லாமல் இருந்து விட்டாள். இந்த நிகழ்ச்சி என் மனதில் ஆழமாக பதிந்துவிட்டது.

அத்தனை வேதனையிலும் ராஜுவுக்கு இறந்து போகும் முன் தாய் சுஜாதாவை பார்க்க வேண்டும் என்று சொல்லாதது ஏன் என்று புரிந்தது.

டாக்டர் மேலும் சொன்னார். "எப்படி இருந்தாலும் ஒன்று மட்டும் உண்மை. உன் அம்மா தன் உயிருக்கும் மேலாக உன்னை வளர்த்து ஆளாக்கினாள். சிலரின் பார்வையில் அது பைத்தியக்காரத்தனமாக தோன்றலாம். ஆனால் என்னால் அவளைப் புரிந்து கொள்ளமுடியும். எல்லா தாய்மார்களை போல் மகன் திருமணம் செய்து கொண்டு மனைவி மக்களுடன்

சந்தோஷமாக வாழவேண்டும் என்று அவள் ஏன் விரும்பவில்லை என்று எனக்கு தெரியும்."

"என்னாலும் புரிந்து கொள்ள முடியும் டாக்டர்." ராஜுவின் குரலில் வேதனை வெளிப்பட்டது.

* * *

செய்தியைக் கேட்டதும் எல்லோரையும் போல் விஜயாவும் ஓடி வந்தாள்.

"அத்தான்! சுஜாதா எங்கே?" வியப்புடன் கேட்டாள்.

"இல்லை, வரவில்லை."

"வரவில்லையா? ஏன்?"

"நான் தகவல் அனுப்பவில்லை."

"நன்றாக இருக்கு நீ சொல்வது! யாராவது இப்படி நடந்து கொள்வார்களா?" என்று கடிந்து கொண்டு உடனே அவசர தந்தி கொடுக்கச் செய்தாள்.

* * *

விஜயா கொடுத்த தந்தியை சுஜாதா கையெழுத்து போட்டு வாங்கினாள்.

"அட கடவுளே! இறந்து போய் நான்கு நாட்கள் கழித்து நமக்கு தகவல் கொடுத்து இருக்கிறார்கள். இது எந்த ஊர் நியாயம்?" சுஜாதாவின் தாய் பிலாக்கணம் பாடினாள்.

தந்தியை கையில் பிடித்துக் கொண்டு செயலிழந்து விட்டது போல் சுஜாதா உட்கார்ந்து விட்டாள். அவள் கண்களுக்கு முன், இருபது நாட்களுக்கு முன் தான் எழுதிய கடிதம் நிழலாடியது.

ராஜு,

கடவுள் மீது ஆணையாக நான் அந்த வீட்டுக்கு திரும்பக் கூடாது என்றுதான் முடிவு செய்திருந்தேன். ஆனால் கடவுள்



ரொம்ப கொடூரமானவர். என் தலையெழுத்தை மாற்றி எழுதிவிட்டார். நான் தாயாகப் போகிறேன். பிறக்கப் போகும் குழந்தைக்கு தந்தை எங்கே? என்று யாராவது கேட்டால் என்னால் என்ன பதில் சொல்லமுடியும்? அதான் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன். முடிந்தால் நீயே வந்து என்னை அழைத்துச் செல். உனக்கு நேரம் இல்லை என்றால் கடிதம் எழுது, நானே வருகிறேன்.

உன், சுஜாதா

கடிதத்தை தபாலில் சேர்க்கச் சொல்லி சுஜாதா அண்ணனிடம் கொடுத்த போது அவர் நூலகத்திலிருந்து எடுத்து வந்த புத்தகத்தின் நடுவில் வைத்து விட்டு, மறந்து போய் புத்தகத்தை திருப்பிக் கொடுத்து விட்டாரென்றும், அந்தக் கடிதம் ராஜுவுக்கு போய்ச் சேரவே இல்லை என்றும் சுஜாதாவுக்கு தெரியாது. அதனால் தந்தியை பார்த்து விட்டு அலட்சியமாக மேஜை மீது வைத்தாள்.

ஆனால் தாயும், அண்ணனும் சுஜாதாவை அதட்டி, கோபித்துக்கொண்டு, அவளையும் உடன் அழைத்துச் சென்றார்கள்.

சுஜாதா அங்கே போனபோது வீடு முழுவதும் உறவினர்கள், நண்பர்கள் நிரம்பியிருந்தார்கள். இவர்கள் உள்ளே நுழைந்ததும் விஜயா எதிரே வந்து சுஜாதாவின் கையைப் பற்றிக் கொண்டாள்.

"அப்பாடா! வந்துவிட்டாயா! நீ வரும் வரையில் உறவினர்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லி சமாளிப்பதற்குள் எனக்கு போதும் போதும் என்றாகி விட்டது. உனக்கு உடம்பு சரியாக இல்லை என்றும், ஆஸ்பத்திரியில் இருக்கிறாய் என்றும் பொய் சொல்ல வேண்டியதாயிற்று, இதென்ன? நான் உன்னை சரியாக கவனிக்கவே இல்லை. உண்மையிலேயே உடம்பு சரியாக இல்லையா? இவ்வளவு பலவீனமாக தென்படுகிறாயே?" வியப்புடன் கேட்டாள்.

சுஜாதா உயிரற்ற சிரிப்பை உதிர்த்தாள். விஜயா மேலும் சொன்னாள். "அத்தானை பார்க்கும் போது பயமாக இருக்கிறது.

சாப்பாடு, தூக்கம் எதுவும் இல்லை. நீ வந்து விட்டாய் இல்லையா!, இனி என் பொறுப்பு தீர்ந்தது. என் பையனுக்கு இரண்டு நாளாக ஜுரம். இடுப்பை விட்டு கீழே இறங்கவில்லை."

"அவர். . . எங்கே இருக்கிறார்?"

"அதோ, மாடி அறையில் இருக்கிறான். போய் பாரு. நான் காபி கலந்து எடுத்து வருகிறேன். "விஜயா சமையல் அறையை நோக்கிச் சென்றாள்.

சுஜாதா மெதுவாக மாடி அறைக்குச் சென்றாள். அவள் அன்று போகும் போது எந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தானோ, இன்றும் அதே நாற்காலியில் அமர்ந்திருந்தான். அன்று பின்னால் சாய்ந்து புத்தகத்தை படித்துக் கொண்டிருந்தான். இன்று முன்னால் மேஜை மீது கைகளை ஊன்றி முகத்தை புதைத்துக் கொண்டிருந்தான்.

சுஜாதாவுக்கு என்ன பேசுவது, எப்படி அழைப்பது என்று தெரியவில்லை, காலடிச் சத்தம் கேட்டதும் அவனே தலையை உயர்த்திப் பார்த்தான். சுஜாதாவுக்கு இதயமே வெடித்து விடும் போல் இருந்தது. அவன் கண்கள் சிவப்பு கோளங்களாக இருந்தன. தாடி வளர்ந்து, தலைமுடி கலைந்து முன் நெற்றியில் விழுந்து கொண்டிருந்தது.

"சுஜா!" தெளிவற்ற குரலில் அழைத்தான், அந்தக் குரலில், அந்த அழைப்பில் ஏதோ மந்திர சக்தி இருக்க வேண்டும். சுஜாதா ஒரே எட்டில் அவன் அருகில் சென்று அவன் தலையை மார்போடு அணைத்துக்கொண்டாள்.

"சுஜா! நீ. . . நீ வரமாட்டாய் என்று நினைத்தேன்," அவன் குரல் நடுங்கியது. ஹோவென்று கதறி அழுவானோ என்று சுஜாதா நினைத்தாள். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. அப்படி நடக்காமல் அவன் தன் உடலில் இருக்கும் சக்தி முழுவதையும் திரட்டிக் கொண்டு சமாளிக்க முயல்வது சுஜாதாவுக்குப் புரிந்தது.



மேஜையின் விளிம்பில் சாய்ந்து கொண்டு சற்று நேரம் அதே நிலையில் இருந்தாள். இருவரில் யாருமே பேசவில்லை. வார்த்தைகள் தேவையற்ற நிலை அது. காபி கோப்பையுடன் உள்ளே வரப் போன விஜயா தயங்கிக் கொண்டு வாசலிலேயே நின்று விட்டாள்.

"பரவாயில்லை. வா." சுஜாதா அழைத்தாள். ராஜு எழுந்து கொள்ளும் முயற்சி எதுவும் செய்யவில்லை. விஜயா காபி கோப்பையை மேஜை மீது வைத்துவிட்டு "வேலை இருக்கு" என்று சொல்லி விட்டுப் போனாள்.

"காபி குடிக்கிறீர்களா?" மென்மையான குரலில் சுஜாதா கேட்டாள்.

ராஜு தலையை உயர்த்தினான். "சுஜா! வேடிக்கை என்ன தெரியுமா? அம்மா மடியில் கிடைத்த அதே பாதுகாப்பு உணர்வை உன் அருகாமையில் உணருகிறேன். சற்று முன் வரையில் இந்த உலகமே எனக்கு சூனியமாக தோன்றியது. பைத்தியம் பிடித்து விடுமோ என்று பயந்துவிட்டேன்."

சுஜாதா கண்ணீர் நிறைந்த விழிகளுடன் காபி கோப்பையை நீட்டினாள். ராஜு காபியை குடித்து முடித்து விட்டு சுஜாதாவின் மடியில் தலையை வைத்து படுத்துக் கொண்டான்.

"சுஜா! அம்மா மீது உனக்குக் கோபம் இல்லையே."

"இல்லவே இல்லை. அத்தை எனக்குக் கொஞ்சம் கூட வாய்ப்பு தரவே இல்லை என்ற வருத்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனக்குக் கோபம் என்று ஏதாவது இருந்தால் அது உங்கள் மீதுதான்."

"நான் ரொம்ப சாதாரணமானவன் என்பதை மறந்து போய் அம்மா என்னை அளவுக்கு அதிகமாக நேசித்தாள். அவளுடைய பலவீனம் அதுதான்." தனக்குத் தானே பேசிக் கொள்வது போல் ராஜு சொன்னான்.

அன்று மாலை ராஜு கீழே இறங்கி வந்து எல்லோருடனும் பேசி, நடக்க வேண்டிய காரியங்களை கவனித்தான்.

* * *

பதிமூன்று நாட்கள் வேகமாக கழிந்து விட்டன. ராஜு பெரிய அளவில் தாயின் காரியங்களை செய்து முடித்தான். அவன் செய்த தான தர்மங்களை பார்த்து எல்லோரும் "தாய்க்கு ஏற்ற மகன்" என்று வாய் நிறைய சொன்னார்கள்.

"மருமகளும் ரொம்ப நல்லவள். கணவன் சொன்னதை வாயைத் திறக்காமல் செய்து முடிக்கிறாள்." என்று சுஜாதாவை புகழ்ந்தார்கள்.

"பாவம் சாரதா! கொடுத்து வைக்கவில்லை, மகனும், மருமகளும் குடித்தனம் செய்வதை கண்குளிர பார்க்க முடியாமல் போய்ச் சேர்ந்து விட்டாள்." - யாரோ இறக்கப்பட்டார்கள்.

வந்தவர்கள் எல்லோரும் போய் விட்டார்கள். சுஜாதாவின் அண்ணாவும், அம்மாவும் கிளம்பினார்கள். விஜயா அன்று மாலையில் ஊருக்குப் போவதாக இருந்தாள்.

சுஜாதா மாடி அறையில் விஜயாவின் மகனுக்கு உடைகளை மாற்றிக் கொண்டிருந்தாள்,ஹாலுக்கு வந்த விஜயா ஏதோ நினைவில் மூழ்கியவள் போல் சிலையாக அமர்ந்திருந்த ராஜுவை பார்த்து அருகில் வந்தாள்.

"கவலைப்படாதே அத்தான். உன் அம்மா உன்னைவிட்டு எங்கேயும் போக மாட்டாள். சின்னக் குழைந்தையாக மறுபடியும் இந்த வீட்டுக்கே வருவாள்." புன்முறுவலுடன் சொன்னாள்.

"எனக்குக் குழந்தைகள் தேவையில்லை."

"பிறந்தால்?"

"பிறக்கமாட்டார்கள். பிறக்காமல் கவனமாக இருப்பேன்."

விஜயா புடவைத் தலைப்பால் வாயை மூடிக் கொண்டு சிரித்தாள்.



"எதுக்கு சிரிக்கிறாய்?"

"குழந்தைகள் பிறக்க மாட்டார்கள் என்று இவ்வளவு கியாரண்டீ யாக சொல்கிறாயே அப்பொ உனக்கு இந்த விஷயம் தெரியாதா?"

"எந்த விஷயம்?"

"இன்னும் ஆறுமாதங்களில் நீ தந்தை ஆகப் போகிறாய் என்று."

"என்ன?"

சுஜாதாவை நீ சரியாக பார்க்கவில்லையா?

"பொய்! உரத்த குரலில் கத்தினான்."

"அட கடவுளே! நல்ல சமாசாரம் சொன்னால் கை நீட்டி அடிப்பாய் போலிருக்கே, உன் கத்தல் யார் காதிலேயாவது விழுந்தால் சும்மா சிரிக்கமாட்டார்களா?" பெரிய மனுஷியை போல் விஜயா கடிந்து கொண்டாள்.

விஜயாவை கோபமாக பார்த்துக் கொண்டிருந்த ராஜுவின் முகத்தில் பல உணர்ச்சிகள் தோன்றி மறைந்தன, விருட்டென்று திரும்பி மாடிக்கு வேகமாகப் போனான்.

சுஜாதா விஜயாவின் மகனுக்கு பவுடரை பூசிக் கொண்டிருந்தாள்.

"சுஜா!" ராஜுவின் குரல் சிம்ம கர்ஜனையாக ஒலித்தது.

திடுக்கிட்டு திரும்பி பார்த்த சுஜாதா, அவன் தோற்றத்தை கண்டு பயந்தவளாக "என்ன?" என்றாள்.

"நான்... நான் தந்தையாகப் போகிறேனா?"

சுஜாதா சட்டென்று பார்வையை திருப்பிக் கொண்டாள்.

"சொல்லு." அருகில் வந்து நின்றான். ஆமாம் என்பது போல் தலையை அசைத்தாள். கணவன் தன்னிடம் காட்டும் முரட்டுத்தனம் அவளுக்கு கோபத்தை வரவழைத்தது.

. சுஜாதா மௌனமாக குழந்தையின் கன்னத்தில் திருஷ்டிப் பொட்டை வைத்துக் கொண்டு இருந்தாள்.

திடீரென்று சுஜாதாவின் தோளைப் பற்றி தன் பக்கம் திருப்பிக் கொண்டே "வேண்டாம்" என்றான்.

"எது வேண்டாம்?"

"எனக்குக் குழந்தைகள் தேவையில்லை."

சுஜாதா கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

"உன்னிடம்தான் சொல்கிறேன்."

"நான் என்ன செய்யட்டும்?" அவன் போக்கை புரிந்து கொள்ள முடியாதவள் போல் குழப்பாக கேட்டாள்.

"வா... டாக்டரிடம் அழைத்துப் போகிறேன்."

"டாக்டரிடமா?"

"ஆமாம்." சுஜாதாவின் கையைப்பற்றிக் கொண்டே வேகமாக மாடிப்படி அருகில் இழுத்துக் கொண்டு வந்தான்.

"என்ன இது? யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள்?" கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ஆனால் எதையும் காதில் வாங்கிக் கொள்ளும் நிலையில் ராஜு இல்லை.

"உங்களுக்கு மூளை கலங்கிவிட்டதா என்ன?" சுஜாதா தன் உடலில் இருந்த சக்தி எல்லாம் திரட்டிக் கொண்டு ராஜுவின் பிடியிலிருந்து விடுபட முயன்றாள். ராஜு கையை விட்டான். திடீரென்று அவன் விட்டு விட்டதில் நிலை தடுமாறிய சுஜாதா சமாளிக்க முயன்றாள். ஆனால் நேரம் கடந்து விட்டது. என்ன நடக்கிறது என்று ராஜு புரிந்து கொள்வதற்குள் சுஜாதா வீலென்று



கத்திக் கொண்டே படிகளில் உருண்டுவிட்டாள். எல்லாம் கண் இமைக்கும் நேரத்திற்குள் நடந்து முடிந்து விட்டது.

சுஜாதாவின் கத்தலை கேட்டு சமையல்காரியும் விஜயாவும் ஓடி வந்தார்கள்.

"அத்தான்! என்ன காரியம் செய்துவிட்டாய்?" விஜயா கத்தினாள்.

ராஜு தூக்கத்தில் நடப்பவன் போல் கீழே இறங்கி வந்தான்.

"கடவுளே! நீ... நீ சுஜாதாவைக் கொன்று விட்டாய்." விஜயா உரத்த குரலில் அழுது கொண்டிருந்தாள்.

"முதலில் வழியை விடு." ராஜு விஜயாவை நகர்த்திவிட்டு நினைவற்றுக் கிடந்த சுஜாதாவை இரண்டு கைகளிலேயும் தூக்கிக் கொண்டான். விஜயா டாக்டருக்கு போன் செய்ய ஓடினாள்.

* * *

சாரி... ராஜு. ஆபரேஷன் தியேட்டரிலிருந்து வெளியில் வந்த லேடீ டாக்டர் ராஜுவின் அருகில் வந்தாள்.

"டாக்டர்!" ராஜுவின் குரல் நடுங்கியது.

"சுஜாதாவின் உயிருக்கு ஆபத்து எதுவும் இல்லை. ஆனால்..." தயங்குவது போல் நிறுத்திவிட்டாள்.

"சொல்லுங்க டாக்டர். கைகால் ஏதாவது ப்ராக்சர் ஆகி விட்டதா?"

"இல்லை. இல்லை."

ராஜு நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான்.

"பின்னே?"

"இந்த விபத்தில் அவள் தாயாகும் பாக்கியத்தை இழந்துவிட்டாள். உங்களுக்கு வேறு குழந்தைகளும் இல்லை.

ஐயாம் சாரி, என்னால் முடிந்ததை செய்தேன்." வருத்தம் தோய்ந்த குரலில் சொல்லிவிட்டு டாக்டர் போய் விட்டாள்.

அதைக் கேட்டதும் ராஜுவுக்கு முதலில் புரியாத நிம்மதி ஏதோ மனதில் பரவியது போல் தோன்றியது. அவன் கேட்டதும் தானாகவே நடந்து விட்டது. கடவுள் அருள் புரிந்து விட்டார். ஆனால் சுஜாதாவுக்கு என்ன பதில் சொல்வது?

தாய் பாசம் நினைவுக்கு வந்த போதெல்லாம் அவனையும் அறியாமல் அவன் மனதில் குழந்தைகள் என்றாலே பயமும் வெறுப்பும் ஏற்பட்டன. நான்கு நாட்கள் வாழ்ந்து விட்டு போகும் இந்த மனிதர்களுக்கு இவ்வளவு பந்த பாசங்கள் ஏன்? தந்தை ஆக வேண்டும் என்ற விருப்பம் அவனுக்கு இல்லை. ஆனால் சுஜாதா தாயாக வேண்டும் என்று ஆசைப்பட்டால் என்ன செய்வது?

"அட! இங்கேயே நிற்கறீங்களே, உங்க மனைவிக்கு நினைவு வந்து விட்டது. நீங்க போய் பேசலாம்." டாக்டர் திரும்பி வந்து கொண்டே சொன்னாள்." முன்னால் போகப் போன ராஜு சட்டென்று நின்றான். "டாக்டர்! அவளிடம் இந்த விஷயத்தை சொல்லி விட்டீர்களா?"

"இல்லை. இப்போ சொல்ல வேண்டாம். நான்கு நாட்கள் போன பிறகு சொல்லிக் கொள்ளலாம்" என்றாள்.

ராஜு சுஜாதா இருந்த அறையை நோக்கி நடந்தான்.

கதவைத் திறக்கும் முன் ராஜுவின் இதயம் வேகமாக துடித்தது. எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கதவைத் தள்ளினான். அறையின் நடுவில் கட்டில் மீது வெள்ளை உடைகளில், வெளிறிப் போன முகத்துடன், கண்களை மூடிய நிலையில் சுஜாதா படுத்திருந்தாள். ராஜு மெதுவாக சுஜாதாவின் அருகில் சென்றான். மூடியிருந்த சுஜாதாவின் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக வெளியேறிக் கொண்டிருந்தது.



"சுஜா!" பதட்டமாக அழைத்தான். கண்களைத் திறந்த சுஜாதா இரண்டு கைகளையும் நீட்டினாள்.

"சுஜா!" குனிந்து மனைவியின் தலையை மார்போடு அணைத்துக் கொண்டான். சுஜாதாவின் கண்களிலிருந்து வெளியேறிய கண்ணீர் அவனுடைய ஷர்ட்டை ஈரமாக்கியது.

"என்னை மன்னித்து விடு சுஜாதா." கம்மி விட்ட குரலில் சொன்னான். அவன் கை சுஜாதாவின் தலையை அன்புடன் வருடிவிட்டது.

அவளால் தாயாக முடியாது என்ற உண்மையை ராஜு அவளிடம் சொல்லவே இல்லை. மேலும் டாக்டர் மூலமாக இந்த விஷயம் அவளுக்கு தெரிந்து விடாமல் கவனமாக இருந்தான்.

## தாத்தாவும் பேரனும்

## தாத்தாவும் பேரனும்

அன்புள்ள தாத்தாவுக்கு,

நான் இங்கே சௌக்கியமாக இருக்கிறேன். என்னை கடத்தி வந்தவர்கள் ரொம்ப திறமைசாலிகள். இவர்களுக்கு பணத்தை தவிர வேறு எதுவும் முக்கியமில்லை. உன்னிடமிருந்து பணம் வரும் என்ற எதிர்பார்ப்பு இருக்கும் வரை என்னை நன்றாக பார்த்துக் கொள்வார்கள். பணம் வராது என்று தெரிந்தால் என்னை எப்படி சித்திரவதை செய்வார்களோ என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. நான் எங்கே இருக்கிறேன் என்று தெரியவில்லை. என்னை ஒரு அறையில் பூட்டி வைத்திருக்கிறார்கள். சின்ன ஜன்னல் வழியாக காற்றும், வெளிச்சமும் வருகிறது. நான் இந்த நரகத்தில் எத்தனை நாட்கள் இருக்க வேண்டுமோ தெரியவில்லை. பயத்தினால் என் உயிரே போய்விடும் போல் இருக்கிறது. இந்தக் கடிதம் கிடைத்ததும் பத்தாயிரம் ரூபாய் கேர் ஆஃப் போஸ்ட் மாஸ்டர், போஸ்ட் பாக்ஸ்-28க்கு மணி ஆர்டர் செய்யவும். பணம் கைக்கு வந்ததும் என்னை பத்திரமாக வீட்டுக்கு அனுப்பி வைப்பதாக சொல்கிறார்கள். நீ தயங்கினாலோ, தாமதம் செய்தாலோ என் நிலைமை மேலும் மோசமாகி விடும். தயவு செய்து உடனே பணத்தை அனுப்பி வைக்கவும்.

உன்னை மறுபடியும் பார்க்கவேண்டும் என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காத்திருக்கிறேன்.

இப்படிக்கு,
பிரியமுள்ள பேத்தி
ராதா

"முடிந்ததா?"என் எதிரில் நாற்காலியில் அமர்ந்து கொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த அண்ணன் கேட்டான்.

"முடிந்து விட்டது. ஆனால் இது போல் அந்தக் கிழவரை அழ வைப்பதால் உனக்கு என்ன கிடைக்கப் போகிறது?"

"அவருக்கு புத்தி, எனக்கு பணம். இரண்டும் கிடைக்கும்." நான் எழுதிக் கொடுத்த கடிதத்தை பார்வையிட்டுக் கொண்டே சொன்னான்.

"எனக்கு நம்பிக்கை இல்லை." சந்தேகமாகச் சொன்னேன்.

"பார்த்துக் கொண்டே இரு. அஹிம்சை முறையில் அவரிடமிருந்து பணத்தை கறப்பதற்கு இதுதான் என்னுடைய கடைசி முயற்சி."

"பலன் கிடைக்க வில்லை என்றால்?"

"சாம, தான, பேத, தண்டம் என்று கேள்விப்பட்டு இருக்கிறாய் இல்லையா, கடைசியில் சொன்னதை பயன்படுத்த வேண்டியிருக்கும்."

"தாத்தா மீது சின்ன துரும்பு கூட விழ நான் சம்மதிக்க மாட்டேன்" என்றேன்.

அண்ணா சிரித்தான். "அவர் மீது உனக்கு இருக்கும் அன்பில் ஆயிரத்தில் ஒரு பங்காவது அவருக்கு உன் மீது இருந்தால் கட்டாயம் நாம் கேட்ட பணத்தை அனுப்புவார். ஒருக்கால் பணம் அனுப்பவில்லை என்று வைத்துக் கொள். நீ ஆபத்தில் இருக்கிறாய் என்று தெரிந்தும் இரும்புப் பெட்டியை இறுக்கமாக பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார் என்றால், அவருக்கு என்ன நடந்தாலும் நீ வருத்தப்படத் தேவையில்லை." நான் எழுதிக் கொடுத்த கடிதத்தை கவரில் வைத்துக் கொண்டே சொன்னான்.

"என்னவோப்பா. பணம் கொடுத்தாலும், கொடுக்கா விட்டாலும், தாத்தா மீது எனக்கு இருக்கும் அன்பு கொஞ்சம் கூட மாறாது."



"அந்தக் கடவுளே வந்தாலும் உன்னை மாற்ற முடியாது." குறைப்பட்டுக் கொள்வது போல் சொன்னான்.

"பணத்தை கொடுக்கவில்லை என்றால் என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டேன். எதற்கும் அவனுடைய எண்ணத்தை தெரிந்து கொள்வது நல்லது இல்லையா?"

"என்ன... செய்யப் போகிறேனா? தாத்தாவை ஷூட் செய்து விட்டு பணத்தை எல்லாம் நாட்டின் நலநிதிக்கு டொனேட் செய்துவிட்டு ஜெயிலுக்குப் போவேன்."

"ரொம்ப உத்தமமான காரியம்தான்."

"பார்த்துக் கொண்டே இரு." பெருமையுடன் சொன்னான்.

தாத்தா மீது அவனுக்கு கோபம் இருப்பது நியாயம் தான். ஆனால் என்ன செய்ய முடியும்? தாத்தாவுக்கு பணம் தான் உயிர். அண்ணனுக்கோ தாய் நாடுதான் மூச்சு. நாட்டின் நலநிதிக்காக பத்தாயிரம் ரூபாய் நன்கொடை தரச்சொல்லி தாத்தாவிடம் கேட்டான்.

"பத்தாயிரமா? என் உடலில் உயிர் இருக்கும் வரை ஒரு ரூபாய் கூட தரமாட்டேன், இது ஒண்ணும் பரம்பரை சொத்து இல்லை, கஷ்டப்பட்டு, உழைத்து நானாக சேர்த்து வைத்த சொத்து."

"கஷ்டப்பட்டு உழைத்தாயா? அந்த வார்த்தையைச் சொல்ல வெட்கமாக இல்லை? வீட்டிலேயே இருந்து கொண்டு சுண்டுவிரலை கூட அசைக்காமல் பணத்தை வட்டிக்குக் கொடுத்து சேர்த்த சொத்து இது. வட்டி கொடுக்க முடியாதவர்களின் சொத்தை ஏலம் போட வைத்து குறுக்கு வழியில் அநியாயமாக சம்பாதித்த சொத்து தானே?"

"ஆமாண்டா. ஆமாம். குறுக்கு வழியில் சம்பாதித்த சொத்து தான் இது. இதிலிருந்து நலநிதிக்கு நன்கொடை கொடுத்தால் அதுவும் விளங்காமல் போய்விடும். போதுமா!" தாத்தா கத்தினார்.

தான் சொன்ன வார்த்தை தன்னையே திருப்பி தாக்கியதும் அண்ணாவுக்குக் கோபம் வந்து விட்டது. கன்னா பின்னாவென்று கத்திவிட்டு வெளியில் போய்விட்டான்.

"ஒரு ரூபாய் சம்பாதிக்க துப்பு இல்லை. பெரிதாக சொல்ல வந்து விட்டான்."

அண்ணன் கிளம்பிப் போய் அரைமணி வரையில் தாத்தா முணு முணுத்துக் கொண்டே இருந்தார் சின்ன வயதிலிருந்தே தாத்தாவுக்கும், பேரனுக்கும் கொஞ்சம் கூட ஒத்துப் போகாது. ஒருவர் கிழக்கு என்றால் மற்றொருவர் மேற்கு. இந்த இருவருடன் பிணைந்திருந்த என்னுடைய வாழ்க்கை பல முறை கடினமான சோதனைகளுக்குள்ளானது.

சின்ன வயதிலேயே எங்களுடைய பெற்றோர் இறந்து போய் விட்டார்கள். அம்மா பக்கத்து உறவுக்காரர்கள் யாராவது எங்களுடைய பொறுப்பை ஏற்றுக் கொள்வார்கள் என்று தாத்தா ரொம்ப எதிர்பார்ப்புடன் இருந்தார். அவருடைய எதிர்பார்ப்பு பொய்த்து விட்டது. சின்ன வயதிலிருந்து எங்களை சட்ட திட்டங்களுடன் வளர்க்கவேண்டும் என்று தாத்தா ரொம்ப முயற்சி செய்தார். அண்ணன் ஒருநாளும் அவர் சொன்ன பேச்சை கேட்காததோடு எதிர்த்து பேசுவான். அவனுக்கு ஐஸ்க்ரீம் என்றால் ரொம்ப பிடிக்கும். தாத்தாவிடம் காசு கேட்டால் தர மாட்டார். "ஐஸ்க்ரீம் வேண்டாம் ஜலதோஷம் பிடிக்கும், பொரியை சாப்பிடு" என்பார்.

"உன்னை போன்ற கிழங்களுக்குதான் ஜலதோஷம் பிடிக்கும். எங்களுக்கு ஒண்ணும் ஆகாது. காசை கொடு"என்பான்.

"திருட்டு ராஸ்கெல். எனக்கு நோய் வரவேண்டும் என்று வேண்டுகிறாயா?" என்று கத்திக் கொண்டே வெள்ளி பூண் போட்ட கைத்தடியை எடுத்து ஓங்கி அடிப்பது போல் பாவனை செய்வார். அண்ணன் கைக்கு அகப்பட்ட பொருளை எடுத்து அவர் மீது எரியத் தொடங்குவான். அவ்வளவுதான், இருவருக்கும் இடையில் கைகலப்பு நிகழும். வயதில் பெரியவர் என்பதால் இறுதி வெற்றி



அவருக்குத் தான் கிடைத்தது. ஆனால் அண்ணாவும் லேசுப்பட்டவன் இல்லை என்று ஆக்கிவிட்டான்.

தாத்தா அண்ணாவின் காதைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் அறையில் தள்ளி கதவைச் சாத்தி விட்டார். சமையல்காரன் நாயரை அழைத்து, "இந்தப் பயலுக்கு நான் சொல்லும் வரையில் சாப்பாடு போடாதே" என்று சொன்னார்.

அறையில் அடைபட்டு விட்ட கோபம் அண்ணாவுக்கு. கதவை படபடவென்று தட்டிக்கொண்டே தாத்தாவின் குரலில் "நாயர்! கதவைத் திறந்து விடு. இல்லாவிட்டால் இங்கேயே தூக்கு போட்டுக்கொண்டு பேயாக மாறி உன் இரண்டு கண்களையும் நோண்டி விடுவேன். கதவைத் திறக்கப் போகிறாயா இல்லையா?" என்று கத்தி ரகளை செய்தான்.

ஒரு பக்கம் தாத்தா அண்ணனை அறையில் தள்ளி கதவைச் சாத்தி விட்டாரே என்று அவர் மீது கோபம் கோபமாக வரும். இன்னொரு பக்கம் வயதில் பெரியவர் என்ற மரியாதை கூட இல்லாமல் அண்ணா அவரை வாய்க்கு வந்தபடி பேசுவதை கேட்கும் போது வேதனையாகவும் இருக்கும். இரு விரோதிகளுக்கு நடுவில் நடுவராக நடந்து கொள்ள வேண்டிய நிர்பந்தம் எனக்கு சின்ன வயதிலிருந்தே ஏற்பட்டதால், வயதுக்கு மீறிய கம்பீரமும், எப்படிப்பட்ட பிரச்சனைகள் வந்தாலும் தீர்வு காணக்கூடிய திறமையும் எனக்கு வந்து விட்டன.

ஒரு முறை. . . . அதாவது ஏழு எட்டு வருடங்களுக்கு முன், எனக்கு பன்னிரண்டு வயது இருக்கும். அன்று அண்ணாவும் தாத்தாவும் எதற்காகவோ சண்டை போட்டுக் கொண்டார்கள், தாத்தா அண்ணாவை நன்றாக அடித்து விட்டு இரவு சாப்பாடு முடிந்த பிறகு தன் அறைவில் போய் படுத்துக் கொண்டார். மறுநாள் காலையில் அவர் விழித்துக் கொண்ட போது அவருடைய அறையின் கதவு வெளிப்பக்கம் பூட்டியிருந்தது. வீட்டில் அண்ணாவை காணவில்லை. அந்த பூட்டின் சாவியும் மாயமாகி விட்டது. அன்று நடந்த ரகளை வார்த்தைகளில் சொல்லி விட

முடியாது. அந்த அறைக்கு வேறு வழி இல்லை, தாத்தா உள்ளே இருந்து கதவை இடித்துக் கொண்டிருந்த போது நானும், நாயரும் ஓடி வந்தோம். "கதவை வெளியில் தாழ் போட்டது யாரு? அவங்களை விட்டேனா பார். கதவைத் திறங்க முதலில்." தாத்தா ஜன்னல் வழியாக நாயரை பார்த்துக் கொண்டே கர்ஜித்தார்.

ஏற்கனவே நாயருக்கு தாத்தாவைக் கண்டால் சிம்ம சொப்பனம். இன்று நெருப்பை மிதித்த குரங்கை போல் குதித்துக் கொண்டிருந்த தாத்தாவை பார்க்கும் போது அவனுக்கு மூளையே கலங்கி விட்டது போல் இருந்தது.

கதவு வெளிப்பக்கம் பூட்டப்பட்டு இருப்பதாகவும், சாவியை காணவில்லை என்று தெரிந்ததும் தாத்தாவுக்கு ஆவேசம் வந்து விட்டது. அதைத் தொடர்ந்து மூச்சு இரைப்பு ஏற்பட்டது. மூச்சு இரைப்பு வந்தால் அவருக்கு உடனே ஒரு சொம்பு தண்ணீர் குடித்தாக வேண்டும்.

"குடிக்க தண்ணீர் கொண்டு வா முதலில்." தாத்தா நாயரை விரட்டினார். நாயர் வேகமாக ஓடிப் போய் வெங்கல டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்தான். ஜன்னல் கம்பிகளின் இடுக்கு வழியாக டம்ளர் உள்ளே போகவில்லை. பழங்காலத்து வீடு என்பதால் ஜன்னல் கம்பிகள் ரொம்ப ஸ்ட்ராங்காக இருந்தன. வீட்டில் வேறு டம்ளர்கள் இருக்கவில்லை.

தாத்தாவுக்கு மூச்சு இறைப்பு தீவிரமாகிவிட்டது. வாழ்க்கையில் ஒரே ஒரு முறை நாயரின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. தனக்கு தோன்றிய யோசனையை முதல் தடவையாக தைரியமாக செயல்படுத்தினான். ஓடிப் போய் இரும்பு உலக்கையை எடுத்து வந்து பூட்டை உடைக்க தொடங்கினான். ரொம்ப பலமான பூட்டு லேசில் அசைந்து கொடுக்கவில்லை. அதை உடைப்பதற்குள் நாயருக்கு உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது, எப்படியோ பூட்டை உடைத்து கதவுகளை திறந்து விட்டான். தாத்தாவுக்கு உயிர் போகும் அளவுக்கு மூச்சு இரைத்துக் கொண்டிருந்தது. நாயர் தண்ணீர் டம்ளரை எடுத்துக் கொடுத்ததும்



மளமளவென்று குடித்த பிறகு தாத்தா செய்த முதல் காரியம் என்ன தெரியுமா? நாயரின் தலைமுடியை பற்றி குனியச் செய்து முதுகில் நான்கு குத்துக்களை குத்தினார். இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி அடித்தார், பாவம் நாயர்! வாயே திறக்கவில்லை.

"எங்கே அந்தக் கழுதை? வீட்டுக்கு வரட்டும், இன்னிக்கு அவனை ஒரு கை பார்த்து விடுகிறேன்" என்று கர்ஜித்துக் கொண்டே, கைத்தடியை பிடித்துக் கொண்டு ஹாலில் குட்டி போட்ட பூனையை போல் தாத்தா சுற்றிச் சுற்றி வந்தார்.

"கடவுளே! எப்படியாவது அண்ணனை இந்த இரவு வீட்டுக்கு வராமல் காப்பாற்று." மனதில் வேண்டிக் கொண்டே ஒரு மூலையில் ஒடுங்கி உட்கார்ந்திருந்தேன். சின்ன சத்தம் கேட்டால் போதும்.

"வந்து விட்டான் ராஸ்கெல்" என்று கத்திக்கொண்டே தாத்தா வாசற் கதவை நோக்கி ஓடுவார். எனக்கோ உயிரே போனாற்போல் இருக்கும் கடவுள் என் பிரார்த்தனையை செவிமடுத்து விட்டாற் போலும். அண்ணன் அன்று இரவு வீடு திரும்ப வில்லை. மூச்சை அடக்கிக் கொண்டு ஒரே இடத்தில் உட்கார்ந்திருந்ததில் எனக்குத்தான் சோர்வாக இருந்தது.

அண்ணன் அந்த இரவு மட்டுமே இல்லை. அதற்கு மறுநாளும் வரவில்லை. தாத்தாவுக்கு கோபம் குறைந்து அந்த இடத்தில் கவலை வந்து விட்டது. என்னால் அழுகையை அடக்க முடியவில்லை. தாத்தா என் கையைப் பிடித்துக் கொண்டு "அந்தக் கழுதை வந்தானா? எங்கேயாவது பார்த்தீங்களா?" என்று அவனுடைய நண்பர்களின் வீடுகளில் விசாரித்தார்.

யாருக்கும் தகவல் தெரியவில்லை. மூன்றாவது நாள் மாலை, ரயில் நிலையத்தில், அழுக்கடைந்து விட்ட உடைகளுடன், சிவந்து விட்ட கண்களுடன், வாடிப் போன முகத்துடன் தென்பட்டான். அவனைப் பார்த்ததும் ஓடிப்போய் கட்டிப் பிடித்துக் கொண்டு ஹோவென்று அழுது விட்டேன். தாத்தா அவனுடைய நெற்றியை தொட்டு பார்த்து "வா. . . வீட்டுக்கு போகலாம்" என்றார்.

'மாட்டேன்' என்று மறுத்து விட்டான். இந்த ரகளையை பார்த்து விட்டு அங்கே ட்யூட்டியில் இருந்த போலீஸ் அதிகாரி ஒருவர் அருகில் வந்து,

"என்ன விஷயம்?" என்று கேட்டார்.

தாத்தா அண்ணனை சுட்டிக் காட்டி,

"வீட்டை விட்டு ஓடி வந்து விட்டான்"என்று சொன்னார்.

போலீஸ் அதிகாரி அண்ணனை தொட்டுப் பார்த்து விட்டு, "ஜுரம் அதிகமாக இருக்கு" என்று சொல்லி விட்டு, "வீட்டுக்கு போ தம்பி" என்று அன்பு கலந்த குரலில் சொன்னார்.

அண்ணன் தலையை குறுக்காக அசைத்துக் கொண்டே "வீட்டுக்குப் போனால் தாத்தா என்னைக் கொன்று விடுவார். நான் போக மாட்டேன்" என்றான்.

போலீஸ் அதிகாரி தாத்தாவின் பக்கம் பார்த்தார்.

"ஜுரம் அதிகமானதில் ஜன்னி கண்டு விட்டது போலும், என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பேசுகிறான்." தாத்தா சமாளிக்க முயன்றார்.

போலீஸ் அதிகாரி மறுபடியும் அண்ணனைப் பார்த்தார்.

அண்ணன் அவருடைய கையைப் பற்றிக் கொண்டு, "இல்லை சார். நான் செயிண்ட் பீடர்ஸ் ஸ்கூலில் படித்து வருகிறேன். வேண்டுமானால் என்னுடைய ஆசிரியர்களிடம் கேட்டுப் பாருங்க. எப்படிப்பட்ட மாணவன் என்று அவர்கள் சொல்லுவார்கள். தாத்தாவைக் கண்டால் எனக்கு எவ்வளவு பயம் என்று என்னுடைய நண்பர்களுக்கும் தெரியும், தயவு செய்து என்னை தாத்தாவுடன் அனுப்பாதீர்கள்" என்றான்.

போலீஸ் அதிகாரி அண்ணனை அருகில் இழுத்துக் கொண்டார். அவன் தலையை வருடிக் கொண்டே தாத்தா பக்கம் கோபமாக பார்த்தார்.



நான் இடையில் புகுந்து சொன்னேன். "எங்க தாத்தா ரொம்ப நல்லவர். எங்களை ஒன்றும் சொல்ல மாட்டார். அம்மா அப்பா போன பிறகு அவர்தான் எங்களுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு காப்பாற்றி வருகிறார். அண்ணன் தவறு செய்து விட்டு வீட்டை விட்டு ஓடி வந்து விட்டான். அதான் வீட்டுக்கு வருவதற்கு பயப்படுகிறான்."

"என்ன செய்தான்? எதையாவது திருடினானா?" என்று கேட்டார்.

"இல்லை."

"பின்னே?"

நான் தாத்தா பக்கம் பார்த்தேன், தாத்தா என் பக்கம் பார்த்தார். நான் போலீஸ் அதிகாரியின் பக்கம் திரும்பி, "என்னை நன்றாக அடித்தான். அதோடு வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் என்னை அறையில் தள்ளி கதவைச் சாத்தி விட்டான்" என்றேன்.

"என் தங்கை பொய் சொல்கிறாள். நான் அவளை ஒன்றும் செய்யவில்லை. தாத்தா என்னை அடித்தார், இரவில் அவர் தூங்கும் போது கதவை வெளியில் சாத்தி, பூட்டையும் போட்டு பூட்டிவிட்டேன்." - அண்ணன் சொன்னான்.

போலீஸ் அதிகாரி தாத்தாவை சந்தேகமாக பார்த்தார். கடைசியில் எப்படியோ அண்ணனை சமாதானப்படுத்தி வீட்டுக்கு அனுப்பி வைத்தார். நாங்கள் கிளம்பி வரும்போது குழந்தைகள் வளர்ப்பில் பெரியவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டிய ஜாக்கிரதைகளை பற்றி விலாவாரியாக சொன்னார். இந்தக் காலத்தில் இளைஞர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் உங்களைப் போன்ற பெரியவர்கள் தான் என்று சொன்னார். அவர் சொல்வதை பார்த்தால் தாத்தா போன்றவர்கள் இருப்பதால்தான் இந்த உலகில் குற்றவாளிகள் உருவாகிறார்கள் என்று குற்றம் சாட்டுவது போல் இருந்தது.

அவருடைய சொற்பொழிவை வலுக்கட்டாயமாக கேட்டுக் கொண்டே நின்றிருந்த தாத்தாவின் கை கைத்தடியின் பிடி மீது இறுகுவதை பார்த்தேன். எந்த நிமிடத்திலும் அது காற்றில் எழும்பி அந்த அதிகாரியின் மண்டையை உடைக்கக் கூடும். ஆனால் ஏனோ அது நடக்கவில்லை.

மறுநாள் மாலையில் அவரே எங்கள் வீட்டுக்கு வந்து அண்ணனின் க்ஷேம சமாசாரங்களை விசாரித்து விட்டுச் சென்றார்.

அந்த நிகழ்ச்சிக்கு பிறகு தாத்தா அண்ணனை ஹாஸ்டலில் சேர்த்து விட்டார். வீட்டில் கொஞ்சம் அமைதியான சூழ்நிலை நிலவியது. தாத்தாவுக்கு மன அமைதி கிடைத்தது. ஆனால் இந்த அமைதியெல்லாம் விடுமுறை வந்தால் காணாமல் போய்விடும். விடுமுறைக்கு வீட்டுக்கு வந்த அண்ணன் "வெளி ஊர்களுக்கு போக வேண்டும், பணம் கொடு" என்று தாத்தாவிடம் கேட்பான். தாத்தா கொடுக்க மாட்டார். அவ்வளவுதான்! கோபத்தில் அண்ணன் எதையாவது உடைத்து விட்டு, வீட்டை உண்டு இல்லை என்று ஆக்கி விட்டு போவான். பொருள் நஷ்டமானதை பார்த்து விட்டு தாத்தா குய்யோ மொய்யோ என்று கத்துவார். அதைத் தொடர்ந்து அவருக்கு மூச்சு இரைப்பு.... எனக்கு தூக்கமின்மை, இது தான் தவறாமல் நிகழ்ந்து கொண்டிருந்தது. தாத்தாவுக்கு ஓய்வு ரொம்ப முக்கியம் என்று டாக்டர் அடிக்கடி என்னை எச்சரித்து வந்தார். போகப் போக தாத்தாவும், அண்ணாவும் ஒரே இடத்தில் இல்லாமல் பார்த்துக் கொள்வதே எனக்கு பெரிய பிரச்சனையாகி விட்டது.

அண்ணாவும், நானும் பெரியவர்களாகி விட்டோம். அதற்கு ஏற்றாற் போல் எங்களுடைய தேவைகளும் அதிகமாகி விட்டன. ஆனால் தாத்தா அதை கொஞ்சம் கூட புரிந்து கொள்ளவில்லை. பிரச்சனை உருவாவதே இதனால்தான். நான் எப்படியோ அட்ஜெஸ்ட் செய்து கொள்வேன். அண்ணன் ஒத்துப் போக மாட்டான். அதையே சாக்காக வைத்துக் கொண்டு தாத்தாவை பாடாய் படுத்துவது அவனுக்கு விளையாட்டாக மாறிவிட்டது.



பாகிஸ்தான் இந்தியா மீது அநியாயமாக போர் தொடுத்திருந்தது. மக்கள் மனதில் நாட்டுப் பற்று வெள்ளமாக பொங்கியது. அண்ணன் அதிலேயே மூழ்கி விட்டான். அண்ணனிடம் ஏற்பட்ட மாறுதல் எனக்கு மகிழ்ச்சியை தந்தது. திறமையும், சக்தியும் இருப்பவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு லட்சியம் இருப்பது முக்கியம், அப்படி இல்லை என்றால் எண்ணங்கள் சீர்குலைந்து, தவறான வழிகளில் சென்று விடும் ஆபத்து இருக்கிறது. அண்ணனின் தலைமையில் கல்லூரி மாணவர்கள் நாட்டின் பாதுகாப்பு நிதிக்காக நன்கொடையை வசூல் செய்தார்கள். இரண்டு லட்சத்திற்கு பத்தாயிரம் ரூபாய் குறைவாக வசூலானது, அந்த தொகையை எப்படியாவது தாத்தாவிடமிருந்து வசூல் செய்ய வேண்டும் என்று அண்ணா முடிவு செய்தான்.

மாணவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து வீட்டுக்கு வந்தார்கள். எல்லோரும் தாத்தாவை உட்கார வைத்து இந்திரன் சந்திரன் என்று புகழ்ந்து பேசினார்கள். எல்லாவற்றையும் கேட்ட பிறகு தாத்தா ஜேபியிலிருந்து பர்ஸை எடுத்து இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து இரண்டு முறை எண்ணி அவர்களிடம் நீட்டினார், வந்தவர்களின் முகம் கறுத்து விட்டது. அண்ணனின் முகம் கோபத்தில் கன்றி விட்டது. என்ன சண்டை வரப்போகிறதோ என்று மூச்சை அடக்கிக்கொண்டு அங்கேயே உட்கார்ந்திருந்தேன்.

"இது எங்களுடைய காபி செலவுக்கா சார்?" ஒருத்தன் நக்கலாக கேட்டான்.

"ஒரு மணி நேரம் புகழாரம் பாடியதில் தொண்டை வரண்டு போனதுதான் மிச்சம்." இன்னொரு பெண் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். எல்லோரும் எழுந்து போய் விட்டார்கள், வெளியில் போன பிறகு தாத்தாவைப் பற்றி அவர்கள் எப்படி பேசிக் கொள்வார்கள் என்று எனக்கு நன்றாகவே தெரியும்.

அன்று மாலையில் வீட்டுக்கு வந்ததும் அண்ணன் நேராகவே தாத்தாவின் அறைக்குச் சென்றான். நானும் பின்னாலேயே சென்றேன்.

"தாத்தா! மதியம் அவர்கள் வந்த போது மரியாதையாக நூறோ இரு நூறோ கொடுத்து அனுப்பியிருந்தால் விஷயம் இதோடு முடிந்திருக்கும், அவர்களுக்கு முன்னால் என்னை அவமானப்படுத்தி விட்டாய், அதற்கு பரிகாரமாக பத்தாயிரம் ரூபாய் உன்னிடமிருந்து வசூல் செய்யப் போகிறேன்."

"பத்தாயிரமா!" தாத்தா கண்களை உருட்டி விழித்து, பிறகு உடனே தொப்பை அதிரும் அளவுக்கு பெரிதாக சிரித்தார். அவ்வளவு உரத்த குரலில் அவர் சிரித்து அது வரையில் நான் பார்த்ததில்லை.

அண்ணன் கோபமாக பார்த்தான்.

"பத்தாயிரம்! உன் அம்மா வழி தாத்தா உன் அம்மாவுக்கு சீதனமாக கொடுத்து அனுப்பியிருந்தாரே? அந்த சொத்திலிருந்து கேட்கிறாயா?" என்று ஏளனமாக சொல்லி விட்டு மறுபடியும் தொப்பை குலுங்க சிரித்தார்.

அம்மா ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவள் என்றும், அப்பா அம்மாவை காதலித்து வரதட்சனை இல்லாமல் திருமணம் செய்து கொண்டார் என்றும், அதன் விளைவை குடித்தனத்திற்கு வந்த இரண்டு வருடங்களுக்கு அம்மா அனுபவித்து விட்டாள் என்றும் உறவினர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள்.

அம்மாவைப் பற்றி தாத்தா அப்படிச் சொன்னதும் அண்ணனுக்குக் கோபம் வந்து விட்டது. தாத்தா நிறைய முறை அண்ணனை அம்மாவின் ஜாடை என்று குத்தலாக பேசி இருக்கிறார். நான் அப்பாவைப்போல் அமைதியான சுபாவம் படைத்தவனாம், அண்ணா குணத்தில் அப்படியே அம்மாவை கொண்டிருக்கிறானாம். அதனால்தான் தாத்தா அண்ணாவை தள்ளி வைத்து என்னிடம் பாசமாக நடந்து கொள்கிறாரோ என்று சிலசமயம் நினைத்துக் கொள்வேன்.



"தாத்தா! அனாவசியமாக பேச்சு வேண்டாம். நீ எந்த பணமும் தர தேவையில்லை. சொத்தில் என்னுடைய பங்கை பிரித்துக் கொடு." அண்ணா சொன்னான்.

"சொத்தில் பங்கா? உனக்கா?" மறுபடியும் உரத்த குரலில் சிரித்தார். அண்ணாவுக்குக் கோபம் வந்து விட்டது. அவன் தாடை எலும்பு இறுகியதிலிருந்தே புரிந்து கொள்ள முடிந்தது.

"உன் முன்னோர்கள் எந்த சொத்தும் சேர்த்து எனக்கு வைத்து விட்டுப் போகவில்லை. நான் கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்து இது." மார்பின் மீது கையால் தட்டிக் கொண்டே சொன்னார்.

"ராப்பகலாக உழைத்து சம்பாதித்தேன். செலவு செய்தாலும், சேர்த்து வைத்தாலும் என்னுடைய இஷ்டம். இரத்த சம்பந்தம் இருப்பதால் இதுவரையில் படிப்பு சொல்லிக் கொடுத்து இத்தனை வருடங்கள் உன்னை வளர்த்து ஆளாக்கி விட்டேன். இன்றுடன் அதுவும் முடிந்து விட்டது. போடா. . . போ."

"தாத்தா!"

"குரலை உயர்த்தி கத்தினால் பயந்துவிடுவேன் என்று நினைத்தாயா? தடிக் கழுதை, என் முன்னால உன் ஆட்டங்கள் எதுவும் செல்லாது, போடா. . . . போ. மறுபடியும் எந்த போலீஸ்காரரிடம் வேண்டுமானாலும் புகார் செய்து கொள். இன்னும் இங்கேயே நிற்பானேன்?" விரட்டுவது போல் பேசினார் தாத்தா.

அண்ணனால் கோபத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. நான் வந்து தடுப்பதற்குள் தாத்தாவின் மீது வேகமாக பாய்ந்தான். இருவருக்கும் இடையில் கைகலப்பு நிகழ்ந்தது. தாத்தாவின் கைத்தடியால அண்ணாவை ஓங்கி அடிக்க முயன்ற போது குறி தவறிவிட்டது. அப்படியே தரையில் குப்புற விழுந்து விட்டார். விழுந்தவர் உடனே எழுந்து கொள்ளவில்லை. அதற்குள் நான் அண்ணாவை வலுக்கட்டாய மாக அறைக்குள் தள்ளி கதவைச் சாத்தினேன். கீழே விழுந்த

தாத்தா நகர்ந்தாரே தவிர எழுந்து கொள்ளவில்லை. அருகில் சென்று தூக்கி விட முயற்சி செய்தபோது, "அம்மாடி! என் இடுப்பு ஒடிந்து விட்டது" என்று கத்தி கூச்சல் போட்டார்.

எனக்கு பயமாக இருந்தது. நாயரின் உதவியால் எப்படியோ தாத்தாவை கட்டிலில் படுக்க வைத்து விட்டு டாக்டருக்கு தகவல் அனுப்பினேன். அவர் வந்து பார்த்து விட்டு அடி ஒன்றும் படவில்லை என்றும், கீழே விழுந்ததில் இடுப்பு சுளுக்கிக் கொண்டு விட்டது என்றும் சொன்னார். நன்றாக ஓய்வு எடுத்துக் கொண்டால் நான்கைந்து நாட்களில் சரியாகி விடும் என்று அவர் சொன்ன பிறகு தான் எனக்கு தைரியம் வந்தது. அண்ணா டாக்டருடன் க்ளினிக் வரையில் சென்று மருந்து வாங்கி வந்தான்.

தாத்தாவுக்கு அன்று இரவு ஜுரம் வந்து விட்டது. அண்ணன் திடீரென்று மாறிவிட்டான். தாத்தாவின் கட்டில் அருகில் வந்து "தாத்தா! என்னை மன்னித்து விடு" என்று அவன் சொன்னபோது என் காதுகளை என்னாலேயே நம்ப முடியவில்லை.

"தாத்தா! என்னால் தான் உனக்கு இந்த அடி பட்டது, நீ மருந்து மாத்திரைகளை வேளா வேளைக்கு சாப்பிடு. உனக்கு பணத்தைப்பற்றி கவலைப்படாதே, கூலி வேலை செய்தாவது பணத்தை சம்பாதித்து உன்னிடம் கொடுத்து இந்த பாவத்திற்கு பரிகாரம் தேடிக் கொள்கிறேன். வேண்டுமானால் கால்களை பிடித்து விடட்டுமா தாத்தா?" அண்ணா கட்டில் மீது உட்காரப் போனான்.

தாத்தா பெரிதாக முனகிக் கொண்டே என் கையை பலமாக பற்றிக் கொண்டவர்."அம்மா ராதா! இவன் ஏதோ பெரிய திட்டத்துடன் தான் வந்திருப்பான் போலிருக்கு. நள்ளிரவில் என் கழுத்தை நெறித்து கொன்றாலும் ஆச்சரியப்பட வேண்டியது இல்லை. நீ என் பக்கத்திலேயே இரும்மா" என்றார்.

அண்ணா சட்டென்று விலகி வாசலுக்கு அந்தப் பக்கம் போய் நின்றான். "தாத்தா! உனக்கு அது போன்ற சந்தேகம் ஏதாவது இருந்தால் நான் உன் அருகில் வர மாட்டேன். உன்னுடைய அனுமதி இல்லாமல் இந்த அறைக்குள் காலடி கூட எடுத்து வைக்க மாட்டேன். என்னை நம்பு" என்று சொல்லிவிட்டு வேகமாக போய் விட்டான்.



"உண்மையிலேயே இவன் மாறிவிட்டான் என்கிறாயா?" தாத்தா சந்தேகமாக பார்த்துக் கொண்டே என்னிடம் கேட்டார்.

"நீங்க அமைதியாக படுத்துக் கொள்ளுங்க தாத்தா, உங்களுக்கு அடிபட்டது என்றதும் பயந்து விட்டான் போலும், மாறிவிட்டது. போல் தான் தோன்றுகிறது" என்றேன்.

தாத்தாவின் சுளுக்கு நாங்க நினைத்தது போல சீக்கிரமாக குறையவில்லை. மேலும் இரண்டு வாரங்கள் ஓய்வு தேவை என்று டாக்டர் சொல்லி விட்டார். நான்கு நாட்கள் கழித்து அண்ணா ஒரு நர்ஸை அழைத்து வந்தான். அன்று அப்படிச் சொன்ன பிறகு தாத்தாவின் அனுமதி இல்லாமல் அறைக்குள் நுழைவது இல்லை என்று தீவிரமாக இருந்தான். அது போதாது என்பது போல் மருந்துகள், சாத்துக்குடி, க்ளுகோஸ் எல்லாம் யாரும் சொல்லாமலே வாங்கி வந்தான்.

"ராதா! ராப்பகல் விழித்துக் கொண்டிருந்தால் உன் உடல் நலம் கெட்டுப் போய்விடும். நீ படுத்துக் கொண்டால் இந்த வீட்டின் இயக்கமே நின்று விடும். உனக்கு ஓய்வு கிடைக்கும் போது தாத்தாவின் அருகில் வந்து உட்கார்ந்து கொள். மற்ற வேளைகளில் நர்ஸ் அவரைப் பார்த்துக் கொள்வாள்" என்றான்.

அவனுடைய பாசத்தைக் கண்டு நிஜமாகவே என் கண்களில் நீர் நிறைந்து விட்டது. நான்கு நாட்களாக நாயருக்கு ஜுரமாக இருந்தது. ஒரு பக்கம் சமையல் வேலை, மற்றொரு பக்கம் தாத்தாவை பார்த்துக் கொள்வது. எனக்கு மூச்சு விடவும் நேரம் இருக்கவில்லை. யார் என்ன சொன்னாலும் அண்ணன் அண்ணன் தான். உண்மையிலேயே மாறி விட்டான். தாத்தாவைப்பற்றி கவலைப்படுவதோடு, என்னிடமும் அக்கறை எடுத்துக் கொள்கிறான்.

அண்ணன் அறிமுகப்படுத்தியதும் நர்ஸ் வந்து வணக்கம் தெரிவித்தாள். ஏற்கனவே கறுப்பு நிறம். அவள் போட்டுக் கொண்டிருந்த நர்ஸ் உடை மேலும் வெண்மையாக தெரிந்தது. வயது முப்பதுக்கும் மேல் இருக்கும். முரட்டுத்தனமாக காட்சி அளித்தாள். தோற்றத்தில் முரடாக தென்படுபவர்கள் அன்பாக, அனுசரணையாக நடந்துகொள்வார்கள் என்று எங்கேயோ படித்தது நினைவுக்கு வந்தது.

எனக்கு நினைவு தெரிந்த பிறகு முதல்முறையாக வேறு ஒரு பெண் இந்த வீட்டில் நடமாடப் போகிறாள். அவளை தாத்தாவிடம் அழைத்துப் போனேன். முதலில் சந்தேகமாக பார்த்துவிட்டு தனக்கு நர்ஸ் யாரும் தேவையில்லை என்றார். சம்பளம் அவர் தர வேண்டாம் என்றதும் போனால் போகிறது இருக்கட்டும் என்றார்.

நர்ஸ் வந்த பிறகு எனக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது. தாத்தாவின் பக்கத்து அறையிலேயே படுத்துக் கொண்டேன். "நர்ஸம்மா! நர்ஸம்மா!" என்று தாத்தா அழைக்கும் குரல் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது."

"நர்ஸம்மா!"

"ஸிஸ்டர் என்று கூப்பிடுங்களேன். நர்ஸம்மா என்று அழைத்தால் என்னவோ போல் இருக்கு" என்பாள் நர்ஸ்.

"பெயரில் என்ன இருக்கு நர்ஸம்மா." தாத்தா பதில் சொல்வார்.

"மனிதனுக்கு தோற்றம் சரியாக அமையாத போது பெயரிலாவது தனித்தன்மை இருக்க வேண்டாமா?" கண்களை மூடிக் கொண்டே நினைத்துக் கொண்டேன்.

"உனக்கு எவ்வளவு சம்பளம் தருவதாக பேரன் சொல்லியிருக்கான்? உங்க இருவருக்கும் எத்தனை நாளாக அறிமுகம்? உனக்கு திருமணம் ஆகி விட்டதா? இன்னும் ஆகவில்லையா? காரணம் என்ன?"



இப்படி தாத்தா நர்ஸிடம் ஏதாவது கேட்டுக் கொண்டே இருப்பார்.

எனக்கு ஓரளவு நிம்மதி ஏற்பட்டது. அன்று இரவு சமையல் அறையில் வேலைகளை முடித்துக் கொண்டு காற்று வாங்கலாம் என்று கொல்லைப் புறம் சென்றேன். கிணற்றடியில் ஏதோ பேச்சு குரல் கேட்டது. சட்டென்று நின்று விட்டேன்.

"என்ன? ஏதாவது வழிக்கு வருவது போல் தோன்றுகிறதா?"

"வழிக்கு வருவதா? கிழவன் லேசுப்பட்ட ஆள் இல்லை. தள்ளி நின்று எத்தனை வேண்டுமானாலும் செய்ய சம்மதிப்பான். நெருங்க மட்டும் விட மாட்டான். என்னவோப்பா. எனக்கு நம்பிக்கை இல்லை."

"ப்ளீஸ் நர்ஸ்! நீ மனம் வைத்தால் கட்டாயம் வேலை நடக்கும். இந்த விஷயத்தில் உன்னைத்தான் மலைபோல் நம்பியிருக்கேன்." அண்ணன் வேண்டுவது போல் சொன்னான்.

"உனக்கு ஏமாற்றம் தருவதில் எனக்கும் விருப்பம் இல்லை. ஆனால் திரி இருந்தால் தானே பற்ற வைக்க முடியும்?"

"நர்ஸ் ப்ளீஸ்."

சத்தம் போடாமல் திரும்பி விட்டேன். எத்தனை யோசித்தாலும் அவர்களுடைய உரையாடலின் பொருள் எனக்கு விளங்க வில்லை. ஒன்று மட்டும் நன்றாக புரிந்தது. அண்ணனின் பச்சாத்தாபம் உண்மையானது இல்லை. எதற்காகவோ இப்படி நாடகம் போடுகிறான்! எங்கேயாவது சூரியன் மேற்கில் உதிப்பானா? நான் ஒரு பைத்தியக்காரி, இதெல்லாம் உண்மை என்று நம்பி விட்டேன்.

அன்று இரவு, விழிப்பும் உறக்கமும் கலந்த நிலை. கிட்டத்தட்ட நள்ளிரவு தாண்டியிருக்கலாம். திடீரென்று தாத்தாவின் அறையிலிருந்து "ராதா! கோபீ!" என்ற கத்தல்கள் கேட்டன. நான் சட்டென்று கட்டிலை விட்டு இறங்கி தாத்தாவின் அறைக்கு ஓடினேன். அங்கே விடி விளக்குக் கூட இருக்கவில்லை. இருட்டாக

இருந்தது. விளக்கை போடுவதற்குள் என் இதயம் பயந்து கொண்டே ஸ்விச்சை போட்டேன். தாத்தா நடுங்கியவாறு கட்டில் மீது ஒரு மூலையில் பதுங்கியிருந்தார். கட்டிலுக்கும், சுவற்றுக்கும் நடுவில் இருந்த இடைவெளியில் நர்ஸ் தவறு செய்து விட்டவள் போல் தலைகுனிந்து நின்றிருந்தாள். எனக்கு விஷயம் புரியவில்லை.

தாத்தா சின்னக் குழந்தையை போல் இருகைகளையும் நீட்டி என்னை அழைத்தார். "அம்மா ராதா! வந்துவிட்டாயா? முதலில் இந்த சூர்பனகையை வெளியில் துரத்து" என்றார்.

'என்ன நடந்தது? என்பது போல் நர்சை பார்த்தேன். நர்ஸ் என்னை கோபமாகவும், தாத்தாவை கம்பளி பூச்சியை போலவும் பார்த்து விட்டு அறையை விட்டு வெளியேறினாள்.

"என்ன நடந்தது தாத்தா?" என்றேன்.

"என்ன.... நடந்ததா? என்னவென்று சொல்வேன் கண்ணம்மா. அவளை கொள்ளியில் வைக்க கோபிக்கு வலை வீசுகிறாளோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டு இருந்தேன். எனக்கே வலை வீசி விட்டாள். விளக்கை அணைத்து விட்டு, காலை பிடித்து விடட்டுமா என்று அருகில் வந்து... தாத்தா திமரென்று வெட்கப்படுவது போல் தலையை குனிந்து கொண்டார்."

பொங்கி வந்த சிரிப்பை அடக்கிக் கொள்ள ரொம்பவும் சிரமப்பட்டேன்.

மறுநாள் காலையில் அண்ணனை அருகில் உட்கார வைத்துக் கொண்டு தாத்தா நர்ஸின் கெட்ட எண்ணத்தைப் பற்றி விலாவாரியாக சொல்லிக்கொண்டு இருந்தார். முதல்நாள் இரவு கிணற்றடியில் அவர்களுடைய உரையாடலை கேட்கவில்லை என்றால் அண்ணாவுக்கு எதுவும் தெரியாது என்றும், தவறு முழுவதும் நர்ஸோடதுதான் என்றும் நானும் நம்பியிருப்பேன். நர்ஸ் பற்றி நினைக்கும் போது இரக்கம்தான் ஏற்பட்டது.



தாத்தாவின் அறையிலிருந்து வெளியில் வந்ததும் அண்ணன் மீது எரிந்து விழுந்தாள்.

"உனக்கு புத்தி இருக்கா?"

"ஏன்? என்ன ஆச்சு?" எதுவும் தெரியாத அப்பாவியை போல் கேட்டான்.

உடல் பற்றி எரிவது போல் இருந்தது எனக்கு.

"நடித்தது போதும். நீயும், அந்த நர்ஸும் பேசிக் கொண்டதை நான் கேட்டு விட்டேன்."

விஷயம் புரிந்து விட்டது போல் விசில் அடித்தான்.

"உனக்கு வெட்கமாக இல்லையா? வயதில் பெரியவர் என்று கூடப் பார்க்காமல் . . . ச்சீ." என்றேன்.

"எனக்கென்ன தெரியும்? எங்கேயாவது கொஞ்சம் ரொமான்ஸ் மறைந்திருக்குமோ என்று நினைத்தேன்" என்றவன் பேண்ட் ஜேபியில் கைகளை நுழைத்துக் கொண்டே உதட்டை சுழித்தான். "பேசி பிரயோஜன் இல்லை" என்றான்.

அந்த நிமிடத்தில் அவனை என் அண்ணன் என்று சொல்லி கொள்ளவும் தலைகுனிவாக உணர்ந்தேன்.

நர்ஸுடம் நடந்த ரகளையில் தாத்தாவின் கஷுக்கு மாயமாய் மறைந்து விட்டது. படுக்கையை விட்டு எழுந்து வழக்கம் போல் நடமாடத் தொடங்கினார்.

நான்கைந்து நாட்கள் கழித்து இரவு பன்னிரண்டு மணி தாண்டிய பிறகு வாசற்கதவை யாரோ படபடவென்று தட்டினார்கள். நான் எழுந்து போவதற்குள் தாத்தா போய் கதவைத் திறந்தார். எதிரே போலீஸ்காரர் நின்றிருந்தார்கள்.

என்ன விஷயம் என்று எங்களுக்கு புரியவில்லை.

என்ன வேண்டும் உங்களுக்கு? தாத்தா கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவர்கள் துப்பாக்கி முனையில்

மிரட்டி என்னையும், தாத்தாவையும் ஒரு மூலையில் நிற்க வைத்தார்கள். இரண்டு பேர் வீடு முழுவதும் சோதனை போட்டார்கள். தாத்தாவும் நானும் அதிர்ச்சி அடைந்தவர்களை போல் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். வீட்டை சோதனை போட்டு முடித்த பிறகு ஹாலுக்கு வந்த போலீஸ்காரர்கள் "எதுவும் கிடைக்கவில்லை சார்!" என்றார்கள்

"அதோ!" திடீரென்று ஒரு போலீஸ் வாசல் பக்கம் சுட்டிக் காட்டினான். எல்லோரும் அந்தப் பக்கம் திரும்பினார்கள். அவர்களில் ஒருவன் பிஸ்டலை எடுத்து குறிபார்த்தான். காம்பவுண்ட் கேட்டைத் திறந்து கொண்டு நாயர் வந்து கொண்டிருந்தான். நாயருக்கு விசித்திரமான பழக்கம் ஒன்று இருந்தது. சில சமயம் கண்களை மூடிக்கொண்டே நடப்பான். "எங்கேயாவது விழுந்து விட மாட்டாயா?" என்று கேட்டால்; "எப்படி விழுவேன்? நன்றாக பிராக்டீஸ் செய்திருக்கிறேன். கண்களை மூடிக்கொண்டு எத்தனை தூரம் வேண்டுமானாலும் என்னால் நடக்க முடியும்" என்பான்.

நேற்று இரவு படுத்துக் கொள்ளும் முன் "சின்னம்மா! வேலை எல்லாம் முடிந்து விட்டது. ராஜேஸ்வரியில் 'நானும் ஒரு பெண்' சினிமா வந்திருக்கு, போய் வரட்டுமா? "என்று கேட்டபோது நான் தான் பணம் கொடுத்து அனுப்பினேன். வீட்டுக்கும் தியேட்டருக்கும் தூரம் அதிகம் இல்லை, சினிமா முடிந்து விட்டது போலும். தலையில் துண்டை குறுக்கே தொங்க விட்டுக் கொண்டு கண்களை மூடி நடந்து வந்துகொண்டிருந்தான். கேட்டைத் திறந்து' விட்டான். எல்லோரும் மூச்சை அடக்கிக்கொண்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தோம். நாயர் கண்களை மூடிக் கொண்டு வருவானேன் என்று போலீசாருக்கு புரியாததால் குழப்பமாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். நாயர் வழக்கம் போல் கொல்லைப்புற கதவை நோக்கி போகப் போனான்.

"நில்லு!" போலீஸ் அதிகாரி கர்ஜித்தார்.

திடீரென்று அவர் அப்படிச் சொன்னதும் நாயர் சட்டென்று கண்களைத் திறந்து பார்த்தான். கண்ணுக்கு எதிரே தென்பட்ட



காட்சி என்னவென்று அவனுக்கு சரியாக புரிந்திருக்க நியாய மில்லை. என்னை, தாத்தாவை, போலீஸாரை மாறி மாறி பார்த்தான். கண் இமைகள் வேகமாக படபடக்க "அம்மாடியோவ்!" என்று கத்திக் கொண்டே போலீஸ் அதிகாரியின் முன்னால் சாஷ்டாங்கமாக விழுந்தான். போலீஸ்காரர் ஒருவர் அவனுடைய ஜேபிகளை சோதனை போட்டார். பீடிக்கட்டு, ஒரு ரூபாய் சில்லரை, சினிமா டிக்கெட் பாதியாக கிழித்தது. . . இவை தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை.

தாத்தாவுக்கு கொஞ்சம் தைரியம் வந்தது. "என்ன விஷயம்?" என்று கேட்டார். அதற்கு பதில் சொல்வது போல் போலீஸ் அதிகாரி சட்டைப் பையிலிருந்து கடிதத்தை எடுத்துக் கொடுத்தார். யாரோ உண்மை விளம்பி எழுதிய கடிதம் அது.

அந்தக் கடிதத்தை படித்ததும் தாத்தாவின் முகம் வெளிறிவிட்டது. "யாரோ வேண்டாதவர்கள் எழுதிய கடிதம் இது" என்றார்.

"சாரி சார். எங்களுடைய கடமையை நாங்கள் செய்தோம்." என்று மன்னிப்பு கேட்டுக் கொண்டு போய்விட்டார்கள்.

தாத்தாவுக்கு தொழில் ரீதியாக நிறைய எதிரிகள் இருந்தார்கள். அதில் யாராக இருக்கும் என்று அவர் குழம்பிக் கொண்டு இருந்தார். எனக்கு ஒரே ஒரு நபர் மீது சந்தேகம் இருந்தது. ஒன்று மட்டும் உண்மை. இந்த நிமிடத்திலிருந்து போலீசாரின் பார்வை எங்கள் வீட்டின் மீது எப்போதும் இருக்கும். தாத்தாவிடம் சொன்னபோது, "இருந்தால் இருக்கட்டும், இதில் நாம் பயப்படுவதற்கு என்ன இருக்கிறது?" என்றார்.

தன் மனதில் இருக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முன் தாத்தாவின் மனதில் போலீஸ் என்றால் பயத்தை ஏற்படுத்துவதற்காக அண்ணன் செய்த காரியம் இது என்று பின்னால் எனக்குப் புரிந்தது.

அன்று காலையில் அண்ணா ஊருக்குப் போனான். போகும் முன் வழக்கம் போல் தாத்தாவும் பேரனும் பணவிஷயத்தில் சண்டை போட்டுக் கொண்டார்கள்.

"இந்த ஜென்மத்தில் இந்த வீட்டு வாசற்படியை மிதிக்க மாட்டேன்" என்று சபதம் செய்தான்.

"இது போன்ற சபதங்களை இதுவரையில் எத்தனை கேட்டிருக்கிறேன், போடா. . . போ." தாத்தா ஏளனமாய் சொன்னார்.

அன்று வழக்கம் போல் நாள் கழிந்து விட்டது. மூன்றாவது நாள் இரவு உணவு முடிந்த பிறகு எல்லோரும் படுத்துக் கொண்டோம். எனக்கு ஏனோ உறக்கம் வரவில்லை.

தொலைவில் சர்ச்சில் பன்னிரண்டு மணி அடித்த சத்தம் கேட்டது. திடீரென்று என்னுடைய அறையில் விடி விளக்கு அணைந்து விட்டது. பட்டணத்தில் இருப்பவர்களுக்கு அடிக்கடி மின்சாரம் போவது வழக்கம்தான். உறங்க வேண்டும் என்ற முயற்சியில் வலுக்கட்டாயமாக கண்களை மூடிக் கொண்டேன். அருகில் யாரோ நடந்து வருவது போல் சத்தம் கேட்டது. என் முதுகு தண்டில் சிலீரென்று நடுக்கம் பரவியது.

காலடிச் சத்தம் திடீரென்று நின்றுவிட்டது. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு "யாரு? நாயரா?" என்று கேட்டேன்.

பதில் வரவில்லை. காலடிச் சத்தம் அருகில் கேட்டது. பயத்தில் வீலென்று கத்தினேன். "தாத்தா!"

"அம்மா ராதா! என்ன ஆச்சு? கனவு ஏதாவது கண்டாயா?" தாத்தாவின் குரல் கேட்டது.

"தாத்தா! திருடன். . . திரு. . ." வார்த்தையை இன்னும் முடிக்கவில்லை. யாருடையதோ கை நீண்டு வந்து என் வாயை பலமாக பொத்தியது. நான் விடுவித்துக் கொள்ள முயற்சித்தேன்.

"என்னம்மா ராதா? பதிலையே காணும்? இதோ. . . நான் வருகிறேன். விளக்குகள் எரியவில்லையே ஏன்?" தாத்தா கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது.



அதற்குள் யாரோ துணியால் என் வாயை அடைத்து விட்டார்கள். என்னைப் பிடிக்க வந்த திருடன் ரொம்ப பலசாலியாக இருக்க வேண்டும். ஒரு கையால் என் இருகைகளையும் பலமாக பற்றி மறு கையால் இறுக முடிச்சு போட்டான். பிறகு என்னை தோளில் சுமந்து கொண்டு ஹாலுக்கு வந்தான். அவன் பிடி விடுபட நான் செய்த முயற்சிகள் எல்லாம் வியர்த்தமாகி விட்டன.

ஹாலில் தென்பட்ட காட்சியைப் பார்த்ததும் எனக்கு உயிரே போய் விட்டது போல் இருந்தது. இன்னொரு திருடன் தாத்தாவை நாற்காலியில் உட்கார வைத்து கைகளை பின்பக்கமாக மடக்கி கயிற்றால் முடிச்சு போட்டுக் கொண்டிருந்தான். நாயர் ஏற்கனவே கைகள் கட்டபட்ட நிலையில் நடுநடுங்கிக் கொண்டு இருந்தான். அந்த இருவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே என்னை வெளியில் தூக்கிச் சென்றான்.

என்னை தூக்கிச் சென்றவன் இனிமேல் என் பாரத்தை சுமக்க முடியாதவன் போல் வீட்டின் பின்னால் இருந்த புல்வெளியின் மீ து என்னை இறக்கி விட்டான். மங்கலான நிலா வெளிச்சத்தில் எதுவுமே தெளிவாக தெரியவில்லை. நான் அவனை கால்களால் உதைக்கப் போனேன். என்னைத் தூக்கி வந்ததில் களைத்துப் போன அந்த திருடன், "அம்மா தாயே! உன்னை கையெடுத்து கும்பிடுகிறேன். என்னை உதைக்காதே. ஏற்கனவே உன் நகங்கள் என் கன்னத்தை ஆழமாக கீறிவிட்டன. நான் யாரோ இல்லை. உன் அண்ணனோட நண்பன் பிரசாத். இதெல்லாம் உன் அண்ணாவின் திட்டம்தான். நீ இவ்வளவு வெயிட்டாக இருப்பாய் என்றும், இவ்வளவு பிரச்சனைகள் வரும் என்றும் முன்னாடியே தெரிந்திருந்தால் செத்தாலும் இதற்கு சம்மதித்து இருக்க மாட்டேன்." மளமளவென்று சொல்லி முடித்தான்.

ஒரு நிமிடம் எனக்கு வாயிலிருந்து வார்த்தைகளே வரவில்லை. அதற்குள் பிரசாத் என் கட்டுகளை அவிழ்த்து விட்டான். ஃகயும் காலும் சுவாதீனத்தில் இருக்கோ இல்லையோ என்று முதலில் உதறிப் பார்த்துக் கொண்டேன். அதற்குள் டார்ச் விளக்குடன் தேடிக் கொண்டே அண்ணன் அங்கு வந்தான். எங்க

இருவரையும் பார்த்ததும் விளக்கை அணைத்து விட்டு, "இதென்ன? இங்கே அழைத்து வந்தாய்?" என்று எரிச்சலுடன் கேட்டான்.

"இங்கேயாவது அழைத்து வந்தேனே என்று சந்தோஷப்பட்டுக் கொள்." சொல்லும் போதே பிரசாதுக்கு மூச்சு இரைத்தது.

"இதெல்லாம் என்ன?" அண்ணாவை கோபமாக பார்த்துக் கொண்டே கேட்டேன். இருட்டாக இருந்ததால் என் முகத்தில் தோன்றிய உணர்சிகளை அண்ணாவால் பார்த்திருக்க முடியாது.

"தாத்தாவிடமிருந்து பணத்தை வசூலிக்க மற்றொரு முயற்சி" என்றான்.

"பெரிதாக ட்ராமா போடுவதாக நினைப்பு போலும். இப்போதே போய் தாத்தாவிடம் விஷயத்தைச் சொல்லி விடுகிறேன்." எழுந்து கொண்டே சொன்னேன்.

அண்ணன் என்னை தடுக்கும் முயற்சி எதுவும் செய்யவில்லை. நிதானமான குரலில் சொன்னான். "எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. தாராளமாக போய்ச் சொல்லு, ஆனால் அடுத்த அரை மணியில் என்னை பிணமாக பார்ப்பாய்."

"மிரட்டுகிறாயா?"

"இல்லை. நான் எதற்காக சொல்கிறேன் என்று புரிந்து கொள்ள முயற்சி செய்."

"விளக்கமாக சொல்லு. புரிந்து கொள்கிறேன்."

"இங்கே வேண்டாம், முதலில் இங்கிருந்து உடனே கிளம்ப வேண்டும். வேண்டுமென்றே நாயரின் கைகளை லூசாக முடிச்சு போட்டேன். எந்த நிமிடத்திலும் தாத்தா இங்கே வரக்கூடும். பிறகு திட்டமே தலைகீழாகி விடும். ராதா! இதில் யாருக்கும் எந்த ஆபத்தும் இல்லை. என் தங்கை ரொம்ப நல்லவள், அண்ணன் சொன்ன பேச்சை கட்டாயம் கேட்பாள்." ஒரு பக்கம் வேண்டிக் கொண்டே, என் கையைப்பற்றி வெளியில் அழைத்துப் போனான்.



வெளியில் பிரசாதின் ஸ்கூட்டர் இருந்தது. அண்ணாவோட சைக்கிளும் இருந்தது.

"நீங்க இருவரும் என்னுடைய ஸ்கூட்டரில் கிளம்புங்க. நான் பின்னாடியே சைக்கிளில் வருகிறேன்." பிரசாத் தன்னுடைய அறையின் சாவியை கொடுத்தான்.

அண்ணாவும், நானும் எத்தனையே தெருக்களை கடந்து, சந்துகளில் நுழைந்து கடைசியில் பிரசாதின் அறையை அடைந்தோம்.

அண்ணன் என்னை உட்கார வைத்து பொறுமையாக தன்னுடைய திட்டத்தை விளக்கினான். என் உயிருக்கு ஆபத்து என்று பயமுறுத்தினால் தாத்தாவிடமிருந்து பணம் வராதா என்ற எதிர்பார்ப்பு அவனுக்கு, கடத்தல் காரர்கள் என்பதால் இருபதாயிரம் என்று பணயத் தொகையை குறிப்பிடச் செய்து கடிதத்தை எழுதி வாங்கிக் கொண்டான்.

தாத்தாவுக்கு பேத்தியின் உயிர் முக்கியமா இல்லை பணம் முக்கியமா என்று தெரிந்து கொண்டு, தாத்தாவை நேராக நாலு கேள்வி கேட்டு விட்டு அந்த வீட்டை விட்டு கிளம்பி விட வேண்டும் என்பதுதான் அண்ணாவின் திட்டம்.

விருப்பமில்லா விட்டாலும் ஒப்புக் கொண்டேன். என் மனதில் ஏதோ ஒரு மூலையில் அண்ணன் சொன்னது போல் தாத்தாவுக்கு என் மீது எவ்வளவு அன்பு இருக்கு என்று தெரிந்து கொள்ள வேண்டு மென்ற ஆர்வம் இருந்ததும் ஒரு காரணம். ஆனால் பணத்திற்கும், தாத்தா என் மீது வைத்திருக்கும் அன்புக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லை என்றும், அவரைப் பொறுத்த வரையில் இவை இரண்டும் தனித்தனியாக முக்கியம் என்று என் மனம் என்னை எச்சரித்துக் கொண்டுதான் இருந்தது.

அண்ணன் ஊருக்குப் போவதாக சொல்லி வீட்டை விட்டு கிளம்பிய போது பெட்டியில் என்னுடைய உடைகளைதான் எடுத்துச் சென்று இருக்கிறான். பிரசாத் அண்ணாவின் நண்பன் தற்போது

ஹவுஸ் சர்ஜனாக இருக்கிறான். அவன் தங்கியிருந்ததை வீடு என்று சொல்ல முடியாது, அறை என்றும் அழைக்க முடியாது. முன்னால் சின்ன அறை, அதை ஒட்டினாற் போல் சற்று பெரிய அறை இருந்தது. முன் அறையில் சாய்வு நாற்காலியும் எழுதுவதற்கு வசதியாக மேஜையும், நாற்காலியும் இருந்தன. மேஜை மீது வாத்து உருவத்தில் வித்தியாசமாக டேபிள் லேம்ப் இருந்தது. உள் அறையில் பெட்டி, படுக்கை, மடக்கு கட்டில், துணிகள் வைக்கும் ஸ்டாண்ட், சீராக அடுக்கப்பட்ட அலமாறியும் இருந்தன.

அன்று இரவு எனக்கு தூக்கம் வரவில்லை, அண்ணனை எழுப்பலாம் என்று முன் அறைக்கு போனபோது அவன் குறட்டைவிட்டுக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தான். என் காலடிச் சத்தம் கேட்டு பிரசாத் விழித்துக் கொண்டு "என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"ஒன்றும் வேண்டாம்," சட்டென்று திரும்பி விட்டேன். மடக்கு கட்டிலில் படுத்துக் கொண்டு "கடவுளே! சீக்கிரமாக என்னை வீட்டில் கொண்டு போய் சேர்த்து விடு" என்று வேண்டிக் கொண்டேன்.

அண்ணா மறுநாள் காலையில் அப்பொழுதுதான் ஊரிலிருந்து வருவது போல் நிதானமாக வீட்டுக்குப் போனான்.

மதியம் பிரசாத் அறைக்கு வந்தான். வரும் போது கேரியரில் இரண்டு பேருக்கும் சாப்பாடு கொண்டு வந்தான்.

"நீங்க முதலில் சாப்பிடுங்க, நான் பிறகு சாப்பிடுகிறேன்." பிரசாத் சொன்னான்.

"முதலில் நீங்க சாப்பிடுங்க" என்றேன்.

"ஊஹ்ம். நீங்க சாப்பிடுங்க."

கடைசியில் இருவரும் சேர்ந்து சாப்பிட்டோம். கையை அலம்பும் போது அண்ணன் வந்தான். வரும் போதே நாற்காலியை



இழுத்துக் கொண்டு உட்கார்ந்தான். விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டே தாத்தாவின் அவஸ்தையை கதை கதையாக சொன்னான். அண்ணனை பார்த்ததும் ஹோவென்று கதறி விட்டாராம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களாம். அவர்கள் வீட்டுக்கு வந்து பார்த்தார்களாம். வீட்டில் எந்த பொருளும் காணாமல் போகாதது, கதவு, ஜன்னல் எதையும் வலுக்கட்டாயமாக திறந்த ஜாடையும் இல்லாதது, அவர்களுக்கு விசித்திரமாக இருந்திருக்கிறது. தாத்தா பக்கம் சந்தேகமாக பார்த்துக் கொண்டே "உங்க பேத்திக்கு வேறு யாருடனாவது அறிமுகம் இருக்கா?" என்று கேட்டார்களாம், இல்லவே இல்லை என்று தாத்தா மறுத்து விட்டாராம்.

போலீசாரை வழியனுப்ப வெளியில் வந்த அண்ணன் அவர்களிடம் "என் தங்கையை யாரோ வந்து கடத்திக் கொண்டு போயிருப்பார்கள் என்றால் என்னால் நம்பமுடியவில்லை. எங்க தாத்தாவின் கஞ்சத்தனத்தை தாங்க முடியாமல் எதிலேயாவது விழுந்து செத்துருப்பாள். இல்லை யாருடனாவது போயிருப்பாள்" என்று சொன்னானாம். அவர்களும் "அப்படித்தான் இருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு போனார்களாம்.

உள்ளே வந்து தாத்தாவிடம், "தாத்தா! இரண்டு நாட்களுக்கு முன்பு இந்த வீட்டைப்பற்றி ஏதோ உண்மை விளம்பி கடிதம் வந்தது இல்லையா. அந்த ரகளையினால் ஏற்கனவே அவர்களுக்கு சந்தேகம் இருக்கு. இந்த நிகழ்ச்சி அதற்கு மேலும் பலமூட்டுவதாக இருக்குமோ" என்றானாம்.

தாத்தா ரொம்ப பயந்து விட்டாராம். எப்போதும் இல்லாதவிதமாக அண்ணாவிடம் அன்பாக பேசினாராம். "என்ன செய்யலாம்? நீயே சொல்லு. எனக்கு கையும் காலும் ஓடவில்லை" என்றாராம்.

"எனக்குத் தெரிந்த போலீஸ் அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவரிடம் சொல்லி ரகசியமாக தேட ஏற்பாடு செய்வோம்" என்று அறிவுரை வழங்கினானாம்.

எல்லாம் சொல்லி முடித்த பிறகு "ராதா! உண்மையிலேயே தாத்தாவுக்கு உன் மீது அன்பு அதிகம். ஒரே நாளில் மனுஷன் பாதியாகி விட்டார் தெரியுமா. பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு நான் சொல்வது போல் கடிதம் எழுது" என்று சொல்லிக் கொண்டே சிகரெட்டை எடுத்து பற்ற வைத்துக் கொண்டான்.

அரை மனதோடு கடிதம் எழுதத் தொடங்கினேன். முதல் நாள் மாலை தாத்தா எப்படி இருக்கிறார் என்று பார்த்துவிட்டு வரச் சொல்லி பிரசாத்திடம் கேட்டுக் கொண்டேன். அவனும் அண்ணனை சந்திக்க போவது போல் அங்கே போய்விட்டு வந்து விவரங்களை தெரிவித்தர்ன்.

இரண்டு நாட்கள் கழித்து எங்களுக்கு புதிய பிரச்சனை ஒன்று முளைத்தது. தாத்தாவுக்கு நான் எழுதிய கடிதம் கிடைத்து. அதைப் பார்த்ததும் அவர் ரொம்ப பயந்து விட்டாராம். அண்ணாவின் கையை பிடித்துக் கொண்டு, "கோபீ! இரவு வேளைகளில் எனக்கு துணையாக இங்கேயே படுத்துக் கொள். அந்த திருடர்கள் வந்து என்னைக் கொன்றாலும் கொன்று விடுவார்கள்" என்று வேண்டிக் கொண்டாராம். -

நீ அங்கே இருந்தால் நான் இங்கே தனியாக எப்படி இருக்க முடியும்?" பதட்டத்துடன் சொன்னேன்.

"இதில் பயப்படுவதற்கு என்ன இருக்கு? நீ அந்த அறையில் கதவைச் சாத்திக் கொண்டு படுத்துக் கொள். பிரசாத் உனக்கு துணையாக இருப்பான்."

எனக்குப் கோபத்தில் உடல் பற்றி எரிவது போல் இருந்தது.

"இரண்டே நாட்கள்தான். நல்ல வேளை. பிரசாத்துக்கு நைட் ட்யூட்டியும் இல்லை" என்றான்.

நான் பிரசாத் பக்கம் பார்த்தேன், அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை. ரொம்ப சீரியஸாக புத்தகத்தை படித்துக் கொண்டு இருந்தான்.



"ஒன்றும் ஆகாது, தைரியமாக இரு" என்று சொல்லி விட்டு அண்ணன் கிளம்பிப் போய்விட்டான்.

தாத்தாவிடமிருந்து எப்படியாவது பணத்தை வாங்கிவிட வேண்டும் என்ற தவிப்பில் இருந்த அண்ணாவுக்கு தங்கையின் பிரச்சனை புரியவில்லை. பிரசாத் வெளியில் போகும் முன் வாசற் கதவை பூட்டிவிட்டு போவான். இருந்தாலும் சரி, நான் உள்பக்கம் தாழ் போட்டுக் கொள்வேன். அவனுடைய பேச்சு குரலோ, காலடிச் சத்தமோ கேட்டதும். உடனே தாழ்பாளை நீக்கி விடுவேன்.

என்னுடைய கடிதம் கிடைத்த பிறகு தாத்தா அண்ணாவை அழைத்துக் கொண்டு காவல் நிலையத்திற்கு சென்றாராம். விஷயத்தைச் சொல்லி விட்டு கடிதத்திற்காக சட்டைப் பையில் தேடிய போது கடிதம் அகப்படவில்லையாம். "கிளம்பும் போது கூட பார்த்தேன், எப்படி போச்சு என்று தெரியவில்லை" என்று சொன்னாராம். அண்ணாவின் கண்ஜாடைகளை புரிந்து கொண்ட போலீசார் தாத்தவை பைத்தியம் என்று முடிவு செய்து விட்டு, "நாங்க பார்த்துக் கொள்கிறோம். நீங்க கவலைப்படாமல் போயிட்டு வாங்க" என்று உறுதியளித்தார்களாம்.

அண்ணன் இந்த விஷயத்தில் தானாக எந்த கருத்தையும் சொல்வது இல்லையாம். தாத்தா ஆமாம் என்றால் ஆமாம். இல்லை என்றால் இல்லை என்று சொல்கிறானாம்.

மேலும் இரண்டு நாட்கள் சென்றன. தாத்தா இருபதாயிரம் கொடுப்பதாக முடிவு செய்து விட்டாராம், அண்ணன் ரொம்ப உற்சாகமாக தென்பட்டான். இன்னும் இரண்டு நாட்களில் வேலை முடிந்து விடும் என்று சொன்னான்.

அன்று இரவு புழுக்கமாக இருந்ததால் ரொம்ப நேரம் தூங்கவில்லை. திடீரென்று விழிப்பு வந்தது. தாகமாக இருந்தது. மெதுவாக சத்தம் போடாமல் கதவைத் திறந்தேன். மேஜை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. பிரசாத் சாய்வு நாற்காலியில் அமர்ந்து அப்படியே உறங்கிக் கொண்டிருந்தான். மார்பின் மீது புத்தகம்

கவிழ்ந்த நிலையில் இருந்தது. சத்தம் போடாமல் போய் பானையிலிருந்து தண்ணீரை மொண்டு குடித்தேன்.

திரும்பி வரும்போது மேஜை விளக்கை அணைத்தேன். அணைக்கும் முன் கண் இமைக்கும் நேரம் என் பார்வை அவன் முகத்தில் நிலைத்தது. நல்ல தூக்கத்தில் இருப்பது போல் தென்பட்டான். மருத்துவர்களுக்கு இருக்க வேண்டிய பொறுமை, நிலைதடுமாறாத குணம் அவனிடம் இருப்பது போல் தோன்றியது.

மார்பின் மீது இருந்த புத்தகத்தை எடுத்து வைப்போமா என்று நினைத்து பிறகு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு விளக்கை மட்டும் அணைத்து விட்டு அங்கிருந்து வந்து விட்டேன். மறுபடியும் உறக்கம் வரும் வரையில் என் கண் முன்னால் நிர்மலமாக இருந்த அவன் முகம் நிழலாடிக் கொண்டே இருந்தது. தூக்கத்தில் கனவு வந்தது. கனவில் பிரசாத் என் முகத்தை இரண்டு கைகளிலும் ஏந்தி "ராதா இங்கே பாரு" என்று என்னை சிரிக்க வைக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

விழிப்பு வந்த போது உண்மையிலேயே பிரசாத் கதவைத் தட்டிக் கொண்டே "ராதா! ராதா!" என்று அழைக்கும் குரல் கேட்டது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டேன். ஜன்னல் வழியாக வெயில் அறைக்குள் விழுந்து கொண்டிருந்தது.

"ராதா!" பிரசாத் மறுபடியும் அழைத்தான்.

"வந்து விட்டேன்" சட்டென்று கட்டிலை விட்டு ஓடிப் போய் கதவைத் திறந்தேன்.

"என்னுடைய உடைகள் இந்த அறையில் இருக்கு. ஹாஸ்பிடலுக்கு நேரமாகி விட்டது. அதான்..." சொல்லிக் கொண்டே உள்ளே போனான். அப்பொழுதுதான் குளித்து விட்டு வருகிறான் போலும். சந்தன சோப் நறுமணம் காற்றில் பரவியது. நான் முன் அறைக்கு வந்தேன். ஐந்தே நிமிடங்களில் உடைகளை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தான். நேரமாகி விட்டது என்று சொல்லிக் கொண்டே ப்ளாஸ்கில் காபியை கொண்டு வந்து என்



முன்னால் வைத்து விட்டு அவசரமாக போகப் போனான். அவன் காபி குடிக்க வில்லையோ என்ற சந்தேகம் வந்தது.

"நீங்க காபி குடித்து விட்டீர்களா?"

"இல்லை. நேரமாகி விட்டது, பரவாயில்லை."

"ஒரு நிமிஷம்." சட்டென்று ஒரு டம்ளரில் காபியை ஊற்றி கொடுத்தேன், அவனால் மறுக்க முடியவில்லை.

காபியை பருகிக் கொண்டே "நேற்று இரவு விளக்கை நீங்கதான் அணைத்தீர்களா?" என்று கேட்டான்.

ஆமாம் என்பது போல் தலையை அசைத்தேன்.

"படித்துக் கொண்டிருந்தேன், அப்படியே உறங்கி விட்டேன் போலும்" என்றான்.

நேற்று இரவு தூங்கும் போது பார்த்த முகத்திற்கும், இப்பொ பார்த்துக் கொண்டிருக்கும் முகத்திற்கும் வித்தியாசம் எதுவும் இருப்பது போல் எனக்குத் தோன்றவில்லை. நிலையான சுபாவம் படைத்தவர்களால்தான் அப்படி இருக்க முடியும்.

நான் முழுவதும் ஒரு நிமிடம் கூட ஓய்வு இல்லாமல் வேலை செய்து வந்த எனக்கு இப்படி கைதியை போல் நான்கு சுவர்களுக்கு நடுவில் உட்கார வேண்டும் என்றால் ரொம்ப சலிப்பாக இருந்தது. எத்தனை நேரம் தான் புத்தகங்களை படிப்பது? ஒரு பக்கம் தாத்தா எப்படி இருக்கிறாரோ என்ற கவலை என் மனதை துளைத்துக் கொண்டு இருந்தது. என்ன ஆனாலும் சரி, இன்று மாலை அண்ணா வந்ததும். "இந்த நாடகம் போதும்" என்று நிச்சயமாக சொல்லிவிட வேண்டும். திடமான முடிவுடன் அண்ணனின் வருகைக்காக காத்திருந்தேன். ஆனால் அன்று மாலை ஏனோ அண்ணா வரவே இல்லை. பிரசாதும் வரவில்லை. நன்றாக இருட்டிவிட்டது. ஒரு பக்கம் தனியாக இருக்கிறேன் என்ற கவலை... இன்னொரு பக்கம் பசியின் கொடுமை, என் வயதில் இருக்கும் பெண்கள் எல்லோரும் சந்தோஷமாக ஆடிக் கொண்டும்

பாடிக் கொண்டும், படிப்பு, பாட்டு என்று பொழுதை போக்குவார்கள். என் தலையெழுத்து மட்டும் ஏன் இப்படி இருக்க வேண்டும்?

அண்ணாவுக்கும், தாத்தாவுக்கும் கொஞ்சம் ஒத்துப் போயிருந்தால் என் வாழ்க்கையே வேறு விதமாக இருந்திருக்கும். வயதுக்கு மீறிய எண்ணங்களால் எனக்கு வாழ்க்கையிடம் ஆர்வம் குறைந்து விட்டது. தனிமையில் உட்கார்ந்து என்னைப் பற்றி நான் யோசித்துப் பார்ப்பது இது தான் முதல் தடவை. திடீரென்று அழுகை பொங்கி வந்தது. தலையணையில் முகத்தை புதைத்து மௌனமாக அழுது கொண்டிருந்தேன். இந்த தலையணை கூட பிரசாத் கொடுத்தது தான். தலைக்கு உயரம் இல்லாவிட்டால் எனக்கு தூக்கம் வராது. இருந்த ஒரு தலையணையை அவன் பயன்படுத்தி வந்தான். நான் புடவைகளை மடித்து தலையணைக்கு பதிலாக வைத்துக் கொண்டேன். பிரசாத் இதை கவனித்து விட்டான் போலும். மறுநாள் காலையில் நான் குளியலை முடித்துவிட்டு வரும் போது புடவைகளை எடுத்து விட்டு அந்த இடத்தில் தலையணையை வைத்துக் கொண்டிருந்தான். திடீரென்று நான் வந்ததும் வெட்கப்படுவது போல் தலையை குனிந்து கொண்டான். அந்தச் செயல் ரொம்ப சின்னதுதான் என்றாலும் என் மனதில் ஆழமாக பதிந்து விட்டது. அண்ணாவுக்கும், தாத்தாவுக்கும் நான் எத்தனையோ செய்திருக்கிறேன். ஆனால் ஒரு நாள் கூட அவர்கள் எனக்காக சிரத்தை எடுத்துக் கொண்டு எந்த காரியத்தையும் செய்தது இல்லை. நம் கஷ்ட சுகங்களைப் பற்றி அக்கறைக் காட்டும் நபர் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணமே எவ்வளவு மகிழ்ச்சியை, திருப்தியை தருமோ முதல் முறையாக புரிந்து கொண்டேன், பிரசாதிடம் மனபூர்வமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தாலும் என்ன நினைத்துக் கொள்வானோ என்ற தயக்கத்தில் அந்த எண்ணத்தை கைவிட்டேன்.

இரவு ரொம்ப நேரம் கழித்து பிரசாத் வந்தான். நான் முகத்தை அலம்பிக் கொண்டு வந்து கதவைத் திறப்பதற்குள் கதவைத் தட்டினான், ஓடிப் போய் கதவைத் திறந்தேன்.



"என்ன? உள்ளே தாழ் போட்டுக் கொண்டிருக்கிறாய்?" வியப்புடன் கேட்டான்.

அவன் கேட்டதற்கு பதில் சொல்லாமல் "இத்தனை நேரமாகி விட்டதே? மாலையில் அண்ணாவும் வரவில்லை" என்றேன்.

"உன்னுடைய தாத்தாவுக்கு நெஞ்சுவலியாம். அதான் வரவில்லை என்று சொல்லச் சொல்லி எனக்கு ஹாஸ்பிடலுக்கு போன் செய்தான்." கையிலிருந்த ஸ்டெதஸ்கோப், கோட்டை எடுத்து மேஜை மீது வைத்துக் கொண்டே சொன்னான். அவன் முகம் ரொம்ப களைத்திருப்பது போல் தென்பட்டது.

"தாத்தாவுக்கு நெஞ்சுவலியா? அப்பொ உடனே நான் அங்கே போக வேண்டும்" என்றேன்.

"உன்னை அழைத்து வரச்சொல்லி கோபி என்னிடம் எதுவும் சொல்லவில்லை."

"அவன் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் நான் போக வேண்டும். நெஞ்சு வலி வந்தால் தாத்தாவால் சரியாக பேசக்கூட முடியாது. அவருக்கு எப்பொ என்ன செய்ய வேண்டும் என்று எனக்கு மட்டும்தான் தெரியும்."

என்னை அழைத்து போய்த்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தேன்.

"ஆனால் கோபி. . ." தயங்கினான்.

"அண்ணாவிடம் நான் பேசிக் கொள்கிறேன். இப்பொ என்னை அழைத்துப் போகவில்லை என்றால் எப்படியோ கஷ்டப்பட்டு நானே போய்க் கொள்கிறேன்" என்றேன்.

வேறு வழியில்லாத நிலையில் பிரசாத் அறையை பூட்டி விட்டு கிளம்பினான்.

ஸ்கூட்டரில் உட்கார்ந்து எனக்கு பழக்கம் இல்லை. வண்டி நகர்ந்ததும் கீழே விழுந்து விடுவேனோ என்று பயந்து பிரசாதின்

தோளை பலமாக பிடித்துக் கொண்டேன். அது அவனுக்குக் கூச்சமாக இருந்ததோ என்னவோ. கழுத்தை பக்கத்தில் சாய்த்து கன்னத்தால் என்கையை பலமாக அழுத்தினான்.

பதினைந்து நிமிடங்கள் கழித்து வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம். நேராக தாத்தாவின் அறையை நோக்கி ஓடினேன். தாத்தா கட்டிலில் தலையணை மீது சாய்ந்த நிலையில் வலியை பொறுக்க முடியாதவர் போல் கண்களை மூடியிருந்தார். அண்ணன் கட்டில் பக்கத்திலேயே நின்று கொண்டு தாத்தாவிடம் ஏதோ பேசிக் கொண்டு இருந்தான்.

"தாத்தா!" என்று அழைத்துக் கொண்டே ஓட்டமும் நடையுமாக அவர் அருகில் சென்றேன்.

விருட்டென்று திரும்பிய அண்ணன் என்னைப் பார்த்ததும் திகைத்துப் போனான். இது கனவா இல்லை நினைவா என்று புரியாதது போல் தாத்தா அப்படியே பார்த்துக் கொண்டிருந்தார்.

"தாத்தா... நான்... நான்..." என்றேன்.

"அம்மா ராதா!" தாத்தா இருகைகளையும் நீட்டினார்.

"தாத்தா! இதெல்லாம் அண்ணன் செய்தது" என்று நடந்ததை எல்லாம் சுருக்கமாக தெரிவித்து விட்டேன்.

கேட்டுக் கொண்டிருந்த போதே தாத்தாவின் முகம் கோபத்தில் கன்றி சிவந்து விட்டது. "இதெல்லாம் உண்மைதானா? என்னுடைய கைத்தடி எங்கே?"

அத்தனை வேதனையிலும் தாத்தா மூச்சு இறைத்துக் கொண்டே கைத்தடிக்காக கையை நீட்டினார். அதைப் பார்த்த பிறகு தான் நான் செய்த காரியம் நினைவுக்கு வந்தது. வெளிறிப் போன முகத்துடன் அண்ணன் பக்கம் பார்த்தேன். அவன் என்னை விழுங்கிவிடுவது போல் கோபமாக பார்த்து விட்டு அறையிலிருந்து வெளியேறி விட்டான்.



பிரசாத் பதட்டத்துடன் தாத்தாவின் கையைப் பற்றி நாடியை பரிசீலித்தான்.

அன்று இரவு தாத்தாவுக்கு பெராலிக் அட்டாக் வந்தது.

தான் போட்ட திட்டத்தை இப்படி வியர்த்தமாக்கியதற்கு என்னோடு பிரசாதையும் சேர்த்து வாய்க்கு வந்தபடி ஏசிவிட்டு அண்ணன் வீட்டை விட்டு போய் விட்டான். வீட்டில் நான் தனியாக மாட்டிக் கொண்டேன். தாத்தாவுக்கு பேச்சு தெளிவாக வரவில்லை. பிரசாத் தினமும் வந்து இரண்டு மணிநேரம் உட்கார்ந்து, தைரியம் சொல்லிவிட்டு போவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தான்.

இரண்டு மாதங்கள் கழிந்து விட்டன. இந்த இரண்டு மாதங்களில் பிரசாத் தாத்தாவிடம் நெருங்கி விட்டான். பிரசாத் எப்படி சமாதானப்படுத்தினானோ தெரியாது. அண்ணன் ஓரிரு முறை வந்து தாத்தாவை பார்த்து விட்டுப் போனான். ஆனால் என்னிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. எனக்கு ரொம்ப வேதனையாக இருந்தது.

தாத்தா ஒரு நாள் என்னை அருகில் அழைத்து "பிரசாத் பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார்.

நான் திகைப்புடன் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"இந்த சொத்தையும், உன்னையும் பொறுப்புள்ள நபரிடம் ஒப்படைத்தால் ஒழிய என் மனத்திற்கு அமைதி இருக்காது. உன்னை தனியாக விட்டு விட்டு நான் கண்ணை மூடிவிட்டால், அந்த கடங்காரன் உன்னை சரியாக பார்த்துக் கொள்ள மாட்டான்."

"பிரசாதை உங்களுக்கு பிடித்திருக்கிறதா தாத்தா?"

பிடித்திருக்கும் என்பது போல் பார்த்தார். நான் பதில் எதுவும் சொல்லவில்லை. பிரசாதிடம் எனக்கு தனியாக அபிமானம் என்று எதுவும் ஏற்படவில்லை என்றாலும் வெறுப்பு மட்டும் இல்லை.

தாத்தா லாயரை வரச்சொல்லி உயில் எழுத வைத்தார். அவருடைய சொத்து முழுவதும், வெள்ளி பூண் போட்ட கைத்தடி

உள்பட எனக்கு சேரும். ஆனால் பிரசாதின் சம்மதம் இல்லாமல் நான் எதுவும் செய்ய முடியாது.

"தாத்தா! இது ரொம்ப அநியாயம்" என்றேன்.

"நீ சும்மா இரு." தாத்தா செல்லமாக கோபித்துக் கொண்டார்.

மறுநாள் மாலை ரிஜிஸ்ட்ரார் வீட்டுக்கே வந்து தாத்தாவின் முன்னிலையில் எங்க இருவருக்கும் திருமணம் செய்து வைத்தார். பிரசாத் தன்னுடைய விரலில் இருந்த மோதிரத்தை எடுத்து என் விரலில் அணிவித்தான். தாத்தா வரதட்சணையாக என் கையால் பத்தாயிரம் ரூபாய்க்கு செக் எழுதச் சொல்லி பிரசாதிடம் கொடுக்கச் செய்தார். அவ்வளவு தான் எங்கள் திருமணம் முடிந்து விட்டது.

நான்கு நாட்கள் கழித்து நள்ளிரவு ஒரு மணிக்கு தாத்தா இறந்து போனார். இளைத்து துரும்பாகி, பாதி உருப்புகள் செயலிழந்து விட்ட அந்த உடலை விட்டு போவதற்கு உயிர் எவ்வளவு துடித்ததோ வார்த்தைகளில் சொல்லிவிட முடியாது. ரொம்ப விரக்தியாக இருந்தது. நினைவு தெரிந்த பிறகு மரணத்தை இவ்வளவு நெருக்கமாக பார்ப்பது அதுதான் முதல் தடவை. பிரசாத் மெதுவாக என் கையைப்பற்றி வலுக்கட்டாயமாக வெளியில் அழைத்து வந்தான்.

"பிரசாத்!" நான் ஏதோ சொல்ல முயன்றேன். ஆனால் என்னை எதுவும் சொல்ல விடாமல் பிரசாத் தடுத்தான். என் கைகளைப்பற்றி கண்களுக்குள் ஊடுருவுவது போல் பார்த்துக் கொண்டே 'வாழ்கை என்றால் இது தான். எதுவும் சாசுவதம் இல்லை. இந்த உண்மையை நினைவில் வைத்துக் கொண்டால் வாழ்க்கை நாம் நினைக்கும் அளவுக்கு கஷ்டமாகவோ, பிரச்சனைகள் நிறைந்ததாகவோ இருக்காது. நான் சொல்லும் வரையில் நீ அந்த அறைக்குள் வரக் கூடாது." ஆணையிடுவது போல்சொன்னான். கண்களை உயர்த்தி பார்த்தேன். அவன் கண்களில் அன்பு ததும்பிக் கொண்டிருந்தது. தாத்தா இறந்து போகும் முன் என்னை பிரசாத் கையில் ஒப்படைத்து விட்டு



போனது நிம்மதியாக இருந்தது. சரி என்பது போல் தலையை அசைத்தேன்.

அரை மணி நேரம் கழித்து அண்ணனும் வந்தான். காரியங்கள் எல்லாம் நடந்து முடிந்தன. ஏழுநாட்கள் வேகமாக கழிந்துவிட்டன. தாத்தா இன்னும் ஏதோ ஒரு அறையில் இருப்பது போலவே எனக்குத் தோன்றியது.

அன்று மாலை என்னுடைய அறையில் உட்கார்ந்து கொண்டு மூவரும் காபியை குடித்துக் கொண்டிருந்தோம்.

பிரசாத் ஜேபியிலிருந்த பர்ஸை எடுத்து திருமணத்தின் போது தாத்தா கொடுத்த செக்கை எடுத்து அண்ணாவிடம் கொடுத்தான்.

அண்ணா அதை வாங்கிக் கொண்டே "ராதா! பிரசாதுக்கும் உனக்கும் நடந்த பதிவுத் திருமணம் செல்லாது" என்றான்.

"அப்படி என்றால்?" திகைப்புடன் பார்த்தேன். அண்ணன் விளக்கம் தருவது போல் சொன்னான்.

"அதாவது அன்னிக்கு வந்தது உண்மையான ரிஜிஸ்ட்ரார் இல்லை."

என் முகம் வெளிறிப் போய் விட்டது. பிரசாத் பக்கம் பார்த்தேன். ஏனோ அவன் முகம் சிவந்து கன்றி இருந்தது.

"அதனால் தாத்தா கடைசியாக எழுதிய உயிலும் செல்லாது. சொத்து முழுவதும் எனக்குத்தான் சேரும். அதை அப்படியே நாட்டின் பாதுகாப்பு நிதிக்கு கொடுத்து விட்டு நான் ராணுவத்தில் சேரப் போகிறேன்" என்றான்.

பணம்! பணம்! ! எப்போதும் பணத்தை பற்றிய பேச்சு தானா? சொத்துக்காக ஒரு நாளும் நான் ஆசைப்பட்டது இல்லை. தாத்தா சொத்தை என் பெயருக்கு எழுதி வைத்திருந்தாலும், இன்றோ நாளையோ அதை அண்ணாவின் பெயருக்கு மாற்றித் தருவதாகத்தான் இருந்தேன். அதனால் சொத்து எனக்குக் கிடைக்கவில்லை என்று நான் வருத்தப்படவில்லை. ஆனால்

பிரசாத்? அவனும் அண்ணாவைப் போல் தானா? கடல் அலைகளை போல் கொந்தளித்துக் கொண்டிருந்த எண்ணங்களை அப்படியே அவர்களிடம் கேட்டு விடலாமா என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் தொண்டை குழியில் ஏதோ அடைத்து விட்டது போல் பேச்சு வரவில்லை. மௌனமாக எழுந்து அடுத்த அறைக்கு போய் விட்டேன்.

சொத்தை பாதுகாப்பு நிதிக்கு தந்து விடுவானாம். தான் ராணுவத்தில் சேர்ந்து விடுவானாம். தன் வழியை பார்த்துக் கொண்டு பிரசாதும் போய் விடுவான். அப்பொ நான்? நான் எங்கே போகப் போகிறேன்? இந்த யோசனை அண்ணாவுக்கு வரவில்லையே ஏன்? எப்படி வரும்? இருபத்தி நான்கு மணி நேரமும் தாய் நாடு தாய் நாடு என்று நாட்டைப் பற்றிய கவலையை தவிர, தன்னுடைய வாழ்க்கைப் பற்றி கூட அவன் கவலைப்பட்டது இல்லை. சொந்த கால்களில் நிற்கும் அளவுக்கு தாத்தா என்னை படிக்க வைக்கவில்லை. சொன்னேனே, ஒருவருக்கு பணம் தான் பிரதானம். மற்றவருக்கு நாடு என்றால் உயிர். இவ்விருவருக்கும் நடுவில் என்னுடைய வாழ்க்கை நலிந்து போய் விட்டதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? மனதில் கொந்தளித்துக் கொண்டிருந்த எண்ண அலைகளை கட்டுக்குள் வைக்க கைவிரல்களை இறுகிய போது திடீரென்று என்னுடைய பார்வை மோதிரத்தின் மீது விழுந்தது. திருமணமே பொய் என்ற போது இந்த மோதிரத்தை அணிந்து கொள்ளும் தகுதி எனக்கு எங்கே இருக்கிறது?

அதற்குள் பின்னாலிருந்து "ராதா!" என்ற குரல் கேட்டது. சரேலென்று திரும்பினேன். வாசற்கதவு அருகில் பிரசாத் நின்றிருந்தான். எப்போதும் அமைதியாக, மகிழ்ச்சியாக தென்படும் அவன் முகத்தில் இன்று ஏதோ பதட்டம், வேதனை நிலவியிருந்தது.

வாசற்கதவுக்கு அந்தப் பக்கம் நின்று கொண்டே சொன்னான். "ராதா! ஒரு வார்த்தை உன்னிடம் சொல்லி விட்டு போகலாம் என்று தான் வந்தேன். பதிவுத் திருமணம் விஷயம் பொய் என்று எனக்கு முன்னாடியே தெரிந்திருந்தாலும் அன்று



தாத்தாவின் முன்னிலையில் மனபூர்வமாகத்தான் உன் விரலில் மோதிரத்தை அணிவித்தேன். அன்றே என் அம்மாவுக்குக் கடிதம் எழுதிவிட்டேன். அம்மா உடனே உன்னை அழைத்து வந்து தனக்கு காண்பிக்கச் சொல்லி கடிதம் எழுதியிருக்கிறாள். இதோ கடிதம்" என்று கடிதத்தை நீட்டினான். ஆனால் அதை நான் பெற்றுக் கொள்ளவில்லை.

சற்று தாமதித்து அவனே மீண்டும் சொன்னான். "நடந்ததை எல்லாம் மறந்து விட்டு என்னை ஏற்றுக் கொள் ராதா. இல்லையென்றால்..." இடது கையை மார்பின் மீது வைத்துக் கொண்டே, "இங்கே அதிருப்தியும், அமைதியின்மையும் சாசுவதமாக குடிகொண்டு வாழ்நாள் முழுவதும் வேதனைப்படுத்திக் கொண்டே இருக்கும்" என்றான்.

நான் கண்களை உயர்த்தி அவன் பக்கம் பார்த்தேன். நடந்தவற்றுக்கு அவன் பதட்டப்படவில்லை. தான் குற்றமற்றவன் என்று நிரூபித்துக் கொள்வதற்காக குரலை உயர்த்தி பேசவில்லை. நடந்ததை ஒப்புக் கொண்டு என்ன நடக்க வேண்டும் என்று தான் விரும்புகிறானோ அதை எவ்வித தயக்கமும் இல்லாமல் சொல்லி முடித்தான். நிலை தடுமாறாத மனம் படைத்தவனின் நிழலில் பெண்ணின் வாழ்க்கை நிம்மதியாக கழிந்துவிடும்.

ஒரு வேளை நான் மறுத்தால் அவனுக்கு வேதனை ஏற்படலாம், ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்ள மாட்டான்.

சொல்ல வந்ததை சொல்லி முடித்து விட்டு என் பதிலுக்காக காத்திருப்பது போல் நின்றான்.

என்ன சொல்வது என்று எனக்கும் புரியவில்லை. "இப்பொ... இப்பொ என்னிடம் எதுவும் இல்லை. சொத்து முழுவதும் அண்ணாவுக்கு போகும்" என்றேன்.

பிரசாத் இரண்டடி முன்னால் வைத்து என் அருகில் வந்தான். என் கையைப் பிடித்துக் கொண்டு மென்மையான குரலில், "சொத்துக்காக உன்னைத் திருமணம் செய்து கொண்டிருந்தால்

32232

இந்த நிமிடம் இந்த இடத்தில் இருந்திருக்க மாட்டேன். நான் உன்னிடம் எதைப் பார்த்து மனைவியாக [illegible] வேண்டும் என்று நினைத்தேனோ அது உன்னிடம் எப்போதும் இருக்கும் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்" என்றான்.

நான் பதில் எதுவும் சொல்லவில்லை பத்து நிமிடங்களுக்கு முன் இருட்டாக தெரிந்த இந்த உலகம் இப்பொ என் கண்களுக்கு பிரகாசமாக தென்பட்டது.

"என்ன? இரண்டு நிமிடங்கள் பேசி விட்டு வருவதாக சொன்னவன் கால்மணி நேரம் ஆகியும் வெளியில் வரக்காணுமே? இருவரும் சேர்ந்து என் மீது சதி ஏதாவது செய்கிறீர்களா?" கேட்டுக் கொண்டே அண்ணா உள்ளே வந்தான்.

பிரசாத் என் கையைப் பற்றிக்கொண்டே பின்னால் திரும்பினான். "கோபீ! நம்முடைய ஒப்பந்தத்தின் படி சொத்தை மட்டும் தான் உன்னிடம் திருப்பிக் கொடுக்கணும். உன்னுடைய தங்கையை இல்லை" என்றான்.

அண்ணன் உற்சாகமாக விசில் அடித்தான். என் பக்கம் மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டே, "அப்படியா! ரொம்ப நல்ல செய்தி. வரதட்சணையாக இதைப் பெற்றுக் கொள்" என்று சொல்லிவிட்டு செக்கை எடுத்துக் கொடுத்தான்.

பிரசாத் அண்ணாவின் கையைப்பற்றி தடுத்து விட்டான். "வரதட்சணை எதுவும் இல்லாமலேயே உன் தங்கைக்கு கணவன் கிடைத்து விட்டான். அந்த செக்கை எங்கள் சார்பில் பாதுகாப்பு நிதிக்கு நன்கொடையாக தந்து விடு" என்றான்.

"ரொம் சந்தோஷம். நான்கு நாட்கள் கழித்து பிரதமர் நம் ஊருக்கு வரப்போகிறார். அவரிடம் நீங்களே நேரில் கொடுத்து விடுங்கள்."

அண்ணாவின் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது.

-----------